வரலாறு

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

193253

With the best compliments from :

GEM LABORATORY

&

GENERAL LABS

STOCKIST

M/s. SASTHA PHARMA

1, ELEVENTH CROSS,

WESTERN EXTENSION,

THILLAI NAGAR,

TIRUCHIRAPALLI - 620018.

வரலாறு

இதழ் 4

ஆணையர்
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
மற்றும் வரலாற்று ஆராய்ச்சி
5 ஜுன் 1995
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

அரையாண்டு
ஆய்விதழ்

பிப்ருவரி 1995

வெளியிடுவோர்
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி - 620 017.

" அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும் "

இதழ் உருவாக்கம்

இரா. கலைக்கோவன்
பொறுப்பாசிரியர்

மு. நளினி
அர. அகிலா
உதவி ஆசிரியர்கள்

இரா. கண்ணையன்
மேலாளர்

SL
V211 mm N93
N95

193253

" சொல்வது தெளிந்து சொல் "

எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும்

தமிழகக் கலை வரலாற்றில் பல்லவர்களுக்குக் கிடைத்திருக்கும் இடம், அவர்களினும் அதிகமான அளவில் குடைவரைகளை அமைத் திருந்தும் பாண்டியர்களுக்குக் கிடைக்காமல் போனதற்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை. என்றாலும் கலை வரலாற்று அறிஞர்கள் பல்லவர் படைப்புகளைத் தமிழக மக்களுக்கு அறிமுகப்படுத்தியிருக்கும் அளவிற்குப் பாண்டியர் கைவண்ணங்களை வெளிப்படுத்தத் தவறி விட்டனர் என்பதை யாரும் மறுக்க முடியாது. தொல்லியல் மேதை திரு. கூ. ரா. சீனிவாசனின் பல்லவக் குடைவரைகள் போல் பாண்டி மண்டலக் குடைவரைகளுக்கு ஒரு நூல் தமிழிலோ ஆங்கிலத்திலோ இல்லாமலிருப்பது வருந்தத்தக்கது. திரு. தி. இராசமாணிக்கம் பாண்டி மண்டலக் குடைவரைகள் அனைத்தையும் பட்டியலிட்டு வழிகாட்டலுடன் விளக்கக் குறிப்புகள் சிலவும் தந்து தமிழில் கையேடு போல் சிறு நூலொன்றை வெளியிட்டுள்ளார். திரு. சி. சிவராமமூர்த்தி ஆங்கிலத்தில் ஒரு கையேடு வெளியிட்டுள்ளார். இவை தவிர அங் கொன்றும் இங்கொன்றுமாய்ச் சில ஆய்வுக் கட்டுரைகளும் ஆய்வேடு களும் சிறு நூல்களும் இக்குடைவரைகளைப் பற்றி வெளிவந்துள்ளன.

இதே நிலைமை முத்தரையர் பகுதிக் குடைவரைகளுக்கும் நேர்ந் துள்ளது. முத்தரையர் பற்றி நூலெழுதியிருக்கும் ஆய்வறிஞர்கள்கூட முத்தரையர்தம் கலைப்பணிகளை முறையாகவும் முழுமையாகவும் விளக்க முயற்சிகளேதும் மேற்கொள்ளவில்லை.

இந்நிலையில் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் பாண்டி மண்டல மற்றும் முத்தரையர் பகுதிக் குடைவரைகளை முழுமையான ஆய்வுக்கு உட்படுத்தும் முயற்சியைத் தொடங்கியுள்ளது. அப்பகுதிகளில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட குடைவரைகளைப் பற்றிய விரிவான கட்டுரைகள் தொடர்ந்து வரலாறு இதழ்களில் இடம் பெறும். ஏற்கனவே வந்துள்ள தேவர்மலைக் குடைவரை, குன்றக்குடிக் குடை வரைகளைத் தொடர்ந்து இவ்விதழில் மூன்று குடைவரைகள் கட்டுரை களாகியுள்ளன. இவற்றில் ஆய்வு மேற்கொள்ள அனைத்து உதவி களையும் வழங்கிய இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறையின் சென்னை வட்ட அலுவலர் பெருமக்கள் அனைவர்க்கும் நெஞ்சார்ந்த நன்றி உரியது.

ஓர் இடத்தை ஆய்வு செய்யும்போது இயன்றவரையில் அந்த இடம் பற்றி இதுவரை வெளிவந்திருக்கும் ஆய்வுத் தரவுகள் அனைத் தையும் கவனத்தில் கொண்டே ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

முன்னால் சொல்லப்பட்டிருக்கும் தரவுகளில் தவறுகள் இருந்தால் அவை உரிய திருத்தங்களோடு கட்டுரை அடிக்குறிப்புகளில் சுட்டப் படுகின்றன.

இந்த இதழில் ஆய்வுக் கட்டுரைகள் மிகுதியான அளவில் இடம் பெற்றுள்ளன. தமிழகக் கோயிற் கட்டடக்கலைத் தொடரின் இரண்டாம் பகுதி மூன்று தொகை நூல்களின் பிழிவாய்த் தரப்பட்டுள்ளது. இந்தத் தொடரில் விட்டுப்போனவை இருப்பின், வரலாற்று நேயர்கள் தொட்டுக் காட்டித் தொடர்புபடுத்திக்கொள்ள உதவ வேண்டும்.

திரு. ஆறுமுக சீதாராமனின் மகேந்திரவர்மர் காசு பற்றிய கட்டுரைக்காக நைஹிகாமுத்ரிக என்னும் மகேந்திரரின் விருதுப் பெயரைத் திருச்சிராப்பள்ளிக் குடைவரை முகப்புத் தூணிலிருந்து படியெடுத்துத் தந்த இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறையின் தலைமைக் கல்வெட்டாய்வர் முனைவர் திரு. மு. து. சம்பத், உதவி யாளர் திரு. மல்லேசன் ஆகியோர் நன்றிக்குரியவர்கள்.

மறக்க முடியாத மனிதநேயர் தவத்திரு அடிகளார் பெருமானின் மறைவால் தமிழகம் ஈடுசெய்ய முடியாத இழப்புக்கு ஆளாகியிருக்கிறது. எந்த நேரமும் மொழி, நாடு, மக்கள் என்ற சிந்தனைகளிலேயே மூழ்கிச் செயலாற்றிக் கொண்டிருந்த அந்த அற்புத ஆத்மாவை மக்கள் வாழ்க்கையின் இலட்சிய நோக்காய்க் கொள்ள வேண்டும். இதயம் ஒத்துழைக்காத போதும் நாடெங்கும் சென்று நல்லது விளையத் தொண்டாற்றிய அந்த மகத்தான மனிதருக்கு வரலாறு தன் விழி நீரால் வீர வணக்கம் செலுத்துகிறது.

அன்புடன்,

இரா. கலைக்கோவன்.

இந்த இதழில்...

பக்கம்

1. புதிய கல்வெட்டுகள்

1. திருக்கோளக்குடிக் கல்வெட்டுகள் 1
2. சோழபுரம் கல்வெட்டுகள் 7
3. கங்கை கொண்ட சோழபுரத்துக் கல்வெட்டு 8
4. திருத்தவத்துறைக் கல்வெட்டுகள் 9

2. விட்டுப்போன தொடர்ச்சிகள்

1. திருத்தவத்துறைக் கல்வெட்டு 14

3. செப்பேடுகள்

1. துறையூர்ச் செப்பேடு 16

4. ஆய்வுக் கட்டுரைகள்

1. செவல்பட்டிக் குடைவரை 25
2. காவூக் கல்வெட்டு 39
3. மூவரை வென்றான் குடைவரையும் கல்வெட்டுகளும் 43
4. அமனி கல்வெட்டும் அறிஞர் கருத்துரையும் 52
5. மாமல்லைக் கடற்கரையில் கண்டெடுத்த கலைச்செல்வம் 58
6. மலையடிப்பட்டிக் குடைவரைகளும் கல்வெட்டுகளும் 64
7. முதலாம் மகேந்திரவர்மர் காசு 116

5. ஆய்வுத் தொடர்கள்

1. தமிழகக் கோயிற் கட்டடக்கலை வரலாறு - 2 118

6. பொதுப்பகுதி

1. பெருமைச் சுவடுகள் 129
2. நூல் மதிப்புரை 132
3. யாவரும் கேளிர் 139
4. அன்புள்ள உங்களுக்கு 142
5. அங்கும் இங்கும் 144
6. கட்டுரையாளர்கள் 147

வாழ்க நீ எம்மான்
இந்த வையத்தார் நெஞ்சமெல்லாம்



இருக்கும் தலைமுறைகளுக்கு
இனி இல்லை என்றான
இருபதாம் நூற்றாண்டின்
இந்த இணையற்ற வரலாறு
இனிவரும் தலைமுறைகள்
படிக்கவும் பாடறிந்து ஒழுகவும்

''கல்வியைப்போல் அறிவும் அறிவினைப்போலக்
கருணையும் அக்கருணை போலப்
பல்விதலூக் கங்கள்செயுந் திறனுமொரு
நிகரின்றிப் படைத்த வீரன்
வில்விறலாற் போர்செய்தல் பயனிலதாம்
எனஅதனை வெறுத்தே உண்மைச்
சொல்விறலாற் போர்செய்வோன் பிறர்க்கன்றித்
தனக்குழையாத் துறவி யாவோன்''

''சோதி அறிவியல் விளங்கவும் உயர்
சூழ்ச்சி மதியில் விளங்கவும் அற
நீதி முறைவழு வாமலே எந்த
நேரமும் பூமித் தொழில்செய்து கலை
ஓதிப் பொருளியல் கண்டுதாம் பிறர்
உற்றிடும் தொல்லைகள் மாற்றியே இன்பம்
மோதி விழிக்கும் விழியினார்''

''துன்பம் என்னும் கடலைக் கடக்கும்
தோணி அவன்பெயர்
சோர்வு என்னும் பேயை ஓட்டும்
சூழ்ச்சி அவன்பெயர்
அன்பு எனும்தேன் ஊறித் ததும்பும்
புதுமலர் அவன்பெயர்
ஆண்மை என்னும் பொருளைக் காட்டும்
அறிகுறி அவன்பெயர்''

— பாரதியார்

பற்கள் பதித்த கதவுகள்

கதவுகளை அழகுபடுத்த நுண்ணிய வேலைப்பாடுகள் செய்வதும் செல்வச் செழிப்பு காட்ட விலை மதிப்பற்ற மணி களைப் பதிப்பதும் நடைமுறைதான். ஆனால் பற்கள் பதித்த அதுவும் மனிதப் பற்கள் பதித்த கதவுகள் இருந்ததுண்டா? அப்படிச் சில கதவுகளைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.

சண்டை, சச்சரவுகளின் போது 'பல்லை உடைத்து விடு கிறேன் பார்' என்ற சொற்றொடர் மிக எளிதாகப் பரிமாறிக் கொள்ளப்படும். ஆனால் பொதுவாக இது சொல்வதோடு நின்று விடும். யாரும் யாருடைய பற்களையும் சொன்னது போல் உடைப்பதும் இல்லை. அப்படி உடைக்க மற்றவர்கள் விட்டதுமில்லை.

ஆனால் சேர வேந்தனான பொறையன், மூவன் என்ற பகையரசனைப் போரில் வென்று வலிமையுடைய அவன் பற் களைப் பெயர்த்து எடுத்து வந்து தன் தொண்டி நகர்க் கோட் டைக் கதவுகளில் பதித்துப் பெருமை கொண்டதாகப் பொய்கை யார் சொல்கிறார். பெயர்ப்பதற்கு முன் உடைப்பதாகச் சேரன் சூளுரைத்தானா என்பது தெரியவில்லை. ஆனால் பகைவர் பற்களைப் பெயர்த்துக் கோட்டைக் கதவுகளில் இப்படிப் பதித் துப் பெருமை கொள்ளல் பண்டைய வழக்கு என்கிறார் உரை யாசிரியர்.

மற்றொரு பல் பதித்த கதவைக் காட்டுகிறார் மாமூலனார். இங்குப் பல்லை இழந்தவன் எழினி என்னும் குறுநிலத் தலைவன். பெருங்குழிகள் வெட்டி அவற்றில் யானைகளை அகப்படுத்தும் வேட்டைக்கு இந்த எழினி வாராமையால், சினங்கொண்ட சோழவேந்தன் மத்தி என்னும் படைத்தலை வனை ஏவ, அவன் சென்று எழினியைப் போரில் வென்று, அவன் பல்லைப் பறித்து வந்து வெண்மணி என்னும் ஊரின் வாயிற் கதவங்களில் பதித்து மகிழ்ந்ததுடன், அவ்வெற்றியின் அடையாளமாக அங்கிருந்த நீர்த்துறையருகே ஒரு நினைவுக் கல்லும் நாட்டினான்.

வாதாபியில் முதலாம் நரசிம்மர் நாட்டிய நினைவுத் தூணும் முதலாம் சமுத்திரகுப்தரின் அலகாபாத் நினைவுத் தூணும் இவ்வகையினவே.

— நற்றிணை 18; அகம் 211.

புதிய கல்வெட்டுகள்

1. திருக்கோளக்குடிக் கல்வெட்டுகள்

மு. நளினி

பொன்னமராவதியிலிருந்து பதின்மூன்று கிலோமீட்டர் தொலைவில் பூலாங்குறிச்சிக்கும் மிதிலைப்பட்டிக்கும் இடையில் அமைந்துள்ள திருக்கோளக்குடி மிகச் சிறிய ஊராகும். இவ்வூரிலுள்ள மலையின் அடிவாரத்திலும் மலையின் இடைப்பகுதியிலும் அதன் உச்சியிலும் பல கோயில்கள் அமைந்துள்ளன. இவற்றுள் பாண்டியர் காலக் குடைவரை சிறப்புக்குரியது. இங்குள்ள அனைத்துக் கோயில்களும், ஊரின் சுற்றுப்புறங்களும் கள ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டபோது படியெடுக்கப் படாத கல்வெட்டுகள் பல பார்வைக்குக் கிடைத்தன. அவற்றுள் எட்டுக் கல்வெட்டுகள் வரலாறு மூன்றாம் இதழில் வெளியாயின. இவ்விதழில் மேலும் சில கல்வெட்டுகள் இடம் பெறுகின்றன. கள ஆய்வுகளின் போது துணை நின்று கை வலிக்க சிமெண்ட் பூச்சுகளைப் பெயர்த்தெடுத்து உதவிய சிறுமியர் ராதா, மரகதம், அடர்த்தியான சுண்ணாம்புப் பூச்சை அயராது தேய்த்தகற்றிய சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி வரலாற்றுத் துறைத் தலைவர் பேரா. கோ. வேணிதேவி, முதுகலை வரலாற்று மாணவி ம. ஜான்சி ஆகியோர் நன்றிக்குரியவர்.

முதற் கல்வெட்டு

இடம்: பெரு மண்டபத்தின் தென்புற அறையிலுள்ள பாறைப் பகுதி.

செய்தி: பூங்குன்ற நாட்டு முன்னைக்குடி வயலில் காணியுடைய அனைவருமாகச் சேர்ந்து சோணாடு கொண்டருளிய சுந்தர பாண்டிய தேவரின் இருபத்தோராம் ஆட்சியாண்டுக் காலத்தில் முன்னைக்குடி வயல், நத்தம் ஆகியவற்றைத் திருக்கோளக்குடி இறைவனுக்குச் சண்டேசுவரப் பெருவிலைக்கு விற்றுத் தந்ததையும் நில விலைப் பொருளின் ஒரு பகுதியாக குமரத்தக்குடி அச்சு வரியில் 22 அச்சு பெற்றுக் கொண்டதையும் இக்கல்வெட்டின் தொடக்க வரிகளால் அறிந்து கொள்ள முடிகிறது.

விலைப் பொருள் முழுவதையும் தந்து நிலத்தை ஏற்றுக் கொள்ளுமாறு விற்றவர்கள் வேண்ட, பண்டாரத்தில் பொருள் இல்லையென வாங்கியவர்கள் சொல்ல, வேறு அன்னியர் வாங்கார் எனவே நீங்கள் 'கொண்ட நிலப்பொருள் முகவிடுதல் சுற்றடங்கக் கொள்ள வேண்டுமென்று' விற்றவர்கள் சொல்ல, தியாகஞ்சிரியான் என்பவர் பட்டமற

விட்டு முப்பத்தேழு காசுகள் தர, இந்த நிலத்தின் நான்கெல்லைகளிலும் திரிசூலம் நாட்டிக் கோயிலார் அநுபவித்து வந்தனர். அதுபோது இந்நிலத்தில் சிறிது காணியுடைய சிலர் 'அனுபோக விரோதம் செய்து பிணம்படு மாகேசுவர மரச் சிங்காதனமிட்டு' நிலத்தைப் பாழாய்க் கிடக்க விட்டனர். இக்கொடுமை கண்ட பொன்னமராபதி நாட்டவரும் முதலிகளும் நியம காளையகாலப் பெருந்தெரு மற்றும் சுந்தர சோழபுரம் சேர்ந்த நகரத்தாரும் கூடிச் சிங்காதனத்தை எடுப்பித்துக் காணியுடையார்க்குக் கோயிலார் மேலும் சிறிது பணம் கொடுக்குமாறு செய்தனர்.

முடிவழங்கும் பெருமாள் இட்ட பட்டம், பஞ்ச சரம், நாயனார் அழகப் பெருமாள் இட்ட பட்டம், பிள்ளையார் விக்கிரம பாண்டிய தேவர் இட்ட வயிரக்கட்டு வடம் போன்ற தங்க, வைர நகைகள் இக்கல்வெட்டால் தெரியவருகின்றன. வயிராகி வீரபத்திர பிள்ளைக்கும் நிலை நின்ற வயிராகிக்கும் திருமேனி வார்க்கப் பத்து அச்சுகள் செலவான தகவலையும் கல்வெட்டால் பெற முடிகிறது.

அச்சு நூற்று அறுபத்து ஆறும், நெல்லு 682 கலனே தூணிப் பதக்குமான இம்முதல் அறக்கொண்டு வேலங்குடி ஊரவரும் முதலிகளும், முன்னைக்குடி வயலில் காணியுடைய அனைவரும் கோயில் இறைவனுக்குப் பொருள் சிலவு பிடிபாடு செய்து தந்தனர் என்று கல்வெட்டின் இறுதிப் பகுதி கூறுகிறது. இக்கல்வெட்டின் கையெழுத்தாளர்கள் அனைவரும் எழுத்தறிவற்றவர்கள். இவர்கள் அனைவருக்குமாய்க் கையெழுத்திட்டு இப்பொருள் செலவு பிடிபாடு ஓலையை எழுதியவராக வேலங்குடிக் கணக்கு திருவையாறுடையான் அழகிய நாயனான எறக்குடையான் தம்மைக் கல்வெட்டின் இறுதி வரிகளில் அறிமுகப்படுத்திக் கொள்கிறார்.

இக்கல்வெட்டிலுள்ள சில சொற்கள் மற்றும் சொற்றொடர்களின் பொருளைச் சரியாக விளங்கிக் கொள்ள முடியவில்லை. இக்கல்வெட்டின் பாடம் கல்வெட்டறிஞர்களின் ஆய்வுக்குரியது. இது குறித்து ஆய்வறிஞர்களின் விளக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

காலம்: கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீஸு௱ந்த₃ர பாண்டிய தேவற்கு யாண்டு 6 வதின் எதி

2 ர் 2 வது உடையார் திருக்கோளக்குடி யுடைய நாயநாற்கு பூங்குன்ற நாட்டு வே

3 வலங்குடி ஊரோமும் முதலிகளும் முன்னைக்குடி வயலில் [செ*]காண்டுடைய அனை

4 வோமும் சோணாடு கொண்டருளிய சுந்தர பாண்டிய தேவற்கு யாண்டு 20 வது எதிராமாண்

5 டு நாங்கள் சுற்[ற*]டங்க விலை பேசித் தண்டேசுரப் பெரு விலையாக விற்ற முன்னைக்குடி வயலு

6 க்குந் நத்தத்துக்கும் பொருள் செலவு [ஊருதம்] விற்றுக் குமரத்தக்குடியில் அச்சு வரியில் கொண்

7 ட அச்சு 22ம் பின்புளங்களாற்றாமை மாற்றடங்கக் கொள்ள வேண்டுமென்று சொல்லப் ப

8 ண்டாரத்து முதலில்லை யென்ன மற்றும் அன்னியர் கொள் வரில்லை நீங்கள் கொண்ட நிலப் ெ

9 பாருள் முகவிடுதல் சுற்றடங்கக் கொள்ளுதல் செய்ய வேணு மென்ன சுற்றடங்கக் கொண்டு தியாகஞ்சி

10 ரியான் பட்டமற விட்டுத் தரக் கொண்ட காசு 37ம் கொண்டு நான்கெல்லையுந் திருச்சூலக் கல்லு நாட்டி

11 க் குடுத்து அனுபவித்துப் போதச்சிதே இதிலே சிறிது காணி யுடையவர்கள் அனுபோக விரோதம் பண்ணி

12 பிணம் படு மாஹே[ச்ᵒவ*]ர மரச் சிங்காதநமிட்டும் பாழ் கிடத்தலில் பொன்னமார்பதி ந[ா*]ட்டவரும் முத

13 லிகளும் நியம காளையகாலப் பெருந்தெரு சுத்தரசோழபுரம் இன்னகரங்களுங் கூடி சிங்காதநம்

14 எடுப்பித்து இன்னமும் இவர்களுக்குச் சிறிது பொருள் குடுங் கோளெந ரெண்டாம் பரியாய் முடி

15 வழங்கும் பெருமாள் [ளிட்ட*] பட்டமும் பஞ்சசரமும் நாயனார் அழகப்பெருமா ளிட்ட பட்டமும் பிள்

16 ளையார் விக்கிரம பாண்டிய தேவரிட்ட வயிரக்கட்டு வடமும் திருச்சிராப்பள்

17 ளி முதலியார் இரண்டு தேவ முதலியார் கண்காணிப் படி ஏற விட்டுத் தரக் கொண்ட [அந்தரா]யம் ஊ

18 ர் வினியோகத்துக்கு கொண்ட ஆடிய எம் நாயனார் பண்டா ரத்தில் நாடாகத் தனிசு வராகி

19 க் கொண்ட நாளில் நாங்கள் தனிசு கொண்டு பண்டாரத்துக்கு கடவ தீட்டுப்படியால் நெல் 682

20 கலம் தூணிப்பதக்கு பின்பு இவ்வயல் வரியிறங்கிட நாட்டவரும் நாங்களும் தேவர் நிஷத₂ராயரும் இராசிங்க மங்கலத்து பொ

21 ப்பாரெடி வயக்கலை வராவடை வைத்துத் தரக் கொண்ட காசு 30 ம் ஆக அச்சு 76ல்ப் பட்ட வயிராகி வீரப

22 த்திர பிள்ளைக்கும் நிலை நின்ற வயிராகி[க்*]குந் திருமேனி வாற்க நீக்கின அச்சு 10 நீக்கி அச்சு 66 நெல் 682 கலம்

23 தூணிப்பதக்கு அச்சு நூற்று அறுபத்து ஆறும் நெல்லு அறுநூற்று எண்பத்து இரு கலநே தூணிபதக்கும் இம்முத

24 ல் அறக்கொண்டு பொருள்ச் சிலவு பிடிபாடு குடுத்தோம் வேலங்குடி ஊரோமும் முதலிகளும் முன்னைக்

25 குடி வயலில் காணியுடைய யனைவோமும் உடையார் திருக் கோளக்குடி உடைய நாயனாருக்கு இது உசித வா

26 சகப் பேரையனும் அரச நாராயணப் பேரையனும் மேநாட் டரையனும் வலங்கை மாணிக்கப் பேரைய

27 னும் கண்டராதித்தப் பேரையனும் புறமலை நாட்டுப் பேரைய னும் நகுல மீகாம பேரையனும் நகுல

28 சிங்கப் பேரையனும் பூங்குன்ற நாட்டுப் பேரையனும் நிகத மண்டலப் பேரையனும் விக்கிரம சோழ நாடாழ்

29 வானும் ஆரம் பூண்டானும் அடந்தறு காலப் பேரையனும் நாட்டுப் பேரையனும் மண்டல மாணிக்கப் பே

30 ரையனும் பழியஞ்சிப் பேரையனும் குலதீப நாடாழ்வானும் கடக்க சிந்தாமணி பேரையனும் வேல

31 ங்குடி நாடாழ்வானும் தேவேந்திர நாடாழ்வானும் வைய்யகத் தரையனும் ஆலால சுந்தர நாடாழ்வானு

32 ம் இராசேந்திர நாடாழ்வானும் தப்பிலாப் பேரையர் கீழ்புற நாட்டுப் பேரையனும் கோடாமொ

33 ழிப் பேரையனும் இவ்வனைவர் சயிக்கிளையாதன்மையு மிட்டு இவர்கள் சொல்ல இப்பொருள்

34 செலவு பிடிபாடு எழுதினேன் வேலங்குடிக் கணக்குத் திரு வையாறுடையான் அழகிய நாய

35 னான எறக்குடையான் எழுத்து

இரண்டாம் கல்வெட்டு

இடம் : மேலது

செய்தி : பூங்குன்ற நாட்டு வேலங்குடியார் திருக்கோளக்குடிக் கோயிலுக்குப் புறமலை நாட்டு முன்னைக்குடியை திருநாமத்துக்காணி

யாக விற்றுத் தந்தனர். பொன்னமராபதி சுந்தரவில்லியான நிஷத ராஜன் இவ்வூர் நிலத்தால் வந்த வேலிக்காலச்சு, நாட்டு வினியோகம் ஆகியவற்றை இத்திருக்கோயில் திருநாள் தினப்படி நடைகளுக்கென ஒதுக்கித் தந்ததாகக் கருதலாம். பொன்னமராவதி நாட்டார் குறிக்கப் படுகின்றனர்.

காலம் : கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு.

1 திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தர பாண்டிய தேவ

2 ற்கு யாண்டு 8வதின் எதிர் 2வது புறமலை நாட்டுப் பொன்னமார்பதி சுந்தரவில்லியான நிஷத₄ரா

3 ஜனேன் இன்னாட்டுத் திருக்கோளக்குடி உடையார் திருக் கோளக்குடி உடைய நாயனார் ஆதிசண்டே

4 ச்ͦவர தேவற்குப் பூங்குன்ற நாட்டு வேலங்குடியார் திருநாமத் துக்காணிய[ர*]க விற்ற புறமலை நாட்டு முன்

5 னைக்குடிப் பெருநான் கெல்லைக்குட்பட்ட புன்செய் நன் செயால் வந்த வேலிகாலச்சு நா

6 ட்டு வினியோகம் வன்தந பொன்னமார்பதிப் பற்று நாட்டவர் இன்னாயனார் திருநாள் நடுவிற் தி

7 னபடி நடைகளுக்கும் வேண்டுவனவையிற்றுக்கு இம்முன் னைக்குடி வயலால் வந்த வினியோகம்

8 தவிர்த்து முன்னைக்குடி புறவிறங்கட்டுக்[1]

மூன்றாம் கல்வெட்டு

இடம் : சத்ரசபாபதி கோயில் திருநிலைக் கால்.

செய்தி : நடராசப் பண்டாரத்தின் மகன் சிதம்பரன் கொடை யளித்த திருநிலைக் கால்.

காலம் : கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டு.

1 நடராசப்
2 பண்டார
3 த்தின் மக
4 ன் சிதம்
5 பரன்

நான்காம் கல்வெட்டு

இடம் : குன்றுத் தொடரின் வடபுறத்தே பொன்னழகியம்மன் திருக்கோயிலுக்கு நேர் மேலே, மலைப் பாறையொன்றில் கட்டம் கட்டிச் செதுக்கப்பட்டுள்ளது.

---

1. கல்வெட்டு முற்றுப் பெறவில்லை.

செய்தி : பதப்பிலி ஈசுவரம் என்ற கோயிலைச் சுட்டுகிறது. இக்கல்வெட்டின் அருகில் சிதிலமான நிலையில் கோயிலொன்று காணப் படுகிறது. இங்குப் பார்வைக்குக் கிடைக்கும் தாங்குதளம் மட்டு முள்ள கருவறைப் பகுதியும் லிங்கத் திருமேனியும் பதப்பிலி ஈசுவரத் தின் எச்சங்களாகும்.

காலம் : கி.பி. எட்டாம் நூற்றாண்டு

1 ஸ்ரீபதப்பி
2 ல்லி ஈ
3 ச்ͦவரம்

ஐந்தாம் கல்வெட்டு

இடம் : முன்மண்டபத் தூண்.

செய்தி : மய்லை சிதம்பரத்தின் மகன் இக்கோயிலில் நித்திய வழிபாடு செய்து கொண்டிருக்கிறார்.

காலம் : கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டு.

1 மய்லை சிதம்பர
2 மகன்
3 நி
4 த்த
5 ம்
6 சதா சேர்வை

ஆறாம் கல்வெட்டு

இடம் : மலைக் கோயில் நுழைவாயில் கோபுரத்திற்கு அருகிலுள்ள பிள்ளையார் கோயில் கருவறை முகப்புச் சுவர்.

செய்தி : பிள்ளையார் கோயிலைக் கி. பி. 1899-இல், மிதிலைப் பட்டி மாத்தூர் கோயில் குளத்தூருடையான் நல்ல செட்டி பழனியப்பன் எடுப்பித்தார்.

காலம் : கி. பி. 1899.

1 கலியுகாதி
2 ஸூ 5000 ன்
3 நிகளுகின்ற
4 விசுவாவசு
5 ஸூ
6 சிவமயம்
7 மிதுலைப்பட்டி
8 மாத்தூர் கோவிர்
9 குளத்தூருடையா
10 ன் நல்ல கருப்ப
11 ஞ் செட்டி பளணி
12 யப்பன் செய்த
13 யித்திருப்பணி
14 தற்மம்

2. சோழபுரம் கல்வெட்டுகள்

கோ. வேணிதேவி, சீ. கீதா

காமராசர் மாவட்டத்தில் இராசபாளையம் திருநெல்வேலி சாலையில், இராசபாளையத்திலிருந்து ஏறத்தாழப் பத்து கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது சோழபுரம். இவ்வூரில் பெருமாள் கோயிலொன்றும் சிவன் கோயிலொன்றும் உள்ளன. பெருமாள் கோயில் நன்னிலையில் புரக்கப்படுகிறது. சிவன் கோயில் கவனிப்பாரின்றி ஏங்கிக் கிடக்கிறது. இத்திருக்கோயிலில் இருந்து மைய அரசின் கல்வெட்டுத்துறை பதினோரு கல்வெட்டுகளைப் படி யெடுத்துள்ளது. இங்குக் கள ஆய்வு மேற்கொண்ட வரலாற்றாய்வு மையம் மூன்று புதிய கல்வெட்டுகளைக் கண்டறிந்தது. கல்வெட்டு களில் இச்சிவன் கோயில் ஆன்மா நாட்டுச் சோழபுரத்து விக்கிரம பாண்டீசுவரமாய் அறியப்படுகிறது.

முதற் கல்வெட்டு

இடம்: இரண்டாம் கோபுர வாயிலின் திருநிலைக் கால்.

செய்தி: தம்பிக்கு நல்லான் என்பவர் தம் பெயரால் எடுப்பித்த திருக்கோபுரம்.

காலம்: கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ தம்
2 பிக்கு நல்லான்
3 திருக்கோபுரம்

இரண்டாம் கல்வெட்டு

இடம்: மேலது

செய்தி: சுந்தர பாண்டியர் அகப்பரிவாரத்தைச் சேர்ந்த உதையன் உடையானான சுந்தர பாண்டியப் பல்லவரையன் எடுப்பித்த திருநிலைக் கால்.

காலம்: கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ இத்திரு
2 நிலை கால் நாயனா
3 ர் அகப்பரிவாரத்து
4 உதையன் உடைய
5 னான சுந்தர பாண்டி
6 யப் பல்லவரைய
7 ன் தன்மம்

மூன்றாம் கல்வெட்டு

இடம்: பெரு மண்டபத்துத் தென்புறத் தூண்.

செய்தி: அரசூருடையான் உதையன் உடையானான உய்ய நெறி காட்டினான் என்பார் எடுப்பித்த தூண்.

காலம் : கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு.

1	சீமத்து அரசுருடை	4	ய்ய நெறிகாட்டினான் த
2	யான் உதையன்	5	ன்மம்
3	உடையானான உ		

---

3. கங்கை கொண்ட சோழபுரத்துக் கல்வெட்டு

எஸ். இராமச்சந்திரன்

இடம் : கங்கை கொண்ட சோழபுர அகழ் வைப்பகம்.

செய்தி : கங்கை கொண்ட சோழபுரத்து இறைவனுக்குச் சர்வ மானியமாக (இரண்டாம்) துப்பாக்கி கிருஷ்ணப்ப நாயக்கர்[1] நிலக் கொடையளித்தார். இவர் செஞ்சி நாயக்க அரசின் இறுதி அரசராகக் கருதப்படுபவர். தஞ்சை அரசர் இரகுநாத நாயக்கரின் மாமனாரான இவரது ஆட்சி கி. பி. 1580இல் தொடங்குகிறது. இவருக்குப் பின்னர் வேங்கடப்ப நாயக்கர் என்பவர் செஞ்சியை ஆண்டதாகச் சிலர் கருதினும், வேங்கடப்ப நாயக்கரின் கல்வெட்டுகள் கிடைக்க வில்லை.

காலம் : கி. பி. 1643

1	ஸ்ரீமத் துப்பாக்கி கிருஷ்	11	. . . . . உள்பட சறுவ ம
2	ணம நாயக்கர் கெங்கை	12	ானியமாய் அனு
3	க கொண்ட மகாதே	13	பவித்துக் கொள்ள
4	தவர்க்கு குடுத்த சறுவ	14	வும் இதுக்கு
5	மான்யம் ஸ்ரீசுபானு	15	யாதொருவர்
6	வருஷம் ஆடி மீ	16	- -
7	கட்டளையிட்ட சறுவ	17	மாதா பிதாவை
8	மானிய . . . . . இதி	18	கெங்கை [கரையில்]
9	ருநந்த . . . . . வெட்ட	19	கொண்ண தோஷ
10	கூடின வேலி 6	20	த்திலே போக கடவர்

---

1. இவரைக் கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டில் திருச்சிராப்பள்ளி யில் இருந்த துப்பாக்குல நாயக்கராகக் குறிக்கிறார்கள். மா. சந்திரமூர்த்தி, கி. ஸ்ரீதரன், கா. நெடுஞ்செழியன், இராசேந்திர சோழன் அகழ் வைப்பகம் கையேடு, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, 1993, பக். 21-23.

4. திருத்தவத்துறைக் கல்வெட்டு

அர. அகிலா, மு. நளினி

திருத்தவத்துறை என்று திருமுறைகளாலும் கல்வெட்டுகளாலும் அழைக்கப்படும் இவ்வூர் இந்நாளில் லால்குடி என்றழைக்கப்படுகிறது. இங்குள்ள சப்தரிஷீசுவரர் திருக்கோயில், கல்வெட்டுகளில் திருத்தவத் துறை மகாதேவர் திருக்கோயிலாய் அறியப்படுகிறது. பிற்காலப் பல்லவர்களின் கல்வெட்டுகளைக் கொண்டிலங்கும் இத்திருக்கோயிலின் கருவறைச் சுவர்களில் பார்க்கும் பக்கமெல்லாம் வரலாற்று வரி வடிவங்களாய்க் கல்வெட்டுகள்தாம். வீணையேந்திய சிவபெரு மானைச் சிற்பமாய்க் கொண்டுள்ள இத்திருக்கோயில் வளாகத்தி லிருந்து பலமுறை கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. இருந்த போதும் இங்குக் கள ஆய்வு மேற்கொண்ட மைய ஆய்வர்கள் இது வரை படியெடுக்கப்படாத சில கல்வெட்டுகளை இக்கோயில் வளாகத் தில் கண்டறிந்து படியெடுத்துள்ளனர். அவற்றுள் மூன்று இங்கு இடம் பெறுகின்றன. பிற்காலக் கட்டுமானங்களால் வீரபாண்டியரின் இரண்டு கல்வெட்டுகளுமே வரித் தொடக்கங்களை இழந்துள்ளன. இரண்டாம் கல்வெட்டு முடிவையும் இழந்துள்ளது. கல்வெட்டுகள் இருக்கும் கோயிற் பகுதிகளில் அவற்றை மறைப்பது போல் பின்னிணைப்பாய்க் கட்டுமானங்களைச் சேர்த்து வரலாற்றிழப்பிற்குக் காரணமாகும் திருப்பணிகளை எப்படித் தடுத்து நிறுத்துவதென்றே தெரியவில்லை. இந்த இழப்பு குறித்துக் கோயிலாரோ, ஊர் மக்களோ, கல்வெட்டு அறிஞர்களோ, அமைப்புகளைச் சேர்ந்தவர்களோ அல்லது அனைவரும் கூடியோ விரைந்து ஏதேனும் செய்யாமல் போனால் இருக்கும் கல்வெட்டுகளையும் இழக்கும் நாள் நெடுந்தொலைவில் இல்லை.

முதற் கல்வெட்டு

இடம்: அம்மன் கோயில் திருச்சுற்றின் வட சுவர்.

செய்தி: மணற்காலைச் சேர்ந்த திருநச்சியூர் பெருமாளுக்கு உத்தரமயனத்தின் போது நூற்றெட்டுக் குடங்களால் திருமஞ்சணம் செய்து பெருந் திருவமுது படைத்துப் பூசை மேற்கொள்வதற்காகச் சிறுபழுவூர் சாவாந்தி நக்கன் அறத்தன் நிலக்கொடையளித்தார். மேலமாதவன் துகி நாராயணன் மனைவி நக்கன் திருநீலகண்டி இதே செயற்பாடுகளுக்காக நூறு பொன் தந்தார், மற்றொரு வகையில் நெல்லும் தரப்பட்டுள்ளது. இது குறித்த வரி சிதைந்துள்ளதால் நெல் வந்த வழி அறியக்கூடவில்லை. இந்த நிலம், பொன், நெல் கொண்டு

ஸ்ரீகோயில் வாரியத்தாரே இவ்வறக் கட்டளையை நிறைவேற்றுமாறு ஊர்ச்சபை பணித்துள்ளது. கோயில் வாரியத்தார் சபையின் கட்டுப் பாட்டில் இருந்தமை இக்கல்வெட்டால் தெளிவாகிறது. நாயன்மார் களுள் ஒருவரான திருநீலகண்டரின் பெயரைச் சோழர் காலப் பெண்மணியொருவர் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

காலம்: ஆதித்த கரிகாலரின் நான்காம் ஆட்சியாண்டு, கி. பி. 969.

1 ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டியனை எறிந்து தலைகொ[காண்டகோ]ப் பரகேஸரி ப

2 ந்மற்கு யாண்டு 4 ஆவது வடகரை மழநாட்டு . . . . . . மணற்கால் திருந

3 ச்சியூர் பெருமாளுக்கு உத்தரமயனம் பற்றின . . . . க்கு நூற்று எட்டுக் க

4 லைச[த்*]தால் திருமஞ்ச(ா)ணம் புகவும் பெருந் திருவ[முதுக் கும்] பூஜினைக்கு

5 மாகச் சிறுபழுவூர் சாவாந்தி நக்கனறத்தன் வைய்த்த நிலமிவ் வூர் வட திருக்கோ

6 யில் இத்தேவர் . . . வாடும் . . . . இவன் விலைக்கு கொண்டுக் குடுத்த ஒரு மா

7 – – ட்டத்தின் வடவா யறு மாவின் கீழை ஒரு மா [வ*]ரை மே

8 லமாதவன் துகி நாராயணன் ப்$_3$ராஹ்மணி நக்கன் திருநீல கண்டி வைய்ப்

9 பினாலி விறுகைய் ஒற்றிக் கலங்களால் உடைய பொன் 100ம் பெ

10 – – ாக இநிலமும் இப்பொன்னும் இநெ[ல்*]லு

11 ங் கொண்டு ஆட்டாண்டு தோறும் ஸ்நபந த்ரவ்யங்களும்

12 புடவைகளுங் குறைவற கொண்டு சந்த்$_3$ராதி$_3$த்யவல் ஸ்ரீ கோயில்

13 வாரியரேய் செய்விப்பாராகப் பணித்தோம் ஸபை$_4$யோம் பந்மா

14 ஹேச்₀வர ரக்ஷை

இரண்டாம் கல்வெட்டு

இடம் : அம்மன் கோயில் பெரு மண்டப வட சுவர், தாங்கு தளம்.

செய்தி : கொன்றைக்குடியான வீரபாண்டியச் சதுர்வேதிமங் கலத்துப் பட்டர்கள் முப்பது பேருக்கு மன்னரின் பதினோராம் ஆட்சி யாண்டு முதல் பூதான இறையிலியாகத் தரப்பட்ட நிலப் பகுதிகளைக் குறிப்பிடுகிறது. ஆதிகுடி, அன்பில், வலம்புரி போன்ற ஊர்களும் கொள்ளிட ஆறும் எல்லைகளாகக் குறிப்பிடப்படுகின்றன. பல வகை யான வரியினங்களின் பெயர்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

காலம் : கி. பி. பதினான்காம் நூற்றாண்டு.

1 – – – – [இராசராச வள]நாட்டு களார்க் கூற்றத்துக் கீழை முறியில் நம் [வு]டன் கூட்டத்து . . . . களில் மிழலைக்

2 – – – – நம் பேரால் வைத்த கொன்றைக்குடியான வீரபாண் டியச் சதுர்வேதிம[ங்கல]த்து பட்டகள் பேர் முப்பதும் இவ்வூர் க்ஷேத்$_3$ரவான்களுக்கு மூல்யத்துக்குச் சிலவாக குடுத்த இறையிலி யாக விட்ட பங்கு இரண்டும் நாயனார் வரந்தரும் பெருமாளுக்கு

3 – – – – பட்ட ஆதிகுடி எல்லைக்கு வடக்கும் கிழக்கும் கொள்ளிட வாற்றுக்குத் தெற்க்கும் வலம்புரி எல்லைக்கும் அன்பில் எல்லைக்கு மேற்கும் இந்நான் கெல்லைக்கு உட்ப்பட்ட நன்செய் நிலங்களும் புன்செய் நிலங்களும் [னிலி]கெளும் ப$_4$ட்டகளுக்கு இருப்பாக அகர நத்த

4 – – – – து அலையூர் பாயும் வாய்க்கால்களும் உள்ப்பட நமக்குப் பதின் ஒன்றாவது முதல் முதலடங்க இறையிலியாக உத$_3$கபூ$_4$ர்வ்வ மாக பூ$_4$த$_3$ான இறையிலியாக தந்தோம் இநிலங்கள் காரும் மறுவும் ஒரு பூவும் வம்பும் கடைப் பூவும் கமுகும் கொடியும் சென் னெல்லும் செம்

5 – – – – ண் அனுபவிப்பாராகவும் இவையிற்றால் வரும் நெல்க் கடமை காசு கடமை மாக்கடமை புன்செய் கடமை வெட்டிக்காடு வாக்கறைக் காத்திகைப் பச்சை கொற்றிலக்கை கடைக் கூட்டு இலக்கை சந்து விக்கிரகப் பேறு கீற்றுவரி திருவாசல் வினியோகம் முகம் பார்வை

6 – – – – த்துக் காட்டும் பச்சை நம் வீட்டுத் தேவை சிறை அச்சுத் தறியிறை செக்கிறை தட்டொலி தட்டார்ப்பாட்டம் நாட்டு வினி யோகம் ஆள்வரி இனவரி ஏர்வரி வாசல் வந்த வாசல்ப் பண்டை ஒழுக்கு நீர்ப்பாட்டம் பாசிப்பாட்டம் பஞ்சுபீலி நல் எருது நல் பசு இருந்து பரிமாறுவார் ஆயம்த் தொ

7 ---- த்து இன்நாள் முதல் தங்களுக்கு நாம் உதக பூர்வமாக பண்டுடையாரும் பழங் காணியாளரையும் முதல் தவிந்து தங்களுக்கு காணியும் இறையிலியும் ஆகத் தந்தோம் இப்படிக்கு வோலை பிடிபாடாகக் கொண்டு கல்லிலும் செம்பிலும் வெட்டி இன்த சந்த்$_{3}$ராதி$_{3}$த்யவரையும் அனுபவிக்க

மூன்றாம் கல்வெட்டு

இடம்: மேலது.

செய்தி: அறுநூறு பணத்திற்கு வாங்கப்பட்ட நிலப்பகுதி பட்டர்களுக்குப் பங்கிடப்பட்டது. வரந்தரும் பெருமாள் திருக்கோயிலின் திருவிடையாட்ட நிலங்களுக்காய் நான்கு பங்கு ஒதுக்கப்பட்டது. மொத்தப் பங்குகள் முப்பத்து மூன்றெனத் தெரிகிறது. ‘கொள் இட அணை’ என்ற சொல்லாட்சி சிந்தனையைத் தூண்டுகிறது. கல்வெட்டு வரிகளின் தொடக்கம் கட்டடப் பகுதியில் சிக்கியுள்ளது. முடிவு தரைப் பகுதிக்குக் கீழே மறைந்திருக்கிறது. கோயில்களில் உண்டாக்கப்படும் கருத்தற்ற புதிய இணைப்புகளில் வரலாறு சிதைந்து போவதற்கு இது தகுந்த சான்றாகும்.

காலம்: கி. பி. பதினான்காம் நூற்றாண்டு.

1 ---- ன்மர் திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவீரபாண்டிய தே$_{3}$வர்க்கு யாண்டு பதின் ஒன்றாவது மிதுந நாயற்று பூர்வ பக்ஷத்து த்ரயோதசியும் புத$_{4}$ன் கிழமையும் பெற்ற அனிழத்து நாள் வடகரை இராசராச வளநாட்டு கீழை முறி களார்க் கூற்றத்து கொன்றைக்குடியிலே பெருமாள் திருநாமத்தாே

2 ---- லே விலை கொள்வதாக அறுதி இட்டு இவூர் நான்கெல்லைக்கு உள்பட்ட நன்செய் புன்செய் நத்தங்கள் இதில் ச$_{2}$லவ்ருக்ஷாதி$_{3}$களும் உள்பட்ட சமஸ்த ப்ராப்திகளுக்கும் மூல்யம் அறுநூறு பணமாக ஸர்வ வரிகளுடனே அறுதி[இட்ட அளவி[லே] எங்களுக்கு பணமானால் அழிந்து போம் இப்பண

3 ---- களோபாதி இறையிலியாகத் தர அமையும் என்று இவர்கள் சொல்ல நாள் பத்தாவது நாளிலே இவர்கள் கையாலே இவ்வூர் நான்கெல்லைக்கு உள்பட்ட ஸமஸ்த ப்ராப்திகளும் பேசி இசைவு முறியு[ம்] வாங்கி இப்படிக்கு பெருமாள் திருமுகமும் வாங்கிக் குடியும் பேரும் பட

4 ---- பங்கு 6 மஹாசுரைதான ப$_{4}$ட்ட[ர்*]க்கு பங்கு 4 வம்பபுறத்து ஸ்ரீரங்க$_{3}$நாத ப$_{4}$ட்ட[ர்*]க்கு பங்கு 4 . . . . . . வரதராஜ ப$_{4}$ட்ட[ர்*]க்கு பங்கு 4 கொட்டூரன் கூத்த ப$_{4}$ட்டர்க்கு பங்கு

5 – – – – கோத்தரத்து ஸப$_{4}$ாபதி பட்டர்க்கு பங்கு 4 வங்கிபுறத்து . . அநேக$_{3}$ ப$_{4}$ட்டர்க்கு பங்கு 4 இ கே$_{3}$ாமடத்து அழக பெருமாள் நம்பியர்[க்*]கு பங்கு 4 – – நம்பியர்க்கு பங்கு 4 சொட்டை ஸஹஸ்ரகர பட்டர்க்கு பங்கு 2 ப்ரா . . . . ஸ்ரீதர பட்டர்க்கு பங்கு 4 குரவசேரி ஸ்ரீ நராஸிம்ஹ பட்டர்க்கு பங்கு 4

6 – – – – புறத்து மஹாப$_{4}$ாரத பட்டர்க்கு பங்கு 4 கோமடத்து த$_{3}$ாமோத$_{3}$ர ப$_{4}$ட்டர் ஸர்வக்ரு$_{\circ}$துக்களுக்கு பங்கு 4 பூவாலூர் ஆதிமூல நம்பியர்க்கு பங்கு 4 . . . . . க$_{3}$ங்க$_{3}$ாத$_{4}$ர பட்டர்க்கு பங்கு 4 கோனூர் மஹாதே$_{3}$வ ப$_{4}$ட்டர்க்கு பங்கு 4 புள்ளலூர் ஆழ்விக்கு பங்கு 4 சொட்டை ஜனநேய பட்டர்க்கு பங்கு 4 முப்புரத்து நவனீத பட்டர்க்கு பங்கு $\frac{1}{2}$

7 – – – – பட்டர்க்கு பங்கு 5 முப்புறத்து அனந்த நாராயண பட்டர்க்கு பங்கு $\frac{1}{2}$ க்ஷேத்ரவான்களுக்கு மூல்யத்துக்குச் சிலவாக இழக்குந்தறத்து தேவபெருமாள் உள்இட்டார்க்கு பங்கு 2 நாயனார் வரந்தரும் பெருமாள் பழந் திருவிடையாட்ட நிலங்களுக்கும் பங்கு 4 ஆக பங்கு முப்பத்து மூன்றுக்கும் இவ்வூர்

8 – – – – ங்க வாத்தலை வாய்க்கால்கள் கொள்இட அணை ப்ராப்திகள் உட்பட்ட ஸமஸ்த ப்ராப்திகள் உட்பட நான் கொண்ட இசைவு முறிப்படியும் இப்படி பெருமாள் திருவெழுத்துச் சாத்தின திருமுகப்படி தங்களுக்கு நாமும் உத$_{3}$கபூ$_{4}$ர்வமாக தந்தோம் – – மிழலைக் கூற்றத்து [கீழ்] பாம்பாற்று வைகுந்த – – – –[1]

எண்ணங்களை எழுதுங்கள்

வரலாறு நான்காம் இதழைப் படிக்கும் அன்பர்கள் இந்த இதழின் அமைப்பு, இதில் இடம் பெற்றிருக்கும் செய்திகள், கட்டுரைகள் ஆகியவற்றைப் பற்றித் தத்தம் கருத்துக்களை எழுதுமாறு வேண்டுகிறோம். புதியனவாகவும் பயனுள்ளவையாகவும் எவ்வெப் பகுதிகளைச் சேர்க்கலாம் என்பதற்கும் வழி காட்டுங்கள். இவ்விதழில் வெளியாகியுள்ள ஆய்வுக் கருத்துக்களுக்கு மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும் தெரிவித்தருள்க. வரலாறு உரியவற்றை வெளியிட்டு மகிழும். — ஆர்.

---

1. கல்வெட்டின் இறுதிப் பகுதி புதிதாகக் கட்டப்பட்டுள்ள தரைப் பகுதிக்குள் சிக்கியுள்ளது.

2. விட்டுப்போன தொடர்ச்சிகள்

திருத்தவத்துறைக் கல்வெட்டு

திருத்தவத்துறை சப்தரிஷீசுவரர் கோயிலில் இருந்து 1892இல் சில கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன. அவற்றின் பாடங்கள் தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி நான்கில் வெளியாகியுள்ளன. இத்தொகுதியில் 535ஆம் எண்ணிடப்பட்டுத் தரப்பட்டிருக்கும் கல்வெட்டின் பாடம் இருபத்து நான்கு வரிகளுடன் நிறைவடையாமல் நிற்கிறது. இந்நிலைக்குக் காரணமேதும் தொகுதியில் தரப்படவில்லை. கள ஆய்வின் போது மையக் கல்வெட்டாய்வர்கள் இக்கல்வெட்டின் பதிப்பிக்கப்படாத பகுதியைக் கண்டறிந்தனர். விட்டுப்போன தொடர்ச்சியான இப்பகுதி ஆறு வரிகள் கொண்டுள்ளது. ஏற்கனவே படியெடுக்கப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ள வரிகளிலும் சில பாட வேறுபாடுகள் உள்ளன. சில சொற்களும் விடப்பட்டுள்ளன. சரியான பாடங்களும் விடப்பட்ட எழுத்துக்களும் உரிய இடங்களில் அடிக்குறிப்புகளாகத் தரப்பட்டுள்ளன.

பதிப்பிக்கப்பட்டிருக்கும் 1 — 24வரிகள்

1 ஸ்வஸ்திஸ்ரீ மதிரையும் ஈ

2 ழமுங் கொண்ட கோப்பரகே

3 சரிபன்மற்கு யாண்டு 41

4 ஆவது இடையாற்று நாட்டு பு

5 துக்குடி னாரண ஆ[தி]த்த[டி]ம[செ]னன்[1]இ[நா]

6 ட்டு தேவத[ர]னந் திருத்தவத்து

7 றை ஈச்ஂவர பட்டார[ர்*]க்கு சந்த்ராதி₃

8 த்₃த₃வல் மூன்று சந்தியும் ஆராதி

9 க்க குடுத்த நிலமாவது . . . கா[ர]

10 [னை]புறக் கண்ணா[ற்றில் . . . . . .

11 செய்யி[ல் ே]மக்கடைந்[த செ]சய் அ[று] . .[2]

---

1. புதுக்குடி னாரண ஆதித்தடிமனென் என்பது தவறான பாடம். கல்வெட்டில் தெளிவாகப் புதுக்குடான் ஓண ஆதித்த பிடாரனேன் என்றுள்ளது.

2. அறுமாவு என்று தெளிவாக உள்ளது.

12 ம் இவ்வறுமாவுக்கு தென்பாற் [கெல்லை] . . .[3]
13 லத்தால் போன பெருவழி[க்கு] வ
14 டக்கு[ம்] கீழ்பாற் கெல்லை எ . .[4]
15 . .[5] காற்க்கு மே[ற்]கும் வடபாற் கெ
16 ல்லை என்னிலத்தால் போன[6] வாக்
17 காலுக்கு தெற்க்கு மேல்பாற் கெல்லை சங்கர
18 நாராயணன் நிலத்துக்கு பெரு . . .[7]
19 ட மாடமுடையான் நிலத்துக்கும் . .[8]
20 பேற்றுக்கு கிழக்கு இவ்விசைத்
21 த பெருநான் கெல்லையில் லகப்[ப]
22 ட்ட நில[ம்*] இந்நில[ஞ்*] சுட்டி வந்த . . .[9]
23 யும் எ(ய்)ச்சோறும் வெட்டியு
24 ே[வதி]னை . . . .[10]

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அதன் தொடர்ச்சி 25-30 வரிகள்

25 ததாகவு[ம்*] இறை காட்டினாரை வெவ்வேற்று வகை நூற்றெட்டு காணம் தா
26 ன் வேண்டு கோவுக்கு தண்டம் இட்டும் இவ்வறுமாச் செய்யுந்திடல் கல்லி
27 நீர் பூசி நெடும்பம் மெறிந்து தாந்டெமுதும் உமுவித்துங் கொண்டு அ
28 னுபவித்து திருவாராதனை செய்துண்ண குடுத்தேன் கரந்தை ப
29 [ாட]ல புதுகுடி புதுக்குடான் ஓண ஆதிச்ச பிடாரனேன்
30 இது பன்மா[ஹே*]ச்ᵒவர இயக்ஷை

---

3. தேவையில்லாமல் புள்ளி வைக்கப்பட்டுள்ளது. அவ்விடங்களில் 'என்னி' என்ற மூன்றெழுத்துக்கள் தெளிவாக உள்ளன.

4. இரண்டு புள்ளிகள்தான் வைத்துள்ளனர். ஆனால் 'ன்னில' என்ற மூன்றெழுத்துக்கள் கல்வெட்டில் படிக்குமாறு உள்ளன.

5. இரண்டு புள்ளிகள்தான் வைத்துள்ளனர். ஆனால் 'த்திற்' என்ற மூன்றெழுத்துக்கள் தெளிவாகத் தெரிகின்றன.

6. 'நாட்டு' விடுபட்டுள்ளது.

7. 'பெரு' என்ற சொல் இல்லை. அதற்குப் பதிலாகப் புள்ளிகளையும் சேர்த்து அவ்விடத்தில் 'மேற்கு ம' என்ற சொல் உள்ளது.

8. 'வெட்டி' பதிப்பில் விடுபட்டுள்ளது.

9. 'இறை' பதிப்பில் விடுபட்டுள்ளது.

10. 'செந்நீர் வெட்டியும் இறா' என்னும் சொற்கள் இருந்தும் பதிப்பில் இடம் பெறவில்லை.

3. செப்பேடுகள்

துறையூர்ச் செப்பேடு

ச. கிருஷ்ணமூர்த்தி

விருத்தாசலம் குமார தேவர் மடம், துறையூர் மடத்தின் கிளையாகும். வீர சைவ மடமாகிய குமார தேவர் மடத்தில் ஓலைச் சுவடிகளுடன் துறையூர்ச் செப்பேடு ஒன்றும் உள்ளது. கி. பி. 1743இல் வெங்கடாசல ரெட்டியார் என்பவர், துறையூர் வீர சைவரான சிவப் பிரகாச சந்நிதானத்துக்குத் தானம் வழங்கிய செய்தி இச்செப்பேட்டில் காண்கிறோம். 'திருவண்ணாமலை மடம் வீரசிங்காதனத்துக்குக் கர்த்தரான சுவாமி' என்று சிவப்பிரகாச சுவாமிகள் குறிக்கப்பட்டுள்ளார். சுவாமிகளின் பெருமைகள் கீழ்க்கண்டவாறு செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளன.

''சுத்த சிவாச்சார சம்பன்னரான, விபூதி ருத்திராட்ச பஞ்சாட்சர மந்திர பரிபூரணரான, ஏக லிங்க நிஷ்டாபரரான, சச்சிதானந்த பிரயுக்தரான, சிவ சாம்பிராச்சிய பிறதாயகரான, பர சமைய கோலா கலரான, சிவ சமைய பரிபாலகரான, சத்து சித்தானந்த நித்திய பூரணரான, சித்தாந்த வேதாந்த வீர சைவ சமரசரான, சகள நிட்கள சதாசிவ ரூபரான, ஆதார நிராதார மீதான நிராமய நிமல பரப் பிரகாசரான, ஸ்ரீ நந்திநாத ஸ்ரீபிரிங்கி நாத ஸ்ரீவீரபத்திர முக்கியரான, வீர சைவ ஸ்தாபனாசாரியார்''. முதலில் திருவண்ணாமலையிலும் பின் துறையூரிலும் சுவாமிகள் மடாதிபதியாக இருந்துள்ளார்.

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். வீர சைவ மரபினர். பல தமிழ் நூல்கள் இயற்றியவர். கி. பி. பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் மற்றொரு சிவப் பிரகாசர் வாழ்ந்துள்ளார். இவரும் வீர சைவ மரபினர். தமிழில் புலமையுடையவர். திருவாவடுதுறையில் ஞான தீட்சை பெற்றவர்.

சிதம்பரத்தில் கோவிந்தராஜப் பெருமாளுக்கு விருபாட்சராயர் காலத்தில் துப்பாக்கிக் கிருஷ்ணப்பர், பல சலுகைகள் செய்து தில்லை வாழ் அந்தணர்களுக்குத் தொல்லைகள் தந்தார். விசையநகர மன்னரின் அமைச்சர் லிங்கம நாயக்கரிடம் பேசிக் குறைகளைச் சுவாமிகள் களைந்தார். திருவண்ணாமலையில் திருமடம் கட்டி அதில் இருந்து வந்தார்.

இப்பெரியார் அத்துவித வெண்பா போன்ற வீர சைவ நூல்களை இயற்றினார். திருக்காளத்தியில் மத்வாசாரிய பீடத்தார் ஒருவரை

வாதில் வென்று சிவ தீட்சை தந்தார் என்றும் அறிகிறோம். துறை யூரில் லிங்கதுரை என்பவர் (லிங்கா ரெட்டியார்) ஒரு திருமடம் கட்டு வித்துச் சில கிராமங்களை விடுத்துத் தினமும் பத்துப் பொன்னும் கொடுத்து இவரை உபசரித்து வந்தார்.

பல்வேறு சித்துகள் புரிந்த சிவப்பிரகாசர், திருவாவடுதுறை நமச் சிவாய மூர்த்திகளின் சீடராக இருந்துள்ளார். தம் இறுதிக் காலத்தில் திருவண்ணாமலை வீர சைவ ஆதீனத்திற்காக ஞானக்கூத்த தேசி கரைக் குரு பீடத்தில் அமர்த்தி ஆறாம் நாள் மறைந்ததாக வரலாறு கூறும்.

சிவப்பிரகாச சுவாமிகள் குறித்துக் குமார தேவர் மடத்து ஓலைச் சுவடிகளிலும் குறிப்புகள் உள்ளன. துறையூரில் இருந்தபோது சிவப் பிரகாச சுவாமிகளுக்குத் துறையூர் சமஸ்தானரான லிங்கா ரெட்டியா ரும் வெங்கடாசல ரெட்டியாரும் வழங்கிய தானங்களை இச்செப்பேட் டில் காண்கிறோம்.

செப்பேட்டின் அமைப்பு

செவ்வக வடிவிலுள்ள இச்செப்பேடு 36 செ. மீ. நீளமும், 22 செ. மீ. அகலமும் கொண்டது. செப்பேட்டின் முன் பக்கத்தில் சிவப்பிரகாச சுவாமிகள் பத்மாசனத்தில் அமர்ந்தபடி தம் எதிரில் உள்ள இரு ஆட வர்க்கு அருள் பாலிக்கிறார். முகத்தில் தாடி; தலையின் பின்புறம் கொண்டை. சுவாமியின் ஒரு கையில் சுவடி அல்லது பட்டயம். மற் றொரு கை அருளாசி வழங்குவது போல் உள்ளது. கழுத்தில் உருத் திராக்க மாலை.

சுவாமிகளுக்கு எதிரில் நிற்கும் இரு ஆடவர், லிங்கா ரெட்டி யாரும் வெங்கடாசல ரெட்டியாரும் எனலாம். மராட்டியர் கால ஆடை. தலையில் தலைப்பாகை. தோளின் இரு புறமும் துணி தொங்குகிறது. சுவாமிகளுக்குப் பின்புறம் இரு சீடர்கள் உள்ளனர். ஒருவர் இரு கை களையும் மார்பின் மீது கட்டிய நிலையிலும் மற்றவர் வணங்குவது போலவும் உள்ளனர். பட்டயத்தின் முன் பக்கத்தில் 'ஸ்வஸ்திஸ்ரீ' எனத் தொடங்கி 58 வரிகள் எழுதப்பட்டுள்ளன. மறுபக்கத்தில் 59 முதல் 83 வரிகள் வரை எழுதப்பட்டுள்ளன. முன்புறத்தைக் காட்டிலும் பின்புறம் எழுத்துக்கள் சற்றுப் பெரிதாக வெட்டப்பட்டுள்ளன.

பிற்கால விசைய நகர அரசர் கல்வெட்டுகள், செப்பேடுகள் போலவே 'மன்மகாமண்டலேசுவரன் அரியராய விபாடன்' என்ற மெய்க்கீர்த்தியுடன் பட்டயம் தொடங்குகிறது. பல்வேறு புனைந் துரைகள் கூறப்படுகின்றன. அறிவுக்கு, ஆண்மைக்கு, பொறுமைக்கு,

புகழுக்கு, தருமத்திற்கு, சொல்லிற்கு, கல்விக்கு யார் யார் வல்லவர் என்ற விபரம் காண்கிறோம்.

மாட மாளிகையும் கூட கோபுரமும் கோட்டையும் மதிலும் குறைவிலாது விசயநகரத்திலும் வேலூரிலும் கட்டப்பட்டமை, விசயநகர மன்னர்கள் பீதாம்பரம் தழைய அணிந்து, அங்கத, கடக, குண்டல, கிரீடமும், முத்தாவலி பதக்கமும் சீர் பெறப் புனைந்து, கத்தூரித் திலகம் நெற்றியில் அணிந்து, உடைவாள் ஏந்தி, ஆறு கால் பீடத்தேறி இனிது அமர்ந்திருந்தமை ஆகிய தகவல்களைச் செப்பேடு குறிப்பிடுகிறது. சல்லரி, தடாரி, தண்ணுமை, பல்லியம் முதலிய இசைக் கருவிகள் விசயநகரப் பேரரசர் அரண்மனையில் இசைக்கப் பட்டன.

சதாசிவராயருக்குப் பின் விசயநகரப் பேரரசு வீழ்ந்து அன்னியர் ஆட்சி ஏற்பட்டது. அப்போது திருச்சிராப்பள்ளி சமத்தானத்துக்குள் துறையூர் சமத்தானத்தில் நல்லப்ப ரெட்டியார், இவர் பேரன் லிங்கா ரெட்டியார், லிங்கா ரெட்டியாரின் மகன் வெங்கடாசல ரெட்டியார் ஆகியோர் ஆட்சி புரிந்தனர்.

செப்பேடு வழங்கப்பட்ட காலம் சித்திரைத் திங்கள் ருத்ரோத்காரி ஆண்டாகக் கூறப்படுகிறது. சகம் 1665; கி. பி. 1743. செப்பேட்டின் 36ஆம் வரி முதல் 43ஆம் வரி வரை, வீர சைவத்தின் சிறப்பும் தாபகரின் பெருமையும் காண்கிறோம். சிவப்பிரகாச சுவாமிகளின் தீக்ஷா காலத்தில், அன்னதானம், சொர்ணதானம், வஸ்திர தானம், பூதானம் முதலாகிய பெருந் தானங்களை வெங்கடாசல ரெட்டியார் சுவாமிகளுக்குத் தத்தம் செய்கிறார்.

தானம் செய்யப்பட்ட ஊர் காரப்புடையாம்பட்டியாகும். இவ்வூரின் எல்லைகளைக் குறிப்பிடும்போது உப்பிலியாபுரம், வடரெட்டிப் பாளையம் (வயிர செட்டிப்பாளையம்?), கொப்பம்பட்டி, சொக்கம்புரம் என்ற நான்கு ஊர்கள் சுட்டப்படுகின்றன. காரப்புடையாம்பட்டியில் நன்செய், புன்செய், தோப்பு, துரவு, கொடிக்கால், திட்டை, திடல், ஜலபாஷானம், நிதி, நிட்சேபம் யாவும் தானமாக வழங்கப்படுகின்றன.

குரு பூசைக்குக் கட்டளையாக விடப்பட்ட தானியம் (வரி) பற்றி அடுத்துக் காண்கிறோம். துறையூர் சமத்தானத்துக்குட்பட்ட சீமை முழுவதும், அக்கிரகாரம், சருவமானியம், உம்பளம், காந்தாசாரம், குடியோம் என அனைத்து வகையான நிலங்களுக்கும் ஏர் ஒன்றுக்கு நான்கு படி தானியம் வருடந்தோறும் வாங்கிக் கொள்ள வெங்கடாசலம் கட்டளையிட்டார். அக்கிரகாரத்திற்கும் வரி விதிக்கப்பட்ட தன்மை

புதுமையாகும். வெங்கடாசல ரெட்டியார் தம் தந்தையைக் குறிப்பிடும்போது, பெரியவாள் என்றே குறிப்பிட்டுள்ளார். பெரியவாள் ஏற்கனவே துறையூர் மடத்திற்குக் கட்டளையாக விட்டிருந்த திதி மகமை, அமுதுபடி மற்றுமுள்ள மேற்செலவு ஆகியன எப்போதும் போல வாங்கிக் கொள்ளலாம் என்று செப்பேடு கண் காட்டுகிறது.

யார் ஒருவர் மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் இக் கட்டளையை நிறைவேற்ற சகாயம் செய்வாரோ அவர் காசி, சிதம்பரம், திருவாரூர், அருணாசலம், காளத்தி, திருக்கழுக்குன்றம், காஞ்சிபுரம், பைஞ்ஞீலி, கும்பகோணம், இராமேசுவரம் முதலாகிய சிவத்தலங்களில் கோடி லிங்கம் பிரதிஷ்டை பண்ணின பலன் எய்துவர் எனச் செப்பேடு கூறுகிறது. இங்குப் பத்து சிவத்தலங்கள் குறிக்கப் பட்டுள்ளன.

தானத்துக்குக் கேடு விளைவிப்பவர் காராம் பசு, குழந்தை, தாய், தந்தை ஆகியோரைக் கொன்ற தோஷத்தில் போகக் கடவார்கள் என்று கூறும் செப்பேட்டின் முடிவில் வெங்கடாசல ரெட்டியாரின் ஒப்பத்தைக் காண்கிறோம்.

குமார தேவர் மடத்தில் கூர்ம புராணம் என்ற சுவடி (எண். 27) உள்ளது. இச்சுவடியின் இறுதி ஏட்டில் விபவ ஆண்டு கார்த்திகை மாதம் 25 வெள்ளிக்கிழமையும் திரிதிகையும் மிருகசிருஷமும் கூடின தினத்தில் துறையூர் மாபதி சிவப்பிரகாச சுவாமியார் காலத்தில் குருநாதையர் கையினால் கூர்ம புராணம் எழுதப்பட்ட விபரம் காண் கிறோம். தேவாரம் என்ற சுவடியின் (எண். 41) இறுதியில் சிவப் பிரகாச சுவாமியார் அவர்கள் கிருபையினாலே வசவலிங்கத் தம்பிரான் எழுதியதாகக் காண்கிறோம்.

குமார தேவர் மடத்தில் உள்ள ஓலைச் சுவடிகளையும் செப்பேட் டையும் ஆய்வு செய்ய அனுமதி வழங்கிய மடத்தின் தலைவர் கல்யாண சுந்தர சிவப்பிரகாச பண்டார சந்நிதியாரவர்களுக்கும், மதிப்புறு நிர்வாகி திரு. இராசசேகரனார் அவர்களுக்கும் இக்கட்டுரையாசிரிய ரின் நன்றி உரியது.

செப்பேட்டுப் பாடம்

ஏட்டின் முன்புறம்

1 ஸ்வஸ்திஸ்ரீ மன்மகா மண்டலேஸ்வரன் அரியராய விபாடன் பாஷை[1]

2 க்குத் தப்புவாராத ராயகண்டன் கண்ட நா

3 டு கொண்டு கொண்ட நாடு கொடாத னாரியர்தள விபாடன் ஆரியர் வீரம

4 ழித்தான் பூர்வ தெட்சண பச்சிம வுத்திர சதுந் சாசரகண்ட லவனயிட்சு

5 சுரா சேற பிதெதிக்ஷீரசுத் தோக சத்த சமுத்திராதிபதி சுவாயம்பு மனுச்ச

6 க்கிரவர்த்தி நிற்மித அகண்ட நவகண்டப் பிரிதிவி மண்டலாதிபதி யங்க வங்க

7 கலிங்க காஸ்திமீரக்[2] கொங்கணடங்க குகுத கூச்சர மாளவ துளுவ மகத காம்

8 போச மண்டலீகர் திரையளக்க வந்த ரெகுராமன் அரிசரபசாற துலாபரிக்கு

9 கிற வாகமொடு கெச்வேட்டையாடும் புச்பெல பராக்கிரமன் எதிரிட்டு வ

10 ரு மன்னர் முதுகிட்டு முறியவே கட்டாரி தொட்ட பட்டாபிராமன் துஷ்ச[3]

11 ன் நிக்கிரகன் சஷ்சன பரிபாலகன் அஷ்டலட்சுமி வாசமிட்ட புயவீமன் ஆ

12 டுமணி நாவசையாது கட்டும் படையாடவர் திலகனிலப் பிறதாபன் பகை

13 யரசன் முடியிடறி ரணபேரி கொட்டி விருது பெறும் வீராள்ன் வில்ல

14 வர்களாகச் சதுரங்க சேனா பெலதுங்க வீமன் சற்பன்ன பாழை

15 யினும் விற்பன்ன முள்ளோன் எழு முழமான மதவேழ நிரை கட் டும்

16 செச்சார முள்ளவ னுற்சாக புருஷன் வர்ண்ண லெட்சங் குதிரை ப

17 ரிலாயன் அறிவுக்கு அகஸ்திய னாண்மைக்கு ராமர் பொறுமைக்கு தர்

18 ம்மர் புகழுக்குச் சோமன் கல்விக்குச் சேழன் கன்தைக்குச் சோழன்

19 சொல்லுக்கு அரிச்சந்திரன் இராசாதிராசன் ராச பரமேசுவரன் ராச மார்

20 த்தாண்டன் ராச குல திலகன் நாற்பத்து முக்கோண மேற்சக்கிற மாக

21 மாட மாளிகையுங் கூட கோபுரமுங் கோட்டையு மதிளுங் குறை விலா

22 தமைத்த விசைய நகரத்திலும் வேலூர்தனிலும் முத்தினாற் பரந்த ராசு தலமெலா

23 ம் விளங்க பூத்தார் பொலியும் ஆஸ்த்தான மண்டபத்தழகும் பீதாம்பரந் தழை

24 யவணிந்து அங்கத கடக குண்டல கிரீடமு முத்தாவலி பதக்கஞ் சீர்பெறப் (புனை

25 ப்) புனைந்து கஸ்தூரித் திலகம் நெத்தியி லணிந்து ஆறுகால்ப் பீடத்தேறி யினி

26 தமர்ந்து உடை வாளேந்தி வொருவன் புடையுறப் பட்டுவார்கள் கட்டியங்கூற

27 ச்சல்லரி தடாரி தண்ணுமை பல்லிய முழங்க மனுவிறார

28 னேசுர மது பாரட்டித் திக்கெல்லாம் புகழ்ச் செலுத்தும் ஸ்ரீமல்லி கார்ச்சுண தேவ

29 மகாராயர் வீர வசந்தராயர் விருப்பாட்சிராயர் சதாசிவராயர் யிவர்களிற் பின் ரா

30 யமன்னியரில்[4] திருச்சிராப்பள்ளி சமத்தானத்துக்குள் துறையூர் ச்மஸ்தா

31 னம் ஸ்ரீமத் ராசா திரார்சனாகிய சதுற்த கோத்திரம் செட்டிக்குளம்[5] பல்லகோல்[6]

32 ஸ்ரீமத் நல்லப்ப ரெட்டியாரவர்கள் பவுத்திரன் ஸ்ரீமத் லிங்கா ரெட்டியாரவர்க

33 ள் குமாரர் ஸ்ரீமத் வெங்கடாசல ரெட்டியாரவர்கள் பிறிதிவி ராச்சிய பரிபா

34 லனம் பண்ணியருளா நின்ற சாலிவாகன சகாற்த்தம் 1665 யித

35 ன் மேற் செல்லா நின்ற ருத்திரோத்காரி ஸூ சித்திரை மீ 10 ஸ்ரீமத் சறசன சுத்த

36 சிவாச்சார சம்பன்னரான விபூதி ருத்திராட்ச பஞ்சாட்சர மந்திர பரிபூரணரா

37 ன ஏக லிங்க நிஷ்டாபரான சச்சிதானந்த பிரக்யுதரான சிவசாம் பிராச்சி

38 ய பிறதாயகரான பரசமைய கோலாகலரான சிவ சமைய பரிபால

39 கரான சத்து சித்தானந்த நித்திய பூரணரான சித்தாந்த வேதாந்த

40 வீர சைவ சமரசரான சகள நிட்கள சதாசிவ ரூபரான ஆதார நிராதார

41 மீதான நிராமய நிமல பரப்பிரகாசரான ஸ்ரீநந்திநாத ஸ்ரீபிரிங்கி நாத

42 ஸ்ரீவீரபத்திர முக்கியரான வீர சைவ ஸ்த்தாபனாசாரியரான திருவண்ணாம

43 லை மடம் வீர சிங்காதானத்துக்குக் கர்த்தரான சுவாமியார் சிவப்பிரகாச

44 சுவாமியார் சன்னிதிக்கு ராய ஸ்ரீசதுற்த குலம் செட்டிக்குளம் பல்லகோல்

45 ஸ்ரீ நல்லப்ப ரெட்டியார் பேரன் ஸ்ரீலிங்கா ரெட்டியாரவர்கள் குமாரர் ஸ்ரீம

46 த் வெங்கடாசல ரெட்டியாரவர்கள் தீட்சா காலத்தில் அன்ன தானஞ்

47 சொர்ன்ன தானம் வஸ்திர தான பூதான முதலாகிய மகா தானங் களும்

48 நமதாசாரியார் சன்னிதானத்திலே தெற்தம்[7] பண்ணின பூதானத் துக்கு த

49 ர்ம்ம சாசன பட்டய மெழுதிக் குடுத்தபடி நம்முடைய கிராமம் அனேகங்க

50 ளில் சுவாமியாரவர்கள் சன்னிதானத்துக்கு தெற்தம் பண்ணின கிராம

51 ம் உப்பிலிப்புரத்துக்கு[8] வடக்கு வட ரெட்டிபாளையத்துக்குக் கிழக்கு கொப்ப

52 ம்பட்டிக்குத் தெற்கு சொக்கபுரத்துக்கு மேற்கு இந்த நான் கெல்லைக் குள்பட்ட

53 காரப்புடையாம்பட்டியைச் சுவாமியாரவர்களுக்கு மனப்பூறுவ மாகத் தாரா

54 தெற்தம் பண்ணிக் குடுத்த படியினாலே யிந்தக் கிராமத்தி லுண்டாகிய நன்செய்

55 புன்செய் தோப்பு துரவு கொடிக்கால் திட்டை திடரு முதலாகிய செலதரு

56 பாழான நிதி நிட்சேபம்[9] எப்பே(ய)ர் பட்டதுந் தாங்களே யாண் டனுபவித்து

57 கொண்டு சுகத்தி லெழுந்தருளியிருக்கவும் யிதுவுமல்லாமல்

ஏட்டின் பின்புறம்

58 குருபூசை தினத்துக்கு நாம் கட்டளையிட்டது நம்முடைய துறை யூர்ச் சீ

59 மை முற்றும் அக்கிரகாரம் சருவமானியம் உம்பளம் கந்தாசாரம்[10] குடியோ மு

60 தலாகிய பெயருள்பட நன்செய் புன்செய் யுள்பட ஏர்க்கு 4படி தானிய வீதம்

61 வாங்கிக் குருபூசை நிறைவேறத் தக்கதாகவுங் கட்டளை யிட்டிருக் கிறோம் அ

62 ந்தப்படி நம்முடைய துறையூர்ச் சீமை முற்றும் நன்செய் புன்செய் யு

63 ள்பட ஏர்க்கு 4 படி தானியம் விடாமல் வருழாந்தம் வருழாந்தம் வா

64 ங்கிக் குருபூசை நிறைவேறும்படி பண்ணிக் கொள்ளவும் காரப் புடை

65 யான்பட்டிக் கிராம முற்றும் அனுபவித்துக் கொள்ளவும் யிதுவுமல்

66 லாமல் நம்முடைய பெரியவாள் தங்களுக்கு முன்னே கட்டளை யிட்ட

67 முன் பழைய திதி மகமை அமுதுபடியும் அதற்குள்ள மேற்சிலவும் அ

68 துவும் எப்போதும் போலே வாங்கிக் கொள்ளவும் கிராமம் குரு

69 பூசைக் கட்டளை அமுதுபடி முதலாகிய தெல்லாம் ஆதீன பா

70 ரம்பரியமாக சந்திராதித்தவரையும் ஆண்டனுபவித்துக் கொண்

71 டு சுகமாக எழுந்தருளியிருக்கவும் யிந்தத் தர்ம்மத்துக்கு யாதாமொ

72 ருவர் மன வாக்குக் காயங்களினாற் சகாயம் பண்ணிகுறார்க

73 ளோ அவர்கள் காசி சிதம்பரம் திருவாரூர் அருணாசலம் காளத்தி

74 காஞ்சி கழுக்குன்றம் பைஞ்ஞீலி கும்பகோணம் ராமீச்சுர முத

75 லாகிய சிவ தலங்களில் அனேகங்கோடி சிவலிங்க பிரதி

76 ஷ்ட்டை பண்ணின பலனையடைந்து சுகமாக நீடூழி வாழ்

77 ந்திருப்பார்கள் யிந்தத் தற்மத்துக்கு யாதாமொருவர் விரோதம்

78 பண்ணிகுறார்களோ அவர்கள் கெங்கைக் கரையிலே காராம்

79 பசுவையும் குழந்தை தாய் தந்தை முதலாகிய பேரையும்

80 கொன்ற தோழத்திலே போகக் கடவோராகவும் யிப்படி சம்

81 மதித்து சிவப்பிரகாச சுவாமியார் சன்னிதானத்துக்குத் தர்ம்ம
82 சாதன பட்டையம் எழுதிக் குடுத்தோம் ஸ்ரீமத் வெங்கடாச
83 ல ரெட்டியாரவர்களேன்

அடிக்குறிப்புகள்

1. பாஷை என்று படிக்கவும்.
2. காஷ்மீர் என்று படிக்கவும்.
3. துஷ்டன் என்று படிக்கவும்.
4. ராயமன்னியரில் - ராஜ்ஜியம் அன்னியரால் ஆளப்பட்டது என்று பொருள்படும்.
5. செட்டிக்குளம் பெரம்பலூர் வட்டத்தில் உள்ளது.
6. பல்லகோல் என்பது குடிப் பெயராகலாம்.
7. தத்தம் என்று படிக்கவும்.
8. உப்பிலியாபுரம் என இன்று வழங்கப்படுகிறது.
9. நிட்சேபம் - நிஷேபம் - புதைபொருள் அல்லது ஈட்டுப்பொருள்.
10. கந்தாசாரம் - கால்பாகம் மேல் வாரத்தாருக்கும் முக்கால் பாகம் குடிகட்குமாக ஒழுங்கு செய்து இருவரும் சமபாகமாக வரி செலுத்தும்படி விடும் குத்தகை.

கோழைக் காதலன்?

''வைகறை வானத்து மின்னும் மீன்களைப் போல் கோங்க மரப் பூக்கள் குடைகளாய்ப் பூத்துள்ளன. இந்தப் பூக்களின் நறுமணம் எங்கும் பரவிய பாலை நிலத்துத் தனி வழி. அதில் காதலே பெரிதென உன்னை நம்பி, இல்லமும் ஆயமும் துறந்து ஓடி வந்த எங்கள் தலைவி உன்னோடு கைகோத்து நடக்கிறாள். தனியே வருவோரை மடக்கிப் பொருள்பறித்துத் துன்புறுத்தும் பாலை மறவர் அம்பும் வில்லுமாய்த் தங்கள் வருகையுணர்த்தக் 'கிடின்' என்று ஒலியெழுப்பி வந்தனர். வம்பிழுத்துச் சண்டையிட்ட அவர்களை நீ நீக்கினாய்; மகிழ்ச்சி.

ஆனால் நீங்கள் பயணம் தொடர்ந்த அந்தப் பாலை வழியில் தந்தை, தமையன்கள், உறவினர் என்று தலைவியின் சொந்தமாய்ப் பெருங் கூட்டமொன்று துரத்தி வந்தது கண்ணுற்ற நீ கலங்கிப் போனாயே அது ஏன்? நீயே அனைத்துமென நினைத்து, உன் கைப் பிடித்து ஓடிவந்த தலைவியைப் பெருங் காட்டின் நடுவே தனியாளாய்த் தவிக்க விட்டு ஒளியுமிடம் தேடி மறைந்து போனாயே அது என்ன நியாயம்? உன்னைப் பார்க்கும் போதெல்லாம் அன்று நீ ஓடி ஒளிந்தாயே அந்தக் காட்சிதானே நினைவுக்கு வருகின்றது.''

— நற்றிணைத் தோழி (48).

4. ஆய்வுக் கட்டுரைகள்

1. செவல்பட்டிக் குடைவரை

சீ. கீதா, இரா. கலைக்கோவன்

காமராசர் மாவட்டத்தில் குடைவரைக் கோயில்களைக் கொண்டிருக்கும் மிகச் சில சிற்றூர்களுள் செவல்பட்டியும் ஒன்று. இராசபாளையத்திலிருந்து திருவேங்கடம் வழியாக ஏறத்தாழ நாற்பத்து நான்கு கிலோ மீட்டர் பயணித்தால் செவல்பட்டியை[1] அடையலாம். மலையடிவாரத்தில் அண்மைக் காலத்தே கட்டப்பட்ட அருணகிரிநாதர் கோயிலொன்று வழிபாட்டில் உள்ளது. முறையான படியமைப்பு இல்லாத மலைமேல் துன்பம் கருதாது ஏறுவோரை வடக்கு நோக்கிய[2] குடைவரை நேயத்தோடு வரவேற்கிறது.

பொதுவாக வெளித்தள்ளி இறங்கும் மலைச்சரிவுகளில் இருந்து மாறுபட்ட நிலையில், இங்குச் சரிவு உள்வாங்கி இறங்குவதால் இக்குடைவரையின் முன்தோற்றம் பிற குடைவரைகளிலிருந்து பெரிதும் வேறுபட்டுள்ளது. எந்தக் குடைவரையின் முன்தோற்றமும் அது அகழப்படும் பாறை அல்லது குன்றின் சரிவைப் பொறுத்தே அமைகிறது. வெளித்தள்ளிய சரிவுகளில் அமைக்கப்படும் குடைவரைகளில், முகப்பின் அரைத்தூண்களையொட்டி வரும் பக்கச் சுவர்கள் பொதுவாக மேலிருந்து கீழாக அகலப்படும். இங்கே அதற்கு நேர்மாறாக இச்சுவர்கள் மேலிருந்து கீழாகக் குறுகுகின்றன. முதல் வகைக் குடைவரைகளில் அகலமான தரையமைப்பு முகப்புக்கு முன்னால் பரந்திருக்கக் காணலாம். ஆனால் இங்கோ, மேற்குப் பகுதியில் முற்றிலுமாய்த் தரையமைப்பே இல்லாமல் தாழ்வான பாறைப் பகுதிதான் பார்வையில் படுகிறது. முதல் வகைக் குடைவரைகளில் தரையமைப்புக்கு நேர்மாறாக அகலக் குறைவான கூரையே அமையும். செவல்பட்டிக் குடைவரையில் சரிவின் அமைப்பால் பரந்து விரிந்த கூரையமைப்பு கிடைத்துள்ளது.

முகப்பு, முகமண்டபம்,[3] கருவறை என்றமைந்துள்ள இக்குடைவரையின் முகப்பு, நடுவில் இரண்டு முழுத்தூண்களையும், பக்கவாட்டில் இரண்டு அரைத்தூண்களையும் கொண்டுள்ளது. முன்னுள்ள தரையமைப்பிலிருந்து 5 செ. மீ. உயரத்திலமைந்துள்ள இம்முகப்பின் அகலம் 52 செ. மீ.; நீளம் 5.62 மீ. இத்தூண்களின் அமைப்பால் மூன்று அங்கணங்களாகப் பிரிந்துள்ள முகப்பின் உயர்ந்த தரையமைப்பு கிழக்குப்புறத்தே சிதைக்கப்பட்டுள்ளது.[4] தூண்கள் சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்பிலுள்ளன.

முழுத்தூண்களின் மேற்சதுரத்தின் மீது அமர்ந்துள்ள போதிகை வழக்கத்திற்கு மாறாய் வடக்கிலும் தெற்கிலும் சதுரப் பரப்பினின்றும் சற்று வெளித்தள்ளிக் காட்டப்பட்டுள்ளது. பல்லவப் பகுதிகளில் சிங்கவரம் குடைவரையில் இது போன்ற அமைப்பு உள்ளது. ஆனால்,

குடைவரையின் முன்தோற்றம்

இந்தப் பிதுக்கம் நாற்புறமும் காணப்படுவதால் திரு. கூ. ரா. சீனிவாசன் இதைத் தூண் பலகையின் தொடக்கக் காலத் தோற்றமென அடையாளம் கண்டுள்ளார்.[5] இங்கோ நாற்புறமும் இல்லாமல் வடக்கிலும் தெற்கிலும் மட்டும் பிதுக்கம் காட்டப்பட்டுள்ளது. இது போன்ற அமைப்பு காமராசர் மாவட்டத்திலுள்ள பிற குடைவரைகளில் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

போதிகைகளின் கீழ்க்கைகளும் மேற்கைகளும் ஏறத்தாழ ஒரே அளவினவாக உள்ளன. அலை எழுச்சிகளாய் வளைக்கப்பட்டிருக்கும் தரங்கப் போதிகைகள் ஒரு தூணில் விரிகோணத்திலும் ஒரு தூணில் வளைந்தும் மேற்சென்று உத்திரம் தாங்குகின்றன. தரங்கத்தின் நடுவே பட்டை காணப்படுகிறது. சிறிய அளவிலான உத்திரத்தின் வெளிப்பிதுக்கமாய் வாஜனமும் அதையடுத்துக் கூரையும். அகலமாகப் பரந்து முன் நீளும் கூரை கபோதமாக வடிக்கப்படாவிட்டாலும் அதன் கீழ்ப்பரப்பு நன்றாகச் சமன் செய்யப்பட்டுள்ளது.

முழுத்தூண் சதுரங்களில் தென்புறம் தவிர்ந்த பிற முகங்களில் தாமரைப் பதக்கங்கள் வெட்டப்பட்டுள்ளன. கிழக்கு முகப் பகுதிகளில் இப்பதக்கங்கள் முழுமையடையாமல் வெறும் வட்டமாக மட்டும் அமையச் சில பதக்கங்கள் நடுப்பகுதியில் அன்னம், யாளி, நந்தி, யானை, சிம்மம் போன்ற பறவை மற்றும் விலங்கு உருவங்களைக் கொண்டுள்ளன. சில முற்றிலும் தாமரைப் பதக்கங்களாய் அமையச் சில மலர்ப் பதக்கங்களாய் வேறு வகை மலரிதழ்கள் சூழ அமைந்துள் ளன.[6] இரண்டாம் அங்கண வலப்புற முழுத்தூணின் (கிழக்கு) மேற் சதுரத்தின் மேற்கு முகத்தில் பாம்பைக் கையில் பிடித்திருக்கும் பூத கணமொன்று காட்டப்பட்டுள்ளது. பொதுவாகப் பூதவரிகளில் காணப் படும் இக்காட்சி குடைவரைத் தூணின் பதக்கத்தில் காட்டப்பட்டிருப் பது இதுவே முதல் முறையாகும்.

மலையடிக்குறிச்சிக் குடைவரையிலுள்ள தூண் பதக்கங்களில் இறை வடிவங்கள் காட்டப்பட்டிருந்த போதும், பாம்பெடுத்த கண வடிவம் தென் மாவட்டக் குடைவரைகளிலோ, தொண்டை மண்டலக் குடை வரைகளிலோ பதக்க வடிப்பாகக் காணப்படவில்லை என்பது குறிப் பிடத்தக்கது. மூவரை வென்றான், வீரசிகாமணி குடைவரைகளை விட இக்குடைவரையின் பதக்கங்கள் திருத்தமாகவும் கலை நுணுக்கத் துடனும் வெட்டப்பட்டுள்ளன. அரைத்தூண்களின் எந்த முகத்திலும் பதக்கங்கள் இல்லை. மேற்கு அரைத்தூணின் மேற்சதுரத்தின் கிழக்கு முகத்தில் வட்டம் மட்டும் காணப்படுகிறது.

முகப்பையடுத்துக் கிழக்கு மேற்காக 6.02 மீ. நீளமும் தென் வடலாக 3.13 மீ. அகலமும் கொண்ட முகமண்டபம் அமைந்துள்ளது. இதன் கிழக்குச் சுவரில் அரைத்தூணையடுத்து 1.66 மீ. உயரத்திற் கும் 1.29 மீ. அகலத்திற்கும் அகழ்ந்து கோட்டம் அமைத்திருக் கிறார்கள். அரைத்தூண்களின் அணைப்பற்ற இக்கோட்டத்தில் சிவபெருமான் ஆடல் தோற்றத்தில் சிற்பமாகியுள்ளார். தெற்குச் சுவரில் நான்கு நான்முக அரைத்தூண்கள் காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் தென்கிழக்குத் தூண் சற்று அகலமானது. அடுத்த இரண்

டும் ஏறத்தாழ ஒரே அளவினவாக உள்ளன. தென்மேற்கு அரைத் தூண் முகமண்டபத்தின் தென் சுவரும் மேற்குச் சுவரும் சந்திக்கு மிடத்தில் அமைந்துள்ளது.

சிவபெருமானின் ஆடல் தோற்றம்

இந்த அரைத்தூண்களுக்கு இடைப்பட்ட சுவர்ப் பகுதி கோட்டங் களாக்கப்பட்டுள்ளது. இக்கோட்டங்களுள் தென்கிழக்கிலுள்ளது சிற்பமேதுமின்றி ஆழமற்ற கோட்டமாய் அகழப்பட்டுள்ளது. இரண் டாம் மூன்றாம் அங்கணங்களுக்கு எதிரிலுள்ள கோட்டங்கள் ஆழமாய் அகழப்பட்டு முறையே பெருமாள், பிள்ளையார் சிற்பங்களைக் கொண் டுள்ளன. இக்கோட்டங்களின் மேலுறுப்புகளற்ற அரைத்தூண்களில் காட்டப்பட்டுள்ள விரிகோணப் போதிகைகளின் மேற்கைகள் உத்திரம்

தொடுகின்றன. முகமண்டபக் கூரையையொட்டித் தென் சுவரின் முழு நீளத்திற்கும் உத்திரத்தின் வெளிப்பிதுக்கமாய் வாஜனம் ஓடுகிறது. இவ்வாஜன அமைப்பு கிழக்குச் சுவரில் இல்லை என்றாலும் வடபுறத்தே காட்டப்பட்டுள்ளது. கூரை நன்றாகச் சமன் செய்யப்பட்டுள்ளது.

மேற்குச் சுவரின் நடுப்பகுதியில் கருவறை குடையப்பட்டுள்ளது. முகமண்டபத் தரையிலிருந்து 45.5 செ.மீ. உயரத்திலமைந்துள்ள கருவறை வாயில் 90 செ.மீ. அகலமும் 1.78 மீ. உயரமும் கொண்டமைந்துள்ளது. வாயிலின் முன் நான்கு படிகள் உள்ளன. கீழ்ப்படி சந்திரக் கல் போல வளைக்கப்பட்டுள்ளது. மேலிரண்டு படிகளும் பெருமளவு சிதைந்துள்ளன. நான்காம் படியின் வடபுறம் மட்டும் சிதைக்கப்பட்டுள்ளது. தாங்குதளம் காட்டப் பெறாத கருவறையின் முகப்புச் சுவரில் வாயிலையொட்டி இரண்டு நான்முக அரைத்தூண்களும் சுவரின் முடிவில் பக்கத்திற்கொன்றாய் இரண்டு நான்முக அரைத் தூண்களும் காட்டப்பட்டுள்ளன. இத்தூண்களுக்கு இடைப்பட்ட சுவர்ப்பகுதிகள் கோட்டங்களாக அகழப்பட்டு வாயிற்காப்போர் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

தென்புற வாயிற்காவலர் நிற்கும் தளம் முகமண்டபத் தரையிலிருந்து 76 செ. மீ. உயரத்திலும் வடபுற வாயிற்காவலர் நிற்கும் தளம் 78 செ.மீ. உயரத்திலும் காட்டப்பட்டுள்ளன. தென் காவலர் தளத்தின் கீழே, தரையிலிருந்து 18 செ. மீ. உயரத்தில் சிறு தளமொன்று வெட்டப்பட்டுள்ளது. ஜகதி போல் தோற்றமளிக்கும் இவ்வமைப்பு தாங்குதள உருவாக்கத்தின் தொடக்க விளைவாகலாம். வடபுறத்தே இதன் தொடர்ச்சியைக் காண முடியவில்லை.

கோட்டத் தூண்களின் விரிகோணப் போதிகைகள் தொடும் உத்திரமே கருவறை வாயிலின் மேல்நிலையாகியுள்ளது. வாயிலின் இருபுறமும் உள்ள நான்முக அரைத்தூண்களே திருநிலைக் கால்களாகக், கீழ் நிலையாக மேல் படி அமைந்துள்ளது. உத்திரத்தின் மேல் கூரையையொட்டி வெளிப்பிதுக்கமாய் முழு நீளத்திற்கும் வாஜனம்.

தென் வடலாக 2.36மீ. நீளமும் கிழக்கு மேற்காக 2.17மீ. அகலமும் 1.96மீ. உயரமும் கொண்டமைந்துள்ள கருவறையின் சுவர்களும் கூரையும் தரையும் வெறுமையாக உள்ளன. நன்றாகச் சமன் செய்யப்பட்டுள்ள இக்கருவறையின் தரை நடுவே ஆழமான பள்ளமொன்று காணப்படுகிறது. இப்பள்ளம் ஆவுடையாரைப் பொருத்தப் பயன்பட்டிருக்கலாம். கருவறை வாயிலில் நிலையமைக்கக் கருதிப் பள்ளங்கள் வெட்டியுள்ளனர். வடபுறப் பள்ளம் அரைத்தூணையும் இணைத்தபடி முழுக்காட்டு நீரை வெளியேற்றும் காலாக மாறியுள்ளது.

சிற்பங்கள்

முகமண்டபத்தின் மூன்று சுவர்களிலும் சிற்பங்கள் இடம் பெற் றுள்ளன. கருவறை வாயிலையொட்டிய கோட்டங்களில் வாயிற் காவலர்கள் காட்டப்பட்டுள்ளனர். அரையில் மடித்துக் கட்டிய ஆடை

வலப்புறக் காவலர்

இடப்புறக் காவலர்

யும் பனையோலைக் குண்டலங்களும் கை வளைகளும் கங்கணங் களும் கழுத்தட்டிகையும் இடுப்பிலிருந்து சரிந்து தொடை வளைத்துத் திரும்பும் மணிச்சரமும் முறுக்கி விட்ட அடர்த்தியான மீசையும் இரு

வருக்கும் பொதுவாய் அமைந்துள்ளன. சடைமுடிகளைத் திரட்டிக் கரண்ட மகுடமாய் அமைத்து, அதனின்றும் நீளும் கற்றைகளை மேலிருந்து பக்கவாட்டில் தொங்குமாறு இறக்கிவிட்டிருக்கும் அழகும் தலையின் இருபுறமும் திரண்டு தொங்கும் சடைக் கற்றைகளும் இரு வருக்கும் பொதுவாக உள்ளன.

1.59மீ. உயரமும் 64 செ.மீ. அகலமும் கொண்டுள்ள தென் கோட்டத்தில் நிற்கும் காவலர் பாரதியின் முன்னோடி போலும். நிமிர்ந்த தோற்றமும் நேர்கொண்ட பார்வையுமாய் நிற்கிறார். இரண்டு பாதங்களும் ஒன்றன் பின் ஒன்றாய்த் தளத்தின் மீது இருத்தப் பட்டுள்ளன. வலக்கை இடுப்பில்; இடக்கையில் உயர்த்திய நிலையில் பரசு. கத்திப் பகுதியைத் தன் முகத்துக்கு நேரே திருப்பியிருப்பதைப் பார்த்தால் வெட்டுவது நோக்கமல்ல, எச்சரிக்க மட்டுமே கருவி என்று தோன்றுகிறது. முப்புரிநூல் இடத்தோளிலிருந்து வலக்கை மீதேறி முதுகுப்புறம் சென்று மறைகிறது. பிரம்மமுடிச்சருகே குறுகி நிற்கும் இந்நூல் கை மீது ஏறுமிடத்து நன்றாகப் பிரிந்து பட்டையாய்க் காணப் படுகிறது. உடலமைப்பு, தோற்றம், ஆடை, அணிகலன்கள் என்று அனைத்து நோக்கிலும் அருமையாய் அமைந்துள்ள சிற்பம் இது.

1.56மீ. உயரமும் 64 செ.மீ. அகலமும் உள்ள வட கோட்டத்தில் சாய்ந்தும் சரிந்தும் ஓய்வு நிலையில் இருக்கிறார் மற்றொரு காவலர். அடுத்தடுத்து அமைந்துள்ள பாதங்களின் அருகே பாம்பு சுற்றிய உருள் பெருந்தடி. இடக்கையால் அதைப் பிடித்திருப்பவர் வலக்கையைத் தடி யின் முன்புறம் தாங்கலாய் நெகிழ்த்தியுள்ளார்.

முகமண்டபத்தின் தென் சுவரில் இரண்டாம் அங்கணத்திற்கு நேராகப் பெருமாளும் மூன்றாம் அங்கணத்திற்கு நேராகப் பிள்ளை யாரும் செதுக்கப்பட்டுள்ளனர். பெருமாள் கோட்டம் முகமண்டபத் தரையிலிருந்து 60 செ. மீ. உயரத்தில், 1.13 மீ. அகலமும் 1.72 மீ. உயரமும் கொண்டு அமைந்துள்ளது. சம பாத நிலையில் நிற்கும் பெருமாளின் பின் கைகளில் சங்கும் சக்கரமும். சக்கரம் எறிவதற்குத் தயார் நிலையில் காட்டப்பட்டுள்ளது. மணிக்கட்டுகளில் பட்டை வளைகளும் மேற்கைகளில் முகப்பமைந்த கங்கணங்களும் கழுத்தில் பட்டையான மணிமாலையுமிருக்கச் செவிகளை அலங்கரிக்கும் மகர குண்டலங்கள் தோள்களில் சரிந்து புரள்கின்றன. கீழ்ப் பாய்ச்சாகக் கட்டியிருக்கும் ஆடையின் மடிப்புகளும் முடிச்சுகளும் கனத்த தொங்கல் களாய் முன்புறத்தும் பக்கவாட்டிலும் காட்டப்பட்டுள்ளன. வல முன் கை குழிந்த நிலையில் இடுப்பின் வலப்புறத்தே. இட முன் கை ஊரு முத்திரையில் இடைக்கட்டுத் தொங்கலைத் தொட்டபடி. முப்புரிநூல் இடத்தோளிலிருந்து மார்பின் குறுக்கே இறங்கி வல

மேற்கை மீதேறிப் பின்னால் செல்கிறது. கையருகே ஏறும் பகுதி அகலமாகக் காட்டப்பட்டுள்ளது. கிரீட மகுடம் வேறெந்தக் குடை வரையிலும் காணப்படாத அளவுக்கு, நுணுக்கமான வேலைப்பாடு கொண்டுள்ளது. அழகிய பதக்கங்களை முகப்பிலும் பக்கவாட்டிலும் கொண்டுள்ள இம்மகுடத்தின் மேற்பகுதியில் சிறு சிறு பள்ளங்கள்

பெருமாள்

காட்டப்பட்டுள்ளன. கண்ணறைகள் போலக் காட்சியளிக்கும் இவை உண்மையான கிரீடத்தில் காற்றோட்டம் கருதி அமைக்கப்பட்டிருக்க

லாம். அதே அமைப்புமுறையைச் சிற்பிகள் இங்கும் பின்பற்றியுள்ள னர் என்று கருதலாம். இம்மகுடத்தில் பின்னிணைப்பாய்த் தலைச் சக்கரம்.

முகமண்டபத் தரையிலிருந்து 36 செ. மீ. உயரத்தில் ஒரு மீட்டர் அகலமும் 1.60 மீ. உயரமும் கொண்டமைந்துள்ள கோட்டத்தில்

பிள்ளையார்

பிள்ளையாரின் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. சிறு குழந்தைகள் அமர் வது போல வரையறைக்கு உட்படாததொரு அமர்வில் பிள்ளையார்

காட்டப்பட்டிருக்கிறார். முறிந்த இடக்கொம்பை, இடத்தொடையில் அமர்த்தியுள்ள இடக்கையில் கொண்டு, வலக்கையில் பழம் போன்ற தொரு பொருளை வைத்துள்ளார். துதிக்கை வலம்புரியாய் மேல் நோக்கி வளைந்துள்ளது. கரண்ட மகுடமும் முப்புரிநூலும் பட்டை யான வயிற்றுக் கட்டும் கங்கணங்களும் ருத்திராக்க வளைகளும் கொண்டுள்ள பிள்ளையாரின் அரையாடை முடிச்சுகள் இரு பாதங் களுக்கும் இடையில் காட்டப்பட்டுள்ளன.

கிழக்குச் சுவரின் வடபுறத்தே முகமண்டபத் தரையிலிருந்து 80 செ. மீ. உயரத்தில், 1.29 மீ. அகலமும் 1.66 மீ. உயரமும் கொண்டமைந்துள்ள கோட்டத்தில் சிவபெருமான் ஆடல் நாயகராய்க் காட்டப்பட்டுள்ளார். பல்லவர் குடைவரைகளில் காண முடியாத இத் தகு ஆடல் தோற்றங்கள்[7] பாண்டியர் குடைவரைகள் சிலவற்றில் இடம் பெற்றுள்ளன. திருமலாபுரம், திருப்பரங்குன்றம், குன்றக்குடி ஆகிய மூன்று குடைவரைகளிலும் பல்லவர் காலப் பாண்டியரின் கலை வண்ணமாகச் சிவபெருமானின் ஆடல் தோற்றங்கள் காணப்படுவது இங்கு நினைக்கத்தகுந்தது.

செவல்பட்டி சிவ ஆடல் தோற்றம் பற்றிப் பல அறிஞர்கள் தத்தம் கட்டுரைகளிலும் நூல்களிலும் குறித்திருந்தபோதும் யாரும் இது வரை இவ்வாடல் தோற்றத்தைச் சரியாக அடையாளம் காட்டவில்லை. இவ்வாடல் தோற்றத்தைப் பற்றிப் பதினைந்து வரிகள் எழுதியிருக்கும் திரு. சி. சிவராமமூர்த்தியின் குறிப்பில் ஒன்பது பிழைகள் உள்ளன. அதுபோலவே திரு. தி. இராசமாணிக்கம் தரும் விளக்கங்களிலும் பல பிழைகள்.

சிவபெருமான் அர்த்த ஸ்வஸ்திகக் கரணத்தில் காட்சி தரும் இந்த ஆடல் தோற்றம் மிக அருமையானதாகும். இந்தக் கரணத்தில் குன்றக்குடி குடைவரையிலும்[8] காஞ்சிபுரம் ராஜசிம்மேசுவரத்திலும் (கயிலாசநாதர்) சிவபெருமானுக்குச் சிற்பங்கள் உண்டு.

இங்குள்ள சிற்பத்தில் இடப்பாதம் முழுமையாகச் செதுக்கப்படாத நிலையில் பார்சுவத்தில் உள்ளது. கணுக்காலில் அழகுபடக் கோத்த மணிச் சலங்கையுடன் கூடிய வலப்பாதம்,[9] இடக்காலின் பின்புறத்தே ஸ்வஸ்திகத்தில் அக்ரதலசஞ்சாரமாய் உள்ளது.[10] இடையில் திரு முறை ஆசிரியர்கள் பரக்கப் பாடும் கீள். முன் கைகளில் இடக்கை காக்கும் குறிப்பில்;[11] வலக்கை அர்த்தரேசிதத்தில்.[12] பின் கைகளில் இடப்புறம் தீயகல்; வலப்புறம் நாட்டிய வேதமாய் ஓலைச்சுவடி [13] செவிகளில் கனத்த பனையோலைக் குண்டலங்களும்[14] கழுத்தட்டிகை யும் ருத்திராக்க வளைகளுமாய் ஆடும் பெருமானின் சடைபாரம்[15] மிக நேர்த்தியாய் வடிக்கப்பட்டுள்ளது. முகக் குறிப்பிலும் இதழ்ப்

பிதுக்கமாய் விரியும் இளநகையிலும் உடல் வளைவுகளிலும் ஆடல் அமைப்பின் நிறைவிலும் இந்த எழிலார்ந்த ஆடற்சிற்பம் தன்னிகரற்றுத் திகழ்வதால் தமிழகத்தில் கிடைக்கும் சிவபெருமானின் தொடக்கக் கால ஆடற் சிற்பங்களுள் குறிப்பிடத்தக்க ஒன்றாய் இதைக் கொள்ளலாம்.

ஆடலுக்குத் தலைவராக விளங்கும் அண்ணலின் திருக்கையில் நாட்டிய நன்னூலையே தந்திருப்பதுதான் எத்தனைப் பொருத்தமானது. தென்திசைக் கடவுளாய்ச் சுவடி ஏற்று வேத நாயகராய்,



இறைவனின் வலப் பின்கையில் நாட்டிய நன்னூல்

ஆகம ஞானியாய் அமரும் அண்ணல், இங்கு நாட்டிய நூலைக் கையில் கொண்டதால் ஆடற் கலையின் தலையாசானாய்ச் சிறப்படைகிறார். இதுபோல் நாட்டிய வேதமேந்தி இறைவன் ஆடும் மற்றொரு தோற்றம் செப்புத் திருமேனியாகக் கிடைத்திருக்கிறது. திருநல்லூர் மணவழகர் கோயிற்குரிய இத்திருமேனி இப்போது திருவிடைமருதூரில் பாதுகாப்பில் உள்ளது. இத்திருமேனியின் எட்டு வலக்கைகளில் ஒன்றில் ஓலைச் சுவடிகளாய் நாட்டிய வேதம். மற்றொன்றில் தலைக்கோல்.[16]

குடைவரை வளாகத்திற்கு வெளியே சிதைந்த சிற்பமொன்று காணப்படுகிறது. தலையும் மார்புமிழந்த இரண்டு தெய்வத் திருமேனி களின் சிற்பமாய் இது திகழ்கிறது. அழகு செய்யப்பட்ட தளத்தில் மகிழ்வமர்வில் வலப்புறம் அம்மையும் இடப்புறம் பெருமானுமாய் அமர்ந்துள்ளனர். கீழிறக்கிய காலை இருத்துவதற்கென்று தனித் தளங்கள் தாமரைகளாய் வடிக்கப்பட்டுள்ளன. இறைவனின் வலக் காலில் கழலாய்ச் சுற்றிப் படமெடுக்கும் பாம்பு. இறைவனின் காலை யொட்டித் தளத்தின் முகப்பில் காளையைக் காட்டியுள்ளனர். கழுத்தில் மணியும் முதுகில் விரிப்பும் வளைந்த கொம்புகளுமாய் நல்ல உடல மைப்புடன் காளை காட்சியளிக்கிறது. இறைவியின் காலருகே பசு. அதன் கழுத்திலும் மணி. முறுக்கிய வாலுடன் துள்ளுவது போல உணர்ச்சி பூர்வமாய்க் காட்டப்பட்டிருக்கும் கன்று, பசுவின் மடியில் பாலருந்துகிறது. இந்தச் சிற்பத் தள முகப்பின் மேற்பகுதியில் காணப் படும் கல்வெட்டு படிக்க முடியாத அளவிற்குச் சிதைந்து போயுள்ளது.[17]

குடைவரையின் காலம்

மைய, மாநிலத் தொல்லியல் துறைகளுள் எதன் கண்காணிப்பி லும் இல்லாமல் இருக்கும் இக்குடைவரை காமராசர் மாவட்டக் குடைவரைகளுள் சிறப்பானது; செறிவானது. இதன் கலைமுறையும், இங்குள்ள சிற்பங்களின் செதுக்கு நேர்த்தியும் இக்குடைவரையின் காலத்தைக் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் இருத்துகின்றன.

அடிக்குறிப்புகள்

1. திரு. சி. சிவராமமூர்த்தி ஊரின் பெயரைச் செவிலிப்பட்டி என்று தந்திருக்கிறார். C. Sivaramamurti, Nataraja in Art, Thought and Literature, Publication Division, Ministry of Information and Broadcasting, Government of India, 1994, p. 198.

2. குடைவரை கிழக்கு நோக்கி இருப்பதாகத் திரு. தி. இராச மாணிக்கம் குறிப்பிட்டுள்ளது சரியல்ல. தி. இராசமாணிக்கம், தென்னகக் குடைவரைக் கோயில்கள், கழக வெளியீடு, சென்னை-600 018, 1989, பக். 87.

3. இதை அர்த்த மண்டபம் என்று திரு. சி. சிவராமமூர்த்தி குறிப் பிட்டுள்ளார். முன் குறித்த நூல் (மு. கு. நூல்), பக். 198.

4. இதுபோன்ற சிதைவுகள் பல குடைவரைகளில் காணப்படு கின்றன.

5. K. R. Srinivasan, Cave Temples of the Pallavas, Archaeological Survey of India, 1964, p. 112.

6. இத்தகு மலர்ப் பதக்கங்களை இதே மாவட்டத்திலுள்ள மூவரை வென்றான் குடைவரையில் பார்க்கலாம். இப்பதக்கங்களில் காணப்படும் மலரிதழ்கள் மலையடிப்பட்டி விஷ்ணு குடைவரை கோபுர வலபியின் தென்புறத்தே, வாயிலுக்கு மேலே மட்டும் காட்டப்பட்டிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

7. சீயமங்கலம் அவனி பாஜன பல்லவேசுவர கிருகத்து முகப்புத் தூண் ஒன்றின் மேற்சதுரத்தில் சிவபெருமானின் புஜங்கத்ராசிதக் கரணக் கோலம் காணப்படுகிறது. இது தவிர பல்லவர் குடை வரைகளில் சிவபெருமானின் ஆடற்சிற்பம் எதுவும் இல்லை.

8. அர. அகிலா, மு. நளினி, குன்றக்குடிக் குடைவரைகளும் கல் வெட்டுகளும், வரலாறு-2, அரையாண்டு ஆய்விதழ், டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மைய வெளியீடு, திருச்சிராப்பள்ளி-620 017, பக். 80-81.

9. இரு பாதங்களிலும் சலங்கைகள் இருப்பதாகத் திரு. சி. சிவராம மூர்த்தி கூறுவது சரியல்ல. மு. கு. நூல், பக். 198.

10. இப்பாத அமைப்பைப் பாத ஸ்வஸ்திகம் என்று திரு. சி. சிவராம மூர்த்தி கூறியிருப்பது பொருந்தாது. மு. கு. நூல், பக். 198. கால்கள் ஸ்வஸ்திக முத்திரையில் இருப்பதாகத் திரு. தி. இராச மாணிக்கம் கூறுகிறார். கால் நிலைகளை முத்திரை என்றழைக் கும் மரபு இதுவரை இல்லை. மு. கு. நூல், பக். 88.

11. ‘முன் இடக்கை மேலே நோக்கிக் காணப்படுகிறது. விரல்கள் எதிர்ப்புறம் இருப்பவரை நோக்கி மடங்கி இருக்கிறது’ என்று இந்தக் கையை விவரிக்கிறார் திரு. தி. இராசமாணிக்கம். மு. கு. நூல், பக். 88.

12. வலக்கை அர்த்தமட்டளியில் இருப்பதாகத் திரு. சி. சிவராம மூர்த்தி குறிப்பிடுகிறார். மு. கு. நூல், பக். 198. அப்படி ஒரு கையமைப்பு ஒற்றைக் கையாகவோ, இரட்டைக் கையாகவோ அல்லது நிருத்தக் கையாகவோ நாட்டிய சாத்திரத்திலோ, நாட்டிய தர்ப்பணத்திலோ குறிப்பிடப்படவில்லை. The Natya-sastra, Manisha Grantalaya Pvt. Ltd. Calcutta, 1967, p. 172-173;Abhinayadarpanam, Manisha Grantalaya Pvt. Ltd., Calcutta, 1981, p. 48-63.

‘முன் வலக்கை சற்று நீட்டித் தொங்கிய நிலை’ என்று இந்த அர்த்தரேசிதக் கையை விவரிக்கிறார் திரு. தி. இராசமாணிக்கம். மு. கு. நூல், பக். 88.

13. இதைத் திரு. சி. சிவராமமூர்த்தியும் திரு. தி. இராசமாணிக்கமும் உடுக்கை என்று அடையாளம் கண்டுள்ளனர். மு. கு. நூல்கள், பக். 198, 88.

14. இடச்செவியில் மட்டும் குண்டலம் இருப்பதாகவும், வலச் செவியில் இல்லையென்றும் கூறும் திரு. சி. சிவராமமூர்த்தி இந்தத் தவறான கூற்றின் அடிப்படையில் இத்தோற்றத்தை அர்த்தநாரீசுவரக் கோலமாக வேறு அறிமுகப்படுத்துகிறார். மு. கு. நூல், பக். 128.

15. இந்தச் சடைபாரத்தைக் கொண்டு கிழக்குச் சுவரில் இடம் பெற்றுள்ள இவ்வாடல் தோற்றத்தை 'நாட்டிய தட்சிணாமூர்த்தி' என்று திரு. சி. சிவராமமூர்த்தி குறிப்பிடுவது பொருந்தாது. மு. கு. நூல், பக். 198.

16. மு. நளினி, இரா. கலைக்கோவன், தலைக்கோல், ஆவணம்-2, அரையாண்டு ஆய்விதழ், டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி-620 017, பக். 129-138.

17. 'பாவாலியிலிருக்கும்' என்ற சொற்களை மட்டுமே படிக்க முடிந்தது.

பொய்ப்புலி

வயலில் கதிர் முற்றும் போது அதைக் கவர வரும் பறவைகளையும் விலங்குகளையும் அச்சுறுத்த இன்றும் ஊரகப் பகுதிகளில் சோளக் கொல்லை பொம்மை நிறுவப்படுவதுண்டு. இது போன்ற உருவப் பொம்மைகளை வயல்களில் நிறுவும் வழக்கம் சங்க காலத்திலேயே இருந்துள்ளது.

மலையிடத்துப் புன்செய்க் கொல்லையில் தினைப் பயிரை விதைத்த குறவர், விலங்குகள் வந்து பயிரை அழித்துவிடாதிருக்கப் புலிப் பொம்மையொன்று செய்து அதன் கண்களாய்க் கழங்குகளைப் பதித்துப் புனத்தே நிறுத்தினர். வேட்டைக்கு வந்த காடு வாழ் புலியொன்று கொல்லைப்புறத்தே நிறுத்தப்பட்டிருந்த இந்தப் பொம்மைப் புலியை மெய்யான புலியென்று கருதி நேயத்தோடு புணர்ந்து, புணர்ந்த களைப்பு தீரக் கொல்லை நடுவிலிருந்த மன்றில் ஒய்வெடுத்தது.

ஐங்குறுநூற்றின் வெறிப்பத்து (246) படம்பிடிக்கும் இந்தப் புனக்காட்சி உருவப் பொம்மை செய்வதில் குறிஞ்சி நிலத்தவர்க்கிருந்த கைநேர்த்தியும் திறனும் காட்டுகிறது. கொடுமணல் அகழாய்வில் கிடைத்த புலிப்பொம்மை (உலோகம்) இங்கு நினைக்கத்தக்கது.

2. காவூக் கல்வெட்டு

இரா. பூங்குன்றன்

டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தால் கண்டுபிடிக்கப்பட்டு வரலாறு இரண்டாம் இதழில் வெளியிடப் பெற்றுள்ள இடைமலைப்பட்டிப் புதூர்க் கல்வெட்டு பல அரிய செய்தி களைக் கொண்டுள்ளது. அது உண்மையில் சங்கம் (Guild) பற்றிய கல்வெட்டு. இடைக்காலத்தில் பொறிக்கப்பெற்ற சங்கக் கல்வெட்டு களில் இதுவே காலத்தால் முற்பட்டதாகலாம். இக்கல்வெட்டில் பயின்று வரும் பனையூர் வாழ்க்கை, காவூ, குழுவாணை நாட்டார் போன்ற சொற்களுக்கு இன்றைய நிலையில் பொருள் கொள்வது கடினமான ஒன்று.

காவூ என்பதற்குப் பலி என்று பொருள் கொள்ள ஒரு தடை உள் ளது. பலி இட்டபின் அதைப் பாதுகாக்க வேண்டிய அவசியமில்லை. அது முடிந்து போன செயல். காத்தார் அடி என் தலை மேலன என்று பயின்று வருவதால் அவன் (மதிரை) செய்த செயலைக் காலங்காலமாக நிலைத்திருக்க வேண்டிய செயலாகவே கொள்ள வேண்டியுள்ளது. அதனால் காவூ என்பதற்குப் பலி என்று பொருள் கொள்வது கடினமே.

'காவு' என்ற சொல்லுக்குப் பல காலங்களில் பல பொருள்கள் பயின்று வந்துள்ளன. 'கா' என்ற சொல்லின் வழக்குச் சொல்லாகக் 'காவு' என்ற சொல் காலங்காலமாகப் பயின்று வந்துள்ளது. 'கா' என்பதற்குச் சோலை, வனம் ஆகிய பொருள்கள் உள்ளன. கா என்ப தற்குக் காத்தல், மேய்த்தல் போன்ற பொருள்கள் தமிழிலும் பிற திராவிட மொழிகளிலும் உள்ளன. மலையாள மொழியில் 'காவு' என்ற சொல் சிறு தெய்வக் கோயில், நடுகற் கோயில் என்ற பொருள் களில் வழங்கி வருகின்றது. மேலும் அம்மொழியில் காவு என்ற சொல் வேலி, அரண், புனித வேலி, தோட்டம் ஆகிய பொருள்களில் வழங்கி வருகின்றது. கன்னட மொழியில் பொருள்களைப் பாதுகாப்பாக வைத்திருக்குமிடம் என்று பொருள் கூறப்பெறுகின்றது. (Dravidian Etymological Dictionary, No. 1416).

இக்கல்வெட்டு திருச்சிராப்பள்ளி மதுரைப் பெருவழிக்கருகில் அமைந் திருப்பதால் குதிரை வாணிகர்கள், அல்லது அவர்களுடன் சென்ற வீரர்கள் குழுவைச் சேர்ந்தவனாக மதிரை என்பவன் இருந்திருக்க வேண்டும். பிற்காலக் கல்வெட்டுகளில் (12-13ம் நூற்றாண்டு) வளஞ்சியன் கா, ஐந்நூற்றுவன் கா ஆகிய சொற்கள் பயன்படுத்தப் பெறுகின்றன. இத்தகைய காவில் பல மண்டலத்து வணிகர்கள் கூடிப் பேசி ஆணைகளை வெளியிட்டுள்ளனர். இதற்குப் பிரான்மலை வணிகர்குழுக் கல்வெட்டு, பெரியார் மாவட்டம் சர்க்கார் பெரிய

பாளையம் கல்வெட்டு முதலியவற்றைச் சான்றாகச் காட்டலாம். இக் கல்வெட்டுகளில் வரும் 'கா' என்ற சொல்லுக்கு மரங்கள் நிறைந்த சோலை என்று பொருள். இடைமலைப்பட்டிப் புதூர்க் கல்வெட்டில் பயின்று வரும் 'காவூ' என்ற சொல் இப்பொருளிலும் பயின்று வந்திருக் கலாம். அல்லது பிற திராவிட மொழிகளில் பயின்று வரும் வேலி,

இடைமலைப்பட்டிப் புதூர்க் கல்வெட்டு

புனிதவேலி (சிறுதெய்வக் கோயிலைச் சுற்றி அமைந்துள்ள பகுதிக்கு வகுக்கப் பெற்ற வேலி) அல்லது மேய்ச்சல் நிலம், பொருள்களைப் பாதுகாக்குமிடம் ஆகிய பொருள்களில் ஏதோ ஒரு பொருளில் அச் சொல் வழங்கப்பெற்றிருக்க வேண்டும். தமிழில் மேய்ச்சல் நிலத்திற்குக்

'கன்றுமேய் பாழ்' என்ற சொல் வழக்கிலிருப்பதால் மேய்ச்சல் நிலம் என்று பொருள் கொள்ள முடியாது. அதனால் வேலி, பாதுகாப்பிடம் ஆகிய பொருள்களில் அச்சொல் வழங்கப் பெற்றிருக்க வேண்டும்.

'கால முக்கியங் குழுவாணை நாட்டார் அடைக்கலம், என்ற பாடம் குறிப்பிடத்தக்கது. இப்பாடம் இக்கல்வெட்டு இடைக்காலச் சங்க (Guild)த்தோடு தொடர்புடையது என்பதை வலியுறுத்துகின்றது. கால முக்கியங் குழுவாணை என்பதை நாட்டார் என்பதற்கு அடை மொழியாகக் கொள்ளலாம். சித்திரமேழிப் பெரிய நாட்டார் என்பதைப் போன்றதொரு அமைப்பாகவே கால முக்கியங் குழுவாணை நாட்டார் அமைப்பினைக் கருதலாம். கால முக்கியம் என்பது குறிப்பிட்ட பிரி வினரில் சிறப்புடைய(Elite)வர்கள் என்பதைச் சுட்டுகின்றது. குழு வாணை என்பதற்கு இன்றைய நிலையில் பொருள் கொள்வது கடின மாகவே உள்ளது. எது எப்படி இருந்த போதிலும் இக்குழு ஏதோ ஒரு படை அமைப்புடன் தொடர்புடையது என்று மட்டும் கொள்ளலாம். இந்தக் கல்வெட்டுடன் ஒப்பிடத்தக்கதாய்ப் பெரியார் மாவட்டம், ஈரோடு வட்டம், பழமங்கலத்தில் ஒரு கல்வெட்டு கிடைத்துள்ளது. அதிலும் போர்க்கருவிகள், கலப்பை ஆகிய சின்னங்கள் பொறிக்கப் பெற்றுள்ளன. அதில் கி.பி. 12-13ம் நூற்றாண்டு எழுத்தில் கல் வெட்டும் பொறிக்கப்பெற்றுள்ளது.

1 ஸ்வஸ்திஸ்ரீ திசை
2 யாயிரத்தைஞ்
3 ஞூற்றுவ னானாதேசிய
4 டைக்கலம் கிழங்க
5 நாட்டு நித்தவினோத
6 த்திருந்து வாழும் வெ
7 ள்ளாளன் வெண்டுவ
8 ன் திருக்குறையான்
9 எடுப்பிச்ச மாநகரம்

இக்கல்வெட்டு அமைப்பிலும், கருத்திலும் இடைமலைப்பட்டிப் புதூர் சங்கக் கல்வெட்டைப் போன்றுள்ளது. ஆனால் இக்கல்வெட்டில் பொருள் வெளிப்படை.

இடைமலைப்பட்டிப் புதூர் சங்கக் கல்வெட்டு உண்மையிலேயே ஓர் அரிய கண்டுபிடிப்பு. முன் இடைக்கால (Early medieval) தமிழகத் தில் அத்திகோசத்தார், வீரகோசத்தார் (குதிரைப்படை?) போன்ற படைப் பிரிவுச் சங்கங்கள் செல்வாக்குப் பெற்றிருந்தமையைக் காட்டும்.

பல சான்றுகள் தமிழகம், கேரளம், கிழக்குத் தக்காணம் (இன்றைய ஆந்திரம்) ஆகிய பகுதிகளில் கிடைத்துள்ளன. அத்திகோசத்தாரைப் பற்றிய கல்வெட்டுகள் பூலாங்குறிச்சி, நல்லூர் (பெரியார் மாவட்டம்), ஆனைமலை(கோவை மாவட்டம்), திருச்சூர் அருங்காட்சியகம் (கேரளம்) ஆகிய ஊர்களில் கிடைக்கின்றன. அக்கல்வெட்டுகளுடன் சின்னங்களும் உள்ளன. (ஆனால் பூலாங்குறிச்சிக் கல்வெட்டில் சின்னங்கள் இல்லை) சின்னங்களுடன் யானையும், குதிரையும் பொறிக்கப் பெற்றுள்ளன. ஆனால் இடைமலைப்பட்டிப் புதூர்க் கல்வெட்டில் குதிரை மட்டுமே உள்ளது. அதனால் இக்கல்வெட்டு குதிரை வாணிகர் தொடர்புடையதாகவோ, அவ்வாணிகர்களுடன் சென்ற வீரர் தொடர்புடையதாகவோ அல்லது குதிரைப் படையினருடன் தொடர்புடையதாகவோ இருக்கலாம்.

பூப்பெண்கள்

சங்க காலத்துத் தமிழ்நாட்டில் சிறு தொழில் செய்து வாழ்ந்தவர் பலராவர். இவர்களை இலக்கிய வரிகள் ஆங்காங்கே படம் பிடித்துப் பதிவு செய்துள்ளன. பெருங்கடுங்கோவும் மாறன் வழுதியும் நற்றிணைத் தலைவியர் படும் துன்பம் சொல்லும் போது பாலையிலும் முல்லையிலும் பூவிற்ற பெண்களை அடையாளம் காட்டி மகிழ்கின்றனர்.

பஞ்சு போன்ற புறவிதழுடைய குருக்கத்தி மலர்களுடன் சிறு சண்பக மலர்களை இணைத்துக் கட்டியும் சேர்த்துப் பரப்பியும் வைத்த மூங்கில் தட்டு. புதிதாய்ப் பூத்த மலர்கள் என்பதால் வண்டுகள் ரீங்காரமிட்டுத் தேனெடுக்கின்றன. இந்த வண்டு சூழ் மலர்த் தட்டைச் சுமந்த அழகுப் பெண்ணோ உழவர் குடியின் இள மகள். அவள் மலர்களின் பெயர் சொல்லிக் 'குருக்கத்தியோடு பித்திகை விரவு மலர் கொள்ளீரோ' என்று பூக்காரியாய் முல்லையில் வீதியுலா வருகிறாள்.

பாலைப் பெண்ணோ நொதுமலாட்டியாம். அவள் கையிலும் வட்டில். ஆனால் மலர்கள் வேறுபட்டுள்ளன. இங்குக் குருக்கத்திக்கும் சண்பகத்திற்கும் மாறாக வண்டுகள் மொய்க்கும் புத்தம் புதுப் பாதிரிகள். தொழில் வல்ல ஓவியர் அரக்கூட்டிச் செய்த கைத் தூரிகைகளாய்ப் பூத்திருக்கும் இப்பாதிரிகளைச் சுமந்தபடி தெரு தோறும் சென்று கூவிப் பூ விற்கிறாளாம் இந்தப் பாலைப் பாவை.

இந்தப் பூப்பெண்களின் விலை கூவலும் அவர்தம் தட்டுகளில் தங்கியிருக்கும் மலர் மணமும் காதலர்ப் பிரிந்து வாடியிருக்கும் காரிகைகளை மேலும் வாட்டுகின்றனவாம். காதல் வாட்டம் அவர்களுக்கு. நமக்கோ தொழிற் செய்தி.

---

3. மூவரை வென்றான் குடைவரையும் கல்வெட்டுகளும்

அர. அகிலா

மதுரை திருவில்லிபுத்தூர் சாலையில் அழகாபுரிக்கு அருகில் மூவரை வென்றானுக்கான சாலை மேற்கு நோக்கிப் பிரிகிறது. இச் சாலையில் ஏறத்தாழ நான்கு கிலோமீட்டர் பயணித்தால் படர்ந்து பரந்திருக்கும் குன்றுத் தொடரொன்றைக் காணலாம். இக்குன்றின் நடுப்பகுதியில் கிழக்கு நோக்கிய குடைவரையொன்றும் அதனருகே பிற்காலத் திருப்பணிகளாய் ஒரு திருமுன்னும் மண்டபமும் காணப்படு கின்றன.

குடைவரை வளாகம்

குடைவரைக்கு முன்னால் மண்டபமொன்றும் அதற்கு முன்னால் சிறிய அளவிலான நந்தி மண்டபமொன்றும் காணப்படுகின்றன. மலைத்தளத்திலிருந்து இந்நந்தி மண்டபத்தையடையப் படிக்கட்டுகள் வெட்டப்பட்டுள்ளன. நந்தி மண்டபத் தளத்தின் தென் முகப்பில் கல்வெட்டுச் சிதறல் ஒன்று காணப்படுகிறது. கருவறையை நோக்கி அமர்ந்துள்ள நந்தியினருகே சிறிய அளவிலான சிவலிங்கமொன்று. இம்மண்டபத்தின் மேற்கில் அமைந்துள்ள குடைவரை முன் மண்டப முகப்புச் சுவரின் இருபுறமும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

முன் மண்டபம்

குடைவரையின் முன்னும் நந்தி மண்டபத்தின் பின்னுமாய் அமைந் திருக்கும் செவ்வகமான மண்டபத்தை முன் மண்டபம் எனலாம். இதன் முகப்புச் சுவர் நடுவே வாயில் காட்டப்பட்டுள்ளது. இவ்வாயிலின் வலப்புறம் உள்ள சுவர்ப் பகுதியில் சிறியதொரு பிள்ளையார் சிற்பம். உட்புறத்தே இம்மண்டபம் குடைவரையோடு பக்கங்களிலும் மேலும் கீழுமாய்ப் பொருந்த இணைக்கப்பட்டுள்ளது. குடைவரை முகப்பு முழுத் தூண்களுக்கு முன்னால் இரண்டு தூண்கள் எழுப்பி அவற்றின் மேல் உத்திரம் நிறுத்தி, மண்டப முன் சுவருக்கும் இதற்கும் இடையில் கற்கள் பாவிக் கூரையாக்கியிருக்கிறார்கள். இத்தூண்கள் பின்புலத் தில் நான்முகத் தூண்களாகவும் முன்புறத்தே சதுரம், முப்பட்டை, சதுரம் என்ற அமைப்பிலும் உருவாக்கப்பட்டுள்ளன.

முகப்பு

முகப்பு, முகமண்டபம், கருவறை என்ற அமைப்பில் குடைவரை அகழப்பட்டுள்ளது. தென்வடலாக 5.15 மீ. நீளமும், கிழக்கு மேற்

காக 67.8 செ. மீ. அகலமும் உள்ள முகப்பில் இரண்டு முழுத்தூண்களும் இரண்டு அரைத்தூண்களும் காணப்படுகின்றன.

இத்தூண்கள் சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்பிலுள்ளன. சதுரங்களின் மேற்கு தவிர்ந்த பிற முகங்களில் மலர்ப் பதக்கங்கள் முயற்சிக்கப்பட்டுள்ளன.[1] முழுத்தூண்களின் மேற்சதுர முகங்களிரண்டில் இவை நன்கு உருவாகியுள்ளன. இப்பதக்கங்களின் நடுவில் ஒன்றில் சிம்மமும், மற்றொன்றில் யாளியும் காணப்படுகின்றன. வட முழுத்தூணின் கீழ்ச்சதுரத்தில் தென் முகத்தில் அன்னம். வடிவங்கள் காட்டப் பெறாத பதக்கங்கள் தாமரையிதழ்களோடு அமையச், சிற்பங்களோடு திகழும் பதக்கங்கள் தாமரையல்லாத மலரிதழ்கள் சூழத் திகழ்கின்றன.

தூண்களின் மேற்சதுரத்தின் மேல், கீழ்க்கைகள் சிறியதாகவும் மேற்கைகள் பெரியதாகவும் கொண்ட விரிகோணப் போதிகைகள். இவை உத்திரத்தில் சந்திக்குமிடத்து சிறு மடிப்பு காட்டி இணைகின்றன. உத்திரத்தின் வெளிப் பிதுக்கமாய்த் தென்வடலாய் ஓடும் வாஜனம். அதன் மேல், முன் நீட்டலாய்ச் சமன் செய்யப்படாத கபோதம். இக்கபோதத்தின் பெரும்பகுதி முன் மண்டபத்தின் உத்திரத்தாலும் கூரைக் கற்களாலும் மறைக்கப்பட்டுள்ளது.

முகமண்டபம்

முகமண்டபம் தென்வடலாக 5.5 மீ. நீளமும் கிழக்கு மேற்காக $1.16\frac{1}{2}$ மீ. அகலமும் கொண்டமைந்துள்ளது. முகமண்டபத் தரை சில இடங்களில் செம்மையாக்கப்பட்டிருந்த போதும் சில இடங்களில் கரடு முரடாகவே விடப்பட்டுள்ளது. முகமண்டபத்தின் தென் சுவரில் கோட்டங்கள் எதுவுமில்லை. வடசுவரில் அரை வட்ட வடிவத்தில் கோட்டம் அமைத்து, ஆனந்தத் தாண்டவக் கோலத்தில் சிவபெருமானையும் அருகில் உமையன்னையையும் சிற்பங்களாகச் செதுக்கியுள்ளனர். பின் சுவரின் (மேற்குச் சுவர்) நடுப்பகுதியில் கருவறை. இதன் முன் பாறையிலேயே வெட்டப்பட்டிருக்கும் ஐந்து படிகள், பிடிச் சுவர் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. பின் சுவரின் கீழ்ப்பகுதி பிரதிபந்தத் தாங்குதளத்தோடு மேலே கண்டப்பகுதி கொண்டமைந்துள்ளது. உபானம், ஜகதி, எண்பட்டைக் குமுதம், பிரதிவரி, வாஜனம் என அமைந்துள்ள இத்தாங்குதளப் பகுதியின் உயரம் 58.5 செ. மீ. ஆகும். இங்குப் பிரதிபந்தத் தாங்குதளம் இருந்தாலும் பிரதி முகம் உருவாக்கப்படாமல் அதற்கான அமைப்பு மட்டும் காட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இதுபோன்ற ஒதுக்கீட்டு முறையைப் பல்லவர் கைவண்ணமான காஞ்சிபுரத்துப் பிறவாதான் ஈசுவரத்திலும், திருவில்லிபுத்தூர் வட பத்ரசாயி கோயிலின் முதல் தள உச்சியில் வரும் பூமிதேசப் பகுதியிலும் காணலாம்.

தாங்குதளத்தின் மீது கம்புகளோடு கூடிய கண்டப் பகுதி பாதங்களோடு பேரளவினதாய் அமைந்துள்ளது. இதன் மேல் எழும் சுவர்ப் பகுதியில் பக்கத்திற்கு மூன்றென ஆறு அரைத்தூண்கள். கருவறை வாயிலை ஒட்டிய அரைத்தூண்களும் பின்சுவர், பக்கச் சுவர்களைச் சந்திக்கும் இடத்தில் உள்ள அரைத்தூண்களும் நான்முகத் தூண்களாய் அமைய, இடைப்பட்ட தூண்கள் சதுரம், கட்டு, சதுரம் என்ற வடிவில் உள்ளன. சிறு கீழ்க்கையும், பெரு மேற்கையும் உடைய இவற்றின் விரிகோணப் போதிகைகள் சிறு மடிப்புடன் உத்திரம் தொட, உத்திரத்தின் வெளிப் பிதுக்கமாய் வாஜனம். தூண்களுக்கு இடையிலுள்ள சுவர்ப் பகுதிகள் கோட்டங்களாகியுள்ளன. இந்நான்கு கோட்டங்களுள்[2], கருவறை வாயிலையொட்டி அமைந்துள்ள கோட்டங்களின் அகலம் 74 செ.மீ. இவற்றில் சிற்பங்கள் இல்லை. ஆனால் வடபுறக் கோட்டத்தில் இராமலிங்க அடிகளின் ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. மற்ற இரண்டில் தென்புறம் பிள்ளையாரும் வடபுறம் முருகனும் செதுக்கப்பட்டுள்ளனர். சிற்பங்களின் செதுக்கலால் இக்கோட்டங்கள் ஆழமாக அகழப்பட்டுள்ளன.

பிள்ளையார் கோட்டத்தின் முன்னால் பிற்காலத்தே மேடை ஒன்றெடுத்து அதன் மீது சிறு பிள்ளையார் வடிவமொன்றை நிறுவியுள்ளனர். முகமண்டபத்தின் கூரையையொட்டித் தெற்கிலும் வடக்கிலும் வாஜனம் காட்டப்பட்டுள்ளது. முகமண்டபக் கூரையில் கிழக்கு மேற்காகக் கருவறை முன்சுவர் வாஜனத்திலிருந்து முகப்பு உத்திரம் வரையில் இரு அகலமான பட்டைகள் வெட்டப்பட்டுள்ளன. இக் கட்டுரையாளர் கள ஆய்வு மேற்கொண்ட பல்லவ, பாண்டிய மற்றும் முத்தரையர் பகுதிகளில் எந்தக் குடைவரையிலும் இது போன்ற அமைப்பு காணப்படவில்லை. இவ்வமைப்பைப் பின்பற்றியே சோழர்களின் தொடக்கக் காலத்தில் முகமண்டபக் கூரைகளை மூன்றாய்ப் பகுக்கும் பழக்கம் சில கோயில்களில் இடம் பெற்றது போலும்.

கருவறை

கருவறை வாயில் திருநிலை அமைப்பு கொண்டுள்ளது. திருநிலைக் கால்களுக்கு இடையிலுள்ள வாயிலின் அகலம் 73 செ.மீ. உள்வாங்கி அமைந்துள்ள திருநிலைக்கு முன்னால் வாயிலின் மேல் நிலையாய் வாஜனமே காட்டப்பட்டுள்ளது. இதன் அடிப்பரப்பில் பலகை செதுக்கப்பட்டுள்ளது. 1.89 மீ. உயரமும் கிழக்கு மேற்காக 2.72 மீ. அகலமும் தென் வடலாக 2.77½ மீ. நீளமும் கொண்டமைந்துள்ள கருவறையின் நடுவில் சதுரமான ஆவுடையாரில் லிங்கத் திருமேனி; கோமுகம் வடபுறம் அமைந்துள்ளது. இப்பகுதிகளிலுள்ள குடைவரைகளிலிருந்து மாறுபட்டு ஆவுடையாரும் லிங்கத் திருமேனியும் தனிச் செதுக்கல்களாய்ச் செய்து வைக்கப்பட்டுள்ளன.

சிற்பங்கள்

இக்குடைவரையில் காணப்படும் கோட்டச் சிற்பங்கள் அனைத்துமே குடைவரைக் காலத்திற்குப் பிற்பட்டவையாகத் தோன்றுகின்றன. தோற்றம், நிலை, உடைகள், அணிகலன்கள், கருவிகள், அமைப்பு முறை ஆகியன நோக்கும்போது இச்சிற்பங்களைப் பதின்மூன்று அல்லது பதினான்காம் நூற்றாண்டினவாகக் கருதலாம்.

1. பிள்ளையார்

கரண்ட மகுடம், முப்புரிநூல், வயிற்றுக்கட்டு, மேற்கைகளில் கங்கணம், மணிக்கட்டருகே வளைகள் எனக் கிழக்குப் பார்வையாக அரைத்தாமரையமர்வில் பிள்ளையார்.[3] பின் கைகள் கொண்டிருக்கும் பொருட்களைச் சரியாக அடையாளம் காண முடியவில்லை என்றாலும், இடப் பின்கையில் இருப்பதைக் கொம்பாக ஊகிக்கலாம். இட முன் கை வயிற்றருகே தொடை மேல் இருத்தப்பட்டுள்ளது. முகமும் மார்பும் வல முன் கையும் சிதைந்துள்ளன. பிள்ளையார் அமர்ந்திருக்கும் கோட்டத்தின் அகலம் 80 செ.மீ.

2. முருகன்

75 செ. மீ. அகலமுள்ள கோட்டத்தில் முருகப் பெருமான் பின் கைகளில் வலப்புறம் சக்தியும், இடப்புறம் வஜ்ரமும்[4] கொண்டு நேர் நின்ற கோலத்தில் எழுந்தருளியுள்ளார். முன் கைகள் காத்து அருள் செய்கின்றன. பனையோலைக் குண்டலங்கள், கழுத்தணி, ஸ்கந்த மாலை கொண்டிலங்கும் முருகப் பெருமானின் தலையைக் கரண்ட மகுடம் அழகு செய்கிறது. பின்னால் அவரது ஊர்தியான மயில். அதன் அலகில் பாம்பு. பிள்ளையார், முருகன் ஆகிய இருவர் கோட்டங்களின் மேற்பகுதிகளிலும் பக்கத்திற்கொருவராகக் கந்தர்வர்கள் காட்டப்பட்டுள்ளனர். இவர்கள் ஒரு கையில் மலர் மொட்டும் மறு கையில் போற்றி முத்திரையுமாய் இறை வழிபாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

3. ஆனந்தத்தாண்டவர்

தென் பார்வையாய் வடபுறக் கோட்டத்தில் ஆனந்தத்தாண்டவரும் உமையும். 1.25 மீ. அகலமுள்ள இக்கோட்டத்தில் வலப்புறம் ஆனந்தத்தாண்டவர். குப்புறப் படுத்திருக்கும் முயலகன் மீது தம் வலப்பாதத்தை ஊன்றியிருக்கிறார் இறைவன். அழுத்தப்பட்டிருக்கும் நிலையிலும் தலை தூக்கிப் பார்க்கும் முயலகனின் கையில் பாம்பு. இறைவனின் இடத்திருவடி உயர்த்தப்பட்டு வலப்புறம் வீசப்பட்டுள்

ளது. பின் கைகளில் உடுக்கையும் தீச்சுடரும். வல முன் கை காத்தருள இட முன் கை வேழ முத்திரையில் மார்பின் குறுக்கே நீட்டப்பட்டுள்ளது.[5] விரிசடையின் வலப்புறம் கூப்பிய கைகளுடன் கங்கை; இடப்புறம் நீள வளர்ந்த வலச் செவியில் மகரகுண்டலம்; இடச் செவியில் பனையோலைக் குண்டலம். பாதங்களில் தாள் செறிகள். வலக் காலில் வீரக்கழல். கழுத்தணிகளும் வளைகளும் கங்கணங்களும் ஸ்கந்த மாலையும் இறைவனை அணி செய்கின்றன. இடுப்பாடை முடிச்சின் தொங்கல்கள் ஆடல் வேகத்தில் இருபுறமும் விரிந்து பரவுவதைச் சிற்பச் செதுக்கல் சிறப்பாய்க் காட்டியுள்ளது. ஆடலைப் பார்க்கும் அம்மை அண்ணலின் இடப்புறம். வலக்கையில் மலர்; நெகிழ்ந்த இடக்கை; மகர குண்டலங்களும் கரண்ட மகுடமும் அணிகலன்களுமாய்ச் சம பாதத்தில் நேர் நின்ற கோலம். இக்கோட்டத்தின் விளிம்புகளைத் திருவாசி போல் செதுக்கி மேலே தீச்சுடர்கள் காட்டியுள்ளனர்.

இந்த ஆனந்தத்தாண்டவத் திருக்கோலம் தென்பரங்குன்றத்துக் குடைவரையில் உள்ள ஆடல் தோற்றத்தை நினைவுபடுத்துகிறது. முன் கைகளும் மார்புக்குக் கீழான உடல் பகுதிகளும் இல்லாது நிற்கும் நிலையிலும் பரங்குன்றத்து ஆடல் நாயகரின் தோற்றம் இரண்டாம் பாண்டியப் பேரரசின் கலை வண்ணம் பேசும் சிறப்பான வடிவமாய்த் திகழ்கிறது. அருகே அம்மையும் சிதைந்த நிலையில். இந்தக் கலை வடிவங்கள் போலச் செய்ய மேற்கொண்ட சற்றுத் திறமைக் குறைவான முயற்சியைத்தான் மூவரை வென்றானில் பார்க்கிறோம்.

அம்மன் கோயில்

குடைவரைக் கோயிலின் வடபுறத்தே கிழக்குப் பார்த்த நிலையில் அம்மன் கோயில் அமைந்துள்ளது. கருவறையும் முகமண்டபமுமாய் உள்ள இத்திருமுன் ஜகதி, கண்டம், பெருவாஜனம் கொண்ட துணைத் தளத்தின் மீது கட்டப்பட்டுள்ளது. அரைத்தூண்களற்ற சுவரும், வாஜனம், வலபி, ஆழமற்ற கூடுகளுடன் கூடிய கபோதம் எனக் கூரை யுறுப்பும் கொண்டுள்ள இத்திருமுன்னின் பல இடங்களில் கல்வெட்டுச் சிதறல்கள். கருவறையின் இடப்புறத் திருநிலைக் காலில் குலசேகர பாண்டியர் காலத்துக் கல்வெட்டு. கருவறையில் நின்ற திருக்கோலத்தில் பின் கைகளில் அக்கமாலையும் மலரும் கொண்ட மரகதவல்லி அம்மை. முன் கைகளுள் ஒன்று காக்கும் குறிப்பு காட்ட, மற்றொன்று கடியவலம்பிதமாய் அமைந்துள்ளது.

குடைவரையின் எதிர்ப்புறத்தே பெரியதொரு மண்டபம். இதில் இப்பொழுது ஒன்பான் கோள்கள் ஒரு மேடை மீது அமைக்கப்

பட்டுள்ளன. மடைப்பள்ளியாகச் செயற்படும் இம்மண்டபத்துச் சுவர்களிலும் கல்வெட்டுச் சிதறல்கள்.

குடைவரைக்குத் தெற்கில் சரிவில் விழும் நீரைக் கீழிறக்கச் சிறு முகப்பு வெட்டியுள்ளனர். இதற்கு இரண்டு தூண்கள் நாட்டிக் கூரை அமைத்துள்ளனர். இந்த முகப்பு வழி இறங்கும் நீர் சற்றுக் கீழுள்ள சுனைக்கும் போகிறது. இச்சுனை நீரே திருமுழுக்காட்டுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

கல்வெட்டுகள்

குடைவரையின் எந்தப் பகுதியிலும் கல்வெட்டுகளில்லை. ஆனால் முன் மண்டபம், நந்தி மண்டபம் ஆகியவற்றின் புறச்சுவர்களிலும் மடைப்பள்ளியின் புறச்சுவர்கள் மற்றும் உட்புறத் தாங்குதளப் பகுதியிலும், அம்மன் திருமுன் உட்புறத்தேயும், வெளிப்புறத்தேயும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

இங்கிருந்து வரலாற்றாய்வு மையத்தால் படியெடுக்கப்பட்ட பதினோரு கல்வெட்டுகளுள் இரண்டு கல்வெட்டுகளே முழுமையானவை. ஏனைய ஒன்பதும் கட்டடத் திருப்பணிகளால் சிதறிய துணுக்குகளாய் அமைந்துள்ளன.

குடைவரை முன் மண்டபக் கிழக்குச் சுவரில் இரண்டு கல்வெட்டுகள் உள்ளன. இவற்றுள் சன்னலுக்கருகிலுள்ள கல்வெட்டு நாராயணன் என்ற பெயரை மட்டும் தருகிறது. பிள்ளையார் சிற்பத்திற்குக் கீழுள்ள கல்வெட்டு அகம்படியாகிய தில்லை நாயகன் பென்மன்[7] என்பார் பெயரைத் தருகிறது. இவர் இச்சிற்பத்தை எழுந்தருளுவித்தவராகலாம். நந்தி மண்டபத்தின் தள முகப்பிலுள்ள கல்வெட்டு மெய்க்கீர்த்தியொன்றின் பகுதியாக உள்ளது. கிடைத்திருக்கும் பகுதி கொண்டு இது யாருடைய மெய்க்கீர்த்தியென்று அடையாளம் காண முடியவில்லை.

அம்மன் திருமுன்னில் ஐந்து கல்வெட்டுகள் உள்ளன. இவற்றுள் நான்கு துணுக்குக் கல்வெட்டுகள். திருநிலைக் காலில் காணப்படும் கல்வெட்டு நாற்பத்தாறு வரிகளைக் கொண்டுள்ளது. பதின்மூன்றாம், பதினான்காம் நூற்றாண்டு எழுத்தமைதியில் உள்ள இக்கல்வெட்டு இறைவனே பேசுவது போல் அமைந்துள்ளது.[8] சாகல்யகுடி கேசவன் தேவன், ஆப்பனூர் சுந்தரத் தோளன் பேராயமுடையான் உள்ளிட்ட பத்துப் பேருக்குக் காராண்மை ஜன்மமாக இறைவனால் தரப்பட்ட நிலம் பற்றி இக்கல்வெட்டு பேசுகிறது. முதல் எண்மரின் பெயர்கள் கல்வெட்டின் முதற் பகுதியில் இருந்திருக்க வேண்டும். இப்பகுதி

கோயில் வளாகத்தில் எங்கும் காணப்படவில்லை. இந்நிலம் குல சேகர தேவரின் எட்டாம் ஆட்சியாண்டு முதல் கைக்கொள்ளப்பட்டுப் பயிர் செய்யப்பட்டது. இதற்கான தீர்வைகளும் கல்வெட்டில் வரையறுக்கப்பட்டுள்ளன.

i) இருபத்து நான்கு சாண் கோலால் அளக்கப்பட்ட ஒரு மா நீர் நிலத்துக்கு எட்டுக் கல நெல், ஆயிரத்தெண்மன் காலால், கோயில் அடுக்களைப் புறத்தே இட்டு, அளந்து தருதல். அத்துடன் மாத்தால் ஒன்றரைத் திரமம் தேவகன்மிகள் கையில் தருதல்.

ii) கோடைக் குறுவை விளைந்த நிலங்களுக்கு இந்நெல்லிலும் இத் திரமத்திலும் பாதி கொடுத்தல்.

iii) கருஞ்செய், புன்செய் நிலங்களில் இருபத்து நான்கு சாண் கோலால் அளக்கப்பட்ட ஒரு மா நிலத்திற்கு ஒன்றரைத் திரமம் தருதல்.

இம்மூன்று நிபந்தனைகளுக்கும் உட்படுத்தப்பட்ட ஜன்மமாக நிலம் அளிக்கப்பட்டது. இக்கல்வெட்டால் இரண்டாம் பாண்டியப் பேரரசுக் காலத்து நிலவரி முறைகளை அறிய முடிகிறது.

முகமண்டப உட்சுவர்களிலுள்ள கல்வெட்டுச் சிதறல்களுள் ஒன்று மன்னர் ஒருவரின் ஆறாம் ஆட்சியாண்டின் பங்குனித் திங்கள் முதல் கோயில் நிலங்களுக்குத் தரப்பட்ட கொடையைச் சுட்டுகிறது. திரு விடையாட்டம், கருநீலக்குடி நாடு என்பன குறிக்கப்பட்டுள்ளன. மற்றொரு கல்வெட்டு திருப்படி மாற்றுள்ளிட்ட வேண்டும் நித்த நிவந்தங்களுக்குத் தரப்பட்ட கொடையையும், சந்தி விக்கிரகப் பேறு என்ற வரியினத்தையும் குறிக்கிறது.

அம்மன் திருமுன் புறச்சுவர்க் கல்வெட்டு நிலக் கொடையைச் சுட்டுவதாகக் கொள்ளலாம். குலசேகரச் சதுர்வேதிமங்கலம், கண்ட நாட்டு நாடாழ்வான் என்ற சொற்றொடர்கள் கிடைக்கின்றன. மடைப் பள்ளிப் புறச்சுவர்களிலிருந்து படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளுள் ஒன்று கடமை, அந்தராயம் என்னும் வரியினங்கள் வழியாக வந்த வருமானமாக ஒன்றே முக்கால் காசுகளைக் கணக்கிடுகிறது. இக் கல்வெட்டில் வரகுணப் பேரேரி குறிப்பிடப்பட்டுள்ளது. இறைவன் கோயிலுக்குத் தேவதான நிலங்கள் இருந்த குறிப்பும் அந்நில வகைக்குப் பெறப்பட்ட வரி அமைப்பிலேயே புதிய கொடை நிலத்திலிருந்தும் வரிகள் பெற ஏற்பாடான தகவலும் குறிப்பிடத்தக்கவை.[9]

மற்றொரு கல்வெட்டு இறைவனுக்குத் தரப்பட்ட கொடையொன்றைச் சுட்டுகிறது. வடபுறச் சுவரின் மேற்பக்கத்திலுள்ள கல்வெட்டு 'சோழ பாண்டியனான குலசேகர சதுப்பேதிமங்கலம் மங்கலத்து ஊரார்க்கு ஆனாயம்' என்றமைந்துள்ளது. இக்கல்வெட்டின் கீழ்ப் பகுதியில் ஒரு முக்காலியும் அதன்மேல் ஒரு பூரண கும்பமும் காணப் படுகின்றன. முக்காலியின் இருபுறமும் குத்து விளக்குகள்.[10] ஆனாயம் என்ற சொல்லிலுள்ள ஆயம் சங்க காலச் சொல் வழக்காகும். ஆனாயம் என்ற இச்சொல்லுக்கு [ஆன்+ஆயம்] ஆத்திரள் என்று பொருள் கொள்ள முடியும். குலசேகரச் சதுர்வேதிமங்கலத்து மங்கல ஊரார்க்குத் தரப்பட்ட பசுத்திரளை இக்கல்வெட்டு குறிக்கிறதோ என்று கருத வேண்டியுள்ளது. கல்வெட்டின் கீழ் வெட்டப்பட்டுள்ள மங்கலப் பொருட்கள் இக்கருத்தோடு பொருந்துகின்றன.

குடைவரையின் காலம்

கல்வெட்டுகளின் வழி குடைவரையின் பெயரையோ இறைவன் பெயரையோ, இங்குள்ள அம்மன் திருமுன் தொடர்பான செய்திகளையோ பெற முடியவில்லை. மூவரை வென்றான் ஊர்ப்பகுதியில் காணப்படும் சிதைந்த நிலையிலுள்ள ஈசுவரன் கோயில் கல்வெட்டுகளைப் படித்துப் பார்த்ததில் அவற்றிலிருந்தும் இக்குடைவரை தொடர்பான செய்திகளெதுவும் கிடைக்கவில்லை. இந்நிலையில் மூவரை வென்றான் குடைவரையின் காலத்தை அதன் அமைப்பு கொண்டு கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டாய்க் கொள்ளலாம். இங்குள்ள கல்வெட்டுகள் இக்கோயில் பதின்மூன்றாம் பதினான்காம் நூற்றாண்டுகளில் வளமுடன் திகழ்ந்ததை உணர்த்துகின்றன. இந்நாளிலும் இராசபாளையத்தைச் சேர்ந்த சில குடியினருக்கு இத்தலம் முக்கியத் தலமாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

ஏற்புக்கோடல்

இக்குடைவரையில் ஆய்வு மேற்கொண்டபோது உடனிருந்து உதவிய கோயில் பூசாரி திரு. கோ. சங்கரய்யா, உணவளித்து மகிழ்ந்த இராசபாளையம் கு. செயமணி, மு. ஆறுமுகப் பெருமாள் குடும்பத்தார் ஆகியோர்க்கு இக்கட்டுரையாசிரியரின் நெஞ்சார்ந்த நன்றி உரியது.

அடிக்குறிப்புகள்

1. திரு. தி. இராசமாணிக்கம், 'தூண்களின் சதுர அமைப்புகளில் தாமரையிதழ்கள் உருவாக்கப்பட்டுள்ளன' என்று எழுதியிருக்கிறார். தென்னகக் குடைவரைக் கோயில்கள், கழக வெளியீடு, சென்னை, 1989, பக், 83. இக்கூற்று சரியல்ல. மலர்ப் பதக்

கங்களை உருவாக்கும் முயற்சியே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றுள் சிலவே தாமரைப் பதக்கங்களாய் வடிவெடுத்துள்ளன.

2. 'கருவறை வாயிலின் இருபுறமும் புரைகள் உருவாக்கப்பட்டுள் ளன. வலப்புறம் உள்ள புரையில் விநாயகரும் இடப்புறம் உள்ள புரையில் முருகனும் புடை சிற்பமாக உருவாக்கப்பட்டுள் ளனர்' என்று எழுதியிருப்பதன் மூலம், திரு. தி. இராசமாணிக்கம் மற்ற இரண்டு கோட்டங்களையும் கணக்கில் எடுத்துக்கொள் ளாமை தெளிவாகிறது. மு. கு. நூல், பக். 83.

3. இந்த அமர்வை 'யோக நிலை' என்று திரு. தி. இராச மாணிக்கம் குறிப்பது பொருந்தாது. மு. கு. நூல், பக். 83.

4. திரு. தி. இராசமாணிக்கம் கருவிகளை இட, வல மாற்றம் செய்துள்ளார். மு. கு. நூல், பக். 84.

5. திரு. தி. இராசமாணிக்கம் இந்தக் கை, காலைச் சுட்டிக் காட்டிய நிலையில் இருப்பதாகக் குறித்துள்ளார். மு. கு. நூல், பக். 84.

6. திரு. தி. இராசமாணிக்கம் இந்தக் கை கத்ய வலம்பித முத்திரை யில் இருப்பதாகத் தவறாகக் குறித்துள்ளார். மு. கு. நூல், பக். 84.

7. திரு. அந்தோணிராஜ் இப்பெயரை 'தலனை நாயகன் இ பன்மன்' என்று படித்துள்ளார். A Social History of Muvarai venran, unpublished M. Phil. Dissertation, p. 36.

8. திரு. அந்தோணிராஜ் இக்கல்வெட்டிற்குச் செய்தி விளக்கம் தர வில்லை. கல்வெட்டின் பாடத்தை மட்டும் தந்துள்ளார். அதிலும் பல வரிகளில் பிழையான பாடம் உள்ளது. மு. கு. ஆய்வேடு, பக். 132.

9. 'இத்தேவர் தேவதானமான நிலத்தில் ஒட்டினபடியே கடமை அந்தராயத்துக்குக் கொண்டு'.

10. திரு. அந்தோணிராஜ் இவை பற்றிக் குறிப்பிடாமையால் இவற் றின் முக்கியத்துவத்தை அவர் உணரவில்லையோ என்று தோன்றுகிறது. இக்கல்வெட்டின் பாடத்தை வெளியிட்டுள்ளவர் அதற்கான பொருள் விளக்கத்தைத் தரவில்லை. மு. கு. ஆய் வேடு, பின்னிணைப்பு காண்க.

4. அமனி கல்வெட்டும் அறிஞர் கருத்துரையும்

அர. அகிலா

புதுக்கோட்டை மாவட்டம் மலையடிப்பட்டியில் ஊரின் தென் கிழக்கே மலைக்குன்றுகள் பரவியுள்ளன. இவற்றுள் உயரமான குன்றொன்றின் உச்சியில், பாறைத் தளத்தில் கல்வெட்டொன்று வெட்டப்பட்டிருப்பதை இங்குக் கள ஆய்வுக்குச் சென்ற டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையக் கல்வெட்டாய்வர்கள் கண்டறிந்தனர். சுற்றிலும் கட்டம் கட்டப்பட்டு அதற்குள்,

1 கறையூர் ஆலங்காரி
2 க்கு பிச்சும் பிராந்
3 தும் அமனி

என்று எட்டாம் நூற்றாண்டு எழுத்தமைதியில் எழுத்துக்கள் பொறிக்கப் பட்டிருந்தன. 'கறையூரைச் சேர்ந்த ஆலங்காரி என்பார்க்குப் பித்தும் அச்சமுமே வழியாக உள்ளன' என்ற பொருளை இக்கல்வெட்டிலி ருந்து பெற முடிந்தாலும், அதில் நிறைவடையாத மைய ஆய்வர்கள் இதன் உள்ளார்ந்த பொருளறியக் கலந்துரையொன்று நிகழ்த்தினர். மதுரைத் தமிழ்ச் சங்கம் வெளியிட்டுள்ள தமிழ்ப் பேரகராதி ஆலம் காரி, பிச்சு, பிராந்து, அமனி என்னும் சொற்களுக்குத் தந்துள்ள பொருள் விளக்கங்கள் பட்டியலிடப்பட்டன.

இவ்விளக்கங்களைப் பார்த்த பிறகு இக்கல்வெட்டு ஆழமான தகவலை உள்ளடக்கியிருக்கிறதென்ற எண்ணம் வலிமை பெற்றது. எனவே இக்கல்வெட்டுச் செய்தியைத் தமிழகக் கல்வெட்டறிஞர்கள் சிலருக்கு அனுப்பி அவர்தம் கருத்துரைகளைக் கேட்டறியலாம் என்ற சிந்தனை பிறந்தது.

திரு. அய்ராவதம் மகாதேவன், முனைவர் இரா. நாகசாமி, முனைவர் மு. து. சம்பத், திரு. நடன காசிநாதன், பேரா. புலவர் செ. இராசு, பேரா. முனைவர் ப. சண்முகம், திரு. அ. அப்துல் மஜீது, முனைவர் நா. மார்க்சிய காந்தி, பேரா. முனைவர் கா. இராசன், திரு. இரா. பூங்குன்றன், திரு. சு. இராசகோபால், திரு. வெ. வேதா சலம், பேரா. இல. தியாகராசன் ஆகிய அறிஞர்கட்குக் கருத்துரை கேட்டு மடல்கள் அனுப்பப்பட்டன.

பொருள் விளக்க அட்டவணை

ஆலம் பகுதி I, பக். 184	காரி பகுதி I, பக். 487	பிச்சு பகுதி II, பக்- 174	பிராந்து பகுதி II, பக். 199
அம்புக்கூடு	ஆவிரை, வாசுதேவன்	பித்து	பருந்து
ஒரு மரம்	இந்திரன்	பித்த நீர்	பிராந்தி-உறுதியின்மை
கலப்பை	அய்யன், கரிய எருது	பைத்தியம்	என்ற பொருள்
நஞ்சு, நீர்	கடையேழு வள்ளல்களில் ஒருவன்		கழிதல்
பாம்பின் நஞ்சு	கண்டங்கத்திரி, கரிக்குருவி		சுழலல்
புன்கு, ஈயம்	கருமை, மிளகு		திரிதல்
மலர்ந்த பூ	கள், கிளி	**அமணி**	நிலையின்மை
மழு, மழை	காக்கை, சனி	**பகுதி I, பக். 89**	மயக்கம்
மஞ்சளும்சுண்ணாம்பும்	தூணி (அளவை)		கவலை
கலந்த நீர்	தொழில் செய்யும் இடம்		தப்பிதம்
மாவிலங்கு	நஞ்சு, காரீயம்		பயங்கொள்ளி
கருப்பு நிறம்	வயிரவன், ஒரு நதி	தெரு	
	வெண்காரம்	வீதி	
	கரு நிறமுடையது	மன்றம்	
	அய்யனார், காரி நாயனார்	மார்க்கம்	
	காரிவள்ளல் குதிரை		
	ஒரு பெண்பால் பெயர் விகுதி		
	ஈயச் சிலை, ஒரு சிவத்தலம்		
	பதினாறு துரோணம்கொண்ட அளவு		
	நீண்ட கருமேகம்		

மையத்தின் வேண்டுகோளை மதித்துப் பேரா. இல. தியாகராசன், திரு. அய்ராவதம் மகாதேவன், முனைவர் நா. மார்க்சிய காந்தி, பேரா. முனைவர் கா. இராசன், பேரா. புலவர் செ. இராசு, திரு. சு. இராசகோபால், முனைவர் மு. து. சம்பத் ஆகிய அறிஞர் கள் தங்களுடைய கருத்து விளக்கங்களை அனுப்பி உதவியுள்ளனர். சிக்கலான கல்வெட்டொன்றின் உட்பொருளை அறிந்து, மக்களுடன் அதைப் பகிர்ந்து கொள்வதில் வரலாறு இதழ் மேற்கொண்ட முயற் சிக்குப் பேரன்புடன் ஒத்துழைப்பு நல்கிக் கருத்து விளக்கங்கள் அனுப் பித் துணை நின்ற அறிஞர் பெருமக்களை வரலாறு இரு கை கூப்பி வணங்கி நன்றி தெரிவித்து மகிழ்கிறது.

இது போன்ற சிக்கலான நிலைகளில் அறிஞர்கள் கூடிக் கலந் துரைப்பதால் தெளிவேற்பட வழியுண்டு. பல விளக்கங்கள் வரினும் அவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து ஒரு முடிவுக்கு வர வாய்ப்பிருக்கிறது. அந்த வகையில் வரலாறு மேற்கொண்ட இந்த முதல் முயற்சிக்குத் தங்களின் பல்வேறு பணிகளுக்கிடையில் ஒத்துழைப்பு நல்கிய அறிஞர் பெருந்தகைகள் பாராட்டிற்கும் தமிழக மக்களின் நன்றிக்கும் உரியவர் கள்.

இக்கல்வெட்டு குறித்து அறிஞர்கள் அனுப்பியுள்ள கருத்துரைகள்

1. பேரா. இல. தியாகராசன், வரலாற்றுத் துறை, அரசினர் கலைக் கல்லூரி, அரியலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

9-3-95

இது புதிரான கல்வெட்டு என்பதில் அய்யமில்லை. 'ஆலங் காரிக்கு' என்பது சிவனைக் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். கல் வெட்டுள்ள பாறை அருகே சிவாலயம் உள்ளதாக எழுதியிருந்தீர்கள். பிற வார்த்தைகள் பற்றிய பொருளைத் தொடர்புபடுத்தி அறிய முடிய வில்லை. பிச்சும் பிராந்தும் அமனி என்பது ஆலங்காரியையே குறிப் பதாகக் கொள்ளலாம். ஆலங்காரி – ஆலமுண்டதால் காரி – கறுப் பான கண்டமுடையவன் என்று கருதலாம் என நினைக்கிறேன். வேறு பிற கருத்துக்கள் இருப்பினும் அறிய விழைகிறேன்.

2. திரு. அய்ராவதம் மகாதேவன், தேசிய ஆய்வர், இந்திய வர லாற்றாய்வுக் குழுமம், 18A, நான்காம் கடல் நோக்குச் சாலை, வால்மீகி நகர், திருவான்மியூர், சென்னை-600 041.

14-3-95

பொருள் விளக்கம்

கறையூர் — ஓர் ஊரின் பெயர்

ஆலங்காரி — ஒருவனின் பெயர் (மாறங்காரி போன்ற பெயர் களை ஒப்பு நோக்குக)

பிச்சு — பைத்தியம் (பித்து >பிச்சு)

பிராந்து — மனக்குழப்பம், தடுமாற்றம் (ப்$_4$ராந்தி என்ற வட மொழிச் சொல்லில் இருந்து பெறப்பட்டது)

அமனி — முடிவு, தீர்வு (கீழே உள்ள குறிப்பைக் காண்க)

கல்வெட்டின் பொருள்

கறையூர் ஆலங்காரிக்கு [ஏற்பட்டிருந்த] பைத்தியமும், மனக் குழப்பமும் [இங்கு இப்பொழுது] தீர்ந்தன.

குறிப்பு

இக்கல்வெட்டில் அமனி என்ற சொல் மட்டுமே கடினமாக உள்ளது. இது ஒரு வடமொழிச் சொல் என்றே தோன்றுகிறது. வட மொழி அகராதிகளில் அமனி என்ற சொல்லுக்குப் 'போகும் வழி' (அம் – ஓர் இடத்தை நோக்கிப் போதல்) என்ற பொருளும், அமனீ என்ற சொல்லுக்கு 'அறியாமை' என்ற பொருளும் தரப்பட்டுள்ளன. (மோனியர் வில்லியம்ஸ் அகராதி, பக். 80). ஆயினும் இப்பொருள்கள் கல்வெட்டு வாசகத்துக்குப் பொருந்தவில்லை. பிராகிருதப் பேரகராதி யில், அமன் என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு நேரான அமண் என்ற பிராகிருதச் சொல்லுக்கு, 'முடிவு, தீர்வு' [அந்த, அவஸான] என்ற பொருள்கள் தரப்பட்டுள்ளன. (பாயிய ஸத்த$_3$ மஹண்ணவோ, பக். 67). இது சமண மத வழக்காறு போலத் தோன்றுகிறது. கல் வெட்டிலுள்ள அமனி என்ற சொல்லை இச்சொல்லுடன் தொடர்பு கொண்டது என்று எடுத்துக்கொண்டால் கல்வெட்டு வாசகத்திற்கு மேற்கூறியபடி ஒருவாறாகப் பொருள் காணமுடிகிறது. இது மேலும் ஆய்வுக்குரியது.

3. முனைவர் நா. மார்க்சிய காந்தி, உதவி கண்காணிப்பு கல்வெட் டாய்வாளர், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, தரமணி, சென்னை-600 113.

16–3–95

மலையடிப்பட்டிக் கல்வெட்டு வாசகம் தொடர்பாகப் பலமுறை சிந்தித்தேன். பலவற்றையும் பார்த்தேன். இருப்பினும் அந்த வரிக் குத் திருப்திகரமான பொருளினை அளிக்க முடியவில்லை. எனினும் சில கருத்துக்கள் மனதில் தோன்றின.

பிச்சு, பிராந்து என்ற இரு சொற்களுமே பைத்தியத்தைக் குறிக் கும் சொற்கள். பைத்தியத்தில் பல்வேறு வகைகள் உள்ளன. (பார்க்க: சரபேந்திர வைத்திய முறைகள், சரசுவதி மகால் வெளியீடு) அவற்றுள் இரண்டை இச்சொற்கள் குறிப்பன ஆகலாம்.

இதனோடு தொடர்ந்த சிந்தனை. பொதுவாக சமண முனிவர்கள் அஞ்சி வருவோர்க்குப் புகலிடம் தருவோராய் விளங்கினர் என்பது 'அஞ்சினான் புகலிடம்', 'ஆஸ்ரமம்' போன்ற கல்வெட்டுகள் பலவற்றால் பெறப்படுகின்றன. மேலும் பசித்தோர்க்கு உணவும் நோயுற்றோர்க்கு மருத்துவமும் கல்விக்கெனப் பள்ளிகளும் அமைத்துச் சமுதாயப் பணி புரிந்தோர் சமணர்கள். அவ்வகையில் இதுவும் மனநோயாளிகளை அமைதியாகத் தூங்கச் செய்யும் ஆதுர சாலையாக விளங்கியிருக்குமோ என்று தோன்றுகிறது. கறையூரைச் சேர்ந்த ஆலங்காரியின் கொடையில் இச்சமுதாயத் தொண்டு நிறைவேறியதைக் குறிப்பதாக இக்கல்வெட்டுக்குப் பொருள் கொள்ளலாமோ என்று கருதுகிறேன்.

மிகச் சரியாக அந்தச் சொற்றொடருக்குப் பொருள் இதுதான் என்று உறுதியாகக் கூற முடியாவிடினும் மேலெழுதிய கருத்துக்கள் தொடர்புடையன என்று மட்டும் மனம் கூறுகின்றது.

4. பேரா. முனைவர் கா. இராசன், பேராசிரியர், தொல்லியல் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613 005.

22–3–95

மலையடிப்பட்டிக் கல்வெட்டுத் தொடர்பாகத் தாங்கள் அளித்துள்ள விளக்கத்திற்கு மேலான விளக்கம் தற்போதைக்கு அளிக்க இயலவில்லை. பொருள் கிடைப்பின் எழுதுகிகிறன்.

5. பேரா. புலவர் செ. இராசு, தலைவர், கல்வெட்டியல் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613 005.

24–3–95

தாங்கள் அனுப்பிய குறிப்புப் பார்த்தேன். மிகவும் அரிய கண்டுபிடிப்பு. நல்ல, புதிய அமைப்பிலான செய்தி. தாங்கள் எழுதியதற்கு மேல் என்னால் வேறு எதுவும் யூகிக்க முடியவில்லை. தாங்கள் எழுதியதே சரியானது.

6. திரு. சு. இராசகோபால், கல்வெட்டாய்வாளர், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, தரமணி, சென்னை-600 113.

28–3–95

கறையூர் ஆலங்காரிக்குப் பிச்சும் பிராந்தும் அமனி என்ற பாடம் சரியாக உள்ளது. ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள் பார்க்கும்போது

கறையூர்-விஷ ஊர், ஆலங்காரி - விஷப்பெண் என்ற பொருள்களும் கிடைக்கின்றன. எனவே, விஷ ஊரைச் சேர்ந்த விஷப்பெண்ணுக்குப் பித்தமும் மனநிலையின்மையுமே இருப்பிடம் அல்லது மன்றம் என்று பொருள் கிடைக்கிறது. நிலையில்லாமல் ஆசையுடனும் (பித்து) அச்சத்துடனும் கலவரத்துடன் இருந்தால் அது விஷப்பெண்ணுக்குக் கூத்தாட்டமாகிவிடும். எனவே மனத்தெளிவும் ஆசையின்மையும் மனக்கலக்கமும் இன்றி இருங்கள் என்று ஒரு சித்தர் கூறுவது போல உள்ளது. பித்துப் பிடித்து அலைந்தால், ஆசைகொண்டு அலைந் தால் அழிவு நிச்சயம் என்கிறார். திருவெள்ளறை ஸ்வஸ்திகக் கிணற்றில் உள்ள கல்வெட்டில் மூப்பு வந்தடையும் முன் 'உண்டேல் உண்டு மிக்கது உலகறிய வைய்மின்னேய்' என்று எப்படி ஒரு சித்தர் (கிணற்றோடு தொடர்பில்லாவிட்டாலும்) அறிவுரை வழங்குகிறாரோ அதே போல இங்கும் ஒரு சித்தர் அறிவுரை தருகிறார் என்று கொள்ள லாம்.

7. முனைவர் மு. து. சம்பத், தலைமைக் கல்வெட்டாய்வாளர், இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறை, மைசூர்-570 005.

23–4–95

கறையூர் ஆலங்காரிக்குப் பிச்சும் பிராந்தும் ஏற்பட்டுள்ள நிலை இவ்விடத்தில் தீர்ந்ததாகக் கூறலாம். இக்கல்வெட்டெழுத்தின் வரி வடிவம் ஏழு அல்லது எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

மலையடிப்பட்டிக் கல்வெட்டு கல்வெட்டறிஞர்களிடமிருந்து பல் வேறுபட்ட கருத்து விளக்கங்களைப் பெற்றுத்தந்துள்ளது. இவற்றுள் எது மிகப் பொருத்தமாக அமையுமென்பதை அறிஞர்கள் முடிவு காணல் தகும். தமிழகத்தின் பல பகுதிகளில் இதுபோல் பொருள் விளங்கிக் கொள்ள முடியாத வகையிலமைந்த பல கல்வெட்டுகள் கிடைக்கின்றன. அவற்றுள் ஒன்று திருக்கோளக்குடியில் கள ஆய்வு நடத்தியபோது அங்குள்ள மண்டபமொன்றிலிருந்து மைய ஆய்வர்களால் படியெடுக் கப்பட்டு இவ்விதழில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு குறித் தும் மலையடிப்பட்டிக் கல்வெட்டிற்கான கருத்து விளக்கங்கள் குறித் தும் அறிஞர் பெருமக்களின் கருத்துரைகள் விழைந்து வரவேற்கப்படு கின்றன.

5. மாமல்லைக் கடற்கரையில் கண்டெடுத்த கலைச்செல்வம்

கூரம் திருவாழி நரசிம்மன்

இந்தியத் துணைக்கண்டத்தின் சரித்திரத்தில் குறிப்பாகத் தமிழகத்தின் கட்டடக்கலை வரலாற்றில், நல்லாட்சியாலும் காலத்தால் அழியாக் கலைச் செல்வங்களைக் கல்லில் வடித்தமையாலும் தமக்கெனத் தனி இடம் பெற்றவர்கள் பல்லவ மாமன்னர்கள். இவர்களின் தோற்றம் பாரசீகத்தில் ஏற்பட்டதென்றும் ஆந்திரத்தை ஆண்டவர்களே தங்கள் அரசியல் வாழ்க்கைக்காகத் தமிழகம் நோக்கி வந்தனர் என்றும் (A.R . S. C. Madras — 1918-19, pp. 20, 21) இரு மாறுபட்ட கருத்துக்கள் சரித்திர வல்லுநர்களிடையே நிலவுகின்றன.

பல்லவர்களின் நல்லாட்சி தமிழகத்தில் கி. பி. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து கி. பி. பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை நிலவியது. சிம்ம விஷ்ணுவினால் இவ்வாட்சி அடிகோலப்பட்டு, அவர் மகன் மகேந்திரவர்மன், அவர் மகன் முதலாம் நரசிம்மவர்மன் ஆகியோரால் விரிவாக்கப்பட்டுப் பின் இரண்டாம் நரசிம்மவர்மனால் நிலை நிறுத்தப்பட்டு, நிருபதுங்கன், அபராசிதன் மற்றும் கம்பவர்மன் வரை தமிழகத்தில் தொடர்ந்து நடைபெற்றது.

காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த முதலாம் நரசிம்மவர்மன் தம்மாட்சியை விரிவுபடுத்தவும் குறிப்பாகக் கடல் கடந்து வாணிபத்தைப் பெருக்கவும் மாமல்லபுரத்தைத் தமது முக்கியத் துறைமுகப் பட்டினமாகவும் கல்வி, கலாச்சாரக் கலைக் களஞ்சியமாகவும் மாற்றினார். இத்துறைமுகப் பட்டினம் (குறுக்கையளவு 12° 37' மற்றும் தீர்க்காம்ச ரேகை 80° 12') வங்காள விரிகுடாவின் கரையில் தமிழகத்தில் செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்திலுள்ளது. இத்துறைமுகப் பட்டினம் மாமல்லன் முதலாம் நரசிம்மவர்மனால் (கி. பி. 630-668) நிறுவப்பட்டதால் மாமல்லபுரம் என்றும் வைணவ ஆழ்வார்களால் கடல் மல்லை என்றும் அழைக்கப் பெற்று வந்துள்ளது.

மாமல்லபுரம் பல்லவர் காலத்தில் மிக முக்கியமானதொரு துறைமுகமாக உள்நாட்டவர்க்கும் வெளிநாட்டவர்க்கும் பயன்பட்டதோடன்றி, சீன மற்றும் தொலைக் கிழக்காசிய நாடுகளுடன் கலை, கலாச்சாரப் பரிமாற்றத்திற்கு முகப்பாகவும் முத்தாய்ப்பாகவும் விளங்கியதென்பது சரித்திரம் கண்ட உண்மை.

தலைநகர் காஞ்சிக்குப் பின் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்த இத்துறைமுகப் பட்டினத்தில், பல்லவ மன்னர்கள் குறிப்பாக முதலாம் நரசிம்மவர்மன், மிகவும் கடினமான குன்று போன்ற பாறைகளைக் குடைந்து, காலத்தால் அழியாத கலைப் பொக்கிஷங்களைக் காண் போர் வியக்கும் வண்ணம் கல்லில் வடித்தார். கி. பி. எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆட்சி செய்த இரண்டாம் நரசிம்மவர்மன், (கி. பி. 695-728) இராஜசிம்மன் எனும் பட்டப் பெயர் கொண்ட வர், தம் முன்னோர்களின் கலையார்வத்தைத் தன்னூடே நிறுத்தி வங்கக் கடலின் விளிம்பில் இரு கோயில்களைக் கட்டினார். அவை கடற்கரைக் கோயில்கள் என அழைக்கப்பட்டுக் காலத்தைக் கடந்து இராஜசிம்மனின் கலை மாட்சியைப் பறைசாற்றுகின்றன. இவ்விதம் குடைவரைக் கோயில்கள் மற்றும் செப்பனிடப்பட்ட பாறைகளால் கட்டப்பட்ட கோயில்கள் தமிழகத்தில் உருவாக்கப்பட்டன.

இக்கடற்கரைக் கோயில் வளாகத்தின் வடக்கு மற்றும் வடமேற்குப் பகுதிகள் மணல் மேட்டால் மூடப்பட்டிருந்தன. இம்மணல் மேட்டை அகற்றும் பணி இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையின் சென் னைப் பிரிவால் 1990-91இல் தொடங்கப்பட்டது. பணியின் தொடக் கத்திலேயே சில சிற்பங்கள் மணலடியிலிருந்து கிடைத்த காரணத்தால், இப்பணி ஓர் அகழாய்வுப் பணியாக கவனத்தோடு செயற்படுத்தப்பட் டது. இவ்வாராய்ச்சியின் விளைவு மிகவும் பயனுள்ளதாகவும் பல அரிய பல்லவக் கலைப் பொருட்களை உலகிற்கு மீட்டுத் தருவதாகவும் பல்லவ சரித்திரத்திற்கோர் புதிய திருப்பு முனையாகவும் அமைந்த தென்றால் மிகையாகாது.

கடற்கரைக் கோயிலின் வடக்கு மற்றும் வடமேற்குத் திசைகளில் கோயிலின் திருமதிலையொட்டி நீள்வட்டமான நான்கு படிகளைக் கொண்ட கற்களாலான கட்டடம் தென்பட்டது. இக்கட்டடத்தின் தென் பகுதி கோயிலின் வட திருமதிலைத் தொட்டு நிற்கிறது. இதன் இரு சுவர்கள் இணைகோடுகள் போல வடக்கு மற்றும் வடமேற்காகச் செல்கின்றன. இதன் இருபுறமும் நன்கு செதுக்கப்பட்ட பாறையினா லான நான்கு படிகள் உள்ளன. இக்கண்டெடுப்பின் மூலம் கடற்கரைக் கோயிலின் திருமதில் இக்கட்டடம் கட்டியதற்குப் பின்புதான் எழுப்பப் பட்டதென்ற உண்மை தெரியவந்துள்ளது. இக்கட்டடத்தையொட்டி யுள்ள திருமதிலின் தாங்குதளப் பகுதியில் முப்பட்டைக் குமுதத்தை அடுத்துச் செதுக்கப்பட்டுள்ள யாளி வரி தன் நிலையிலிருந்து சுமார் ஒரு மீட்டர் உயரத்திற்கு மேல்நோக்கிச் சென்று, இக்கட்டட அமைப் பைத் தாண்டிப் பின் மறுபடியும் தன் நிலைக்கு வருவதைக் காணலாம். எனவே அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட நீள்வட்டமான இக்கட்டடம், திருமதிலைக் காட்டிலும் தொன்மையானதென்பதை உணரமுடிகின்

றது. இவ்வகழ்வில் மகா வராகர் சிற்பம், ஒரு சிறிய கோயில், இராஜசிம்மனின் கல்வெட்டுகள் மற்றும் பண்டைய கிணறு போன்றவை கிடைத்தன.

மகா வராகர் சிற்பம், கடற்கரைக் கோயிலின் வடதிசைத் திரு மதிலை ஒட்டிய பாறையொன்றில் செதுக்கப்பட்டுள்ளது. இது பிற்காலத்தில் கடப்பாறையால் உடைக்கப்பட்டதென்ற உண்மை சிற்பத்தின் பல பாகங்களில் காணப்படும் கடப்பாறையின் முகப்புத் தழும்புகளால் தெரியவருகிறது. நீள்வட்ட வடிவத்தில் அமைந்துள்ள கட்டட அமைப்பிற்கு அதன் தென்புறத்தே சுவரோ அல்லது படிக்கட்டு களோ இல்லை. தெற்கு வடக்காக இணை கோடுகளாகச் செல்லும் சுவர்கள் வட மதிலில் இருந்து 3.5 மீ. வடக்கு நோக்கிச் சென்று, பின் சம நோக்காக வளைகின்றன. அங்கு அவற்றின் மேற்பரப்பில் காணப் படும் துளைகள், மரத்தாலான இரு பெரும் கதவுகள் முன்னர் இங்குப் பொருத்தப்பட்டிருக்கலாம் என்பதை அறிவிக்கின்றன. இதனால் இக்கட்டடத்திற்கு வாயில் வடபுறமிருந்ததென ஊகிக்கலாம். இக் கூற்று ஏற்கவல்லது என்பதற்குச் சான்றுகளாக, இவ்வாயிலுக்குப் பின் பண்டைய கிணறு, கற்கோயில் மற்றும் மகா வராகர் என முறையே வடக்கிருந்து தெற்காகச் சிற்ப மற்றும் கட்டட அமைவுகள் காணப்படுகின்றன. இவை கோயில் ஆகம நூல்களையொட்டி அமைந்துள்ளதைக் காணலாம்.

மேற்கூறிய கட்டடத்தின் வடதிசைச் சுவரின் மேற்பகுதியிலுள்ள மேல்நோக்குத் தாமரை வடிவங் கொண்ட உருவரையின் கீழ்ப் பல்லவ கிரந்த எழுத்துக்களில் கல்வெட்டு உள்ளது. இதன் பாடம், 'ஸ்ரீ இராஜசிம்ம இஹ க்ஷத்ரியசிம்ம இதி விஸ்ருத புண்யகீர்த்தி ஜீயான் மகேஸ்வரர்' எனக் கூறுகிறது. இதைப் பொறித்த பேரரசனை இரண் டாம் நரசிம்மவர்மனாகக் கொள்ளலாம்.

சிதைந்த மகா வராகர் சிற்பத்தின் பல பாகங்கள் உதிரியாக அகழாய்வில் கிடைக்கப்பெற்று, அவை உரியவாறு ஒன்றிணைக்கப் பட்டன. இச்சிற்பம் செதுக்கப்பட்ட பாறை, கடற்கரைக் கோயிலின் திருமதில் சுவருக்குக் கீழ் செல்கிறது. இதன் மீதுதான் படுத்திருக்கும் நிலையிலமைந்த மகா விஷ்ணுவின் (அபிசாரிகா வகை) மிகப் பெரிய சிற்பமும் பலித்தளமும் செதுக்கப்பட்டுள்ளன என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். இச்சிற்பம் முதலாம் நரசிம்மவர்மனால் செதுக்கப் பட்டதென்பதற்குச் சரித்திரச் சான்றுகள் உள. மேலும் கட்டடக் கலையின் தலை சிறந்த கடற்கரைக் கோயில்கூட ஒரு சிறிய குன்றின் மேல்தான் கட்டப்பட்டுள்ளதென்ற உண்மை, அதன் கீழ்த் திசையில் செய்த அகழாய்வால் தெரியவந்துள்ளது.

1.20 மீ. உயரமுள்ள மகா வராகர் சிற்பம் பூமியைத் தோண்டும் வண்ணம், கடல் நோக்கிக் கம்பீரமாய் நிற்கிறது. படுகைப் பாறையில் செதுக்கப்பட்டிருப்பினும் முன் கூறியது போல் அது பல துண்டுகளாக வேண்டுமென்றே உடைக்கப்பட்டுள்ளது. அகழ்வின் போது சிற்பத்தின் தளமும் முன்கால் மற்றும் வயிற்றின் கீழ்ப்பகுதியுமே சிதைவின்றி எஞ்சி நின்றதைக் காண முடிந்தது. இதைக் கண்ணுற்ற சில தொல்லியல் அறிஞர்கள் அய்ராவதம் (இந்திரனின் யானை), நந்தி என்றெல்லாம் இவ்வடிவத்தை அடையாளம் கண்டபோது இக்கட்டுரையாசிரியர் அதை மறுத்து, இச்சிற்பம் மகாவராகர்தான் என்று சான்றுகளுடன் கூறினார். மேலும் ஆராய்ச்சி முடிவடையும் முன்பே தாம்பரம் கிறித்துவக் கல்லூரி தத்துவப் பேராசிரியர் ஒருவர் இதை நந்தி எனக் கூறியதோடன்றி இச்சிற்பம் சிவனின் திருப்பாதத்தைக் காண பூமியைத் தோண்டுவதாகவும் கூறி, இதற்குப் புதியதோர் திருப்பத்தைக் கொடுத்தார். இக்கூற்று முற்றிலும் தவறானதென்பதை ஆராய்ச்சியின் முடிவு அறிவுறுத்தியது. இச்சிற்பத்தின் செவ்வக வடிவமுள்ள தளத்தின் மூன்று பக்கங்களிலும் 'ஸ்ரீ இராஜசிம்ம', 'ஸ்ரீ ரணஜெய', 'ஸ்ரீ பர' மற்றும் 'சித்ர கார்முக' எனும் இராசசிம்மனின் நான்கு விருதுப் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் பல்லவ கிரந்தத்தில் உள்ளன.

வராகத்தின் வயிற்றுப் பகுதியில் கொடி, அலை மற்றும் தாமரை போன்ற வடிவங்கள் செதுக்கியுள்ளதன் மூலம், இச்சிற்பம் புராணங்களில் கூறப்படும் விஷ்ணுவின் தசாவதார மூர்த்திகளில் ஒன்றான வராக மூர்த்தியே என்பது விளங்குகிறது. இராஜசிம்மனின் விருதுப் பெயர்கள் இதில் பொறிக்கப்பட்டிருப்பினும், இச்சிற்பம் அவரது முன்னோரான நரசிம்மவர்மனால் செதுக்கப்பட்டிருக்குமென்று கூறுவது சாலப் பொருத்தமாகும். ஏனெனில் அவரது சம காலத்திய வடமொழிப் புலவர் தண்டி தம் படைப்பான காவ்யா தர்சம் எனும் நூலில் இச்சிற்பத்தைப்பற்றிக் கூறுகையில், 'மஹி மஹா வராஹேண லோகிதா துத்ரு தோ ததே:' (காவ்யா தர்சம், பரிச்சேதம்-1, சுலோகம் - 74) என்று இதன் அருமை பெருமையை விளக்குகிறார். மேலும் முதலாம் நரசிம்மவர்மன் ஓர் உண்மையான விஷ்ணு பக்தர். அவர் இம்மாமல்லபுரத்தில் ஒரு குகைக்கோயிலைக் குடைந்து, அதன் கருவறையில் பூவராகர் பூதேவியைத் தன் வலத் தொடையில் நிறுத்தி நின்ற கோலத்தில் இருப்பது போல் சிற்பத்தைச் செதுக்கியும் குகையின் மண்டபச் சுவரில் சிற்பங்களைப் படைத்தும் உள்ளதை நாம் இன்றும் காணலாம். ஆனால் அவ்வழி வந்த இரண்டாம் நரசிம்ம வர்மனோ ஒரு தீவிர சிவபக்தர். எனவே இச்சிற்பத்தை முன்னவர் தான் கல்லில் வடித்திருப்பாரென்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை.

வராகச்சிற்பத்திற்குச் சுமார் 1 மீ. வடகிழக்கில் சிறிய அளவிலான கற்கோயிலொன்று கண்டுபிடிக்கப்பட்டது. இக்கோயில் மாமல்லபுரத்தி லுள்ள மற்ற கோயில்களைக் காட்டிலும் தனிச் சிறப்புப் பெற்றுள்ளது. இது குடைவரைக் கோயிலோ அல்லது கற்களால் கட்டப்பட்டதோ அல்ல. இதன் அதிட்டானம் மட்டும் படுகைப் பாறையில் செதுக்கப் பட்டுள்ளது. உபானம் எண்முகமாகவும் அதிட்டானம் வட்ட வடிவ மாகவும் செதுக்கப்பட்டுள்ளன. அதிட்டானத்தில் வழக்கமாய் இடம் பெறும் ஜகதியோ அல்லது பட்டிகையோ இங்கு இடம் பெற வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் இது தாமரைத் தளத் துடன் முப்பட்டைக் குமுதம் கொண்ட பாதபந்தம் போல் விளங்கு கிறது.

அதிட்டான மேற்பரப்பின் நான்கு திசைகளிலும் கணங்களின் சிற்பங்களைக் காணலாம். இக்கோயிலின் பிற பகுதிகள் தனித் தனிப் பாறைகளால் செய்யப்பட்டுள்ளன. இக்கோயிலின் சுவர்ப் பகுதி உருளை வடிவத்திலுள்ளது. அதிட்டானத்திற்கு மேலமைந்த அனைத்துப் பகுதிகளும் விழுந்துவிட்டபோதும் கலசத்தைத் தவிர எஞ்சிய பகுதிகள், அண்மையிலேயே கண்டெடுக்கப்பட்டு, உரிய முறையில் அதனதன் இடத்தில் மீண்டும் வைக்கப்பட்டுக் கோயில் முழு வடிவம் பெற்றது. இக்கோயிலுக்கு வாயில் கீழ்த்திசையி லுள்ளது. இதன் கருவறையில் பின் சுவரையொட்டி நந்தியின் மேல் சாய்ந்த நிலையிலுள்ள சிவபெருமானின் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. இது இன்றுவரை பல்லவர் காலத்துக் கோயில்கள் எதிலும் கண்டிராத தனிச் சிறப்பாகும். வழக்கமாக அக்காலத்துக் கோயில்களில் கருவறை உட்சுவரில் கந்தன் தன் தாயான உமைக்கும் தந்தை சிவபெருமானுக் கும் நடுவில் அமர்ந்திருக்கும் நிலையிலான சுண்ணாம்புக் கலவை யிலான சுவர்ச் சித்திரத்தைத்தான் காணலாம். எனவே முன் கூறியது போல் இக்கோயில் மாமல்லபுரத்திலுள்ள எஞ்சிய பல்லவர் கோயில் களிலிருந்து, தன் கட்டுமானத்திலும் நிமிர்வு நிலையிலும் கருவறை யின் உட்புறத் தோற்றத்திலும் முற்றிலும் மாறுபட்டுத் தன் தனித் தன்மையைக் காட்டுகிறது எனலாம்.

மேற்கூறிய காரணங்களால் இக்கோயில் பல்லவ மன்னர் இராஜ சிம்மனின் ஆட்சிக்கு முன்பே கட்டப்பட்டிருக்குமென ஆராய்ச்சியாளர் களை எண்ணத் தூண்டுகிறது. மேலும் இக்கோயில் இதன் அண்மை யில் இதே படுகைப் பாறையின் மேல் செதுக்கப்பட்ட மகா வராகர் மற்றும் தலசயன விஷ்ணுவின் காலத்தைச் சேர்ந்ததாக இருக்கக் கூடுமெனவும் இதைக் கட்டியவர் முதலாம் நரசிம்மவர்மனாக இருக்கு மென்றும் ஆராய்ச்சியில் புலனாகிறது.

இக்கோயில் விமானத்தின் கழுத்துப் பகுதி திராவிட விமானங்களின் வடிவமைப்பான எண் முகமோ அல்லது ஐந்து முகங்களைக் கொண்டோ இல்லாமல் வட்ட வடிவமாக வேசர வகையாக உள்ளது. இதைச் சில வல்லுநர்கள் பௌத்தத் தூபம் என்கின்றனர். இவ்வாதம் ஏற்கத் தக்கதல்ல. இக்கட்டட அமைப்பின் அண்மையிலோ அல்லது மாமல்லையிலோ இதுவரை பௌத்தத் தூபம் எதுவும் கண்டெடுக்கப் படவில்லை. இக்கோயிலின் வெளிப்பரப்பில் உள்ள கூடுகள், மனித முகங்கள் இதன் நான்கு திசைகளிலும் உட்கார்ந்த நிலையில் காணப் படும் கணங்கள் மற்றும் இதன் கருவறையில் நந்தியின் மேல் சாய்ந்த கோலத்தில் காணப்படும் சிவபெருமான் முதலிய சிற்பங்களைக் கருத் தில் கொண்டால் இது ஒரு கோயில் என்பதில் குழப்பமேற்பட வழி யில்லை. எனினும் பௌத்தக் கலையின் ஈர்ப்பினை இங்குள்ள கட்டடக் கலையில் நாம் காண முடிவது உண்மைதான்.

அகழாய்வில் கண்டறியப்பட்ட பண்டைய கிணறு இக்கோயிலுக்கு வடக்கே ஏறத்தாழ இரண்டு மீட்டர் தொலைவில் முன் சொல்லப்பட்ட நீள்வட்ட வடிவம் கொண்ட கட்டட அமைவிற்குள்ளாகவே உள்ளது. கைப்பிடிச் சுவர் ஏதுமின்றிச் செப்பனிடப்பட்ட பாறையினாலான தரை யின் நடுவே தோண்டப்பட்டுள்ள இக்கிணற்றில் ஒரு மீட்டர் அளவிற்கு மணலை வெளியேற்றியதும் சுவை மிக்கக் குடிநீர் கிடைத்தது. இதன் கட்டுமானம் நன்கு செதுக்கப்பட்ட இரு பாறை வளையங்களினால் அமைக்கப்பட்டுள்ளது. முதற் பாறை வளையத்தின் கிழக்குப் பகுதியில் ஒரு நீண்ட செவ்வக வடிவமைப்பு கொண்ட பலகை செய்யப்பட்டு, அதில் சாய்ந்த நிலையில் ஒரு தேவதையும் அதன் இருபுறமும் பணிப் பெண்டிரும் செதுக்கப்பட்டுள்ளனர். இத்தேவதை கங்கையாக இருக்கலாம். இதுபோன்ற பண்டைய கிணறு இன்றுவரை எந்தப் பல்லவக் கோயிலின் உட்பகுதியிலும் கிடைக்கவில்லை என்பது குறிப் பிடத்தக்கதாகும்.

தற்செயலாகத் தொடங்கிய இவ்வகழ்வாராய்ச்சி பல பல்லவக் கலைச் செல்வங்களை மண்ணிலிருந்து மீட்டு வெளியுலகத்திற்குக் கொண்டு வந்ததோடன்றி, மேலும் பல ஆராய்ச்சிகளுக்கு வித்திட்டுள் ளது. இது பல்லவக் கலை வரலாற்றின் மேம்பாடுகளை மேலும் உணரவைக்குமென்பது திண்ணம். இம்முயற்சி ஒரு தொடக்கமேயன்றி முடிவாகாது. புதையுண்ட உண்மைகளை இனி வரும் ஆராய்ச்சிகள் மேலும் புலப்படுத்தும்.

6. மலையடிப்பட்டிக் குடைவரைகளும் கல்வெட்டுகளும்

ம. ஜான்சி, மு. நளினி, இரா. கலைக்கோவன்

புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் கிள்ளுக்கோட்டை சாலையில் கீரனூரிலிருந்து ஏறத்தாழப் பதினேழு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது மலையடிப்பட்டி. பொருளாதாரப் பின்னடைவுள்ள இச்சிற்றூரின் தென்கிழக்கில் நெடுகப் படுத்த நிலையில் அதிக உயர மில்லாத குன்றடுக்கொன்று பார்வையில் படுகிறது. இவ்வடுக்கின் முகப்புக் குன்றில் வடக்குப் பார்வையாக இரண்டு குடைவரைகள் குடையப்பட்டுள்ளன. முதலில் பெருமாள் குடைவரையும் அடுத்து அதன் கிழக்கே சிவபெருமானுக்கான குடைவரையும் காணப்படு கின்றன.[1]

பெருமாள் குடைவரை

பெருமாள் குடைவரையின் முன்னால் வட பார்வையாகக் கோபுர மும் அதையொட்டி மேற்கில் அம்மன் திருமுன்னும் கிழக்கில் மடப் பள்ளியும் உள்ளன. கோபுரத்தின் தொடர்ச்சியாக இருபுறமும் விரியும் மதிற்சுவர் கிழக்கிலும் மேற்கிலும் நீண்டு குன்றில் முட்டி முடிகிறது. இக்கோபுரமும் இதன் வளர்ச்சியாய்ப் பக்கங்களில் நீளும் மதிலும் பெருமாள் கோயிலைச் சிவன் கோயில் வளாகத்திலிருந்து முற்றிலு மாய்ப் பிரித்து விடுகின்றன.[2]

கோபுரத்தை ஒட்டிய இடப்புற மதிலின் வெளிப்புறத்தே கோட்ட மொன்று அமைத்துப் பிள்ளையாரை இருத்தியுள்ளார்கள். வட பார்வை யாக, லலித அமர்வில் இருக்கும் பிள்ளையாரின் பின் கைகளில் கொம்பும் கரும்புத் தோகையும். வல முன் கையில் மோதகம். இட முன் கை தொடை மீது இருத்தப்பட்டுள்ளது. பட்டையான கழுத் தட்டிகையும் கை வளைகளும் கங்கணங்களும் முப்புரிநூலும் பிள்ளை யார் திருமேனியை அலங்கரிக்கத் துதிக்கை வலம்புரியாகச் சுருண் டுள்ளது.

கோபுரம்

துணைத் தளமும் பாதபந்தத் தாங்குதளமும் கீழ் நிலைகளாக அமையக் கம்புடன் தொடங்கும் கோபுரச் சுவர்ப் பகுதியை நான்முக அரைத்தூண்கள் அழகு செய்கின்றன. பாதபந்தத் தாங்குதளத்தின் கண்டப் பகுதியிலுள்ள தூணடிகளில் (பாதம்) சிற்றுருவச் சிற்பங்கள். சுவர்த் தூண்கள் உரிய மேலுறுப்புகளுடன் விரிகோணப் போதிகை களை மட்டும் கொண்டு அவற்றின் உதவியோடு உத்திரம் தாங்குகின்

கின்றன. உத்திரத்தையடுத்து வாஜனமும் அதன் மேலடுக்காய்ப் பூத வரி திகழும் வலபியும் இருக்க, நான்கு புறமும் பக்கத்திற்கு நான்கென ஆழமற்ற கூடுகள் கொண்ட கபோதம் கூரையின் வெளியிழுப்பாய் வளைந்து இறங்குகிறது. கபோத இறக்கத்தின் விளிம்பில் வட்டங்கள் காட்டப்பட்டுள்ளன. கபோதத்தின் மேல் பூமி தேசம், திருப்பங்களில் மகரத் தலைகளுடன் விளங்குகிறது. அடி முதல் இதுவரை கருங் கல்லால் செய்யப்பட்டிருக்கும் கோபுரத்தின் மேல்தளப் பகுதி காலப் போக்கில் அழிந்தொழிந்தது போலும். கோபுரத் தென்முக வலபியில் மட்டும் வாயிலுக்கு மேலே பூதவரிக்குப் பதிலாக மலரிதழ்கள் காட்டப் பட்டுள்ளன.

இடைவெளி

கோபுர வாயில் வழியே உள் நுழைவாரைக் கிழக்கிலும் மேற்கிலும் மதிற்சுவர்களும் தெற்கில் குடைவரையும் வரவேற்கின்றன. கோபுர வாயிலுக்கும் குடைவரைப் பகுதிக்கும் இடையிலுள்ள மணற்பரப்பில் வாயிலையடுத்து அரைத் தாமரையமர்வில் (அர்த்த பத்மாசனம்) கமல வல்லித் தாயார் காட்சி தருகிறார்.[3] வடக்குப் பார்வையாக அமர்ந் திருக்கும் இவரின் முன் கைகள் காப்பும் அருளும் காட்டப் பின் கைகள் தாமரை மலர்களைக் கொண்டுள்ளன. அணியக்கூடிய இடங்களில் அளவான நகைகள் அணிந்து கரண்ட மகுடத்துடன் காட்சி தரும் அம்மை கோபுரக் காலத்தவரெனலாம்.

இவரையடுத்துக் கல்லாலான இந்திரகாந்த விளக்குத் தூண். சதுர மேடையில் எழும் இதன் கீழ்ப்பகுதியைச் சதுரமாக்கி அதன் நாற் புறமும் சிற்பங்கள் காட்டியுள்ளனர். மேற்கில் சக்கரமும் கிழக்கில் சங்கும் வடக்கில் அநுமாரும் தெற்கில் கருடனும் செதுக்கப் பட்டுள்ளனர். விளக்குத் தூணின் மேற்பகுதியில் காணப்படும் எழுத்துப் பொறிப்புகள் படிக்குமாறு இல்லை. இவ்விளக்குத் தூணுக்குப் பின்னால் தென் பார்வையாகக் கருடன். இவரும் அரைத் தாமரை யமர்வில், விரித்த சிறகுகளும் கூப்பிய கைகளுமாய்ப், பனையோலைக் குண்டலங்களும் கங்கணம், வளைகள், மோதிரம் எனக் கையணிகளும் கொண்டு, கரண்ட மகுடம் பூண்டு, கோபுரக் காலத்தவராய்க் காட்சி தருகிறார்.[4] இவருக்கும் தூணுக்கும் இடையில் பலித்தளம்.

கோபுரத்தின் மேற்குப் பகுதியில் மதிலையொட்டித் தாயார் திரு முன் காணப்படுகிறது. மிகப் பிற்காலத்துக் கட்டடமாதலால் முறை யான தாங்குதள அடுக்குகள் இல்லை. சுவர்களில் நீண்ட நான்முகத் தூண்கள். கூரையுறுப்புகளாக வாஜனமும் வலபியும் மேலே ஆழமற்ற கூடுகளுடன் கபோதமும் காட்டப்பட்டுள்ளன. கபோதத்திற்கு மேலே பூமி தேசத்திற்கான இட ஒதுக்கீடும் வேதிகையும் காணப்படுகின்றன.

கோபுரத்தின் வடகிழக்கிலும் கிழக்கிலுமாய் மதிலையே தன் வெளிப்புறச் சுவராய்க் கொண்டு மண்டபமொன்று அமைந்துள்ளது. இதன் வடபுறம், மடப்பள்ளியாகத் தனி வாயில் கொண்டு அமையத் தென் பகுதி ஆழ்வார்கள் திருமுன்னாக்கப்பட்டுள்ளது. மேற்குப் பார்த்த நிலையில் சுவரையொட்டி நான்கு திருமேனிகள் உள்ளன. வாளும் கேடயமுமாய்த் தோன்றும் முதல் திருமேனியைத் திருமங்கை யாழ்வாராகக் கொள்ளலாம். கூப்பிய கைகளும் வலத் தோளில் சாய்த்த கொடித் தண்டுமாய் அரைத் தாமரையமர்வில் காட்சி தரும் இரண்டாம் திருமேனிக்குரியவர் உடையவர் பெருமான். மூன்றாமவர் அதே அமர்வில் வலக்கை காக்கும் குறிப்பு காட்ட, இடக்கையைத் தொடை மீது அமர்த்தி நீள் செவிகளுடன் காட்சி தருகிறார். இவரை இன்னாரென அடையாளம் காண முடியவில்லை. நான்காவதாக மகிழ்வமர்வில், மகர குண்டலங்களும் கிரீட மகுடமும் கொண்டு இட முன் கையில் கதை பிடித்து, வல முன் கையை எச்சரிக்கைக் குறிப்பில் காட்டிப் பின் கைகளில் சங்கும் சக்கரமும் ஏந்தியவராய் விஷ்வக்சேனர்.[5]

குடைவரை முன் மண்டபம்

நன்றாய்ச் சரிந்த குன்றின் வடபுறத்து அகழப்பட்டிருக்கும் குடைவரையின் முன்னால் மண்டபமொன்று எடுக்கப்பட்டுள்ளது.[6] இதன் துணைத் தளம் கிழக்கில் மிகுதியாகவும் வடபுறத்தேயும் மேற்கிலும் சற்றுக் குறைவாகவும் மண்ணில் புதைந்துள்ளது. வெளித்தெரியும் பகுதி கண்டமும் பெரு வாஜனமும்தான். பெரு வாஜனத்தில் சோழர் கல்வெட்டுகள் வெட்டப்பட்டுள்ளன. வடபுறத்துப் பெரு வாஜனம் ஒரே நிலையில் இல்லாமல் வலப்புறம் சற்று உயர்ந்தும் இடப்புறம் சற்றுத் தாழ்ந்தும் காணப்படுகிறது. துணைத் தளத்தின் மீது கம்பும் அதன் மீது உயரமான நான்முக அரைத்தூண்களுடன் கூடிய சுவரும் அமைந்துள்ளன. தூண்களின் விரிகோணப் போதிகைகள் உத்திரம் தாங்க, மேலே வாஜனம். கபோதம் வானவர் தலைகள் பொருந்திய கூடுகளுடன் கூரையின் வெளியிழுப்பாய்க் காட்சி தருகிறது. கூடுகளின் உச்சியில் சிம்மத் தலைகள். சோழர் காலப் பணியாய் அமைந்துள்ள இம்மண்டபக் கூரையின் மேல் சிமெண்ட்டால் ஆன அண்மைக் காலத் தடுப்புச் சுவர்.

இம்மண்டபத்தின் முன் பகுதியில் மூன்று வாயில்கள் காட்டப்பட்டுள்ளன. நடு வாயில் பெரியது. வல, இடப்புறங்களில் அமைந்துள்ள வாயில்கள் இதன் மூன்றில் ஒரு பங்கே உள்ளன. இம்மூன்று வாயில்களுமே திருநிலைக் கால்கள், கீழ், மேல் நிலைகள், படிகள் கொண்டமைந்துள்ளன. நடு வாயில் வழியே உள் நுழைந்தால் குடைவரையின் முழுக் காட்சியும் கிடைக்கிறது. குடைவரையின்

பக்கச் சுவர்கள், கபோதம், முகப்புக்கு முன்னுள்ள தரை ஆகியவற்றோடு முன்னால் எடுக்கப்பட்டுள்ள சோழர் கால மண்டபத்தின் சுவர்களும் கூரையும் தரையும் முற்றப் பொருந்துமாறு இணைத்துள்ளார்கள். இம்மண்டபத்தின் உட்பகுதி வெறுமையாக உள்ளது.

குடைவரை முகப்பு

முகப்பு, முகமண்டபம், கருவறை என்ற அமைப்பில் குடைவரை வெட்டப்பட்டுள்ளது. கிழக்கு மேற்காக 7.17 மீ. அளவுள்ள முகப்புப் பகுதி, நான்கு நான்முகத் தூண்களால் மூன்று அங்கணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த அங்கணங்கள் பிற குடைவரைகளைப் போல் அல்லாமல் தனி வாயில்களாக்கப்பட்டுள்ளன. நடு அங்கணத்தின் இருபுறமும் உள்ள தூண்கள் முழுத்தூண்களாகவும் கிழக்கு, மேற்கு அங்கணங்களின் பக்கத் தூண்கள் அரைத்தூண்களாகவும் செதுக்கப்பட்டுள்ளன. இந்நான்குமே பின்புலத்தில் நான்முகத் தூண்களாகவும் முன்புறத்தே விலங்கடி கொண்ட விஷ்ணுகாந்தத் தூண்களாகவும் உருவாக்கப்பட்டுள்ளன. முழுத்தூண்களின் கீழே சிம்மங்களும் அரைத்தூண்களின் கீழே யாளிகளும் தாமரைத் தளங்களில் அமர்த்தப்பட்டுள்ளன.[7] சிம்மங்கள் அமர்ந்துள்ள தாமரைத் தளங்கள் செம்மையாகச் செதுக்கப்பட்டிருக்க, யாளித் தளங்கள் நிறைவுறா நிலையிலுள்ளன. நான்குமே பிடரி மயிருடன் ஆண் வடிவங்களாகக் காட்டப்பட்டிருந்தாலும் இரு வகை விலங்குகளுக்கும் இடையே பிடரி மயிரமைப்பில் வேறுபாட்டைக் காட்டியுள்ளனர் சிற்பிகள். திறந்த வாயும் கோரைப் பற்களும் சிறிய செவிகளுமாய்த் தாமரைத் தளத்தில் பக்கப் பார்வையாக அமர்ந்து முகத்தை மட்டுமே வாயிலுக்காய்த் திருப்பிய நிலையில் முன் காலொன்றைத் தூக்கிகொண்டு காட்சி தரும் சிம்மங்கள், வடிவமைப்பில் காஞ்சிபுரத்து வைகுந்தப்பெருமாள் கோயில் சிம்மங்களை நினைவுபடுத்துகின்றன.

யாளி, சிம்மத்தலைகளின் மீது எழும் தூணுடலில் அழகுற வடிவமைக்கப்பட்ட மாலைத் தொங்கலும் வேலைப்பாடுகளுடன் கூடிய அகலமான இடைக்கட்டும் அதன் மேல் தாமரைக்கட்டும் கலசம், தாடி, கும்பம், பாலிகை, பலகை, வீரகண்டம் என்று தொடரும் மேலுறுப்புகளும் கருத்துடன் வடிக்கப்பட்டுள்ளன. வீரகண்டத்திலிருந்து கிளைக்கும் தரங்கப் போதிகைகள் நடுவில் அகலமானதொரு பட்டையுடன் விரிகோணத்தில் மேல் திரும்பி உத்திரம் தாங்குகின்றன. இவற்றின் தரங்க எழுச்சிகளுக்கிடையில் காணப்படும் குளவு மேற்கு அரைத் தூணில் மட்டும் இல்லை. உத்திரத்தின் வெளிப் பிதுக்கமாய் வாஜனம். மேலே சரியாக வடிவமைக்கப்படாத கபோதமாய்ப் பாறையின் மேற்பரப்பு. இதன் மீதும் நுழைவாயில் சுவர் மீதும் நிறுத்தப்பட்டிருக்கும்

நீளமான பலகைக் கற்களே முன் மண்டபக் கூரையாகி இக்கட்டமைப்புகளை இணைக்கின்றன.

முகப்பின் அரைத்தூண்களை அடுத்துள்ள பாறைப் பகுதிகள் கோட்டங்களாக்கப்பட்டு ஆளுயர அடியவர் சிற்பங்களைக் கொண்டுள்ளன.[8] இவற்றிற்குக் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள பாறைப் பகுதிகள் பக்கச் சுவர்களாகி முன் மண்டபக் கட்டுமானத் தழுவலுக்கு ஆட்பட்டுள்ளன. முகப்பு வாஜனம் கோட்டங்களின் மீதும் ஓடுகிறது. மேற்கில் மட்டும் இது பக்கச் சுவரிலும் தொடர்ந்து, கபோதத்தின் அடிப்பகுயில் முடிகிறது. முகப்பின் மூன்று அங்கணங்களும் மேல், கீழ் நிலைகள், திருநிலைக் கால்கள் பெற்றுச் சிறப்புக்குரிய வாயில்களாகியுள்ளன. திருநிலைக் கால்களில் தொடங்கும் பூவேலைப்பாடு மேல் நிலையிலும் தொடர்ந்துள்ளது. மேல் நிலைக்கு மேல் பாதங்களோடு கூடிய கண்டப் பகுதி காட்டப்பட்டுள்ளது. இப்பாதங்களில் அன்னம், யாளி, பூ முதலிய சிற்ப அமைப்புகளைப் பார்க்கலாம்.

அங்கணங்களின் அளவுகள்

அங்கணம் (கிழக்கிலிருந்து)	அங்கண வாயில்		தரையிலிருந்து அங்கணக் கீழ் நிலையின் உயரம்
	உயரம்	அகலம்	
முதல் அங்கணம்	1.89 மீ.	1.58½மீ.	14.5 செ. மீ.
இரண்டாம் அங்கணம்	1.89 மீ.	1.67 மீ.	20 செ. மீ.
மூன்றாம் அங்கணம்	1.88 மீ.	1.68 மீ.	14.5 செ. மீ.

இவ்வங்கண வாயில்களின் உயரம் ஏறத்தாழ ஒரே அளவாக இருந்தபோதும் அகலத்தில் மாறுபாடு உள்ளது. முதல் வாயிலின் அகலம் மற்ற இரண்டையும் விட ஏறத்தாழ 8.5 - 9.5 செ. மீ. குறைவாக உள்ளது. கீழ் நிலைகளின் உயரம் முதலாவதற்கும் மூன்றாவதற்கும் ஒரே அளவாக இருக்க (14.5 செ. மீ.), நடு அங்கணத்திற்கு மட்டும் 5.5 செ. மீ. அதிக உயரமாகக் காட்டப்பட்டுள்ளது.

முகப்பிற்கு முன்னுள்ள பாறைத் தரையமைப்பு கிழக்கு மேற்காக 9.69 மீ., வடக்குத் தெற்காக 93 செ. மீ. எனப் பரந்துள்ளது.

முகமண்டபம்

முகப்பின் பின்னுள்ள செவ்வகமான மண்டபத்தை முகமண்டப மெனலாம். இதன் தென் சுவர் நடுப் பகுதியில் கருவறை உருவாக்கப் பட்டுள்ளது. எஞ்சியுள்ள சுவர்ப் பகுதிகளில் கிழக்கிலும் மேற்கிலும் கோட்டங்கள் அமைத்து வராகரையும் யோக நரசிம்மரையும் உரு வாக்கியுள்ளனர். கிழக்கு, மேற்குச் சுவர்களிலுள்ள கோட்டங்களில் பெருமாள் தன் தேவியருடன் காட்டப்பட்டுள்ளார்.

கிழக்கு மேற்காக 9.48 மீ. நீளமும் தென்வடலாக 1.98 மீ. அகலமும் கொண்டமைந்துள்ள முகமண்டபத்தின் கிழக்குச் சுவர்க் கோட்டம் முழுவதுமாய்ப் பரவியவராய்ப் பெருமாளும் தேவியரும் நின்ற கோலத்தில் காட்சி தருகின்றனர். குடைவரைப் பாறையிலேயே செதுக்கப்பட்டுள்ள இவர்கட்கு முன்னால் கருவறையின் கிழக்குச் சுவர் வரை 30 செ. மீ. உயரம் கொண்ட தள அமைப்பொன்று இணைக்கப் பட்டுள்ளது. முகமண்டபத்தின் மேற்குச் சுவர்க் கோட்டத்தில் ஒரே கல்லில் செய்தமைத்த சிற்பத் தொகுதியாய்ப் பெருமாளும் தேவியரும் அமர்ந்த நிலையில் காட்சி தருகின்றனர்.[9] இவர்களுக்கு முன்னாலும் எதிர்ப்புறம் போன்றே தள அமைப்பொன்று கருவறையின் மேற்குச் சுவர் வரை நீட்டப்பட்டுள்ளது. இதன் உயரம் 44 செ. மீ. இந்த இரு தளங்களுக்கும் இடைப்பட்ட முகமண்டபத்தின் நீளம் 4.79 மீட்ட ராகும்.

முகமண்டபக் கூரையையொட்டி நாற்புறமும் வாஜனமும் அதன் கீழே உத்திரமும் காட்டப்பட்டுள்ளன. இது பல்லவர் முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட அமைப்பாகும். பல்லவப் பகுதிகளில் முகப்பின் உட்புறம் மட்டுமே உத்திரம் காணப்பெறும். முகமண்டபத்தின் பிற சுவர்களின் மேல் கூரையையொட்டி வாஜனம் மட்டுமே இருக்கும்.

முகமண்டபத்தின் கூரையிலும் உத்திர, வாஜனப் பகுதிகளிலும் ஓவியங்கள் தீட்டப்பெற்றுள்ளன. கூரையில் பெருமாளின் பத்துத் திருத்தோற்றங்கள் காணப்பெறுகின்றன. கிழக்கு, மேற்குக் கோடி யிலுள்ள ஓவியங்கள் தெளிவாக இருக்க, நடுப்பகுதி ஓவியங்கள் சரி யான பாதுகாப்பின்மையால் பெருமளவு சிதைந்துள்ளன, கிழக்குக் கோடியில் அயகிரீவர் தோற்றமும் அதையடுத்து வரிசையாக ஆடல் தோற்றக் கிருஷ்ணர், பலராமர், இராமர் தோற்றங்களும் உள்ளன. இராமரையடுத்துள்ள தோற்றத்தை அடையாளம் காண முடியாதபடி அதன் முகம் அழிந்துள்ளது. அடுத்துக் குடையேந்திய வாமனர். இவரது முகம் முற்றிலும் அழிந்துவிட்டது. கையில் பிடித்துள்ள குடைத் தண்டு கொண்டே இவரை வாமனராய்க் கொள்ள முடிகிறது. வாமனரை அடுத்துள்ள இரண்டு வடிவங்களும் அடையாளம் காண

முடியாதபடி அழிந்துள்ளன.[10] அடுத்துக் கூர்மத் தோற்றமும் இறுதியாக மேற்குக் கோடியில் மீன் தோற்றமும் காணப்படுகின்றன. இக்கூரையில் இரண்டடுக்கு ஓவியங்கள் இருப்பது நடுப்பகுதியில் தெளிவாய்த் தெரிகிறது. ஏற்கனவே இருந்த ஓவியங்கள் மீது சுதை பூசி மீண்டும் ஓவியங்கள் எழுதப்பட்டுள்ளன. கீழடுக்கு ஓவியங்களை நாயக்கர் காலத்தனவாகக் கொள்ளலாம். மேலோவியங்கள் அதற்கும் பிற்பட்டவை. உத்திரத்தில் ஓவியப் பூக்கள்.

கருவறை

4.91 மீ. நீளம் கொண்டமைந்துள்ள கருவறையின் முகப்பில் 52 செ. மீ. உயரமுள்ள தள அமைப்பு காணப்படுகிறது. உபானம், தூணடிகள் கொண்ட கண்டம், கம்பு, பெரு வாஜனம் என்றமைந்துள்ள இந்தத் தள அமைப்பைத் துணைத் தளமெனலாம். முழுத் தூண்களுக்கு இடைப்பட்ட முகமண்டபத் தரைப் பகுதியில் இதன் உபானம் சந்திரக் கல்லாக விரித்து விடப்பட்டுள்ளது. பெரு வாஜனத்தின் மேற்பரப்பே கருவறையின் தரையாகியுள்ளது. கருவறையின் முகப்பிலுள்ள நான்கு ருத்ரகாந்தத் தூண்களும் தரையினின்றும் சற்று உயர்ந்த தளத்தின் மீது எழுகின்றன. இவற்றுள் நடுத்தூண்கள் இரண்டும் முழுத்தூண்களாயிருக்கப் பக்கத் தூண்கள் அரைத்தூண்களாக உள்ளன.[11] தாமரையடி, இடைக்கட்டு, மாலைத்தொங்கல், தாமரைக்கட்டு, மேலுறுப்புகள், விரிகோணப் போதிகைகள் என அமைந்துள்ள இத்தூண்கள் செழுமையாகச் செதுக்கப்பட்டுள்ளன. மேலுறுப்புகளுள் கலசம், தாடி இரண்டும் தாமரை வரியால் அழகுபடுத்தப்பட்டுள்ளன. நீண்ட கீழ்க்கைகளுடன் மேல் திரும்பும் போதிகைகள் உத்திரம் தாங்க, அதன் பிதுக்கமாய் வாஜனம். தூண்கள், உத்திரம், வாஜனம் என அனைத்தின் மீதும் சுதை பூசி வண்ணம் தீட்டியுள்ளனர்.

கருவறையின் பெரும்பகுதியைப் பெருமாளின் கிடந்த கோலம் நிறைத்திருக்க, முன்னுள்ள பகுதியில் பெருமாளும் தேவியுமான சிறிய அளவிலான இலக்குமி நாராயணர் சிற்பமொன்று காணப்படுகிறது.[12] ஐந்து தலைகளால் விதானம் அமைத்திருக்கும் ஆதிசேடனின் உடலே படுக்கையாகக், கிழக்கில் தலை வைத்துப் படுத்திருக்கும் பெருமாளின் திருவடிகள் தாமரை மலரைத் தொட்டவாறு மேற்கு நோக்கியுள்ளன. தலைக்கடியிலும் கால்களின் கீழ்ப்பகுதியிலும் தலையணைகள் காட்டப்பட்டுள்ளன. பெருமாளின் எதிர்ப்புறத்தே கருவறையின் மேற்குச் சுவரை நிறைத்தவாறு மது, கைடபர் என்னும் இரண்டு அரக்கர்களின் வடிவங்கள். இவர்களுக்கிடையில் கதிரவன்.[13] பெருமாளின் தலைப் புறத்தே கருவறையின் கிழக்குச் சுவரில் கீழே கருடன்.[14] மேலே

இரண்டு தேவர்களும் சந்திரனும்.[15] பெருமாளின் படுக்கையை ஒட்டிய தென் சுவரின் மேற்பரப்பில் ஒன்பது வடிவங்கள் காட்டப்பட்டுள்ளன.[16] கிழக்கிலிருந்து மேற்காக இரண்டு இசை விற்பன்னர்களும் அடுத்து நான்முகனும் அவரின் இடப்புறத்தே மிருகத் தலையுடன் கூடிய மனித வடிவமொன்றும் தொடர்ந்து நான்கு ஆடலரும் இறுதியாகக் குள்ளச் சிறு மனித வடிவமொன்றும் காணப்படுகின்றன.



பாம்புப் படுக்கையில் பெருமாள்

பெருமாள் படுக்கையின் முன்புறத்தே அவர் வலக்கை அருகே கருவறைத் தரையில் குத்துக் காலிட்டு அமர்ந்த நிலையில் மார்க்கண்டேயரும் காலருகே நிலமகளும்[17] சிற்பங்களாகியுள்ளனர்.

கருவறைத் தரையமைப்பு கிழக்குச் சுவரையொட்டிச் சிறு தளமாக உயர்ந்து, பாம்புப் படுக்கையின் முன்பு விளிம்பிட்டாற் போல் தொடர்ந்து, அடியவ்ராய் அமர்ந்திருக்கும் மார்க்கண்டேயர்க்குத் தளமாய் விரிந்து, படுக்கையின் இடைப் பகுதியில் 27 செ. மீ. அளவிற்கு உயர்ந்து, பின் மீண்டும் பழைய அளவில் நிலமகளுக்குத் தளமாகி மேற்குச் சுவரையடைந்து அங்கு நின்றிருக்கும் அரக்கரின் அடிகளை உயர்த்திக் கருவறை முகப்பிலுள்ள மேற்கு அரைத்தூணை

ஒட்டி முடிகிறது. இத்தொடர்த் தள அமைப்பு பெருமாளின் கிடந்த கோலங்கள் உள்ள சிங்கவரம், திருமெய்யம், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் பார்க்க இயலாதது.

கருவறையின் அனைத்துப் பகுதிகளிலும் சிற்பங்கள் உட்படச் சுதை பூசப்பட்டு வண்ணம் தீட்டப்பட்டுள்ளது. இத்தீட்டல் பல இடங்களில் சிற்பங்களை விகாரப்படுத்தியிருப்பது கண்கூடு. இச்சுதைப் பூச்சால் பல இடங்களில் சிற்பங்களின் உண்மையான தோற்றத்தை அறிய முடியவில்லை. குறிப்பாக நான்முகனுக்கு இடப்புறமுள்ள முதற் சிற்பம் நந்தி முகமும் மனித உடலும் கொண்டு காட்டப்பட்டுள்ளது. ஆனால் நந்தீசருக்கு இந்தச் சிற்பத் தொடரில் இடமில்லை. திருமெய்யத்தில் ஒப்பீட்டுக்குச் சென்றபோது அங்கு ஆட்டுத் தலையும் மனித உடலுமாய் ஒரு வடிவத்தைப் பார்க்க முடிந்தது. இதைத்தான் மலையடிப்பட்டியில் சுதையும் வண்ணமும் நந்தியாக்கியுள்ளன.

முகமண்டபக் கூரையிலிருப்பது போல பெருமாளின் திருமேனியிலும் இரண்டடுக்கு வண்ணத் தீட்டல்களைப் பார்க்க முடிகிறது. மார்புப் பகுதியில் காணப்படும் கீழடுக்குப் பூச்சு வண்ணங்களுள் சில, முகமண்டபக் கூரையிலுள்ள கீழடுக்கு ஓவியத்தின் வண்ணங்களை ஒத்திருப்பது கவனிக்கத்தக்கது.[18]

சிற்பங்கள்

அ. முகப்பு அடியவர்

முகப்பின் இருபுறத்தும் அமைந்துள்ள கோட்டங்களில் அடியவர் வடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இருவருமே நேர் நிலையில் செவிகளில் பனையோலைக் குண்டலங்கள், கழுத்தில் அட்டிகை, தோள்களில் வாகு வளையங்கள், மேற்கைகளில் கங்கணங்கள், மணிக்கட்டருகே வளைகள் எனப் பல்வகை நகைகளும் தலை மகுடமும் அணிந்து கருவறை நோக்கிய கையில் தாமரையேந்தி, மற்றொரு கையை இடுப்பில் ஊன்றிச் செழிப்பாக நிற்கின்றனர். கங்கண முகப்புகளின் சிம்ம முக வார்ப்பு அழகுற அமைந்துள்ளது. இருவருமே அரையாடை, அதன் மீதான அரைப்பட்டிகை ஆகியன அணிந்து, ஆடைகளின் கனத்த முடிச்சுகள் பக்கவாட்டிலும் வளையத் தொங்கல் முன்புறத்தேயுமாய் அமையக் காட்சி தருகின்றனர். கிழக்கரின் வல மேற்கைப் பகுதியைச் சுற்றியுள்ள பாம்பு அவர் முகத்தருகே படமெடுக்க, மேற்கரின் பாம்பு அவரின் இடப்புறத் தோளருகே தலை காட்டுகிறது.[19] முப்புரிநூல் இருவருக்கும் இருந்தாலும் மேற்கருக்கு மட்டுமே வல மேற்கையின் மீதேறிச் செல்கிறது. கிழக்கரின் வலப்

பாதம் திரஸ்ரயத்திலும் இடப்பாதம் பார்சுவத்திலுமிருக்க, மேற்கரின் வலப்பாதம் பார்சுவத்திலும் இடப்பாதம் சமநிலையிலும் உள்ளன. இருவருமே கட்டுக்கோப்பான உடலமைப்புடன் எழிலுறக் காட்சியளித் தாலும் சுதை முற்றிலும் நீக்கப்பட்ட நிலையில் கிழக்கரின் திருமுகம் பேரழகுடன் திகழ்கிறது. கருவறைக்காய்த் திரும்பியுள்ள கண்களின்



கிழக்கு அடியவர்

கடைப் பார்வை, காஞ்சிபுரம் வைகுந்தப்பெருமாள் கோயில் திருச் சுற்று மாளிகைச் சிற்பத் தொகுதிகளில் தென் கிழக்கிலுள்ள மன்னரின் பார்வையை நினைவூட்டுகிறது. ஒரு முறை பார்த்த அளவிலேயே மறக்க முடியாதபடி நெஞ்சில் பதிந்துவிடும் இந்தப் பார்வையை வேறெந்த முகப்பு அடியவர் கண்களிலும் பார்த்த நினைவில்லை.

ஆ. முகமண்டபச் சிற்பங்கள்

1. பெருமாளின் நின்ற திருக்கோலம்

கிழக்குச் சுவர்க் கோட்டத்தில் பொளியப்பட்டுள்ள பெருமாளின் நின்ற திருக்கோலமும் சுதை மற்றும் வண்ணப் பூச்சுக்கு ஆளாகியுள்

ளது. தாமரைத் தளத்தில் பதக்கம், பட்டாடை, அணிமணிகள் என நிற்கும் பெருமாளின் பின் கைகளில் சங்கும் சக்கரமும். வல முன் கை காக்கும் குறிப்பிலிருக்க, இட முன் கை இடுப்பில். தலைக்குப் பின் சுதையில் திருவாசி. மேலே இருபுறமும் பக்கத்திற்கொருவராகத் தாமரையேந்திப் போற்றும் கந்தருவர். பெருமாளின் வலப்புறம் திருமகளும் இடப்புறம் நிலமகளும் ஒரு கையை நெகிழ்த்தி[20] மறு கையில் மலரேந்தி[21] மணாளருக்கேற்ற மங்கையராய்ச் சுண்ண, வண்ணப் பூச்சுகளுக்குப் பலியாகி நிற்கின்றனர்.

2. பெருமாளின் அமர்ந்த திருக்கோலம்

மேற்குச் சுவர் அருகே நிறுத்தப்பட்டுள்ள மிகப் பெரும் ஒரு கல் சிற்பத் தொகுதியில் பெருமாள் மகிழ்வமர்விலும் தேவியர் இருவரும் உத்குடியமர்விலும்[22] இருக்கின்றனர், பெருமாளின் பின் கைகள் வழக்கம் போல் சங்கு சக்கரம் கொண்டிருக்க, வல முன் கை காக்கும் குறிப்பிலுள்ளது. இட முன் கை தொடை மீது இருத்தப்பட்டுள்ளது. தேவியரோ ஒரு கையைத் தளத்தின் மீது இருத்தி மறு கையில் மலர் மொட்டு[23] கொண்டுள்ளனர். முதல் பார்வையில் முகமண்டபச் சுவரிலேயே செதுக்கப்பட்டாற் போல் தோன்றும் இச்சிற்பம் மிக நுட்பமாகச் சுவருடன் பொருத்தப்பட்டுள்ளது.

3. தெற்குச் சுவர் சிற்பங்கள்

தென் சுவரின் வலப்புறம் வராகரும் இடப்புறம் நரசிம்மரும் இடம் பெற்றுள்ளனர். இருவருமே சுண்ண வண்ணப் பூச்சுகளில் மூழ்கியுள்ளனர்.

வராகர் மகிழ்வமர்வில் வலக்காலைக் கீழிறக்கிப் பின் கைகள் சங்கு சக்கரம் கொள்ள, வல முன் கையால் காத்து, இட முன் கையைத் தொடை மேல் இருத்தித் தனியராய் இருக்கையொன்றில் அமர்ந்துள்ளார். இவரது கரண்ட மகுடத்தின்[24] இருபுறமும் பூச்சரங்கள் காட்டப்பட்டுள்ளன. இருக்கையின் இருபுறமும் எழும் சிறு தூண்களின் மேலே மகரத் திருவாசி. மகரங்களின் கீழே தூண்களின் முகப்பாய் நிற்கும் யாளிகள். வராகரின் வலப்புறம் அவரை வணங்குபவராய் வாலில் மணியுடன் ஓவிய அநுமார்.

கோரைப் பற்களும் புடைத்த விழிகளுமாய் இருக்கையொன்றின் மீது உத்குடியமர்வில்[25] காட்சி தரும் நரசிம்மரின் பின் கைகளில் சங்கும் சக்கரமும். இட முன் கை தொடை மீதிருக்க, வல முன் கை வல முழங்காலைத் தொட்டபடி பக்கவாட்டில் நெகிழ்த்தப்பட்டுள்ளது,

தலையில் கிரீட முகப்பு மட்டும் காட்டப்பட்டுள்ளது.[26] இவர் பின்னுள்ள திருவாசி வராகருக்கு அமைந்துள்ளது போல் அல்லாமல் தலைக்கு மேலும் பக்கங்களிலும் மட்டும் காட்டப்பட்டுள்ளது.

நரசிம்மரின் இடப்புறம் முகமழிந்த நிலையில் பெண்ணொருவரின் ஓவியம்[27] காணப்படுகிறது. இடுப்பிலிருந்து கணுக்கால்வரை காட்டப் பட்டிருக்கும் கட்டமிட்ட கீழாடையும் தோளில் தொங்கும் வனமாலை யும் கழுத்தில் புரளும் மாலையும் செழிப்பான மார்பகங்களும் இவரை அழகரசியாகக் காட்ட, இடுப்பில் செருகியிருக்கும் கத்தி சற்றே அச்சுறுத்துகிறது.

இ. கருவறைச் சிற்பங்கள்

1. பெருமாள்

கருவறையின் பெரும் பகுதியை நிறைத்தபடி பெருமாளின் படுத்த திருக்கோலம். நேராகப் படுத்திருக்கும் பெருமாளின் வலத் திருக்கை படுக்கையை ஒட்டித் தலைப்புறமாய் நீண்டு மணிக்கட்டளவில் கீழ் நோக்கிச் சரிந்துள்ளது. இடக்கையை மடக்கி இடுப்பருகே உயர்த்திக் கடக முத்திரை காட்டுகிறார்.[28] உடலெங்கும் சுதை பூசப்பட்டு வண்ணம் தீட்டப்பெற்றிருப்பதால் பல்வேறு அணிகலன்களைப் பார்க்க முடிகிறது. முப்புரிநூலும் உதரபந்தமும் ஸ்கந்தமாலையும் பட்டாடை யுமாய் நன்கு அலங்கரிக்கப்பட்ட கிரீடத்துடன் பெருமாள் படுத்திருக் கிறார். எடுப்பான நாசியும் திறந்த விழிகளும் முகத்தின் கம்பீரமும் பெருமாளின் பேரெழிலை மேலும் கூட்டுகின்றன.

2. இலக்குமி நாராயணர்

கருவறையின் முன்புறத்தே ருத்ரகாந்த முழுத்தூண்களுக்கு இடைப்பட்ட பகுதியில் காணப்படும் இலக்குமி நாராயணர் சிற்பம் அளவில் சிறியது. இதில் பெருமாளும் இலக்குமித் தேவியும் அமர்ந்த திருக்கோலத்தில் காட்டப்பட்டுள்ளனர். பெருமாள் மகிழ்வமர்வில் இருக்க அம்மை அவரது இடத்தொடையில் அமர்ந்தபடி வலக்கையால் அவரை அணைத்துள்ளார்; இடக்கையில் தாமரை மலர்; செவிகளில் மகர குண்டலங்களும் தலையில் கரண்ட மகுடமும் அணிந்து பட்டாடை கணுக்கால்வரை வரிவரியாய்ப் புரள அமர்ந்திருக்கும் தேவியைப் பெருமாளின் இட முன் கை அணைத்துள்ளது. அவரது வலத் திருக் கை காப்பு முத்திரையில்; பின் கைகளிலோ சங்கும் சக்கரமும். கிரீட மகுடமும் மகர குண்டலங்களும் பட்டாடையுமாய்க் காட்சி தரும் பெரு மாளைப் பதினைந்தல்லது பதினாறாம் நூற்றாண்டினராகக் கொள்ள லாம்.

3. கருவறைப் பின் சுவர் சிற்பங்கள்

கருவறைப் பின்சுவரில் பெருமாளுக்குச் சற்று மேலாக வானத்தில் மிதப்பவர்களாய் எண்மரும் பெருமாளின் கடகக் கைக்கு மேலாகத் தாமரை மலரில் அமர்ந்தவராய் நான்முகனும் காட்டப்பட்டுள்ளனர். இந்த எண்மரில் நான்முகனுக்கு வலப்புறம் இசைக் கலைஞர்களாய் இருவரும் இடப்புறம் விலங்கு முகமும் மனித உடலுமாய் ஒருவரும் அவரையடுத்து ஆடற் கலைஞர்களாய் ஐவரும் காட்சி தருகின்றனர். முற்றிலும் சுதை பூசப்பட்டு, வண்ணம் தீட்டப்பட்டிருப்பதால் இவ்வொன்பது சிற்பங்களின் உண்மை நிலைகளை அறிய முடியவில்லை.

தாமரை மலரில்,[29] அரைத் தாமரையமர்வில் காட்சி தரும் நான்முகனின் பின் கைகளில் அக்கமாலையும் தாமரை மலரும்.[30] முன் கைகளில் வலக்கை காப்பு செய்ய, இடக்கை மடியில். சுதையும் வண்ணமும்[31] பல இடங்களில் சிதைந்துள்ளதால் நான்முகன் அவலமானதொரு தோற்றத்தில் இருக்கிறார். இச்சிற்பங்களின் வண்ணத்தையும் சுண்ணத்தையும் முழுமையாக அகற்றிவிடுதல் சால்புடையதாகும். இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறை பிற இடங்கள் போல் இங்கும் இத்திருப்பணியை மேற்கொள்ளுமாயின் மிக நன்றாயிருக்கும்.

நான்முகனின் வலப்புறம், இடுப்பில் வரிந்து கட்டிய அரையாடையும் மகுடமாய்ப் புனையப்பட்ட சடையுமாய் முனிவரொருவர்.[32] வள்ளுவர் வேண்டாமென்ற நீட்டலில் நம்பிக்கையுடையவராய்த் தொங்கு மீசையும் தாடியுமாய் இடக்கையால் யாழ் போன்றதொரு இசைக்கருவியைப் பிடித்தபடி, வலக்கையைக் கொடி முத்திரையில் இருத்திக் காட்சியளிக்கும் இம்முனிவர், இசைக்கருவியைப் பிடித்திருக்கும் முறை வியப்பூட்டுகிறது. 'இடவயின் தழீஇ'[33] என்று சங்க இலக்கியங்கள் பரக்கப் பேசும் முறையில் இவரும் இசைக்கருவியை இடப்புறந்தான் கொண்டிருக்கிறார் என்றாலும், மார்பின் இடப்புறம் தழுவிச் சாய்த்திருக்க வேண்டிய கருவியை, இயல்புக்கும் வசதிக்கும் மாறானதொரு நிலையில் பிடித்திருக்கும் காரணம் விளங்கவில்லை. யாழ் போன்ற இவ்விசைக்கருவியின் குடம் கலைஞரின் வலத் தொடை மீது இருத்தப்பட்டுள்ளது. தண்டின் நுனிப்பகுதியை விரல்கள் பிடித்துள்ளன. கருவியோ கையின் பின்புறம் காட்டப்பட்டுள்ளது. இந்த இயல்புக்கு மாறான அமைப்பு சுதைப் பூச்சின் நேர்வா என்பதை வேதித்தூய்மைதான் தெரிவிக்கமுடியும். முனிவருக்கு வலப்புறம் கட்டான உடலும் அரையாடையும் அளவான அணிகலன்களுமாய்க் காட்சியளிக்கும் சடை மகுடத்தார் இரு கைகளிலும் வீணையேந்தி மீட்டுகிறார்.[34]

நான்முகனின் இடப்புறம் அறுவர் உள்ளனர். இவர்கள் அனைவருமே ஆடுநர் போல் காட்சி தருகின்றனர். முதலில் இருப்பவர் விலங்கு முகம் கொண்ட மனித உடலர்.[35] இவரை யாரென அடையாளம் காண முடியவில்லை. இவரது வலக்கை உயர்த்திய கொடி முத்திரையில் பெருமாளைப் போற்ற, இடக்கை கடகமாய் அமைந்துள்ளது. பெருமாளின் திருமுகத் தரிசனம் பெற்றவாறே மகிழ்ந்தாடும் இவரையடுத்துக் கரண்ட மகுடத்துடன் அணியலங்கார நிறைவோடு இரண்டு பெண்கள். முதலாமவர் இடக்கையை இடுப்பில் ஊன்றி வலக்கையால் பெருமாளைப் போற்றுகிறார். இரண்டாமவர் இடக்கையால் வியந்து வலக்கையால் நெகிழ்கிறார். பெண்களையடுத்து இரண்டு ஆண்கள். இவர்களும் கரண்ட மகுடர்கள். வேழ முத்திரை காட்டும் இடக்கையை வலக்கையால் பிடித்தபடி முதலாமவர் ஆட, இரண்டாமவர் இடக்கையில் கொடித்தண்டும் இதழ்களில் இள நகையுமாய், வலக்கையை மேலுயர்த்தி ஆடுகிறார். இவரது உயர்த்திய வலக்கை காட்டும் முத்திரையை இன்னதென அடையாளம் காண முடியவில்லை. இவரையடுத்து இரு கைகளையும் உயர்த்தியபடி மகிழ்ச்சிப் பெருக்கில் குறளர் ஒருவர்.[36]

நான்முகன் பெருமாளின் கொப்பூழ்க் கமலத்திலிருந்து பிறந்ததைச் சுட்டவே அவர் வடிவத்தைப் பெருமாளின் கொப்பூழ்ப் பகுதிக்கு மேலே சுவரில் காட்டியுள்ளனர். நான்முகனின் வலப்புறமுள்ளவர்கள் கூட்டும் இசையும் இடப்புறமுள்ளவர்கள் நிகழ்த்தும் ஆடலும் பெருமாளை உறங்க வைக்கவா, விழிக்க வைக்கவா?

4. மேற்குச் சுவர் சிற்பங்கள்

பெருமாளின் திருவடி நோக்கும் கருவறை மேற்குச் சுவரை நிறைத்தபடி இரு பெரும் அரக்க வடிவங்கள். மது, கைடபர் என்ற பெயரில் விளங்கிய இவ்வரக்கர்கள் இங்குச் சுண்ண, வண்ணப் பூச்சில் இயல்பைவிடக் கொடூரமாகத் தோற்றம் தருகின்றனர். பாம்புக் குண்டலங்களும், கனத்த முடிச்சுத் தொங்கல்களுடன் கூடிய அரையாடைகளும் புடைத்த விழிகளும் கோரைப் பற்களுமாய் இவர்கள் நிற்கும் காட்சி, யாரையும் அச்சுறுத்தவல்லது. முதலரக்கரின் வலக்கை தடியோங்கியிருந்தாலும், இடக்கை வேண்டாமென்பது போல் கொடி முத்திரையில் விலகிக் கொள்ளும் விருப்பம் காட்டுகிறது. இரண்டாம் அரக்கர் இடக்கையில் தம் வியப்பு காட்டி வலக்கையில் பொருளொன்றை ஏந்தியுள்ளார். சுதைப் பூச்சில் இப்பொருள் இன்னதெனக் கண்டறிய முடியவில்லை.

இவ்விரு அரக்கர்க்கும் இடையில் கிடைத்த மேற்பகுதியில் கதிரவனைப் படைத்திருக்கிறார் சிற்பி. ஒரு கை போற்ற, மற்றொரு கையில் தம்மை ஆய்வாளர்க்கு அடையாளம் காட்டத் தாமரையேந்தித் தலைக்குப் பின் ஒளி வட்டம் காட்டி நிற்கிறார் பகலவன்.

5. கிழக்குச் சுவர் சிற்பங்கள்

கிழக்குச் சுவரின் கீழ்ப் பகுதியைத் தமக்காய் வரித்துக் கொண்டு, அரையாடையும் சிலம்பொலிக்கும் கால்களும் ருத்திராக்கக் குண்டலங்களும் கரண்ட மகுடமுமாய்க் காட்சி தரும் கருடனின் தோற்றம் பறக்கத் தொடங்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளது. இடக்கால் மடக்கி இடுப்பளவு உயர்த்தப்பட்டிருக்க, வலக்கால் தரையை நீங்கிய நிலையில் உள்ளது.[37] முகத்தில் மது, கைடபரை அழிக்கத் துடிக்கும் சினக் குறிப்பு.

மேலே மூவர். முதலிருவர் வணங்கிய கைகளுடன் அரையாடையணிந்து பணிவோடு நிற்கின்றனர். தேவர்களாகலாம். மூன்றாமவர் கையிலிருக்கும் மலரும் ஒளி வட்டமும் அவரைச் சந்திரனாய்க் கொள்ள வைக்கின்றன.

6. வடக்குச் சிற்பங்கள்

பாம்புப் படுக்கையின் முன்னால் படுக்கையை ஒட்டியபடி கருவறைத் தரை மீது கிழக்கிலொரு ஆடவரும் மேற்கிலொரு பெண்ணும் குத்துக் காலிட்டு அமர்ந்துள்ளனர். பெருமாளின் நெகிழ்ந்த வலக்கையருகே ஆண்; முழங்காலருகே பெண்.

சடை மகுடமும் மலரேந்திய இடக்கையும் இளமை பொலிந்த முகத் தோற்றமும் இவ்விளைய முனியை மார்க்கண்டேயராக்குகின்றன. இரு கைகளையும் வணக்கமாய்க் குவித்திருக்கும் பெண் நிலமகள். கச்சணியா இவர் மார்பகங்களின் மீது பின்னாளில் சுதைப் பூச்சால் கச்சணிவித்துள்ளனர்.

ஈ. தாயார் சிற்பம்

கோபுரத்தின் இடப்புறத்தே உள்ள தாயார் திருமுன்னில் அரைத் தாமரை அமர்வில் அன்னை. கரண்ட மகுடமும் பனையோலைக் குண்டலங்களும் அணிந்தவராய்ப் பின் கைகளில் தாமரை மலர்களேந்தி முன் கைகளில் காப்பும் அருளும் காட்டுமித் தேவி பிற்காலத்தவர். இவர் கருவறை வாயிலின் கீழ் நிலையில் கல்வெட்டொன்று காணப்படுகிறது.

கல்வெட்டுகள்

இக்கோயில் வளாகத்திலிருந்து புதுக்கோட்டை அரசால் நான்கு கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன.[38] இங்குக் கள ஆய்வு மேற் கொண்டபோது இக்கட்டுரையாசிரியர்கள் புதிதாக ஆறு கல்வெட்டு களைக் கண்டறிந்தனர்.[39] இவற்றையும் சேர்த்து இவ்வளாகத் திலுள்ள கல்வெட்டுகள் பத்தாகின்றன. இப்பத்துக் கல்வெட்டுகளுள் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இராசகேசரிவர்மர் கால நிலக்கொடைக் கல்வெட்டும் பரகேசரிவர்மர் காலத்து விளக்குக்கொடைக் கல்வெட்டும் முன் மண்டப வடசுவர்ப் பெரு வாஜனத்தில் காணப்படுகின்றன. மற் றொரு புதிய கல்வெட்டு கோபுரத்தின் வடகிழக்குக் குமுதத்தில் உள்ளது. ஏனைய மூன்றும் அங்கணக் கீழ்நிலைகளில் உள்ளன.

ஏற்கனவே படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளுள் வீரப்பிரதாப மகாராயரின் கல்வெட்டு கோபுரத்தின் தென்கிழக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளிலும் அச்சுதப்ப நாயக்கரின் சாமந்தனார் கல்வெட்டு குடை வரையிலுள்ள மேற்கு அரைத்தூணின் கிழக்கு முகத்திலும் மூன்றாம் கல்வெட்டு அம்மன் திருமுன் கீழ்நிலையிலும் நான்காம் கல்வெட்டு முகப்பு நடு அங்கணக் கீழ்நிலையிலும் காணப்படுகின்றன.

இப்பத்துக் கல்வெட்டுகளுள் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இராச கேசரிவர்மரின் ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டே காலத்தால் பழமை யானதாகும். இக்கல்வெட்டு[40] இக்கோயிலின் பழம் பெயரைத் தரு வதுடன் பல பயனுள்ள தகவல்களையும் தெரிவிக்கிறது. பெருமாள் திருக்கோயில் ஒளிபதி விஷ்ணுகிருகம் என்றழைக்கப்பட்டுள்ளது. கோயிலிருக்கும் ஊரைத் திருவாலத்தூர் என்று குறிக்கும் கல்வெட்டு, இவ்வூர் இருந்த நாட்டுப் பகுதியைக் கீழ்ச்செங்கிளி நாடு[41] என்கிறது. இக்கோயில் வைகானச ஆகமத்தைப் பின்பற்றியதையும் இங்கிருந்த கோயிலாட்சியர் தங்களை வைகானசத் தேவகன்மிகள் என்றழைத்துக் கொண்டதையும் வெளிப்படுத்தும் இக்கல்வெட்டு, அத்தேவகன்மிகளுள் சிங்கன் மானதரன், தெவ்வா நாகப்பன் என்னும் இருவரும் இக் கோயிலில் மேளம் கொட்டப் பரமேசுவரன் குன்றன், எறன் சுவரனான சங்கர நாராணயர் என்னும் இரண்டு உவச்சர் பெருமக்களுக்கு உவச் சக் காணியாக ராச சுவரன் குளத்தின் கீழிருந்த நிலத்தைக் கொடுத்த தகவலையும் முன் வைக்கிறது. காடாக இருந்த இந்நிலத்தைப் பண் படுத்திப் பாசன வசதிக்குக் குளமும் வெட்டிப் பின் காணியாகத் தரும் பொறுப்பு சிவதாசன் சோலையான இராசராச பிரும்மமாராயரிடம் ஒப்படைக்கப்பட்டது. அப்பெருமகனாரும் தேவகன்மிகள் சொன்ன வாறு செய்து, உவச்சர்களிடம் நிலத்தைக் காணியாக ஒப்படைத்துக் கையெழுத்திட்டதைக் கல்வெட்டின் பிற்பகுதி தெளிவுபடுத்துகிறது. இக்கல்வெட்டு குறிக்கும் இராசகேசரி சுந்தர சோழராகலாம்.

பெரு வாஜனத்தின் மேற்குப் பகுதியில் படிகளின் கீழே கண்டு பிடிக்கப்பட்ட பரகேசரிவர்மரின் பதினான்காம் ஆட்சியாண்டுக் கல் வெட்டும்[42] இங்குள்ள பெருமாளை ஒளிபதி விஷ்ணு என்றே அழைக் கிறது. கீழ்ச்செங்கிளி நாட்டு விராற்குடி சார்ந்த விராற்குடான் பெரு மான் கடதேவகன் அரிஞ்சயன் முயன்றான் என்பார் மேற்செங்கிளி நாட்டுக் கூத்தன்குடியைச் சேர்ந்த பட்டி விராகன் நினைவாக இக் கோயிலில் பகல் விளக்கொன்று எரிக்க நாற்பத்தெட்டு ஆடுகள் தந்தார். அவ்வாடுகளை ஏற்றுக்கொண்டு நாளும் நாழி நெய்யால் விளக்கெரிக்க விராற்குடி சேர்ந்த மன்றாடி சூரன் நக்கர் ஒப்புக் கொண்டார். வைணவர்கள் பாதுகாத்துச் செய்ய வேண்டிய அறம் இது என்று கட்டளையிடும் இக்கல்வெட்டுக்குரிய பரகேசரியாக உத்தம சோழரைக் கொள்ளலாம்.

விய ஆண்டு அய்ப்பசித் திங்கள் பதினெட்டாம் நாள் வெட்டப் பட்டுள்ள கல்வெட்டொன்று[43] அச்சுதப்ப நாயக்கரின் சாமந்தனார் திருவாய்மலை கண் நிறைந்த பெருமாளுக்குப் பூமிதானமாகத் தந்த ஊர்க்கொடை பற்றிக் கூறுகிறது. இக்கல்வெட்டில் திருவாலத்தூர் மலை திருவாய் மலையென்றும், ஒளிபதி விஷ்ணுகிருகம் கண் நிறைந்த பெருமாள் கோயிலாகவும் பெயர் மாறியுள்ளன. இக் கோயிலில் பூசை, திருப்பணி, மகா ஆராதனை போன்ற கட்டளை களை நிறுவி நடத்தி வந்த சாமந்தனார், அவற்றை நிறைவேற்ற வாய்ப்பாகப் படித்தடியூர், சாமத்தி வயல், வெட்டி வயல், பராவனி வயல், கலியா வயல், விதாரி வயல், வண்ணான் வயல், சிறுவண வயல், நல்லி நத்தம் என்னும் ஒன்பது கிராமங்களையும் இக்கோயில் இறைவனுக்காய்த் தந்ததைக் கல்வெட்டு எடுத்துரைக்கிறது.

சகம் 1558இல் கோபுரத்தின் தென்புறத்தே வெட்டப்பட்டிருக்கும் வீரப்பிரதாப மகாராயரின் கல்வெட்டு[44] திருச்சிராப்பள்ளி உசாவடி யைக் குறிக்கிறது. இதுவும் அச்சுதப்ப நாயக்கரின் சாமந்தனார் செய்த கொடையைப் பற்றிப் பேசுகிறது. கல்வெட்டு பெரிதும் சிதைந் திருப்பதால் உரிய செய்திகளைப் பெற முடியவில்லை. திருவாழவந்த பெருமாள் சன்னதியில் நித்தம் வாசம் செய்து கொண்டு இருக்குமாறு கட்டளையிட்ட குறிப்பு கிடைக்கிறது. இக்கட்டளையை இட்டவரும் பெற்றவரும் யார் யார் என்பதை அறியக்கூடவில்லை. திருவாழவந்த பெருமாளும் கண் நிறைந்த பெருமாளும் ஒருவரே எனக் கருதலாம். ஒரே காலகட்டத்தில் இக்கோயில் பெருமாளுக்குப் பல திருப்பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன என்பது இதனால் தெரிகிறது.

அம்மன் திருமுன்னிலுள்ள கல்வெட்டு[45] சுபகிருது ஆண்டு அய்ப் பசித் திங்கள் பத்தாம் நாள் தென்மாவூர் அரையர்களில் செல்ல பொக்

கன் என்பாரின் மகன் மங்கான் தென்கொண்டான் என்பவர் நாச்சியார்க்குக் கோயில் கட்டி அங்கு நாச்சியாரை எழுந்தருளுவித்த செய்தியைத் தருகிறது.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கோபுரத் தாங்குதளக் கல்வெட்டு[46] தென்கொண்டான் மங்கப்பன் இக்கோயில் இறைவனை எப்போதும் வழிபட்டுக்கொண்டு இங்கு நித்திய ஊழியம் செய்வதாய்ச் சொல்கிறது. குடைவரை முகப்பின் நடு அங்கணக் கீழ்நிலைக் கல்வெட்டு 'இந்தத் தலம் திருவாய் உறந்தை இரண்டாம் திருப்பதி' என்ற சொற்றொடருடன் அமைந்துள்ளது.[47] இதன் வலப்புறத்தே மங்கான் சதாசேர்வை என்றுரைக்கும் பத்தொன்பதாம் நூற்றாண்டுக் கல்வெட்டும் கீழே நாகரியில் மூன்று வரிகளில் அமைந்த கல்வெட்டொன்றும் காணப்படுகின்றன.[47A]

கிழக்கு அங்கணக் கீழ்நிலையில் வெட்டப்பட்டிருக்கும் தெலுங்குக் கல்வெட்டில் பல எழுத்துக்கள் சிதைந்துள்ளதால் இதன் பொருளை அறியக்கூடவில்லை.

இவை தவிர முன் மண்டபத்தின் வெளிச்சுவரில் நடு வாயிலின் இடப்புறத்தே படிக்க முடியாத அளவுக்குச் சிதைந்திருக்கும் தெலுங்கு மற்றும் கிரந்த எழுத்துக்களால் வெட்டப்பட்டிருக்கும் கல்வெட்டுகளும் கள ஆய்வில் கண்டறியப்பட்டன.

II. சிவபெருமான் குடைவரை

பெருமாள் குடைவரை குடையப்பட்டுள்ள அதே குன்றின் சரிவில் கிழக்கில் சற்றுத் தள்ளி சிவபெருமானுக்கென்று எடுக்கப்பட்ட குடைவரை காணப்படுகிறது. பெருமாள் கோயில் வளாகத்திலிருந்து மதிலால் பிரிக்கப்பட்டுள்ள இக்குடைவரைக்கு முன்னாலும் மண்டபமொன்று அமைந்துள்ளது. பெருமாள் குடைவரைக்கு முன்னுள்ள நிலமட்டத்தைவிடச் சிவபெருமான் குடைவரைக்கு முன்னுள்ள நிலமட்டம் நல்ல உயரத்தில் மேடுதட்டி நிற்கிறது.

முகமண்டபம்

உபானம், துணை உபானம் பெருந்தாமரையிதழ்களாய் விரிந்திருக்கும் ஜகதி, கம்புகளோடும் பாதங்களோடும் கூடிய கண்டம், பட்டிகை என்று குமுதம் நீக்கி அமைந்திருக்கும் இம்மண்டபத் தளத்தின் மேல், சுவரும் அதன் நான்முக அரைத்தூண்களும் எழுகின்றன. இந்த அரைத்தூண்கள் மேலுறுப்புகளின்றி எழுந்து, தரங்கம் அமைந்த வெட்டுப் போதிகைகளால் உத்திரம் தொடுகின்றன. மேலே வாஜனத்

தழுவலில் வலபியும் அதைக் காக்க ஆழமற்ற கூடுகளுடன் கூடிய வளைந்த கபோதமும். கபோதத்தின் மேல் சிமெண்ட்டால் ஆன தற்கால வேதிகை.

செவ்வகமாய் அமைந்திருக்கும் இம்மண்டபத்தின் மேற்கு நோக்கிய வாயிலுள்[48] நுழைந்ததும் சுதையாலான மகர வளைவொன்று எதிர்கொள்கிறது. செங்கல் உடலும் சுதைப் போர்வையுமாய் எழுந்து நிற்கும் இரண்டு தூண்களின் மேல் மகர திருவாசி. இந்த வளைவுக்குள் பார்வை செலுத்தினால் எதிர்ச்சுவர் ஒட்டிய திண்ணையில் முருகனும் பிள்ளையாரும். பின் கைகளில் வஜ்ரமும் சக்தியும் கொண்டு, முன் கைகளால் காத்து அருள் செய்யும் முருகப்பெருமானுக்குப் பின்னால் மயில். கரண்ட மகுடமும் பட்டாடையும் மகர குண்டலங்களுமாய் விளங்கும் முருகனின் முன், பிள்ளையார், பாசமும் தடியும் பின் கைகள் கொள்ள, வல முன் கையில் கொம்பு பிடித்து, இட முன் கையால் துதிக்கையைச் சரி செய்து கொள்கிறார். இருவர்க்கும் துணையாய்த் திண்ணை மீது வேலும் நாகரும்.

மண்டபத்திலுள்ள நான்கு தூண்களில் இரண்டின் பாதங்களில் நுனியுயர்த் தாமரை வரிகள். அதன் மேல் ஒரு சதுரம் காட்டி இந்திர காந்தமாய்ப் பல பட்டைகளுடன் எழும் தூண், தாமரைக்கட்டு, கலசம், தாடி, கும்பம் என்னும் மேலுறுப்புகளுடன், வீர கண்டத்தருகே போதிகைகளை இருபுறமும் வீசி, உத்திரம் தாங்குகிறது. மேல் தூக்கிய மதலை உத்திரம் தாங்கக் கீழ்த் தாழ்ந்த நாணுதல் தூணின் காலம் சொல்கிறது.[49] உத்திரத்திற்கு மேல் வாஜனம், வலபியுடன் கூரை. மண்டபச் சுவரின் வடக்கில் ஒரு சாளரம்.

மண்டபத்தின் கிழக்கே திண்ணையின் இடப்புறத்தே மகிழ்வமர்வில் காளியன்னை. கத்தியும் கேடயமுமாய்த் தோற்றுச் சாய்ந்திருக்கும் அரக்கன்மீது வலக்கால் ஊன்றிப் பின் கைகளில் உடுக்கையும் பாசமும் காட்டி, முன் கைகளில் சூலமும் தலையோடும் கொண்டுள்ளார் அன்னை.[50] பனையோலைக் குண்டலங்களும் மார்புக் கச்சும் சுடர் முடியும் முகத்தோற்றமும் இவரைப் பிற்காலத் தோன்றலாக்குகின்றன.

முன்னாலுள்ள குடைவரையுடன் பக்கச் சுவர்கள், தரை, கூரை என்று அனைத்துப் பகுதிகளிலும் முறையாக இணைக்கப்பட்டுள்ள இம் மண்டபக் கூரையின் மேற்குப் பகுதியில் மட்டும் கற்களின் சிதைவால் கம்பி வலைச் சட்டம் பொருத்தப்பட்டுள்ளது. இத்திறப்பால்தான் குடைவரைக்குள் வெளிச்சம். இதன் வழி விழும் மழைநீர் குடைவரைக்குள் சென்றுவிடாதபடி சிமெண்ட்டால் தடுப்புச் சுவரெழுப்பி நீரை வெளிக்கொண்டு செல்லக் காலமைத்துள்ளனர்.

குடைவரை முகப்பு

முகப்பு, செவ்வகமான மண்டபம், கருவறை என அமைந்துள்ள இக்குடைவரை வடக்குப் பார்வையாகத் தந்திவர்மன் காலத்தில் குவாவன் சாத்தன் என்னும் முத்தரையரால் செய்விக்கப்பட்டது. 4.69 மீ. நீளமும், 66 செ. மீ. அகலமும் உள்ள குடைவரையின் முகப்பு, நடுவில் இரு முழுத்தூண்களும் பக்கவாட்டில் இரு அரைத்தூண்களும் கொண்டுள்ளது. சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்பில் உருவாகியுள்ள இத்தூண்களின் மேல் விரிகோணப் போதிகைகள். கீழ்க்கை பெரியதாகவும் மேற்கை சிறியதாகவும் உள்ள இப்போதிகைகள் சிறு மடிப்புடன் உத்திரம் தொடுகின்றன. கனமான உத்திரத்தின் மேல் அகன்ற, பிதுக்கமான வாஜனம். மிக அருமையாகவே இது போன்ற அகலமான வாஜனங்களைக் குடைவரைகளில் காணமுடிகிறது. வாஜனத்தின் மேல், கூரையாய் அமைந்திருக்கும் பாறை வடிவமைக்கப்பெறாத கபோதமாகியுள்ளது. கபோதத்திற்கு மேலே உள்ள பாறைப் பகுதியில் நான்கு நீளமான அகழ்வுகள் ஒன்றுக்கொன்று சற்று இடைவெளியுடன் காணப்படுகின்றன. இவற்றுள் மேலது ஆழமற்றும் ஏனையன சற்று ஆழமாகவும் வெட்டப்பட்டுள்ளன.

முகப்பு வாஜனம் அரைத்தூண்களையொட்டிச் சிறு தூண் போல தரை வரை இறக்கப்பட்டுள்ளது. இதே அமைப்பு முகப்பின் பின் புறத்தேயும் (தெற்கு) காட்டப்பட்டுள்ளது. முகப்புத் தரை, முன்னுள்ள தரையைவிட 1-2 செ. மீ. உயரமாக உள்ளது. முகப்பு அரைத்தூண்களை ஒட்டியமைந்துள்ள பக்கச் சுவர்கள் நன்கு சமன் செய்யப்பட்டுள்ளன. கிழக்கு அரைத்தூணை அடுத்துள்ள சுவரின் வட முகக் கீழ்ப்புறத்தே சிறு தள அமைப்பு காணப்படுகிறது. வடமுகம் சமன் செய்யப்பட்டுள்ள நிலையும் இத்தள அமைப்பும் இங்கு ஏதோ ஒரு சிற்பத்தை உருவாக்க எண்ணமிட்ட சூழலைத் தெரிவிக்கின்றன.

முகமண்டபம்

கிழக்கு மேற்காக 6.46 மீ. நீளமும் தெற்கு வடக்காக 4.35 மீ. அகலமும் கொண்டு செவ்வகமாய் அமைந்துள்ள முகமண்டபத்தின் கிழக்குப் பகுதியில் மேற்கு நோக்கிய கருவறை.[51] பொதுவாகக் கருவறைகள் முகமண்டபத்தின் பின் சுவரிலோ, பக்கச் சுவரிலோ உட்புறமாகக் குடையப்பட்டிருக்கும். சில இடங்களில், முகமண்டபத்திற்குள் இலேசான பிதுக்கத்துடன் காட்டப்பட்டிருக்கும். ஆனால் இங்கோ, கருவறை முழுவதுமாய் முகமண்டபத்திற்குள் அமைந்துள்ளது.[52] முகமண்டபக் கிழக்குச் சுவரின் பெரும்பகுதியைத் தன் பின் சுவராய்க் கொண்டுள்ள கருவறை, தென்புறத்தே முகமண்டபத் தென் சுவரின்

கிழக்குப் பாதியைத் தன் தென்புறச் சுவராக்கிக் கொண்டுள்ளது. வட புறத்தே முகப்புக்கும் கருவறையின் வட சுவருக்கும் இடையில் 1.25மீ. இடைவெளி விடப்பட்டுள்ளது. முகமண்டபத்திற்குள் 2.10மீ. பக்க அளவு கொண்டு சதுரமாக அமைந்துள்ள இக்கருவறையின் எதிரே முக மண்டபத்தின் மேற்குச் சுவரில்,[53] 3.35 மீ. அகலத்தில் 1.67மீ. உயரத்திற்குத் தெற்கிலிருந்து வடக்காக முருகன், சங்கரநாராயணர்,[54] கொற்றவை[55] ஆகிய இறை வடிவங்களைச் செதுக்கியுள்ளனர்.

சண்டேசுவரர்

தென் சுவரின் நடுப்பகுதியில்[56] 3.14 மீ. நீளத்திற்கு 84 செ.மீ. உயரத்திற்கு வீரபத்திரர் மற்றும் பிள்ளையார் பாதுகாப்பில் எழுவர்

அன்னையர், பாறைச் சிற்பங்களாய் எழுந்தருளியுள்ளனர். முகமண்டப வடசுவரில்[57] கிழக்கு அரைத்தூணையொட்டிய 51.5 செ.மீ. அகலமும் 1.01மீ. உயரமும் உள்ள கோட்டத்தில் சண்டேசுவரர் அமர்த்தப் பட்டுள்ளார். இக்கோட்டம் முகமண்டபத் தரையிலிருந்து 52 செ.மீ. உயரத்தில் உள்ளது. முகமண்டபத்தின் நடுவே கருவறையை நோக்கி அமைந்துள்ள உயரமான தளத்தில் நந்தியொன்று இருத்தப்பட் டுள்ளது. பாறையிலேயே வெட்டப்பட்டுள்ள இது போன்ற நந்தி வடிவங்கள் திருமெய்யம் சத்தியகிரீசுவரர் திருக்கோயில், திருக் கோளக்குடி கோளகிரிநாதர் கோயில் போன்ற குடைவரைகளிலும் காணப்படுகின்றன. தென் வடலாக 98 செ.மீ. அளவும் கிழக்கு மேற் காக 1.01மீ. அளவும் கொண்டமைந்துள்ள நந்தி தளத்தின் உறுப்பு களாகக் கீழிருந்து மேலாக உபானம், ஜகதி, பாதங்களோடு கூடிய கண்டம், பெரு வாஜனம் ஆகியன காட்டப்பட்டுள்ளன. வாஜனத்தின் மேற்பரப்பே தளப் பரப்பாக, நந்தி சிவபெருமானை நோக்கிய நிலை யில் அமர்ந்துள்ளது.

முகமண்டபத்தின் கூரையும் தரையும் நன்றாகப் பொளியப்பட்டுச் சமன் செய்யப்பட்டுள்ளன. தென் சுவரிலும் மேற்குச் சுவரிலும் கூரையையொட்டி வாஜனமும் அதன் கீழ் உத்திரமும் காட்டப்பட் டுள்ளன. வடபுறத்தே முகப்பின் உத்திரமும் வாஜனமும். இவ்வுத் திரத்தின் முழு நீளத்திற்கும் கிழக்கு மேற்காக இரு ஆழமான கீறல்கள் வெட்டப்பட்டுள்ளன.

கருவறை

73 செ.மீ. உயரமுள்ள கருவறைத் தாங்குதளம் உபானம், ஜகதி, எண்பட்டைக் குமுதம், கம்புகளின் அரவணைப்பில் பாதங்களோடு அமைந்த கண்டம், பட்டிகை என்னும் உறுப்புகளோடு பாதபந்தமாக அமைந்துள்ளது.[58] தாங்குதளத்தின் மீதெழும் சுவரில் வடக்கில் நான் கும் மேற்கில் நான்குமாக எட்டு நான்முக அரைத்தூண்கள், துணைக் கம்பிலிருந்து கண்டபாதத் தொடர்ச்சியாக எழுந்து விரிகோணப் போதி கைகளால் உத்திரம் தாங்குகின்றன. போதிகைகள் உத்திரம் தொடு மிடத்தில் சிறு மடிப்பு காட்டப்பட்டுள்ளது. உத்திரத்தையடுத்து வாஜ னமும் கூரையும்; கபோதமில்லை. கருவறையின் உத்திரமும் வாஜன முமே, முகமண்டபத் தெற்கு,மேற்குச் சுவர்களின் மீது தொடர்கின்றன. முகமண்டபத்தின் கிழக்கு மற்றும் வடகிழக்குச் சுவர்களிலோடும் வாஜனம், கருவறை வட சுவர் வாஜனத்தின் தொடர்ச்சியாகக் காட் டப்பட்டுள்ளது. முகமண்டபத்தின் இப்பகுதிகளில் கருவறை உத்திரத் தின் நீட்டல் இல்லை. மேற்கு அரைத்தூணையொட்டிக் காணப்படும் வட சுவர்ப் பகுதியிலும் உத்திர அமைப்பு இல்லை.

கருவறையின் முன்பு உபானம் சந்திரக் கல்லாக வளைத்து விடப் பட்டுள்ளது. இதன் மீது மூன்று படிகள், பாறையிலேயே வெட்டப் பட்டுள்ளன. 77.5 செ.மீ. அகலமும் 1.37 மீ. உயரமும் கொண்டமைந் துள்ள கருவறை வாயிலைத் திருநிலை வரையறுக்கிறது. திருநிலைக் கால்களின் ஒரு பகுதி செதுக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளது. மேல்நிலைக்கு மேலே பாதங்களோடு கூடிய கண்டப்பகுதி போன்ற அமைப்பு காட்டப்பட்டுள்ளது. திருநிலைக் கால்களை அடுத்தமைந் துள்ள அரைத்தூண்களுக்கும் சுவரின் திருப்பத்தில் உள்ள அரைத் தூண்களுக்கும் இடைப்பட்ட பகுதியில் பக்கத்திற்கொன்றாய்க் கோட்டங்கள் அகழப்பட்டுள்ளன. வாயிற்காப்போர் வடிவங்கள் செதுக்கப்பட்டுள்ள இக்கோட்டங்கள், வடபுறத்தே 78 செ.மீ. அகலத் திலும் தென்புறத்தே 83 செ.மீ. அகலத்திலும் உள்ளன. கருவறையின் பக்கச் சுவர்களும் கூரையும் வெறுமையாக உள்ளன. கீழ்நிலையை விடச் சற்றுத் தாழ்நிலையிலுள்ள கருவறைத் தரையின் நடுப்பகுதியில் வட்டமான ஆவுடையாரும் லிங்கத் திருமேனியும். சுவர்களின் மேலே நாற்புறமும் உத்திரமும் அதன் பிதுக்கமாக வாஜனமும் காட்டப் பட்டுள்ளன.

முழுக்காட்டு நீர் வெளிவர வாய்ப்பாகக் கருவறையின் வடபுறத்தே துணைக் கம்புப் பகுதியில் துளையிடப்பட்டுள்ளது. முகமண்டபத் தரையில் விழும் இந்நீர் மண்டபம் முழுவதும் பரவாதிருக்கத் தரையில் வளைவான மேடு உருவாக்கியிருப்பதுடன், நீர் வெளிச் செல்ல இரு கால்களும் வெட்டப்பட்டுள்ளன. கருவறைச் சுவரையொட்டி கிழக்காக ஓடும் கால் வடக்கில் திரும்பிப் பின் மேற்கு நோக்கி நீண்டு, மீண்டும் வடமுகமாய் ஓடி, முகப்புக்கு முன்னாலுள்ள தரைப் பகுதியையும் தாண்டிப் பாறையின் கிழக்குச் சரிவுத் தளத்திற்கு முன்னுள்ள பெரு வடிகாலொன்றில் முடிகிறது. இந்தப் பெரு வடிகால் முன் மண்டபத் தின் மேற்குப் பகுதியிலுள்ள சிமெண்ட் தடுப்புக்குள் வந்து சேருமாறு வெட்டப்பட்டுள்ளது. முகமண்டபத் தரையிலிருந்து கருவறை நீரைச் சுமந்து வரும் மற்றொரு கால் நேரிடையாக வடக்கு நோக்கி வந்து பெரு வடிகாலின் பாதையில் முடிகிறது.

சிற்பங்கள்

1. முகமண்டபத் தென்சுவர் சிற்பங்கள்

தென் சுவரில் கிழக்கிலிருந்து மேற்காக வீரபத்திரரும்[59] நான்முகி, மயேசுவரி, முருகி, வைணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி என எழுவர் அன்னையரும்[60], பிள்ளையாரும் பாறைச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளனர். கனத்த சடைகளும், யோக பட்டமும்

தெற்குச் சுவர் சிற்பங்கள்

தெற்குச் சுவர் சிற்பங்கள்

கொண்டு யோக அமர்வில்[61] காணப்படும் வீரபத்திரர் சிற்பத்தின் முகமும் கைகளும் பெரிதும் சிதைந்துள்ளன. இவரது வல முன் கை சின் முத்திரையில் இருப்பது போல் தோன்றுகிறது. இட முன் கை இடைத்தொடை மீது இருத்தப்பட்டுள்ளது. பின் கைகளில் வலப்புறம் பரசும் இடப்புறம் மானும் காட்டப்பட்டுள்ளன.

எழுவர் அன்னையர் அனைவருமே வலக்கால் கீழிறங்க, இடக் காலைத் தளத்தின் மீதிருத்தி மகிழ்வமர்வில்[62] உள்ளனர். அனைவருமே வல முன் கையால் காக்கும் குறிப்பு காட்டி இட முன் கையைத் தொடை மீது இருத்தியுள்ளனர். மார்புக் கச்சு, மாறுபட்ட கழுத்தணிகள், பட்டாடை, கைகள் மற்றும் கால்களில் அணிகள் என அழகுபடுத்தப்பட்டிருக்கும் இவ்வம்மைகளின் அருகே அவரவர்க்குரிய கொடிகளும் காட்டப்பட்டுள்ளன. இக்கொடிகள் கொடித்தண்டும் அதன் மீது அவரவர்க்குரிய சின்னமும் தண்டிலிருந்து வலப்புறமாய்ப் பறக்கும் கொடியுமென அமைந்துள்ளன. இது மலையடிப்பட்டிக்கே உரிய தனித்தன்மையெனலாம். சாமுண்டிக்கு மட்டும் மார்புக் கச்சு இல்லை.

சடை மகுடமும் மூன்று முகங்களுமாய்க் காட்சி தரும் நான்முகியின் பின் கைகளும் முகமும் சிதைந்துள்ளன. இவரருகே அன்னக் கொடி. இடப் பின் கையில் மானேந்தி சடை மகுடமும் மகர குண்டலங்களு மாய்க் காட்சி தரும் மயேசுவரியின்[62A] வலப் பின் கையிலுள்ள பொருள் அடையாளம் காண முடியாதபடி சிதைந்துள்ளது. இவரருகே உள்ள கொடிப்பகுதியும் சிதைந்துள்ளது. முருகி முருகனுக்குரிய சென்னியுடன், பின் கைகளில் சக்தியும்[63] அக்கமாலையும் காட்டிக் கரண்ட மகுடத்துடன், பனையோலைக் குண்டலங்கள் செவிகளை அழகு செய்யக் காட்சி தருகிறார். வலப்புறமுள்ள கொடித்தண்டின் மேல் மயில் காட்டப்பட்டுள்ளது. வைணவியின் முன் கருடன்[64] கொடித் தண்டில் வணக்க முத்திரை காட்டி அமர்ந்துள்ளார். சங்கும் பிர யோக சக்கரமும் பின் கைகளில் கொண்டு, கிரீட மகுடத்துடன் மகர குண்டலங்கள் குலுங்கக் காட்சியளிக்கிறார் இவ்வம்மை. வராகி கலப் பைக் கொடி கட்டியம் கூற, பின் கைகளில் வலப்புறத்தே பிரயோக நிலையில் சக்கரமும் இடப்புறத்தே சங்கும் ஏந்திக், குண்டலங்களற்ற சிறிய செவிகளும் பன்றி முகமுமாய் அமர்ந்துள்ளார். அடுத்து இந்திராணி. அக்கமாலையும் அங்குசமும்[65] பின் கைகள் ஏந்தக், கிரீட மகுடத்துடன் கம்பீரமாய் அமர்ந்திருக்கிறார். இவர் முன் யானை நிற்கும் கொடித்தண்டு. வலப் பின் கையில் கத்தியும் இடப் பின் கையில் வியப்பும் காட்டிப் பனையோலைக் குண்டலங்களும் சடை பாரமுமாய்க் காட்சி தரும் சாமுண்டியின்[66] முன்னுள்ள கொடித்தண்டில் இருப்பது ஆந்தை[67] போல் தோன்றுகிறது.

அம்மைகளையடுத்துப் பிள்ளையார், வலப்புறத் தந்தமிழந்து மகா ராஜ லீலாசனத்தில் இடப் பின் கையில் கரும்புத்தோகை பிடித்தபடி வலம்புரி நாயகராய் அமர்ந்துள்ளார். முப்புரிநூலும் கரண்ட மகுட மும் அணிந்துள்ள இவரது வல முன் கையிலும் துதிக்கையிலும் மோதகங்கள்.[68] வலப் பின் கையில் ஒன்றுமில்லை. இட முன் கை தொடையின் மேல் இருத்தப்பட்டுள்ளது.

குடைவரையோடு செதுக்கப்பட்டிருக்கும் எழுவர் அன்னையர் சிற் பங்கள் பல்லவர் பகுதியில் பார்க்க முடியாதது. பாண்டியர் பகுதியில் திருக்கோளக்குடி, திருக்கோகர்ணம், வரிச்சியூர் போன்ற குடைவரை களில் இது போன்ற எழுவர் அன்னையர் சிற்பங்கள் உள்ளன என்றாலும் கொடிகளோடு கூடிய சிற்பங்கள் தமிழகக் குடைவரைகளில் மலையடிப்பட்டியில் மட்டுமே உள்ளன என்பது இத்தலத்தின் தனிப் பெரும் சிறப்பாகும்.

2. மேற்குச் சுவர் சிற்பங்கள்

மேற்குச் சுவரில் சிற்பங்கள் அமைந்துள்ள பகுதி தெற்கிலிருந்து வடக்காக முப்பிரிவுகளாக்கப்பட்டு முறையே முருகன் சங்கரநாரா யணர், கொற்றவை ஆகியோரைக் கொண்டுள்ளது. தென்மேற்குப் பகுதியில் கிழக்குப் பார்வையாக நின்ற கோலத்தில் முருகன். வல முன் கை காக்க, இட முன் கை இடுப்பில். பின் கைகளில் வஜ்ரமும் அக்கமாலையும்.[69] கரண்ட மகுடத்தின் கீழ்ப்புறத்தே நெற்றி சுற்றிச் சென்னி. சம பாதத்தில், நின்ற கோலத்தில், பனையோலைக் குண்ட லங்களுடன் சன்ன வீரம், வயிற்றுக்கட்டு, கை வளைகள், கங்கணங் கள் என அணிகலன்கள் நிறைந்த அழகுத் தோற்றம். ஆடை முடிச்சு களோ இருபுறமும் கனத்த தொங்கல்களாய்.

சங்கரநாராயணர் வலப்பகுதி சிவனாகவும் இடப்பகுதி பெரு மாளாகவும் இணைந்த தோற்றம்.[70] சிவனாரின் வல முன் கை காக் கும் குறிப்பு காட்டப் பெருமாளின் இட முன் கை இடுப்பிலுள்ளது.[71] வலப் பின் கை மழுவேந்த இடப் பின் கையில் சிதைந்த சங்கு.[72] சிவ னாருக்கேற்ற சிற்றாடை வலப்புறத்தேயும், பெருமாளுக்கான கணுக் கால் வரை நீண்டிருக்கும் பட்டாடை இடப்புறத்தேயும் காட்டப் பட்டிருக்க, இருபுறமும் ஆடை முடிச்சுகளின் அழகுத் தொங்கல்கள்.[73] தலையின் சங்கரப் பகுதியில் அழகிய பிறை. தலையின் ஒரு பகுதி சிதைந்துள்ளதால் மகுடங்களை அடையாளம் காண இயலவில்லை. சங்கரநாராயணரைப் போற்றியபடி மேலே இருபுறமும் ஒளி வட்டத் துடன் கந்தருவர்கள். இருவர் கைகளிலும் மலர்கள். கீழே பக்கத்திற் கொருவராய்க் குத்துக்காலிட்டு அமர்ந்த நிலையில் இரு அடியவர்கள்.

வலப்புறத்தார் அரையாடையணிந்தவராய் வலக்கையைத் தொடை மேல் இருத்தி இடக்கையில் தாமரையேந்தி போற்றுகிறார். மகுடமாய்ச் சுற்றிய சடையும் ருத்திராக்க மாலையும் நீள் செவிகளும் கை வளைகளுமாய்க் காட்சி தரும் இவரெதிரே உள்ள மனித வடிவம் பெரிதும் சிதைந்துள்ளது. இதன் வலக்கையில் மலர். இடக்கை தொடை மீது.

வலப்புறம் பாயும் சிம்மமும்[74] இடப்புறம் எட்டிப் பார்க்கும் மானுமென[75] இரண்டு ஊர்திகளுக்கிடையில் தாமரை மலரில் நின்ற திருக்கோலத்தில் எண்கரத்தம்மையாய்க் கொற்றவை. முன்னிரு கைகள் நீளமானதொரு வாளைப் பிடித்தவாறுள்ளன.[76] வல இரண்டாம் கை காக்கும் குறிப்பு காட்ட, இட இரண்டாம் கையில் கேடயம். பிற பின் கைகளும் கருவிகளும் இருபுறமும் சிதைந்துள்ளன. மார்புக் கச்சணிந்து கைவளைகளோடு கனிந்துள்ள கொற்றவையின் இரு புறமும் அடியவர்கள். வலப்புறம் இருப்பவர் சடையை மகுடமாய் முடிந்து குத்துக் காலிட்டு அமர்ந்துள்ளார். வலக்கை கடகமாய் மார்பருகே இருக்க, இடக்கை இட முழங்கால் மீது இருத்தப்பட்டுள்ளது. பட்டாடையும் இடுப்பில் கத்தியும் பல இடங்களில் அணிகலன்களுமாய்க் காட்சி தரும் இவரின் எதிரே உள்ள வடிவம் பெரும் சிதைவுக்காளாகியுள்ளது.

3. வட சுவர் சிற்பம்

சண்டேசுவரர்

முகமண்டப வட சுவரில் தென் பார்வையாய்ச் சடை பாரமும், பனையோலைக் குண்டலங்களும், அரையாடையும் அளவான அணிகலன்களுமாய் வலக்கையில் மழுவேந்தி[76A] இடக்கையைத் தொடை மீதிருத்தி மகிழ்வமர்வில் காட்சி தரும் சண்டேசுவரர் அற்புதமான சிற்பமாகும். இக்காலகட்டத்தில் வடிக்கப்பட்டிருக்கும் சண்டேசுவரர் சிற்பங்கள் அனைத்துமே எழிலானவை. சான்றாக அரிட்டாபட்டி, தேவர் மலைக் குடைவரைச் சிற்பங்களைச் சுட்டலாம்.

4. வாயிற் காவலர்கள்

கருவறை வாயிலின் இருமுறமும் உள்ள கோட்டங்களில் நல்ல உடற்கட்டும், ஆடையணிகளுமாய்க் காட்சி தரும் காவலர்கள்.[77] இவர்களுள் வலப்புறம் இருப்பவர் வலப்பாதத்தைச் சமமாகவும் இடப் பாதத்தைத் திரஸ்ரயமாகவும் வைத்து நேர் நின்ற கோலத்தில் வலக் கையில் எச்சரிக்கை முத்திரை காட்டி வருபவரை எச்சரிக்கிறார். பாம்பொன்று சுற்றியுள்ள உருள் பெருந்தடி மீது இடக்கை. பாம்பின் தலை, தடியின் கீழ்ப்பகுதியில் காட்டப்பட்டுள்ளது. முப்புரிநூல்,

வயிற்றுக்கட்டு, கைவளைகள், கங்கணங்கள், கழுத்தட்டிகை, பனை யோலைக் குண்டலங்கள், அரையாடை, அதன் பக்கத் தொங்கல்கள் என்பன இரண்டு காவலர்களுக்கும் உள்ளன. வலப்புறத்தாரின் வலத்

கருவறை வாயிலும் வலப்புறக் காவலரும்

தோளிலிருந்தும், இடப்புறத்தாரின் இடத்தோள் அருகிருந்தும் பட மெடுத்தெழும் பாம்புகள்.[78] கழுத்தின் இருபுறமும் சரியும் சடைக் கற்றைகள் இருவர்க்குமே உள்ளன. வலப்புறத்தார் பட்டிகை மீதுள்ள தளத்தில் நிற்க, இடப்புறத்தார் தளம் சிதைந்துள்ளது. இவரது இடப்பாதம் சம பாதமாய் அமைய, வலப்பாதம் மழுவில் பொருத்தி யுள்ள கத்திப் பகுதியில். இந்த மழு உருள் பெருந்தடி போலவே வடி வமைக்கப்பட்டுக் கீழ்ப்பகுதியில் கத்தி பொருத்தப்பட்டுள்ளது. இதைப் பாம்பொன்று சுற்றியுள்ளது. காவலரின் வலக்கை தடியை அணைத்

திருக்க, இடக்கை வியப்பில் மலர்ந்துள்ளது. இடக் காவலரின் மகுடப் பக்கங்களில் காணப்படும் இரு வளைவுகளும் அவற்றிற்கு இடைப்பட்ட பகுதியும் முத்தலையீட்டியை நினைவுபடுத்துகின்றன. மகுடத்தின் மேல் முத்தலையீட்டியுடன் உள்ள சிற்பங்களையும் (தஞ்சாவூர் ராஜராஜீசுவரம்) தலையின் பக்கவாட்டில் கத்திப் பகுதிகளுடன் அமைந்துள்ள சிற்பங்களையும்தான் (குன்றக்குடி இரண்டாம் குடைவரை) இதுநாள்வரை பார்த்திருக்கிறோம். மகுடத்தின் பக்கங்களிலேயே கத்திப் பகுதிகள் கொண்டமைந்த முத்தலையீட்டி அமைப்பு இக்காவலரின் தனிப்பெருஞ் சிறப்பாகும்.

பிற திருமுன்கள்

சிவன் கோயில் அமைந்துள்ள வளாகத்தின் வடபுறத்தே இரு சிறு திருமுன்கள் பிற்காலத் திருப்பணிகளாய் நிற்கின்றன. இவற்றையும் சிவன் கோயிலையும் உள்ளடக்கி மதிலொன்று இருந்தது போல் சிதறிய சிதைவுகள் இன்றும் காணப்படுகின்றன. வடமேற்கில் உள்ள திருமுன் வெற்றறையாக உள்ளது. இது மடப்பள்ளியாக இருந்ததென் கின்றனர் ஊர் மக்கள். இப்போது இது இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறைக் காவலரின் தனியறையாக மாறியுள்ளது.

மற்றொரு திருமுன் உள்மண்டபம், கருவறை என அமைந்துள்ளது. கருவறையில் அம்மன் இருக்கிறார். பின் கைகளில் மலரேந்தி, முன் கைகளைக் காப்பிலும் அருளிலும் காட்டி நிற்கும் இவ்வம்மையை வடிவுள்ள மங்கையென்று கல்வெட்டு அழைக்கிறது. கருவறைக்கு முன்னாலுள்ள முகமண்டபத்தின் தெற்கு முகத்தில் கரண்ட மகுடத்துடன் பிள்ளையாரின் கரணச் சிற்பம். முன் கைகளுள் ஒன்று கடகத்திலும் மற்றொன்று மோதகம் கொண்டும் இருக்க, வலப் பின் கை அர்த்த ரேசிதத்தில். இடம்புரியாய்ச் சுருண்ட துதிக்கை, இடக்கை மோதகத்தைச் சுவைக்கிறது. இடக்கால் ஊர்த்வ ஜாநுவில் உயர்ந்திருக்க, வலப்பாதம் பார்சுவத்தில். இவர் இடப் பின் கையில் கொண்டிருக்கும் பொருளை அடையாளம் காண முடியவில்லை. சிவன் கோயிலின் மேற்கே நிறைவடையா நிலையில் தனிச் சிற்பமொன்று நிறுத்தப்பட்டுள்ளது.

கல்வெட்டுகள்

சிவன் கோயில் வளாகத்திலிருந்து ஆறு கல்வெட்டுகள் ஏற்கனவே படியெடுக்கப்பட்டுள்ளன.[79] இவை தவிர துணுக்குகளாய்ச் சிதறிக் கிடக்கும் முதலாம் இராசேந்திரர், முதலாம் குலோத்துங்கர் காலக் கல்வெட்டுகள் இரண்டும் அய்யனார்க்குத் தரப்பட்ட அர்ச்சனா போகம் பேசும், தொடர்புடைய துணுக்குக் கல்வெட்டுகள் மூன்றும் இக்

கட்டுரையாசிரியர்களால் கள ஆய்வில் கண்டறியப்பட்டன. இக் கோயிலின் சுற்றுப்புறக் குன்றுகளை ஆராய்ந்தபோது, தென்கிழக்குக் குன்றின் உச்சிப் பாறையில் எட்டாம் நூற்றாண்டு எழுத்தமைதியில் வெட்டப்பட்டிருந்த தமிழ்க் கல்வெட்டொன்றும் அதனருகே பிற்காலத் தெலுங்குக் கல்வெட்டொன்றும் கண்டறியப்பட்டன.[80] தெலுங்குக் கல்வெட்டின் அருகே இன்னதென விளங்கிக்கொள்ள முடியாத சில எழுத்துக்கள் காணப்படுகின்றன. இவை குறித்து ஆய்வு மேற் கொள்ளப்பட்டுள்ளது.

படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளுள் காலத்தால் பழமையான இரண்டும் தந்திவர்மரின் பதினாறாம் ஆட்சியாண்டுக்குரியவை. இவற்றுள் ஒன்று இக்குடைவரையை எடுப்பித்தவர் பற்றிய தகவலைத் தருகிறது. விடேல் விடுகு முத்தரையன் குவாவன் சாத்தன்[81] என்பார் திருவாலத்தூர் மலையில் குடைந்து தளி செய்து இறைவனை எழுந் தருளுவித்ததாகக் கூறும் இக்கல்வெட்டில் கீழ்ச்செங்கிளி நாட்டு நாட் டார் குறிக்கப்பெறுகின்றனர்.[82] கிழக்கு முழுத்தூணின் மேற்சதுரம் மற்றும் கட்டுப் பகுதியில் வெட்டப்பட்டிருக்கும் இக்கல்வெட்டின் கீழ்ப் பகுதி அழிந்துபோய்விட்டது.[83]

தந்திவர்மர் காலத்ததாகிய மற்றொரு கல்வெட்டு மேற்கு முழுத் தூணின் கீழ்ச்சதுர வட முகத்தில் தொடங்கிக் கிழக்கு முழுத்தூணின் கீழ்ச்சதுர வட முகத்தில் முடிகிறது.[84] இந்த இரண்டனுள் கிழக்கு முழுத் தூண் சதுரப் பகுதியிலிருக்கும் கல்வெட்டின் பிற்பகுதியை மட்டுமே பார்த்த நிலையில், புதுக்கோட்டைக் கல்வெட்டுகள் தொகுதியை 1929இல் பதிப்பித்தவர்கள் அதைத் தனிக் கல்வெட்டாகக் கருதி வெளி யிட்டுள்ளனர்.[85] இவர்கள் மேற்கு முழுத்தூண் கீழ்ச்சதுரத்திலுள்ள கல்வெட்டைக் கவனிக்கவில்லை போலும். மைய அரசுக் கல்வெட்டுத் துறையினரின் கல்வெட்டறிக்கையில் இரண்டு பகுதிகளும் இடம் பெற்றுள்ளன. ஆனால் இரண்டையும் தனித் தனிக் கல்வெட்டுகளாகக் கருதி, இரு வேறு எண்கள் தந்து, ஒன்றன் பின் ஒன்றாக இவற்றைப் பதிப்பித்துள்ளனர்.[86] கல்வெட்டின் பிற்பகுதியை முதற் கல்வெட்டாக வும் முற்பகுதியை இரண்டாம் கல்வெட்டாகவும் பதிப்பித்து, இரண் டாம் கல்வெட்டுக்கான விளக்கக் குறிப்புப் பகுதியில் இக்கல்வெட்டின் முடிவு அழிந்து போய்விட்டதென்றும் கருத்து தெரிவித்திருக்கிறார் கள்.[87]

அறிக்கையையும் தொகுதியையும் தடுமாறச் செய்திருக்கும் தந்தி வர்மரின் இந்தக் கல்வெட்டும் அவரது பதினாறாம் ஆட்சியாண்டிலேயே (கி. பி. 812) வெட்டப்பட்டுள்ளது.[87A] குவாவன் சாத்தன் திருவாலத் தூர் இறைவனுக்குத் திருவிளக்கு எரிப்பதற்காக நெய் அட்டும்

பொருட்டு இக்கோயிலுக்கு வழங்கிய குடிகளின் பட்டியல் இக்கல்வெட்டின் முதற்பகுதியில் இடம் பெற்றுள்ளது. மாயான் காடன், மாயான் வில்லி, காரி பொதுவன், காரி ஈசுவரனின் மக்கள், நக்கன் கோணை, நக்கன் நாரணன் என்பார் அக்குடிகளாவர். கல்வெட்டின் பிற்பகுதி இப்பட்டியலோடு நக்கன் அன்னனையும் இணைக்கிறது. மேலும் திருவாலத்தூர் மகாதேவர்க்குத் திருவிளக்கினுக்கு நக்கன் கோணையை அட்டின பரிசு போல, செங்கிளி நாட்டு மன்றாடிகளான மாயன் பேயன், சத்தேகனவன், நாடன் செறப்பன், காரி பரதேன் ஆகியோர் நக்கன் சாத்தன் மக்களைத் திங்கள் நாழிக்கு நெய் அட்ட வைத்த தகவலையும் கல்வெட்டின் பிற்பகுதி தருகிறது.

முன் மண்டபத்தின் வெளிச்சுவர் உட்சுவர் மற்றும் துணைத் தளப் பகுதிகளில் முதலாம் இராசேந்திரரின் கல்வெட்டொன்றும் முதலாம் குலோத்துங்கரின் கல்வெட்டொன்றும் பல துணுக்குகளாய்ச் சிதறியுள்ளன.[88] இவையனைத்தையும் படியெடுத்துப் பொருத்திப் பார்த்ததில் முதலாம் இராசேந்திரர் கல்வெட்டு மெய்க்கீர்த்தியோடு அமைந்துள்ளது தெரியவந்தது. இதன் ஆட்சியாண்டுள்ள பகுதி கிடைக்கவில்லை. கிடைத்திருக்கும் பகுதிகள் இக்கோயிலில் திருப்பதியம் பாடுவார்க்கு நிலம், இறைவழிபாட்டின்போது ஒலிக்க இருபத்திரண்டு பலம் நிறையுள்ள கைம்மணிகள், இறைவனுக்குத் திருநந்தவனம் அமைக்க நந்தவனப்புறமாக நிலம் ஆகியன வழங்கப்பட்டிருந்த செய்தியைத் தருகின்றன.

புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதியில் முப்பத்தைந்தாம் எண்ணிட்டுப் பதிப்பிக்கப்பட்டிருக்கும் கல்வெட்டுத் துணுக்கோடு தொடர்புடைய துணுக்குகள் கிடைத்துள்ளன. இவையனைத்தும் இராசகேசரிவர்மரான முதலாம் குலோத்துங்கர் காலக் கல்வெட்டொன்றின் சிதறல்கள். இவற்றைப் பொருத்திப் பார்த்ததில் முதலாம் குலோத்துங்கரின் நாற்பத்தைந்தாம் ஆட்சியாண்டின்போது இக்கோயிலிருக்கும் இடம் ஜயசிங்க குலகால வளநாட்டுக் கீழ்ச் செங்கிளி நாட்டுத் திருவாலத்தூர் என்றழைக்கப்பட்டமையும் கோயில் அனபாயீசுவரம் என்று பெயர் பெற்றிருந்தமையும் தெரியவருகின்றன. சங்கரதேவி வயக்கல், திருவாலத்தூர் பிச்சன் குளம் என்பன குறிக்கப்பட்டுள்ளன. இக்கோயில் சிவ அந்தணர்களுள் ஒருவராகக் கண்டன் என்பார் பெயரும் கிடைக்கிறது.

இந்த இரண்டோடும் தொடர்புபடுத்த முடியாத நிலையில் மூன்று கல்வெட்டுத் துணுக்குகள் கிடைத்துள்ளன.[88A] பழியன் ஆச்சனான அமரவிடங்கப் பேரையன், பழியன் லோக விடங்கப் பேரையன், திருவாலத்தூர் முத்தரையன் ஆகியோர் திருவாலத்தூர் அய்யனார்க்கு

வெட்டி வயலில் ஒரு மாவரைச் செய் அர்ச்சனா போகமாகத் தந்த தகவலைத் தரும் இப்பகுதிகள் பழியஞ்சாத பரதப் பேரையன், பராசிவன் பட்டன் ஆகிய பெயர்களையும் தருகின்றன.

வீரராசேந்திர சோழ தேவரின் இருபத்திரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில்[89] திருவாலத்தூர் மலை ஜயசிங்க குலகால வளநாட்டுக் கீழ்ச்செங்கிளி நாட்டில் உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. சிவன் கோயில் இறைவன் திருவாலத்தூர் மலையுடையார், அனவாயீசுர முடைய நாயினார் என்று குறிக்கப் பெறுகிறார். அனவாயீசுரமுடைய நாயினாரின் தேவதானமான கீழ்ச்செங்கிளி நாட்டுக் களக்குடி கடமை யைக் கொள்ளும் முறை பற்றிக் கோயில் தானத்தார் களக்குடி ஊரவர் ஆகிய இருவர்க்கும் பொருந்துமாறு முடிவு செய்யப்பட்ட தகவலைத் தரும் கல்வெட்டு, அந்த உடன்பாட்டு விவரங்களையும் வரிசைப் படுத்துகிறது.

i) பயிர் ஏறின நிலத்துக்கு மாத்தால் முக்கல நெல் கொட்டாரத்தில் அளத்தல்.

ii) கிணறு இறைத்து விளைந்த நிலத்துக்கு இதில் அரைப் பரிசு கொள்ளல்.

iii) இம்முதல்களில் ஆயமாகக் (வரியாக) கலத்துக்கு ஆறிலொன்று பண்டாரத்துக்குத் தருதல்.

iv) ஊர்களிலிருந்து மாத்தால் முக்குறுணியாக வந்த நெல். இதைக் கோயில் நெல்லுடனே கட்டிச் செலவாக்கிக் கோயில் நிவந்தம் நீங்கலாகப் பெறுதல்.

வெகுதானிய ஆண்டு தைத் திங்கள் பதினோராம் நாளில் வெட் டப்பட்டிருக்கும் கல்வெட்டு[90] இக்கோயில் இறைவனை வாகீசுவர தேவரென்றும் இறைவியை வடிவுள்ள மங்கையென்றும் குறிக்கிறது. இக்கல்வெட்டு வழக்கமான கல்வெட்டுகளிலிருந்து வேறுபட்டு வியப் பூட்டும் தகவல்களை முன் வைக்கிறது. பூச்சிக்குடியைச் சேர்ந்த ஆவுடையாதேவன் திருநெடுங்களத்திலுள்ள விலைமாது ஒருவரின் வீட்டுக்குப் போய் அவரோடு உறவாயிருக்கையில், அந்தப் பெண்மணி இவரோடு நில்லாமல் மற்றொரு பிராமணனை அழைத்து வந்து வீட்டில் இருந்தது கண்டு பொறாது இருவரையும் வெட்டிப் போட்டு மலை யடிக்கு வந்து விடுகிறார். வந்த இடத்தில் அவருக்கு இரண்டு கண் களும் பார்வையற்றுப் போகின்றன. இந்தத் துன்பம் நீங்க, வாகீ சுவர சுவாமிக்குத் தம்முடைய வயலைக் கொடையளிப்பதாக வேண்டிக் கொள்கின்றார். இறைவன் பார்வை கொடுக்கிறார். வேண்டுதலை

நிறைவேற்ற ஆவுடையாதேவன் தம்முடைய காணியான ஆவுடையான் குடிக்காட்டை கல் நாட்டி இறைவனுக்குத் தந்தார். இந்த அறத்துக்குக் கெடுதல் நினைப்பவர்கள் வாகீசுவர சுவாமி திருமுன்னுக்கு விரோதியாவதுடன் கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்துக்கு ஆளாவர் என்று எச்சரிக்கை விடுத்துக் கல்வெட்டை முடிக்கிறார் தேவன்.

செய்த தவறுக்குத் தண்டனையாய்ப் பார்வை பறிபோவதும் இறைவன் முன் வேண்டுதல் வைத்ததும் பார்வை மீள்வதும் சுந்தரர் காலத்திலிருந்து நடந்துவரும் நிகழ்ச்சியாகும். தந்த உறுதியை மீறித் திருவொற்றியூரைத் தாண்டும் சுந்தரர் பார்வையிழப்பதும் வழியில் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதரை வழிபட்டு ஒரு கண் பார்வையும் திருவாரூரில் மறு கண் பார்வையும் பாடப்பாட அவருக்கு மீண்டும் வருவதும் சேக்கிழார் வரிகளில் தெளிவாய்ப் படமாகியுள்ளன.[91]

திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள பெருங்குடியிலுள்ள பெருமுடியீசுவரத்துக் கல்வெட்டொன்றும்[92] இது போன்ற தகவல் ஒன்றைத் தருகிறது. இவ்வூர் சேர்ந்த கூத்தன் என்னும் பொற்கொல்லர் சிறு வயதில் பார்வையிழந்த தம் மகவான நல்ல மங்கைக்கு இறைவனை வேண்டிப் பார்வை கிடைத்த மகிழ்ச்சியில், தங்க நெற்றிப் பட்டம் செய்து பெருமுடியீசுவரர்க்கு வழங்கினாராம். இந்நிகழ்ச்சி ஒய்சள மன்னர் வீரராமநாத தேவரின் பத்தாம் ஆட்சியாண்டில் நடைபெற்றதாகக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

குன்றின் உச்சிப் பாறையிலுள்ள கல்வெட்டு எட்டாம் நூற்றாண்டு எழுத்தமைதியில் தமிழில் உள்ளது. கறையூர் ஆலங்காரிக்குப் பிச்சும் பிராந்தும் அமனி எனக் கூறும் இக்கல்வெட்டால் கறையூரைச் சேர்ந்த ஆலங்காரி என்பாருக்குப் பித்தும் அச்சமுமே வழியாக உள்ளன என்ற தகவலைப் பெற முடிந்தாலும், காரி, பிச்சு, பிராந்து, அமனி என்னும் சொற்களுக்குப் பேரகராதி தரும் பொருள்களை[93] நோக்கும்போது இக்கல்வெட்டிற்கு இதனினும் ஆழ்ந்த பொருள் இருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது.[94] இதனருகே வெட்டப்பட்டிருக்கும் தெலுங்குக் கல்வெட்டு எப்போதும் சேவை செய்பவராய் மங்கான் என்பாரைச் சுட்டுகிறது.

குடைவரைகளின் காலம்

சிவபெருமானின் குடைவரை தந்திவர்மப் பல்லவரின் பதினாறாம் ஆட்சியாண்டில் குவாவன் சாத்தன் என்னும் முத்தரையரால் எடுக்கப்பட்டதற்குக் கல்வெட்டுச் சான்றிருக்கும் நிலையில் அதன் காலத்தை நிர்ணயிப்பது எளிதாகிறது. பெருமாள் குடைவரையில் இது போல்

கட்டுமானம் சுட்டும் கல்வெட்டெதுவும் இல்லை. குடைவரையின் அமைப்பு, சிற்பங்களின் கலைமுறை கொண்டுதான் இதன் காலத்தை நிர்ணயிக்க முடியும். இங்குள்ள பெரும்பான்மையான சிற்பங்கள் சுதையும் வண்ணமும் கொண்டு உருமாறியுள்ளதால் அவையில்லா மலுள்ள வாயில் அடியவர் துணை கொண்டே காலத்தை நிர்ணயிக்க வேண்டியுள்ளது. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட சோழர் கல்வெட்டு களும் கால நிர்ணயிப்புக்குக் கை கொடுக்கின்றன. குடைவரை அமைப்பு, சிற்பக் கலைமுறை. கல்வெட்டுகள் ஆகியவற்றின் அடிப் படையில் இக்குடைவரை கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உருவாக்கப்பட்ட தாகக் கொள்வது பொருத்தமாகும்.

ஏற்புக்கோடல்

மலையடிப்பட்டிக் குடைவரைகளின் வளாகத்தில் கள ஆய்வு மேற் கொண்டபோதெல்லாம் உடனிருந்து உதவிய இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறையின் குடைவரைக் காவலர் திரு. செல்லப் பெருமாள், அன்போடு அருகிருந்து ஒவ்வொரு முறையும் இளநீர் வழங்கி, ஒரு முறை மதிய உணவும் படைத்து உற்சாகப்படுத்திய ஊர்ப் பெரியவர் மாலடியார் திரு. அரங்கசாமி, சொன்ன பணிகளையெல்லாம் சொன்ன வாறு முடித்துத் தந்த தம்பி ரமேஷ், குன்றுக் கல்வெட்டைக் கண்டறி யும் பணியில் துணை நின்ற சீதாலட்சுமி ராமசாமி தன்னாட்சிக் கல்லூரியின் வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் கோ. வேணி தேவி, மையத்தின் துணைக் கல்வெட்டாய்வர் அர. அகிலா ஆகியோர் இக்கட்டுரையாசிரியர்களின் நன்றிக்குரியவர்கள். களப் பயணங்கள் ஒவ்வொன்றின்போதும் உணவுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு விடி காலைப் போதிலேயே அவ்வளவையும் தயாரித்தனுப்பிய அன்புள்ளம் கொண்ட திருமதி, திரு. மரிய ஸ்தனிஸ்லாஸ் தம்பதியரும் அவர்தம் செல்வங்களும் இக்கட்டுரையாசிரியர்களின் நெஞ்சார்ந்த நன்றிக் குரியவர்கள்.

அடிக்குறிப்புகள்

1. சிவபெருமானின் குடைவரைக்கு வடக்கில் பெருமாள் குடைவரை இருப்பதாகத் திரு. ராஜு காளிதாஸ் குறிப்பிட்டுள்ளது சரியல்ல. சிவபெருமான் குடைவரைக்கு மேற்கில்தான் பெருமாள் குடை வரை அமைந்துள்ளது. Raju Kalidoss, The Malaiyadippatti Cave Temples, South Asian Studies, vol. IV, 1988, p. 58.

2. இரண்டு குடைவரைகளும் ஒன்றுக்கொன்று மிக அருகில் அமைந்து அண்மைக் கால மதிலொன்றால் சூழப்பட்டிருப்பதாக ஓரிடத்தில் எழுதும் திரு. ராஜு காளிதாஸ், பிறிதோர் இடத்தில் சிவபெருமானின் குடைவரைக்குச் சில கஜத் தொலைவில் பெருமாள் கோயில் இருப்பதாகக் குறிக்கிறார். முன் குறித்த நூல் (மு. கு. நூல்), பக். 57, 58.

3. திரு. ராஜு காளிதாஸ் இவ்வம்மையைப் பூதேவி என்கிறார். மு. கு. நூல், பக். 67. திருவுருவ இயல்படி பூதேவியின் மார்பில் கச்சு காணப்படாது. H. Daniel Smith, Vaisnava Iconography, Pancaratra Parisodhana Parisad, Madras, 1969, p. 183; Plate Facing, p. 184.

4. விஷ்ணு குடைவரையின் முன்பாக முகமண்டபம் மற்றும் கோபுரத்தின் எச்சங்கள் காணப்படுவதாகத் திரு. ராஜு காளிதாஸ் குறிப்பிடுகிறார். மு. கு. நூல், பக். 57. இவர் முகமண்டபத்தின் எச்சமென்று எதைக் குறிப்பிடுகிறார் என்பது விளங்கவில்லை. கோபுரத்துக்கும் குடைவரைக்கும் இடையில் எந்தக் கட்டடச் சிதைவும் காணப்படவில்லை. கமலவல்லி நாச்சியார் சிற்பமும் விளக்குத் தூணும் கருடன் சிற்பமும் மட்டுமே உள்ளன. இவற்றுள் கமலவல்லி நாச்சியாரின் சிற்பம் பழைய தாயார் சிற்பமாகும். சிதைவுற்றதால் இதை அகற்றிவிட்டுத் தாயார் திருமுன்னில் புதிய சிற்பத்தைப் பின்னாளில் நிறுவியுள்ளார்கள். விளக்குத் தூணும் கருடனும் இருக்குமிடத்தில் எந்தக் கட்டட அமைப்பும் இருந்தமைக்கான தடயம்கூட இல்லை.

கோபுரம், துணைத் தளம் முதல் பூமிதேசம் வரை முழுமையான முதல் தள அமைப்புடன் நிற்கிறது. மேல்நிலைகள் மட்டுமே காலப்போக்கில் சிதறியுள்ளன. ஒரு தளம் முழுவதுமாய் நிற்கும் இந்தக் கட்டுமானத்தை 'Traces' என்ற சொல்லால் குறிப்பது பொருந்தாது.

5. இத்திருமேனியை விஷ்ணு என்று தவறாக அடையாளம் கண்டுள்ளார் திரு. ராஜு காளிதாஸ். மு. கு. நூல், பக். 67.

6. இந்த மண்டபம் நடுக்காலச் சோழர்கள் காலத்தில் ஏற்பட்டிருக்கலாம் என்று திரு. ராஜு காளிதாஸ் எழுதியுள்ளார். மு. கு. நூல், பக். 59. இது சரியல்ல. கள ஆய்வின்போது இம்மண்டபத் துணைத் தளப் பெரு வாஜனத்திலிருந்து இக்கட்டுரையாசிரியர்கள் இரண்டு புதிய கல்வெட்டுகளைக் கண்டுபிடித்தனர். ஒன்று

இராசகேசரியினுடையது. மற்றொன்று பரகேசரியினுடையது. எழுத்தமைதி, உள்ளடக்கம், ஆட்சியாண்டு கொண்டு நோக்கும் போது இக்கல்வெட்டுகள் முற்காலச் சோழர்களுடையவை என்பது தெளிவாகிறது. எனவே இம்மண்டபம் முற்காலச் சோழர்கள் காலத்தில் கட்டப்பட்டதெனக் கொள்வதே பொருத்த மானது.

7. இம்முகப்புப் பகுதியை முன் மண்டபமாய்க் கொண்டு 'முன் மண்டபத்தை இரு சிம்மத் தூண்கள் தாங்கி நிற்பனவாகக் குடையப்பட்டுள்ளது' என்கிறார் திரு. நடன. காசிநாதன். நடன. காசிநாதன், முத்தரையர், சேகர் பதிப்பகம், சென்னை-600 078, 1994, பக். 95. முகப்பை முன் மண்டப மாய்க் கொண்டதும் இரண்டு தூண்களும் இரண்டு அரைத்தூண் களும் இருக்கும் பகுதியில் இரண்டு தூண்கள் மட்டுமே இருப்ப தாகக் குறித்துள்ளதும் சரியல்ல. திரு. ராஜு காளிதாஸும் இரண்டு தூண்களை மட்டுமே குறிப்பிடுகிறார். மு. கு. நூல், பக். 59.

திரு. தி. இராசமாணிக்கம் நான்கு தூண்களையும் குறிப்பிட்ட போதும் அவை அனைத்தின் கீழும் சிங்கங்களே இருப்பதாகக் கூறுவதுடன் இத்தகு அமைப்பினை உடைய தூண்களும் அரைத் தூண்களும் மாமல்லபுரம் நீங்கலாக வேறு எந்தக் குடைவரை யிலும் உருவாக்கப்படவில்லை என்றும் எழுதியுள்ளார். தி. இராச மாணிக்கம், தென்னகக் குடைவரைக் கோயில்கள், கழக வெளி யீடு, சென்னை, 1989, பக். 51. இந்த இரண்டு கருத்துக் களுமே சரியல்ல. மலையடிப்பட்டிக் குடைவரை முகப்புத் தூண் கள் தனித்தன்மை வாய்ந்தவை. இவையொத்த தூண்கள் தமிழகத்தின் வேறெந்தக் குடைவரைகளிலும், மாமல்லபுரம் உட் படக் காணப்படவில்லை என்பதே உண்மை.

8. 'சிம்மத் தூண்களுக்கு அருகில் பக்கத்துக்கு ஒன்றாக இரு துவார பாலகர்கள் காவல் புரிகின்றனர்' என்று திரு. நடன. காசிநாதன் எழுதியிருக்கிறார். மு. கு. நூல், பக். 96. இக்கூற்று சரியல்ல. சிம்மத் தூண்களை அடுத்திருப்பவை வாயில்களே தவிர துவார பாலகர்கள் உள்ள கோட்டங்களல்ல. கோட்டங்கள் யாளி அரைத் தூண்களை அடுத்தே அமைந்துள்ளன.

9. 'அனைத்தும் குடைந்து செதுக்கப்பட்ட சிற்பங்கள்', என்று திரு. நடன. காசிநாதன் எழுதியிருப்பது சரியல்ல. மு. கு. நூல், பக். 96.

10. இவ்விரு வடிவங்களையும் வராக, நரசிம்மர் தோற்றங்களென்று திரு. ராஜு காளிதாஸ் குறிப்பிடுகிறார். ஆனால் இரண்டுமே இடுப்புப் பகுதிக்கு மேல் அடையாளம் காண இயலா அளவுக்கு முற்றிலுமாய் அழிந்துள்ளன. மு. கு. நூல், பக். 67.

11. கருவறையின் முன்பகுதியை இரண்டு உருளைத் தூண்கள் தாங்குவதாகத் திரு. ராஜு காளிதாஸ் எழுதியிருப்பது சரியல்ல. மு. கு. நூல், பக். 59.

12. உற்சவத் திருமேனிகள் ஏதும் இல்லாமையால் இத்தெய்வத் திருமேனிக்குத்தான் இன்றைய நிலையில் பூசையும் வழிபாடும் நடத்தப்படுகிறது. கள ஆய்வுக்குச் சென்றிருந்தபோது அருகிலுள்ள சிற்றூர்களிலிருந்தும் அவ்வப்போது மக்கள் வந்து இத்திருமேனியை வழிபட்டதைப் பார்க்க முடிந்தது.

13. விஷ்ணு குடைவரை பற்றி எழுதியுள்ள திரு. ராஜு காளிதாஸ், திரு. நடன. காசிநாதன், திரு. தி. இராசமாணிக்கம் ஆகிய மூவருமே கதிரவனைக் குறிப்பிடவில்லை.

14. இந்த வடிவத்தை அரக்கன் என்று குறிப்பிடும் திரு. தி. இராசமாணிக்கம் இதை விபீடணன் என்று வேறு அடையாளம் காட்டுகிறார். மு. கு. நூல், பக். 53.

15. தலையைச் சுற்றி ஒளி வட்டமும் கையில் மலர் மொட்டும் கொண்டுள்ள இந்த வடிவத்தை திக்பாலகர்களுள் ஒருவராகத் திரு. ராஜு காளிதாஸ் குறிப்பிடுவது சரியல்ல. மு. கு. நூல், பக். 64.

16. நான்முகனையும் சேர்த்து எட்டு வடிவங்கள் இருப்பதாகத் தொடக்கத்தில் கூறும் திரு. ராஜு காளிதாஸ், மற்றோர் இடத்தில் ஒன்பது வடிவங்களைப் பட்டியலிடுகிறார் (தும்புரு, நாரதர், பிரம்மா, ஜாம்பவான், மூன்று வித்யாதரர்கள், இரண்டு அப்சரசுகள்). மு. கு. நூல், பக். 64.

17. நிலமகள் சிற்பத்தை 'லட்சுமி' என்று தவறாக அடையாளம் கண்டுள்ளார் திரு. ராஜு காளிதாஸ். மு. கு. நூல், பக். 64. திருமாலுடன் திருமகள் மற்றும் மண்மகள் இங்கு அமைக்கப்படவில்லையென்று வருந்துகிறார் திரு. தி. இராசமாணிக்கம். மு. கு. நூல், பக். 53.

18. 'இங்குள்ள வர்ணப் பூச்சுகள் சித்தன்னவாசல் குடைவரைக் கோயிலில் உள்ளது போன்று தமிழகத்தில் உள்ளவற்றில் மிகவும் தொன்மை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது' என்று திரு. தி. இராசமாணிக்கம் தெரிவிக்கிறார். மு. கு. நூல், பக். 54.

193253

V211 m N93
N95

திரு. சிவராமமூர்த்தி முற்காலச் சோழர்களின் ஓவியத் துணுக்கு கள் இங்கிருப்பதாகக் குறித்த போதும் அவ்வோவியங்களை அடையாளம் காட்டவில்லை. C. Sivaramamurti, South Indian Paintings, Publications Division, 1994, p. 63.
கள ஆய்வில் முற்காலச் சோழர்களுடையதாகக் கருதக் கூடிய ஓவியத் துணுக்குகள் எதையும் இக்குடைவரையில் காண முடிய வில்லை.

19. 'சிற்பங்களின் உருவ அமைப்பில் பல்லவர் பாணி பளிச்சிடு கின்றன. துவாரபாலகர்கள் மீது பாம்புகளும் வலக் கரங்களில் தாமரை மலர்களும் காணப்படுகின்றன. இவை பாண்டி நாட்டுக் கலை வேறுபாட்டைக் காட்டுவதாக உள்ளன' என்கிறார் திரு. நடன. காசிநாதன். மு. கு. நூல், பக். 96. இந்த வரிகளின் வழி, பாம்பும் தாமரையும் வாயிற்கோட்டச் சிற்பங்கள் கொள்வது பாண்டி நாட்டுக் கலைமுறையென்ற முடிவையும், பளிச்சிடும் பல்லவர் பாணியிலிருந்து பாண்டியர் பாணியைப் பிரித்தறிய இந்த இரண்டும் வழிகாட்டல்கள் என்ற தெளிவையும் திரு. நடன. காசிநாதன் தருவதாகக் கொள்ளலாம். இந்த முடிவும் தெளிவும் சரியல்ல என்பதைப் பல்லவர் பகுதிக் குடைவரைச் சான்றுகள் சில நிறுவுகின்றன.

பாம்புச் சான்றுகள்

i) மண்டகப்பட்டுக் குடைவரையின் மேற்கு துவாரபாலகரின் கீரிடத்திற்கு மேலே வளையமிடும் பாம்பு.

ii) வல்லம் முதற் குடைவரையின் வடக்கு துவாரபாலகர் பாம் பையே முப்புரிநூலாய்க் கொண்டுள்ளார்.

iii) அ. மாமல்லபுரம் மகிடாசுரமர்த்தனி குடைவரையின் நடுக் கருவறை வாயிலிலுள்ள வடபுற துவாரபாலகரின் இடத்தோளிலிருந்து மூன்று பாம்புகள் எழுகின்றன.

ஆ. இதே குடைவரையின் தென் கருவறை வாயிலிலுள்ள வட துவாரபாலகர் வலத்தோள் மேல் பாம்பு.

மலர்ச் சான்றுகள்

i) மாமண்டூர் இரண்டாம் குடைவரையின் (ருத்ரவாலீசுவரம்) முதற் கருவறை வாயிலில் உள்ள முனிவர்கள் கைகளில் மலர்கள்.

ii) மாமல்லபுரம் திரிமூர்த்திக் குடைவரையின் முதற் கருவறை வாயிலில் உள்ளவர்கள் கைகளில் மலர்கள்.

iii) சிங்கவரம் உள்மண்டப அரைத்தூண் கோட்ட அடியவர் சிற்பத்தின் கையில் மலர்.

'துவாரபாலகர்கள் மீது பாம்புகளும் வலக்கரங்களில் தாமரை மலர்களும் காணப்படுகின்றன' என்ற கூற்றும் சரியல்ல. இந்த அடியவர்களின் தோளருகே காணப்படும் இரண்டு பாம்புகள் தவிர வேறு பாம்புகளை அவர்கள் மீது காணமுடியவில்லை. கிழக்குக் கோட்ட அடியவர் இடக்கையில்தான் தாமரை மலரைக் கொண்டுள்ளார்.

20. இதை டோலம் அல்லது கஜ அஸ்தம் என்கிறார் திரு. ராஜு காளிதாஸ். மு. கு. நூல், பக். 66. இவையிரண்டுமே வெவ்வேறு கைகள். 'டோல அஸ்தம் தோளிலிருந்து நீட்டப் பெற்றுத் தொங்கியமையும் கை அமைதி. பெண் படிமங்களில் இக்கரத்தைச் சிறப்பாகப் பார்க்கலாம். கையை நேராக நீட்டி மணிக்கட்டில் கைத்தலத்தைக் கீழ்நோக்கிச் சரித்துத் தளிர்க்கை போல் விரல்களை அமைத்துக் கம்பீரமாகப் பிடிக்கும் கை கஜ அஸ்தம். கஜ அஸ்தத்தை ஆடவல்லான் படிமத்தில் காணலாம்'. வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், தொழில் நுட்பக் கல்வி இயக்கக வெளியீடு, சென்னை - 600 020, பக். 44-45. தேவியரின் மலரற்ற கைகள் டோலத்தில்தான் (நெகிழ் கை) உள்ளன.

21. இம்மலர்களைத் தாமரைகளென்று திரு. ராஜு காளிதாஸ் குறிப்பிடுகிறார். மு. கு. நூல், பக். 66. விஷ்ணுவுக்கு வலப்புறம் நிற்கும் திருமகள் கையில்தான் தாமரை உள்ளது. இடப்புறம் உள்ள நிலமகள் கையில் நீலோத்பல மலர் காட்டப்பட்டுள்ளது.

22. இந்த அமர்வை மகாராஜலீலாசனம் என்று சுட்டும் திரு. ராஜு காளிதாசின் கூற்று தவறாகும். மு. கு. நூல், பக். 66. மகாராஜ லீலாசனத்தில் இரண்டு கால்களும் ஒரே தளத்தில் இருக்க வேண்டும். 'பீடத்தில் இரண்டு கால்களையும் வைத்து அமர்ந்து, ஒரு காலைப் பீடத்தின் மீது மடக்கிப் படுக்கையாக வைத்து, மற்றொரு காலை மடக்கி நிறுத்தியமைத்த அமைதி லலிதாசனம். இதே கோலத்தில் ஒரு கையை பீடத்தில் ஊன்றி மறு கையை, மடக்கி நிறுத்திய முழங்கால் மீது முழங்கை படியுமாறு வைத்து நீட்டுவது மகாராஜலீலாசனமாகும்'. வை. கணபதி ஸ்தபதி, மு. கு. நூல், பக். 59-60.

23. இம்மலர் மொட்டுகளைத் தாமரைகளென்று திரு. ராஜு காளிதாஸ் குறிப்பிடுகிறார். மு. கு. நூல், பக். 66.

24. திரு. ராஜு காளிதாஸ் இதைக் கிரீட மகுடமென்று எழுதியிருப்பது சரியல்ல. மு. கு. நூல், பக். 66.

25. திரு. ராஜு காளிதாஸ் இதை மகாராஜலீலாசனமென்று குறித் திருப்பது சரியல்ல. மு. கு. நூல், பக். 67.

26. இதைத் தவறாகக் கரண்ட மகுடமென்கிறார் திரு. ராஜு காளிதாஸ். மு. கு. நூல், பக். 67.

27. இந்தப் பெண்ணோவியத்தைக் கருடன் என்று தவறாகக் குறிப் பிட்டிருக்கிறார் திரு. ராஜு காளிதாஸ். மு. கு. நூல், பக். 67.

28. இதை ஆவாஹன முத்திரை (அழைக்கும் நிலை) என்கிறார் திரு. ராஜு காளிதாஸ், மு. கு. நூல், பக். 64.

29. இத்தாமரை மலர் விஷ்ணு சேசசாயியின் நாபியிலிருந்து வருவ தாகத் திரு. ராஜு காளிதாஸ் எழுதியிருப்பது சரியல்ல. மு. கு. நூல், பக். 64-65. தாமரைத்தண்டு விஷ்ணுவின் இடக்கையருகே நின்றுவிடுகிறது. இடுப்புப் பகுதியிலோ, கொப்பூழ்ப் பகுதி யிலோ ஆடையணிகலன்கள் தவிர வேறெதுவும் காணப்பட வில்லை.

30. இதைக் கமண்டலமென்று தவறாகக் குறிப்பிடுகிறார் திரு. ராஜு காளிதாஸ். மு. கு. நூல், பக். 65.

31. இந்தச் சுண்ண, வண்ணப் பூச்சுகள் மராத்தியர் காலத்திற்குப் பிற் பட்டதென்னும் திரு. ராஜு காளிதாசின் கூற்று ஏற்புடையதல்ல. மு. கு. நூல், பக். 67.

32. சடைமுடியுடன் இருக்கும் இவரை நாரதராய்க் கொள்ளலாம்.

33. ‘பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
இன்குரற் சீறியாழ் இடவயின் தழீஇ’

‘பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
தொடையமை கேள்வி இடவயிற் றழீஇ’

பத்துப்பாட்டு மூலமும் உரையும், முதற் பகுதி, கழக வெளியீடு, 1956, சிறுபாணாற்றுப்படை, வரி 34-35; பெரும்பாணாற்றுப் படை, வரி 15-16.

34. இவரைத் தும்புருவாகக் கொள்ளலாம்.

35. இவ்வடிவத்தை ஜாம்பவான் என்று குறிப்பிடுகிறார் திரு. ராஜு காளிதாஸ். மு. கு. நூல், பக். 65. ஜாம்பவான் கரடி முகம் கொண்டவர். K. R. Srinivasan, Cave-Temples of The Pallavas, Archaeological Survey of India, New Delhi, 1964, p. 148.

இங்குள்ள வடிவமோ சில ஆண்டுகளுக்கு முன் பார்த்தபோது சுதைப்பூச்சில் நந்தி போல நெற்றிக்கண்ணும் கொம்புகளும் மனித உடலுமாய்க் காட்சியளித்தது. அண்மைக் கள ஆய்வின் போது சுதைப்பூச்சு உதிர்ந்த நிலையில் கொம்புகளோடு கூடிய விலங்குத் தலையையும் (? ஆட்டுத்தலை) மனித உடலையும் பார்க்க முடிந்தது. திருமெய்யத்தில் நான்முகனின் வலப்புறம் கொம்புகளுடன் அமைந்த ஆட்டுத்தலை காட்டப்பட்டிருப்பது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. ஆட்டுத்தலையும் மானுட உடலு மாய் உள்ள வடிவம் தக்கனைக் குறிக்கும். அரவணை துயிலும் பெருமாளருகே தக்கனுக்கு இடமில்லை. அதனால் இந்த வடிவம் தக்கன்தானா அல்லது வைணவப் பாரம்பரியம் தொடர்பான வேறு யாரையும் இது குறிக்கிறதா என்பது குறித்து மேலும் ஆய்வு தொடர்கிறது.

36. நாரதர் கையில் வீணையிருப்பதாகக் குறிப்பிடும் திரு. ராஜு காளிதாஸ் மற்றவர்கள் அனைவரும் தங்கள் கைகளை விஸ்மயத் தில் கொண்டிருப்பதாக எழுதியுள்ளார். மு. கு. நூல், பக். 65. இந்த ஒன்பது வடிவங்களுள் இரண்டாம் பெண் வடிவம் மட்டுமே ஒருகையால் விஸ்மயம் என்னும் வியப்பு முத்திரை காட்டுகிறது. ஏனைய வடிவங்களின் கைகள் பல்வேறு முத்திரைகளில் உள்ளன. இறுதி வடிவமாக காட்டப்பட்டிருக்கும் குறளர் ஆயுத புருஷ ராகலாம். K. R. Srinivasan, op. cit., p. 155.

37. இதை ஆலிட நிலையென்று திரு. ராஜு காளிதாஸ் குறிப்பது சரியல்ல. மு. கு. நூல், பக். 64. ஆலிடத்தில் இரண்டு கால் களும் ஒரே தளத்தில் இருக்கும். இங்கோ இரண்டு கால்களுமே தரையை நீங்கிவிட்டன. இடக்கால் நன்கு மடக்கி இடுப்பளவு உயர்த்தப்பட்டுவிட்டது. இது எப்படி ஆலிடமாகும்? 'நின்ற கோலத்தில் இடது காலை முன்னே எட்டி வைத்து, வலது காலைப் பின்னோக்கி நீட்டிக் கணை தொடுத்து நிற்கும் கோலத் திற்கு ஆலிடம் அல்லது ஆலிடாசனம் என்று பெயர்'. வை. கணபதி ஸ்தபதி, மு. கு. நூல், பக். 63. 'ஆலிடத்தில் இரண்டு பாதங்களும் திரயச்ரமாக இருக்கவேண்டும். இடது தொடை பூமியிலிருந்து இரண்டரை சாண் உயரத்தில் இருக்கவேண்டும். வலது பாதம் இடத்திலிருந்து ஐந்து சாண் பின்னால் இருக்க வேண்டும். இடது கால் திரயச்ரமாக முன்னால் நீட்டப்பெற்று முழங்கால் மடியாமலும் வலது காலின் முழங்கால் மடிந்தும் இருக்கவேண்டும்'. பத்மா சுப்ரமணியம், பரதக்கலை (கோட் பாடு), வானதி பதிப்பகம், சென்னை, 1985, பக். 58.

38. Inscriptions of the Pudukkottai State (IPS), Nos. 757, 912, 943, 1109.

39. Indian Express, Dt. 4-3-1995.

40. இக்கல்வெட்டின் பாடம் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது.

41. திரு. ராஜு காளிதாஸ் இதைக் கீழ்ச்செங்கினி நாடென்று இரண்டு இடங்களில் சுட்டுகிறார். மு. கு. நூல், பக். 58.

42. இக்கல்வெட்டின் பாடம் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது.

43. IPS, No. 912. இக்கல்வெட்டு முகப்பிலுள்ள மேற்கு அரைத் தூணின் கிழக்கு முகத்தில் காணப்படுகிறது. இதன் கீழ்ப்பகுதி படித்தறிய முடியாதபடி சிதைந்துள்ளது.

44. Ibid., No. 757.

45. Ibid., No. 943.

46. இக்கல்வெட்டின் பாடம் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது.

47. Ibid., No. 1109.

47A. இந்த நாகரிக் கல்வெட்டு டாக்டர் க. அவ்வை, முனைவர் மு. து. சம்பத் ஆகியோர் உதவியுடன் படிக்கப்பட்டது. இதன் பாடம் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது.

48. இவ்வாயில் வடக்கு நோக்கியிருப்பதாகத் திரு. ராஜு காளிதாஸ் எழுதியிருப்பது சரியல்ல. மு. கு. நூல், பக். 58.

49. இத்தூண்களின் போதிகை அமைப்பு கொண்டு இம்மண்டபத்தை மராத்தியர் காலத்ததாகக் கொள்கிறார் திரு. ராஜு காளிதாஸ். மு. கு. நூல், பக். 58. இது சரியல்ல. இப்போதிகைகள் பதினான்காம் நூற்றாண்டிலேயே வழக்குக்கு வந்துவிட்டன. இரண்டாம் பாண்டியப் பேரரசு மன்னர்களின் கட்டமைப்பாக, இத்தகு போதிகைகளோடு கூடிய தூண்கள் தாங்கும் மண்டபங்களைத் திருக்கோளக்குடி மலைக் கோயில்களில் காணலாம்.

50. இது போன்ற சிற்பங்கள் சோழர் காலத்திலிருந்தே கிடைக்கின்றன. இவற்றின் வகைப்பாடு, வளர்நிலைகள், முக்கியத்துவம் பற்றித் தனி ஆய்வு நிகழ்த்துமளவு ஏராளமான சிற்பங்கள் சோழ மண்டலத்துக் கோயில்களில் காணப்படுகின்றன.

51. கருவறை வடக்கு நோக்கியிருப்பதாகத் திரு. ராஜு காளிதாஸ் குறித்திருப்பது சரியல்ல. மு. கு. நூல், பக். 58. முகமண்டபத்தில் கருவறை அமைந்திருக்க, திரு. தி. இராசமாணிக்கம், 'கருவறைக்கு எதிரில் அதனை ஒட்டி மேற்குத் திக்கில் மண்டபம் அமைந்துள்ளது' என்று எழுதுகிறார். மு. கு. நூல், பக். 50.

52. இதனால்தானோ என்னவோ 'இதன் அமைப்பே புது மாதிரியாக உள்ளது' என்கிறார் திரு. நடன. காசிநாதன். மு. கு. நூல், பக். 96.

53. 'இலிங்கத்திற்கு நேரே உள்ள எதிர்ச் சுவரில் சுப்ரமண்யர், ஹரிஹரன், துர்க்கை ஆகியோர் காட்சி தருகின்றனர்' என்று எழுதியுள்ளார் திரு. நடன. காசிநாதன். மு. கு. நூல், பக். 96. இலிங்கத்திற்கு நேரே உள்ள எதிர்ச்சுவர், கருவறை மேற்குச் சுவரின் உட்புறமாக அமையும். இப்பகுதியில் சிற்பங்களெதுவும் இல்லை.

'The right wall is divided into three irregular sections, forming niches for the images of Skanda or Muruga, Siva and Mahisasuramardini' என்கிறார் திரு. ராஜு காளிதாஸ். மு. கு. நூல், பக். 59. இது சரியல்ல. இங்குக் கோட்ட அமைப்பு எதுவுமில்லை.

54. சங்கரநாராயணரை சிவபெருமான் என்று திரு. தி. இராசமாணிக்கமும், திரு. ராஜு காளிதாசும் குறித்திருப்பது சரியல்ல. மு. கு. நூல்கள், பக். 50, 59.

55. கொற்றவை வடிவத்தை மகிடாசுரமர்த்தனி என்று திரு. நடன. காசிநாதனும், திரு. ராஜு காளிதாசும் குறிப்பிட்டுள்ளனர். மு. கு. நூல்கள், பக். 96, 58.

56. இதை மண்டபத்தின் வடபுறச் சுவரென்று திரு. தி. இராசமாணிக்கமும் கருவறையின் பின்புறச் சுவரென்று திரு. ராஜு காளிதாசும் தவறாகக் குறிக்கின்றனர். மு. கு. நூல்கள், பக். 50, 58.

57. திரு. ராஜு காளிதாஸ் இப்பகுதியை முகமண்டபத்தின் ஒரு கூறாகவே கொள்ளவில்லை. மு. கு. நூல், பக். 58. 'தூண்கள் தாங்கல் பெற்றுள்ள மண்டபத்தின் இடப்பக்கக் கோடியில் சண்டியின் வடிவம் தோற்றமளிக்கிறது' என்னும் திரு. நடன. காசிநாதனின் கூற்று சரியல்ல. மு. கு. நூல், பக். 96. இவர் மண்டபமாய்க் குறிப்பிடும் முகமண்டபத்தைத் தூண்களெதுவும் தாங்க

வில்லை. தூண்கள் முகப்பில் மட்டுமே உள்ளன. மண்டபத்தின் வலக்கோடியில்தான் (இடக்கோடியில் அல்ல), அதன் வடசுவரில் தென்பார்வையாகச் சண்டேசுவரர் செதுக்கப்பட்டுள்ளார்.

58. திரு. தி. இராசமாணிக்கம், 'கருவறையின் அதிட்டானம் வரி, வரிமானம், முப்பட்டைக் குமுதம் ஆகியவற்றைக் கொண்டது' என்று தவறாகக் குறிப்பிட்டுள்ளார். மு. கு. நூல், பக். 49.

59. பிள்ளையாரையும் எழுவர் அன்னையரையும் சுட்டும் திரு. நடன. காசிநாதன் வீரபத்திரரைக் குறிக்கவில்லை. மு.கு. நூல், பக். 96.

60. 'The Sapta Matrkas of Malaiyadippatti occupy an important place in the cult system of the Pudukkottai and Pandimandalam regions because this is the only panel available in the entire zone beyond the river Kaveri' என்கிறார் திரு. ராஜு காளிதாஸ். மு. கு. நூல், பக். 60. இது பிழையான கூற்றாகும். இதே போன்று பாறையில் வெட்டப்பட்ட காலத்தால் முற்பட்ட எழுவர் அன்னையர் சிற்பத் தொகுதிகளைத் திருக்கோளக்குடிக் குடைவரையிலும் திருக்கோகர்ணம் குடைவரையிலும் வரிச்சியூர் குடைவரையிலும் காணலாம். இவற்றைப் பற்றி அறியாமலேயே 'The Bhatarar cave of Malaiyadippatti is our only evidence of the percolation of the Matrkas cult into the interior areas in Tamil Nadu and thus the representation gets an important place in the local annals of religious tradition' என்றெல்லாம் எழுதிச் செல்கிறார் திரு. ராஜு காளிதாஸ். மு. கு. நூல், பக். 62.

61. வீரபத்திரரின் யோக அமர்வைத் திரு. ராஜு காளிதாஸ் உத்குடி காசனம் என்று தவறாகக் குறித்துள்ளார். மு. கு. நூல், பக். 60. உத்குடிகாசனம், யோகாசனம் பற்றிய விளக்கங்களுக்குக் காண்க சிற்பச் செந்நூல், பக். 60, 61.

62. இதைத் திரு. ராஜு காளிதாஸ் லலிதாசனம் என்று குறிப்பிட்டுள்ளது சரியல்ல. மு. கு. நூல், பக். 60. லலிதாசனத்தில் இரண்டு கால்களும் ஒரே தளத்தில் இருக்க வேண்டும். இங்கு இடக்கால்கள் தளத்தின் மீதிருக்க வலக்கால்கள் கீழிறக்கப் பட்டுள்ளன.

62A. இவரைத் திரு. ராஜு காளிதாஸ் சாமுண்டா என்று குறித்துள்ளது சரியல்ல. மு. கு. நூல், பக். 60.

63. இதைத் திரு. ராஜு காளிதாஸ் வஜ்ரமென்பது தவறாகும். மு. கு. நூல், பக். 60.

64. கருடனைத் திரு. ராஜு காளிதாஸ் 'Eagle' என்று குறித்துள்ளார். Eagle கழுகைக் குறிக்கும் சொல்லாகும். English Tamil Dictionary, University of Madras, 1963, Vol. I, p. 335. 'Kite' என்பதுதான் சரியான ஆங்கிலச் சொல். இச்சொல் பருந்தையும், கருடனையும் குறிக்கும். Ibid., Vol. II, p. 563. கருடனை 'white breasted kite' என்றும் குறிப்பார்கள். The Private Diary of Ananda Ranga Pillai, Vol. II, Asian Educational Services, New Delhi, 1985, p. 205; See Foot Note.

65. இக்கருவிகள் அறியக் கூடிய அளவு தெளிவாக இல்லை என்று திரு. ராஜு காளிதாஸ் கூறுகிறார். மு. கு. நூல், பக். 60.

66. இவரைத் திரு. ராஜு காளிதாஸ் மயேச்சுவரி என்பது சரியல்ல. மு. கு. நூல், பக். 60.

67. திரு. ராஜு காளிதாஸ் இதை நந்தி என்று குறிப்பிட்டுள்ளார். மு. கு. நூல், பக். 60.

68. பிள்ளையாரின் வல முன் கை அபயத்திலிருப்பதாகத் திரு. ராஜு காளிதாஸ் குறித்திருப்பது சரியல்ல. மு. கு. நூல், பக். 60.

69. திரு. ராஜு காளிதாஸ் அக்கமாலையைச் சூலம் என்று தவறாகக் குறிப்பிடுகிறார். மு. கு. நூல், பக். 62.

70. இவரைச் சிவபெருமானாகக் குறிக்கும் திரு. ராஜு காளிதாஸ் இறுதியில் சந்திரசேகரர் என்று முடிவு கொள்கிறார். திரு. இராசமாணிக்கமும் இவரைச் சிவபெருமான் என்றே குறித்துள்ளார். மு. கு. நூல்கள், பக். 62, 50. இருவர் கூற்றுமே சரியல்ல.

71. இக்கைகளில் 'டங்காவும்' (உளி) 'மிருக'வும் (மான்) இருப்பதாகத் திரு. ராஜு காளிதாஸ் எழுதியிருப்பது சரியல்ல. மு. கு. நூல், பக். 62.

72. திரு ராஜு காளிதாஸ் இக்கைகளைக் குறிப்பிடவேயில்லை. மு. கு. நூல், பக். 62. திரு. தி. இராசமாணிக்கம் இக்கைகளில் வலப்புறம் மானும் இடப்புறம் மழுவும் இருப்பதாக எழுதியுள்ளார். மு. கு. நூல், பக். 50.

73. 'The Lord is endowed with a short loin cloth' என்று திரு. ராஜு காளிதாஸ் எழுதியிருப்பது சரியல்ல. மு. கு. நூல், பக். 62.

74. இந்தச் சிம்மமும் சங்கரநாராயணரின் இடப்பக்கம் மேலே காட்டப்பட்டுள்ள கந்தருவரும் அருகருகே இருப்பதால், திரு. நடன. காசிநாதன் இரண்டையும் இணைத்து மகிடாசுரமர்த்தனியின் போர்க் காட்சியாகக் கொண்டுவிட்டார். கந்தருவரைச் சிம்மத்தின் மீது அமர்ந்த சிம்மவாகினியாகக் கொண்டதால் மகிடாசுர மர்த்தனி இங்கு இரு கோலங்களில் காட்சியளிக்கிறாரென்று எழுதியுள்ளார். 'துர்க்கை, மஹிஷாசுரனுடன் போரிடும் காட்சி இரு கட்டங்களாகக் காட்டப்பட்டுள்ளன. முதலில் துர்க்கை போருக்குப் புறப்படுவது போன்றும் அடுத்தது துர்க்கை மஹிஷாசுரனை வென்று விட்டு வெற்றிக் களிப்பில் நிற்பது போன்றும் சிற்பங்கள் காண்பிக்கப்பட்டுள்ளன'. மு. கு. நூல், பக். 97.

75. இதை மகிடனின் தலையாகக் கொண்டதால்தான் திரு. ராஜு காளிதாஸ் கொற்றவையை மகிடாசுரமர்த்தனியாகக் கொள்ள நேர்ந்தது. மு. கு. நூல், பக். 62.

76. திரு. ராஜு காளிதாசின் 'She is ashta bhuja and holds a Trisula in purva hastas, thrust into the neck of the Mahisasura' என்னும் கூற்று சரியல்ல. மு. கு. நூல், பக். 62. கொற்றவையை மகிடாசுரமர்த்தனியென்று அடையாளம் கண்டு, அதன் அடிப்படையில் மாமல்லபுர வராகர் குடைவரை, திரௌபதி ரதம், திருச்சிராப்பள்ளிக் கீழ்க் குடைவரை ஆகியவற்றில் காணப்படும் கொற்றவை வடிவங்கள் அனைத்தையும் மகிடாசுரமர்த்தனியின் வடிவங்களாக இவர் வகைப்படுத்தியிருப்பது ஏற்புடைத்தாகாது.

76A. இதைத் தடி (Danda) என்று தவறாகக் குறிக்கிறார் திரு. ராஜு காளிதாஸ். மு. கு. நூல், பக். 63.

77. 'வலப்பக்கத்தில் ஒரு சந்நிதி போன்ற அமைப்பில் இலிங்கம். இலிங்கத்துக்கு இரு பக்கத்திலும் துவாரபாலகர்கள்' என்று எழுதுகிறார் திரு. நடன. காசிநாதன். மு. கு. நூல், பக். 96. 'சந்நிதி போன்ற அமைப்பு' என்று இவர் குறிப்பிடுவது கருவறையை. இலிங்கத்தின் இரு பக்கத்திலும் துவாரபாலகர்கள் என்று எழுதியிருப்பது சரியல்ல. துவாரபாலகர்கள் கருவறைக்கு வெளியே அதன் வாயிலையொட்டிய கோட்டங்களில்தான் இடம் பெற்றுள்ளனர்.

78. 'வலப்புறம் உள்ள வாயிற்காப்போரின் வலக்கையில் பாம்பு' என்று நிறுத்திக்கொள்ளும் திரு. தி. இராசமாணிக்கம் இடக் காவலரின் இடத்தோளருகிருந்து படமெடுக்கும் பாம்பைச் சுட்ட வில்லை. மு. கு. நூல், பக். 50.

79. IPS, Nos. 18, 35, 116, 771 and 904. ARE, 320 of 1969-1970.

80. The Hindu, Dt. 14-3-95.

81. தந்திவர்மனைத் தண்டிவர்மனென்றும், குவாவன் சாத்தனைக் குவான் சாத்தன் என்றும் குறிப்பிட்டுள்ளார் திரு. தி. இராச மாணிக்கம். மு. கு. நூல், பக். 54.

82. IPS, No. 18.

83. 'The inscription is broken and perhaps also incomplete' என்று எழுதுகிறார் திரு. ராஜு காளிதாஸ். மு. கு. நூல், பக். 58. ' Broken' என்ற சொல்லாட்சி பொருந்தாது. 'Damaged அல்லது Defaced' என்னும் சொற்களே வழக்கில் உள்ளன.

84. தமிழ் எழுத்துக்களில் உள்ள இக்கல்வெட்டை வட்டெழுத்துக் கல்வெட்டென்று குறிப்பிடுகிறார் திரு. ராஜு காளிதாஸ். மு. கு. நூல், பக். 58.

85. IPS, No. 771.

86. ARE, 319, 320 of 1969-1970.

87. ARE, 320 of 1969-1970; See Remarks.

87A. இருந்தபோதும் இக்கல்வெட்டின் பிற்பகுதியைத் தனிக் கட்வெட் டாகக் கருதிப் பதிப்பித்திருக்கும் கல்வெட்டறிக்கை, அதன் எழுத்தமைதி பத்தாம் நூற்றாண்டமைப்பில் இருப்பதாகக் கருத்து தெரிவித்துள்ளது. (ARE, 319 of 1969-70; See Remarks) கல்வெட்டுகளின் எழுத்தமைதி குறித்த கருத்துக்கள் எவ்வளவு ஐயத்திற்கிடமானவை என்பது இதனால் விளங்கும்.

88. இவை கள ஆய்வுகளின்போது இக்கட்டுரையாசிரியர்களால் புதிதாகக் கண்டறியப்பட்டவை.

88A. இவையும் கள ஆய்வுகளின்போது இக்கட்டுரையாசிரியர்களால் புதிதாகக் கண்டறியப்பட்டவையாகும்.

89. IPS, No. 116. இக்கல்வெட்டு குறிக்கும் வீரராசேந்திர சோழ தேவர் மூன்றாம் குலோத்துங்கராகலாம்.

90. Ibid., No. 904.

91. அரசு, பெரிய புராண வசனம் அல்லது திருத்தொண்டர் வரலாறு, கழக வெளியீடு, 1979, பக். 44-46.

92. ARE, 394 of 1939-40. இக்கல்வெட்டு பெருங்குடியில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின்போது நேரிடையாகப் படிக்கப்பட்டது.

93. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, பக். 89, 174, 199, 487.

94. இக்கல்வெட்டுத் தொடர்பான சிந்தனைகள் இதே இதழில் வெளியாகியுள்ளன. பக். 52-57.

பின்னிணைப்பு

புதிய கல்வெட்டுகள்

முதற் கல்வெட்டு

இடம் : பெருமாள் குடைவரை முன் மண்டபத் தாங்குதளப் பட்டிகை.

செய்தி : கீழ்ச்செங்கிளி நாட்டுத் திருவாலத்தூர் என்று ஊரின் பெயரும் ஒளிபதி விஷ்ணு கிருகம் என்று கோயிலின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளன. கோயிலைச் சேர்ந்த வைகானசத் தேவகன்மிகள் இக்கோயிலில் மேளம் கொட்டுவதற்காகப் பரமேசுவரன் குன்றன், எறன் சுவரனான சங்கரநாரணயர் என்னும் இரண்டு உவச்சர் பெருமக்களுக்கு உவச்சுக் காணியாக சிவதாசன் சோலையான இராஜராஜ பிரும்மமாராயரைக் கொண்டு நிலமளித்தனர். இந்நிலம் காடு வெட்டிக் குளம் கல்லி வயக்கப்பட்டு பின் காணியாகத் தரப்பட்டது. தேவகன்மிகளுள் இருவர் பெயர்கள் கிடைக்கின்றன.

காலம் : சுந்தரசோழரின் ஏழாம் ஆட்சியாண்டு, கி.பி.960.

1 ஸ்வஸ்திஶ்ரீ கோவிராஜகேஸரிபந்மற்கு யாண்டு 7ஆவது கீழ் செங்கிளி நாட்டுத் திருவாலத்தூர் ஒளிபதி விஷ்ணு க்$_{3}$ரிஹத்து வைக$_{4}$ா நஸத்$_{3}$ தே$_{3}$வகந்மிகளோம் இத்திருவ[ாலத்தூர்] ராசசுவரன் குளக் கீழ் நிலத்துக்கு . . காடு வெட்டிக் குளங் கல்லி இத்தளி காணி உடைய உவச்சகள்ளுக்கு காணி செய்

2 து குடுக்க பெறுவாராக சிவத$_{3}$ாஸன் சோலையான இராஜராஜ ப்$_{3}$ரஹ்ம்ம மாராய[ற்*]குச் செ[ய்*]து குடுத்தோம் இத்தளித் தேவகந்மிகள்ளோம் இவை சிங்கன் மானதரன் எழுத்து இப்படி ஒட்டி

இட்டுக் குடுத்தேன் தெவ்வா ந[ர*]கப்பந்நேன் இவை என் [எ*]ழுத்து இன்னிலம் முக்காலும் கொண்டு ச

3 ன்த்ராதித்தவற் இ தளிக்கு இரண்டாள் கொட்டக் கடவாராக இத் தளி உவச்சன் பரமேசுவரன் குன்[ற*]னும் எறன் சுவரன்னான சங்கர நாரணயர் உவச்சனு[க்*]கும் காணியாக . . . . . செது குடுத்தேன் ப்₃ரிமஹ்மாராயகமி விளிச்ₒவரனேன் இவை என் னெழுத்து

இரண்டாம் கல்வெட்டு

இடம் : மேலது.

செய்தி : இக்கல்வெட்டு கோயிலில் உள்ள பெருமாளை ஒளிபதி விஷ்ணு என்று குறிக்கிறது. கீழ்ச்செங்கிளி நாட்டு விராற்குடி சார்ந்த விராற்குடான் பெருமான் கடதேவகன் அரிஞ்சயன் முயன்றான் என்பார் மேற்செங்கிளி நாட்டுக் கூத்தன்குடியைச் சேர்ந்த பட்டி விராகன் நினைவாக இக்கோயிலில் பகல் விளக்கொன்று எரிக்க நாற்பத்தெட்டு ஆடுகள் தந்தார். அவ்வாடுகளை ஏற்றுக்கொண்டு நாளும் நாழி நெய்யால் விளக்கெரிக்க விராற்குடி மன்றாடி சூரன் நக்கர் ஒப்புக் கொண்டார்.

காலம் : உத்தமசோழரின் பதினான்காம் ஆட்சியாண்டு, கி. பி. 983.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோபரகேசரிபந்மற்கு யாண்டு 14 ஆவது கீழ் செங் கிளி நாட்டுத் திருவாலத்தூ

2 ர் ஒளிபதி விஷ்ணு சஹாத்ய தே₃வர்க்கு இந்நாட்டு விராற்குடி விராற்குடான் பெருமான் கடதேவ

3 கன் அரிஞ்சயன் முயன்றானேன் மீசெங்கிளி நாட்டுக் கூத்தன்குடி யிருக்கும்

4 பட்டி விராகனைச் சாத்திப் பகல் விளக்குக்கு வைச்ச ஆடு 48 [இது]வும் விராற்குடி யிருக்கும் மன்றாடி சூரனக்கனேன் இ 48ங் கொண்டு சந்த்ராதி₃த்தவல் நிசதம் [நா]ழிக்கு நெய்யட் டுவோம் . . .

5 ணை . . . . ரினேன் இது

6 வையிஷ்ணவ ரக்ஷை

மூன்றாம் கல்வெட்டு

இடம் : விஷ்ணு குடைவரை நடு அங்கணக் கீழ்நிலை.

செய்தி : மங்கான் நித்திய ஊழியம் செய்கிறார்.

காலம் : கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு.

1 மங்கான் சதா சேர்வை

நான்காம் கல்வெட்டு

இடம் : மேலது.

செய்தி : மூன்று பெண்களும் ஓர் ஆடவரும் இக்கோயிலில் நித்திய ஊழியம் செய்பவர்களாய்த் தங்களை அறிவித்துக் கொண்டுள்ளனர். கல்வெட்டு நாகரி எழுத்துக்களில் உள்ளது.[1]

காலம் : கி. பி. பதினெட்டு அல்லது பத்தொன்பதாம் நூற்றாண்டு.

1 ஸ்ரீ மாகே கோஷா மஜி
2 ஏல பாவ்வடே நவ ஸ்ரீமஜி நீசே சேவா
3 பும்ஸ்லிக ஸ்ரீ மாஜி

ஐந்தாம் கல்வெட்டு

இடம் : கோபுரத்தின் வடபுறக் குமுதம்.

செய்தி : தென்கொண்டான் மங்கப்பன் இக்கோயிலில் நித்திய ஊழியம் செய்கிறார்.

காலம் : கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு.

1 தென்கொண்ட[ா*]ன் மங்கப்பன் சதா சேள்வை[2]

ஆறாம் கல்வெட்டு

இடம் : தென்கிழக்குக் குன்றின் உச்சியில் உள்ள பாறைத் தளம்.

செய்தி : கறையூரைச் சேர்ந்த ஆலங்காரி என்பார்க்குப் பித்தும் அச்சமுமே வழியாக உள்ளன.

காலம் : கி. பி. எட்டாம் நூற்றாண்டு.

1 கறையூர் ஆலங்காரி
2 க்கு பிச்சும் பிராந்
3 தும் அமனி

---

1. இங்கு வெளியாகியிருக்கும் பாடமும் பொருளும் முனைவர் மு. து. சம்பத் படித்துத் தந்தவை.
2. சேர்வை என்று படிக்கவும்.

ஏழாம் கல்வெட்டு

இடம் : மேலது.

செய்தி : மங்கான் இங்கு நித்திய ஊழியம் செய்கிறார். கல்வெட்டு தெலுங்கில் உள்ளது.[3]

காலம் : கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு.

1 மங்காமே சதா சேர்வே

மடிவிளியும் நெடுவிளியும்

தோற்ற வண்ணனைகள் தருவதில் சங்கப் புலவர்களை விஞ்ச யாராலும் முடியாது. நற்றிணையில் ஒரு காட்சி. முல்லைப்புறத்து ஊர். மழை கொட்டிக் கொட்டிக் களைத்துச் சாரலான நாள். பசேலெனப் பரந்து கிடக்கும் புல்வெளிப் பகுதியில் ஓர் இடையர். ஒரு கையில் பலவாய்க் கயிறிட்டுப் பின்னிய உறி. மறு கையில் தீக்கடைக் கோல், குழல் போன்ற கருவிகளடங்கிய தோல் பை. முதுகில் சேர்த்துக் கட்டிய பனையோலைப் பாய். மழையோ சாரலாய்ப் பெய்து அவர் உடலின் ஒரு பகுதியை நனைக்கிறது. சில்லிடும் ஈரத்தால் இலேசான குளிர். கையிலிருக்கும் கோலைத் தரையில் நிறுத்தி அதன் மேல் ஒரு காலை ஊன்றித் தான் மேய்க்க அழைத்து வந்த ஆடுகளைப் பார்க்கிறார். மங்கிய வெளிச்சத்தில் அவை போகுமிடம் தெரியாமல் போய்விடக் கூடாது என்பதால் தான் இருக்குமிடம் அறிவிக்க இதழ்களை மடித்து மெலிதான ஒலியெழுப்புகிறார். உரையாசிரியர் இதை வாய் குவித்து ஊதும் வீளை (விசில்) என்கிறார். அழைப்பொலியாம் இந்த விளி கேட்ட ஆடுகள் இடக் குழப்பம் நீங்கித் தங்கள் மேய்ப்பரை இனம் கண்டு நகர்கின்றன. (நற்றிணை 132)

இதேபோல் அகநானூற்றிலும் நன்பலூர்ச் சிறுமேதாவியார் ஓர் இடையரைக் காட்டுகிறார். முல்லையும் தோன்றிப்பூவும் இணையத் தொடுத்துக் கட்டிய கண்ணியராய்ப் பிடித்திருக்கும் கை காயுமாறு எரியும் கொள்ளியை ஏந்தித் தான் புரந்து நிற்கும் பட்டியாடுகளைக் குறுநரிகள் வந்து கவரா வண்ணம் அவ்வப்போது அவற்றை விரட்ட நெடுவிளி எழுப்பிக் காவல் நிற்கும் இவரும் பாயை முதுகில் கட்டியவர்தான். (அகம் 94)

இந்தக் காவல் இடையர்களைப் பிற்காலச் சிற்பிகள் தங்கள் கை வண்ணம் பட்ட கோயில்களில் எல்லாம் சிற்சில வேறுபாடுகளுடன் சிற்பங்களாய்ச் சிறைப் பிடித்துள்ளனர்.

---

3. இங்கு வெளியாகியிருக்கும் பாடமும் பொருளும் முனைவர் மு. து. சம்பத் படித்துத் தந்தவை.

7. முதலாம் மகேந்திரவர்மர் காசு

ஆறுமுக சீதாராமன்

பல்லவ மன்னர் முதலாம் மகேந்திரவர்மர் வெளியிட்ட வெள்ளிக் காசு ஒன்று திருச்சிராப்பள்ளியில் அண்மையில் கிடைத்துள்ளது. இந்தக் காசின் முன் பக்கத்தில் வலப்புறம் நோக்கி நிற்கும் காளை காட்டப்பட்டுள்ளது. அதற்கு மேலுள்ள பகுதியில் 'நஹிகாமுத்ரிக' என்னும் வடமொழிச் சொற்கள் பல்லவர் காலத் தமிழ் மற்றும் கிரந்த எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளன. காசின் பின் பக்கத்தில் சுற்றிலும் பூவிதழ்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள வட்டத்திற்குள் செங்குத்தான நிலையில் சக்கரம் ஒன்று காணப்படுகிறது. இக்காசின் எடை இரண்டு கிராம்.

முன் பக்கம்

பின் பக்கம்

திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையிலுள்ள மேற்குடைவரையிலும் செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்திலுள்ள பல்லாவரம் குடைவரையிலும் 'நைஹிகாமுத்ரிகஹ' என்னும் முதலாம் மகேந்திர வர்மரின் விருதுப் பெயர் கல்வெட்டாய்ப் பொறிக்கப்பட்டுள்ளது. நைஹிகாமுத்ரிக என்ற வடமொழிச் சொல்லுக்கு காம எழுச்சிகள் அற்றவன் என்று பொருள்.

திருச்சிராப்பள்ளிக் குடைவரையில் உள்ள இக்கல்வெட்டு பல்லவ கிரந்த எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளது. ஆனால் காசில் தமிழ், கிரந்தம் ஆகிய இரண்டு வகை எழுத்துக்களும் பயன்படுத்தப்

திருச்சிராப்பள்ளி மேற்குடைவரை முகப்புத் தூண் கல்வெட்டு

பட்டுள்ளன. கல்வெட்டுகளில் உள்ள முதலாம் மகேந்திரவர்மரின் (கி. பி. 600 – 630) விருதுப் பெயருடன் கிடைத்திருக்கும் இக்காசு பல்லவர்கால எழுத்துக்களை ஆய்வு செய்வோர்க்கு மிகவும் பயன்படும்.

மருந்தாய்வு

சங்க இலக்கியங்களில் மருத்துவம் பற்றிய குறிப்புகள் அருகியே காணப்பட்டாலும் கிடைத்திருப்பவை அனைத்தும் ஆழமான நோக்குடையவை. அந்த வரிசையில் நற்றங்கொற்றனார் மற்றொரு தகவலைத் தருகிறார்.

நோயுற்றவர்கள் மருத்துவர்களை அணுகும்போது மருந்து தொடர்பாகவும் உணவு தொடர்பாகவும் தாங்கள் விரும்புவதைக் கேட்டு நிற்பது இன்றைக்கும் உள்ள நடைமுறைதான். 'ஊசி வேண்டாங்க, மாத்திரை போதும்' என்று சிலரும் 'மாத்திரை கேட்காதுங்க, ஊசி மட்டும் போடுங்க' என்று சிலரும் தத்தம் மருத்துவ முறைகளைத் தாங்களே நிர்ணயித்துக் கொள்வர். தகுதி சான்ற மருத்துவர்கள் இந்த நிர்ணயங்களைத் தாண்டி உரியன செய்வர்.

சங்க காலத்திலும் இப்படித்தானாம். கடுமையான நோய் கண்டவர்களும் மருத்துவர்களிடம் வரும்போது 'அப்படிச் செய், இப்படிச் செய்; அது வேண்டும், இது வேண்டும்' என்று அவரவர் விருப்பத்திற்கு வேண்டியது கேட்பராம். ஆனால் மருத்துவர்கள் இக்கேட்புகளை எல்லாம் ஒதுக்கி நோய்க்கு எது மருந்தென்று ஆராய்ந்து அதையே தேர்ந்து தருவராம். கேட்டது கொடாது ஆராய்ந்தறிந்து தக்கது தரும் இத்தகு மருத்துவர்களை நற்றங்கொற்றனார் 'அறவோர்' என்று புகழ்ந்து மகிழ்கிறார்.

— நற்றிணை 136

5. ஆய்வுத் தொடர்கள்

தமிழகக் கோயிற் கட்டடக்கலை வரலாறு – 2

அர. அகிலா, ஸ்தபதி வே. இராமன், இரா. கலைக்கோவன்

தமிழர்களின் வாழ்வியல் பற்றிய செய்திகள் எட்டுத்தொகை நூல்களில் பரவிக் கிடக்கின்றன. இவற்றைத் தொகுத்துப் பல நூல்கள் வெளியிடப்பட்டுள்ள நிலையிலும் பல நுட்பமான தகவல்கள் தொகை நூல்களில் இன்னமும் வெளிச்சம் வேண்டித் தவமிருக்கின்றன. அகநானூறு, நற்றிணை, ஐங்குறுநூறு என்னும் முத்தொகை நூல்களில் தரப் பெற்றுள்ள தமிழகக் கோயிற் கட்டடங்கள், தெய்வ நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள் பற்றிய தரவுகள் இவ்விதழில் இடம் பெறுகின்றன.

முத்தொகைத் தரவுகள்

அகநானூற்றின் மூன்று பாடல்கள் அன்றைக்கிருந்த கோயிற் கட்டுமானங்களைச் சுட்டுகின்றன. இவை மூன்றுமே மக்கள் ஊரை விட்டு ஓடியதால் புரப்பாரின்றி அழிவு நிலைக்கு ஆளான சிதைந்த கோயில்கள். இவற்றுள் உருத்திரங்கண்ணனார் காட்டும் கோயில் யானை உரசியதால் உருவமிழந்த கோயில். இதன் சுவர்கள் செங்கற்களால் கட்டப்பட்டிருந்தன. மேலே உத்திரங்கள் இட்டுக் கைம் மரங்களால் கூரை சமைத்திருந்தனர். மாடங்கள் மரத்தால் செய்யப் பட்டிருந்தன. கோயில் வழிபாட்டில் இருந்தபோது இங்கு மணிப் புறாக்கள் குடியிருந்தன. கோயிலுக்குள் வணக்கத்திற்கும் வழி பாட்டிற்கும் உரியவராய் எழுதப்பட்ட கடவுள் எழுந்தருளியிருந்தார். கருவறைக்கு முன்னே நாளும் பலியிட ஊர் மெழுகும் திண்ணை அமைந்திருந்தது.

மக்கள் ஊர் பெயர்ந்த நிலையில் கோயிலுக்கு அருகில் இருந்த முருங்கை மரம் உண்ண வந்த யானையின் உரசலால், ஏற்கனவே தளர்ந்திருந்த செங்கல் நெடுஞ்சுவர் சிதைந்து, கற்கள் உதிர, கோயில் உத்திரம் பிடிப்பின்றிக் கீழே வீழ்ந்தது. மர மாடங்கள் குலைய மணிப் புறாக்கள் பறந்தன. பலி நின்றதால் மெழுகல் அற்றுத் தூசி நிறைந்து வண்ணம் மாறியிருந்த பலித்தளத்தில் குட்டியீன்ற நாயொன்று குழி பறித்துக் குடியிருந்தது. ஆள் வரத்து இல்லாமையால் கறையான்கள் கூரையளவு புற்றெழுப்பிக் கைம்மரங்களைக் களித்துத் தின்றன. ஒரு கோயில் உருக்குலைந்தது.

குடவாயிற் கீரத்தனார் மக்கள் கவனிப்பிழந்த மற்றொரு கோயிலைக் காட்டுகிறார். உருத்திரங்கண்ணனார் காட்டிய கோயிலில்

சுவரின் மீதுதான் யானை உரசியது. இங்கோ கருறையின் நிலைப் பொருளாயிருந்த இறைக் கந்தின் மீதே ஆடொன்று உராய்ந்து மகிழ்ந்தது. இந்தக் கந்து சுரைக்கொடி படர்ந்த பொதியிலில் நடப் பட்டிருந்தது. தெய்வம் உறையும் தறியாய் வணங்கப்பட்ட கரிய அடி பொருந்திய இக்கந்து ஆட்டின் தாக்கலால் நிலை குலைந்து ஆடுவ தாயிற்று. இதன் முன் செங்கல்லால் ஆன பலித்தளம். பலியிட யாரும் இல்லாமையால் மெழுக்கல் இன்றி நரைபோல் வெளுத்துப் போயிருந்த இப்பலித் தளத்தின் முன்னே பெரிய ஆலமரமொன்று விழுதுகள் விட்டு மதிலைப் போல் சூழ்ந்திருந்தது.

மதுரை ஈழத்துப் பூதன் தேவனார் பாலையாய்ப் போன முல்லைப் பகுதியில் அழிந்து கொண்டிருந்த கோயிலொன்றைக் காட்டுகிறார். பொதியிலில் இருந்த இந்தக் கோயில் சுற்றிலும் சுவர்கள் கொண்டிருந்தது. மக்கள் வரத்து நின்றமையால் இச்சுவர்களை மூடிப் புற்றுகள் பரவின; புதர்கள் மண்டின. உள்ளே வலிய அடிப் பகுதியை உடைய கந்து நிலை பெற்றிருந்தது. அழிவின் தொடக்கக் காலமென்பதால் மாடங்கள் குலையவில்லை. அதனால் மணிப்புறாக் களும் அவற்றைத் துறக்கவில்லை.

இம்மூன்று அகப்பாடல்களும் கொண்டு பெரும்பாலான சங்கக் கோயில்கள் செங்கல் கட்டுமானங்களாய், மர உத்திரங்கள் இடப் பெற்று, மரத்தாலான மாடங்களும் கூரையும் கொண்டு விளங்கின என்பதைத் தெளிவாய்த் தெரியலாம். இவற்றின் முன்னிருந்த பலித் தளங்கள், வழிபாட்டிற்கு மக்கள் கொணரும் பலிப் பொருட்களை இட வாய்ப்பாகச் செங்கற்களால் கட்டப்பட்டிருந்தன. இக்கோயில்களைச் சுற்றிலும் நிழலுக்கும் குளுமைக்குமாய் மரங்கள் வளர்க்கப் பட்டிருந்தன. சில இடங்களில் சுற்றுச் சுவர்கள் இல்லாமலும் தெய்வ வடிவங்கள் நிறுவப்பட்டிருந்தன. இவை பெரும்பாலும் ஆலமர நிழலில் மரவிழுதுகளே மதில் போல் சூழ அமைந்திருந்தன.

கந்து மரத்தாலான தூண் போன்ற அமைப்பு கொண்டிருந்தது. இதை நட்டு வைத்துத் தெய்வமாய் வணங்கினர். கோயில் பாழ்பட்ட போது இக்கந்தில் உறைந்திருந்த தெய்வம் வெளியேறிவிடுவதாய் நம்பப்பட்டது. எழுதணி கடவுள் என்ற சொற்றொடர் கருவறைச் சுவரில் சுதை பூசி இறை வடிவத்தை வரைந்து வைத்திருந்த நிலை யைச் சுட்டுகிறது. இன்றும்கூட இலங்கையைச் சேர்ந்த கதிர்காமத் தில் கருவறைக் கடவுள் திரைச்சீலை ஓவியமாய் இருப்பது இங்கு நினைக்கத் தகுந்தது.

நன்னிலைக் கோயில்கள் சிலவற்றையும் அகநானூற்று வரிகள் அடையாளம் காட்டுகின்றன. மதுரைக்கு மேற்கில் மயிற்கொடிகள் ஏற்றப்பட்டு இடைவிடாத விழாக்களால் பொலிந்திருந்த திருப்பரங் குன்றத்தை முருகனின் திருக்கோயில் அமைந்திருந்த இடமாக உறுதிப் படுத்துகிறது எருக்காட்டூர்த் தாயங்கண்ணனாரின் பாடல். வேலவனின் மற்றொரு கோயில் இருந்த தலமாகச் சீரலைவாய் சுட்டப்படுகிறது. விளக்குகளின் ஒளி வெள்ளத்தில் பொலிந்திருந்த அழகிய ஊராய் இதைக் கொண்டாடும் பரணர், இங்குள்ள முருகனைப் போர் வன்மை மிக்க தெய்வமெனப் பாராட்டுகிறார். செல்லூரில் அரிய வலி பொருந்திய கடவுளுக்கான கோயில் இருந்தது. வேள்வித் தீ அணையாத இவ்வூரில் மழுவாள் நெடியோன் என்றழைக்கப்பட்ட பரசுராமரின் வேள்வித் தூணும் இருந்தது.

புகாருக்கு அருகில் இருந்த ஆலமுற்றம் என்னும் ஊரில் சிவன் கோயில் இருந்ததாகப் பரணர் கூறுகிறார். உலகெலாம் பரவிய, நன்மை பொருந்திய, நல்ல புகழையுடைய நான்கு வேதங்களாம் பழம் பெரும் மறைகளை அருளிய முக்கட் செல்வரே இக்கோயில் இறை வனாய்க் காட்டப்படுகிறார். சிவபெருமான் எழுந்தருளியிருந்த மற் றொரு கோயிலை நற்றிணைப் பாடலொன்று மறைமுகமாய்ச் சுட்டு கிறது. இக்கோயில் இறைவனைக் கணங்கெழு கடவுள் என்று குறிக் கும் தோழி இங்குச் சென்று உயர் பலி தந்து வழிபாடு நிகழ்த்தி வரு வோம் எனத் தலைவியை அழைக்கிறாள்.

புகாரில் இருந்த தெய்வத்தை நோக்கிக் கடுஞ்சூள் உரைக்கும் தலைவனைப் போந்தைப் பசலையாரின் அகநானூற்றுத் தோழி காட்டு கிறாள். புகாரில் பின்னாளில் ஏற்பட்ட கோயில்களின் பெருக்கத்துக்கு இப்பாடல் முன்னோடியாய் நிற்கிறது. இதே போன்றதொரு உறுதிப் பாட்டை தெறல் அரு கடவுள் முன்னர்த் தலைவியின் முன் கை பற்றி, உள்ளம் தேற்றித் தலைவன் தந்தான் என்று கூறும் பரணர் அதன் வழி கோயிலொன்று அங்கு இருந்தமையை உணர்த்துகிறார். வேளூரின் வாயிலில் உயர்ந்த பலிகளையே பெறும் அச்சம் தரும் தெய்வம் இருந் தாகக் கூறும் இடையன் நெடுங்கீரனார், தன் மீது சுமத்தப்பட்ட பழியை மறுத்த தலைவன், தான் கூறுவது பொய்யாயின் இந்த வேளூர்த் தெய்வம் தன்னை வருத்தட்டும் என்று சூளுரைப்பதாகப் பேசுகிறார்.

முள் முருக்கம், கோங்கம், புனலி, பாதிரி, வெண்கடப்பம் ஆகிய பூக்கள் கொட்டிச் சிதறிக் கலந்து கிடக்கும் காட்டு நெறிக் காட்சி, கோயிலொன்றின் பலித்தளத்தையே பாலை பாடிய பெருங்கடுங்கோ விற்கு நினைவுபடுத்துகிறது. 'அணங்குடை நகரின் மணந்த பூவின்'

என்ற பாடல் அடி இறைக்கோயில்கள் நகர் என்ற சொல்லால் அழைக்கப்பட்ட உண்மையை உறுதிப்படுத்துகின்றன. ஐங்குறுநூற்றின் குறிஞ்சிப் பாடலொன்று மலையில் அமைந்திருந்த கோயிலைக் கடவுள்குலம் என்று அழைக்கிறது. இங்கு வேங்கை மலரும் தேனும் படைத்துக் குறிஞ்சிப் பெண்கள் இறைவனை வழிபட்டனர். குலம் என்ற சொல் உறையும் இடத்தைக் குறிப்பதாகும். தேவகுலம், குருகுலம் என்ற வழக்காறுகள் கல்வெட்டுகளிலும் இலக்கியங்களிலும் இப்பொருளில் பயின்று வருதல் கண்கூடு.

முல்லையாகக் கருதப்படும் காட்டின் தெய்வமாய்த் திருமாலையே தொல்காப்பியர் சுட்டினாலும் அகப்பாடல்கள் இரண்டு, முருகனும் கொற்றவையும் கூடக் கானுறைத் தெய்வங்களாக வழிபடப்பட்டமையைத் தெளிவாக்குகின்றன. காடு கெழு நெடுவேள் என்று முருகனும் கான் அமர் செல்வி என்று கொற்றவையும் போற்றி வணங்கப்பட்டனர். புகழ் பெற்ற நுண்ணிய செய்யுட்கள் பலவற்றைப் பாடிய புலவர் பெருமான் ஒருவர் குதிரைகள் பல கொண்ட வரிசையைப் பெறுமாறு கான் அமர் செல்வி அருளியதாகக் குடவாயிற் கீரத்தனார் கூறுகிறார்.

தொகைப் பாடல்களில் பலபடப் பயின்று வரும் கடவுள், தெய்வம், அணங்கு என்னும் சொற்கள் இறைவனைப் பொதுநிலையில் வைத்துக் காட்டுகின்றன. சில பாடல்கள் மாயோன், வாலியோன், கண்ணன், இராமன், நேமியஞ் செல்வன், முக்கட் செல்வர், முருகன், கான் அமர் செல்வி என்னும் தெய்வங்களைக் குறிப்பாய்ச் சுட்டிப் பேசுகின்றன. மாயோன் அன்ன மால்வரை, வாலியோன் அன்ன வெள்ளருவி என்னும் சொற்றொடர்கள் இறை வடிவங்களின் தோற்ற அமைப்பு கூறுகின்றன. திருமால் மார்பில் புரளும் வனமாலையையும் அவர் கையில் தங்கியிருக்கும் சக்கரத்தையும் ஆலம்பேரி சாத்தனார் குறிக்கிறார். சூரபன்மனையும் அவன் சுற்றத்தாரையும் தொலைத்த ஒளி பொருந்திய நெடிய வேலையுடைய சினம் மிகு முருகனை மதுரை மருதன் இளநாகனார், தண்பரங்குன்றத்து இறைவனாகக் காட்டுகிறார். இக்கோயிலை 'அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை' என்றும் போற்றுகிறார். நல்லந்துவனாரின் பரங்குன்றம் போற்றும் பாடல் தொகை நூல்களுள் ஒன்றான பரிபாடலிலேயே இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. காமக்கண்ணியார் வெறியாடல் ஒன்றைப் படம் பிடித்துக் காட்டும்போது தவறு செய்வோரைத் தேய்த்தொழித்த பெருங்கை இறைவனாய் முருகனைக் காட்டுகிறார். இப்பெருமானின் மார்பில் தவழ்ந்த ஆரத்தைப் பற்றி ஒரு பாடல் பேசுகின்றது.

முருகன் அன்ன சீற்றம், முருகனைப் போன்ற நல்ல போர் வெற்றி, முருகு உறழ் முன்பு என்னும் உவமைகள் மக்கள் நெஞ்சில்

முருகன் பெற்றிருந்த செல்வாக்கையும் அத்தெய்வத்தைச் சுற்றி அமைந்திருந்த தொன்மங்களையும் தெளிவாய் உணர்த்துகின்றன. முருகு புணர்ந்தியன்ற வள்ளி என்ற நற்றிணை அடி இதற்கு மேலும் ஒரு சான்றாகிறது. கடம்பில் கொடி கட்டி, மாலை சூடி, முருகனின் கடம்பும் களிறும் பாடிப் பல்லிசைக் கருவிகள் முழங்கி அதற்கேற்ப ஆடலும் நிகழ்த்தி முருகனை வரவேற்றனர். அழைப்பேற்று வெறிக்களத்து வந்துற்ற தெய்வத்தை முருகு என உணர்ந்து, முகமன் கூறி, உருவச் செந்தினை நீரொடு தூவி, நெடுவேள் எனப் பரவி கண்ணிகளாய்ப் பிணைத்த காந்தள் மலர்களை, வந்த இறைவனுக்கு வழங்குமாறு போலப் படைத்து மகிழ்ந்து வழிபட்டனர். மலர்களுள் காந்தளே கடவுள் காந்தள் என்ற சிறப்பைப் பெறுகிறது. இது கடவுளுக்குப் பலியாய்த் தருவதற்கென்றே ஒதுக்கப்பட்ட காந்தள் செடிகளைக் குறிப்பதாக உரையாசிரியர் எழுதுகிறார். காந்தள் கண்ணி தந்து வழிபட்டால் கனவிலும் கண் முன்னும் முருகன் வருவாரென நம்பினர்.

ஐங்குறுநூற்றுப் பாடல்கள் வேலன் வெறியாடலைப் பற்றி விவரிக்குமிடத்துக் 'கன்னம் தூக்கி முருகென மொழியும்' என்று கூறுகின்றன. இந்தக் கன்னம் மந்திரத் தகடு உள்ளே வைக்கப் பெற்ற தாயத்து என்கிறார் உரைவேந்தர் அவ்வை சு. துரைசாமி. அகப்பாடலொன்றும் 'பொன் செய் கன்னம் பொலிய' என்று சுட்டுவது இங்கு நினைக்கத் தகுந்தது. கார்த்திகை நாளில் நெடுங்கொடி போல் ஏற்றப்பட்ட விளக்கு வரிசைகளைச் சில பாடல்கள் சுட்டுகின்றன. இவ்விளக்குகள் வீடுகளிலும் வீதிகளிலும் தொடராக ஏற்றப்பட்டன. இந்த விளக்கேற்றத்தின் உறுதியான பின்னணி பாடல்களில் பதிவாகவில்லை. 'அறுமீன் திங்களைச் சேரும் நாளில்' என்று விழா நாளை மட்டுமே குறிக்கும் பாடல்களில் விழா நாயகரின் பெயர் இல்லை. ஆனாலும் கார்த்திகை விழாவாய் இது அமைந்திருப்பதால் முருகு தொடர்புடையதாகக் கொள்ள வாய்ப்பிருக்கிறது.

தெய்வம் மறைந்து உறையும், வேண்டும்போது வெளி வந்து இயங்கும், அது போழ்து விரும்பும் உருவம் கொண்டு வரும் என்றெல்லாம் நம்பியவர்கள் அந்தத் தெய்வத்தை எங்கும் கண்டனர். பல பாடல்கள் சுனை, மரம், மலை, வீடு இவற்றில் கடவுள் உறைந்திருப்பதாகக் கூறுகின்றன. கடவுட் கற்சுனை, கடவுள் முதுமரம், கடவுள் ஓங்குவரை, இல்லுறைக் கடவுள் என்னும் சொற்றொடர்கள் நற்றிணையிலும் அகநானூற்றிலும் பல பாடல்களில் பயின்று வந்துள்ளன. பெண்ணை, ஆலம், வேம்பு முதலிய மரங்கள் கடவுள் குடியிருக்கும் மரங்களாகவே வணங்கப்பட்டன. ஊர்ப் பொதுவில் இருந்த பருத்த அடியை உடைய புனை மரத்தில் பண்டைக் காலந்தொட்டே இறைவன் உறைந்திருப்

பதாகப் பாடலொன்று பேசுகிறது. தெய்வம் தங்கியிருந்த பெரியதொரு வேப்ப மரத்தடியில் கொழுத்த பசுவொன்றைக் கொன்று அதன் இரத்தத்தைத் தூவிப் பலியிட்ட மழவர்களைக் கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார் காட்டுகிறார். இந்தப் பலிக்குப் பிறகு பசு வீரர்களின் உணவானதையும் அவர் காட்டத் தவறவில்லை. இன்றைக்கும் திருச்சி ராப்பள்ளியில் குழுமாயித் தெய்வத்தின் பெயரால் பூசாரிக்கு ஆட்டின் இரத்தத்தைக் குடிக்கத் தந்து புலாலை மக்கள் உண்ணும் பழக்கம் நடைமுறையில் உள்ளது.

இறைவன் தங்கியிருந்ததாகக் கருதப்பட்ட மரங்களை மக்கள் வழி பட்டு, மலர்களையும் உணவையும் இட்டனர். இவற்றை அருந்தக் காக்கைகளும் பேய்களும் காத்திருந்தன. ஊர்ப் பொதுவில் இருந்த மரத்துறை தெய்வத்திற்கும் ஊர்த் தெய்வங்கட்கும் பொதுவாகப் பலி யிடும் பழக்கமும் இருந்துள்ளது. இதை ஊரில் இருந்த வயது முதிர்ந்த குயவர் செய்தனர். இவர்கள் மன்றத்தே பலியிட்டு, அதை உண்ண வருமாறு காக்கைகளையும் அணங்குகளையும் அழைத்தமையைப் 'பார்முது குயவன் இடுபலி நுவலும் அகல் தலை மன்றம்' என்னும் நற்றிணை அடி தெளிவாக்கும். தேவர்கள் உண்பதற்காக வேள்வி களில் ஆமைகள் இடப்பெற்றதாக எயினந்தை மகனார் இளங்கீரனார் கூறுகிறார். இதைத் திருத்தக்க தேவர் சீவக சிந்தாமணியில் உறுதிப் படுத்துகிறார். இத்தேவர்கள் சூடியிருந்த மலர்கள் வாடா மலர்கள் என்கிறது அகப்பாடல் ஒன்று.

கணவரும் பிள்ளைகளும் கடலில் மீன் வேட்டைக்குப் போக, அவர்கள் நலமாய், வளமாய்க் கரை திரும்பத் துறைத் தெய்வத்திடம் ஆயத்துடன் போய்க் கைதொழுது வணங்கி வேண்டிக் கொண்ட மீனவத் தாயை அகநானூற்றுப் பாடல் காட்டுகிறது. இதையே கை தொழு மரபில் கடவுள் என்கிறது மற்றொரு பாடல். துறை உறை தெய்வத்திற்குக் கள்ளும் கண்ணியும் வெள்ளைக் கிடாவும் தந்து மகள் நோய் தீர்க்க மன்றாடி வேண்டிய மருதத் தாயை ஆவூர் மூலங்கிழார் படம் பிடிக்கிறார்.

வீட்டுத் தெய்வத்தைப் பற்றிப் பேசும் அகநானூற்றுப் பாடல் இல்லத்தில் இறைத் திருமேனிகள் இடம் பெற்றிருந்த தகவலைத் தரு கின்றது. திருமணத்திற்கு முன் வீட்டாரே இத்தெய்வத்தை வழிபட் டமையைத் தொல் கபிலரின் 'நல்லிறை மெல்விரல் கூப்பி இல்லுறை கடவுள் கோக்குதும் பலியே' என்னும் அடிகள் வழி அறிகிறோம்.

தெய்வத்தின் முன் பலியிட்டுப் பரவியது போலவே யாழ் கொண்டு இசையெழுப்பியும் கூட்டமாய்க்கூடி ஆடியும் களித்த மக்கள் இறை

வனிடம் பல வேண்டுதல்களையும் வைத்தனர். 'குறவன் கடவுள் பேணி இரந்தனன் பெற்ற குறுமகள்' என்னும் ஐங்குறுநூற்று அடி குழந்தைப் பேற்றுக்குக் கடவுளை வேண்டி இரந்திருந்த சங்க மரபு களைச் சுட்டுகிறது. காமராசர் மாவட்டத்துச் சோழபுரத்திலுள்ள விக்கிரம பாண்டீசுவரத்துத் தூண் கல்வெட்டுகள் இரண்டு இது போன்ற மகப்பேறு வேண்டலுக்கும் வேண்டுதல் நிறைவேறிய நிலை யில் காணிக்கை தந்த கடமை உணர்விற்கும் சான்றுகளாய்த் திகழ் கின்றன.

கடவுள் பேணி, வழிபடு தெய்வம் என்ற சொற்றொடர்கள் வழி பாட்டின் சிறப்பையும் சங்க மக்களுக்கு இருந்த கடவுள் நம்பிக்கையை யும் துல்லியமாய்த் தெரிவிக்கின்றன. விருந்தினரைக் காக்குமாறு வேண்டிப் புறங்கடையில் பலியுதிர்த்த சங்க மகளிரின் பண்பாடு வியக்க வைக்கிறது.

வடக்கேயுள்ள நீர்வளம் குறையா யமுனைத் துறையில் நீராடிய ஆயர் மகளிர் தழையாடை உடுத்திக்கொள்ளுமாறு குருந்த மரத்தைக் காலால் மிதித்துக் கண்ணன் வளைத்ததாக மதுரை மருதன் இளநாக னார் கூறுகிறார். 'மால்' என்ற சொல்லால் இப்பாடலில் கண்ணன் குறிக்கப்படுகிறார். பாண்டியரின் பழம் பெருமை மிக்க நாட்டின் தென் கோடியில் உள்ள கடல் முழங்கும் துறையில் போரில் வெல்லும் ஆற்றல் மிக்க இராமன் அருமறைகளை ஆராயும் பொருட்டுத் தங்கி யிருந்த காலை, அச்செயலுக்குத் தொல்லையாய் ஆலமரத்துப் பறவை கள் கூட்டம் ஒலியெழுப்பிக் கொண்டிருந்தது. ஆய்வுக்கு அமைதி நாடிய அண்ணல் ஆலமரப் பறவைகளை ஒலியடங்குமாறு செய்த தாக மதுரைத் தமிழ்க் கூத்தனார் கடுவன் மள்ளனார் சொல்கிறார். இராமன் பறவைகளை அடக்கிய இத்தென்முது கோடியைத் திரு வணை என்கிறார் உரையாசிரியர். இவ்விரு பாடல்களும் திருமால் தொடர்பான தொன்மங்கள் தமிழகத்தில் பெருவழக்கில் இருந்த சூழலைச் சுட்டுகின்றன.

'வெருவறு கடுந்திறல் இரு பெரும் தெய்வத்து உருவுடன் இயைந்த தோற்றம் போல அந்தி வானமொடு கடலணி கொளா வந்த மாலை' என்று மாலைக்கால அழகு பேசும் அகநானூற்றுப் பாடல் தமிழகத் திருவுருவ இயல் வரலாற்றில் தனியிடம் பெறத்தக்கது. அந்தி நிறக் கடவுளும் கடல் நிறக் கடவுளும் இயைந்த ஓர் உருவம் என்று இப்பாடல் குறிப்பது சிவபெருமானும் திருமாலும் ஒன்றிணைந்து நிற்கும் அரிஅரர் வடிவத்தையே என்பதில் யாதொரு அய்யமும் இல்லை. இதை உறுதிப்படுத்துமாறு போலக் காலத்தால் மிக முற் பட்ட குடைவரைகளுள் ஒன்றான பிள்ளையார்பட்டிக் குடைவரையில்

இந்த அரிஅரர் வடிவம் இடம் பெற்றுள்ளது. இது தவிர தந்திவர்மர் காலத்து மலையடிப்பட்டி சிவன் குடைவரையிலும் எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த குன்றக்குடி முதற் குடைவரையிலும் இவ்வடிவங்கள் காணக் கிடைக்கின்றன. பின்னாளில் சோழர்களாலும் விரும்பி ஏற்கப்பட்ட இரு பெரும் இறைகள் இணைந்த இத்திருவுருவம் சங்கப் பழமையது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சேர மன்னனின் கொல்லிமலையில் தெய்வம், பூதம், பாவை என மூன்றும் இருந்ததாக நற்றிணைப் பாடல்கள் சொல்கின்றன. இவற்றுள் பாவையே சிறப்புக்குரியதாய்ப் பேசப்படுகிறது. இந்தப் பாவையைத் தெய்வம் எழுதியதாக ஒரு பாடலும் பூதம் புணர்த்ததாக மற்றொரு பாடலும் கூறுகின்றன. வினைமாண் பாவை, புதிது இயல் பாவை எனும் அடைகளும் இப்பாவை பற்றி உரையாசிரியர்கள் தரும் விளக்கங்களும் ஆய்வுக்குரியவை. இப்பாவையைத் தெய்வம் காப்பதாகக் கூறும் மற்றொரு நற்றிணைப் பாடல் மோதியடிக்கும் சூறைக் காற்று, தொடர்ந்து கொட்டும் பெருமழை, முழங்கி எறியும் இடி மின்னல், நிலத்தைப் பிளக்கும் புவி அதிர்வு மற்றும் இன்னோரன்ன துன்பங்கள் தோன்றினும் தொடரினும் இப்பாவை தன் அழகிய வடிவம் கெடாது இருக்கும் இயல்பினது என்றுரைக்கிறது. வீடுகளில் எழுதப் பெற்றிருந்த இது போன்ற பாவைகள் காலப்போக்கில் நிறம் கலங்கியதை மற்றொரு பாடல் எடுத்துரைக்கிறது. இப்பாவைகளுள் சில பலி பெற்றுத் தெய்வநிலை எய்தியிருந்தன. மணிமேகலைக் காலக் கந்திற்பாவைக்கு இவை முன்னோடிகளாய் விளங்கின எனலாம். இன்றைக்கும் கந்திற்பாவைகளைக் குமரி மாவட்டக் கோயில் திருச் சுற்றுகளில் வரிசையாகப் பார்க்கமுடிகிறது.

அகநானூற்றுப் பாடலொன்றும் பூதத்தைக் குறிக்கிறது. இப் பூதம் பருத்த அடியை உடைய வேங்கை மரத்தைத் தந்ததாகவும் இம்மரம் வீரப் பெருமகனாரான கழுவுள் என்பாரின் காமூரில் இருந்ததாகவும் மதுரை மருதன் இளநாகனார் குறிக்கிறார். கதிரவன் ஒரு சக்கரத் தேரில் வருவதாக ஒரு பாடலும் அவன் பல குதிரைகள் பூட்டிய தேரில் வருவதாக மற்றொரு பாடலும் தெரிவிக்கின்றன. பிறை நிலவை மகளிர் தொழுது வணங்கியதாய்ப் பல பாடல்கள் பேசுகின்றன.

ஊர் இருக்கைப் பகுதிகளில் இருந்த கட்டடங்கள் பற்றியும் பல குறிப்புகள் தொகை நூல்களில் கிடைக்கின்றன. இவை நகர்ப்புறம், ஊரகம் எனப் பிரிக்கத்தக்கன. மதுரை, உறையூர், புகார், வஞ்சி போன்ற பெரு நகரங்களும் செல்லூர், வேளூர், ஊணூர், ஆமூர், நீடூர், போரூர், முள்ளூர், கள்ளூர், வெண்மணி, ஆலங்கானம், இடையாறு,

முசிறி, பேரூர், மாந்தை, வல்லம், கழார், பவத்திரி, கொற்கை, தொண்டி போன்ற பல ஊர்களும் குறிக்கப்படும் இந்நூல்களில் பல்வேறு கட்டட அமைப்புகள் பேசப்படுகின்றன.

புல்வேய் குரம்பை, குறி இறை குரம்பை, குவிந்த குரம்பை, புதுக் கலத்து அன்ன செவ்வாய்ச் சிற்றில் எனக் குடில்களும் சிறு வீடுகளும் பேசப்படுகின்றன. புல்வேய் குரம்பை ஒரு பசு கட்டிய ஒரு தூண் முகப்புடைய எளிய வீடாகக் காட்டப்படுகிறது. பெரு வீடுகள் நகர் என்ற சொல்லால் குறிக்கப்பட்டுள்ளன. இந்த நகர் என்ற சொல் இறைக்கோயில்களைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மாடமாண் நகர், விண்பொரு நெடுநகர், சீர்கெழு வியன் நகர், நிதியுடை நன்னகர், கடியுடை வியன் நகர், அருங்கடி வியன் நகர், அருங்கடிக் காப்பின் அகல் நகர், நெடுநிலை வியன் நகர், வரை குவிந்தன்ன வான் தோய் நெடு நகர், நிழற் கயத்தன்ன நீள் நகர், வினை வளம் கெழு திருநகர், நளிமனை நெடு நகர், நன்மனை நெடு நகர் என்னும் சொற்றொடர்கள் பெரு வீடுகளின் பல்வேறு பெருமைகளை விளக்கு கின்றன. நீண்டும் நெடிதுயர்ந்தும் பேரகலத்தினவாகவும் மலைக் குன்றென அமைந்திருந்த இவ்வீடுகள் அரிய காவல் பெற்றிருந்தன. சுதை பூசப்பெற்று, ஓவியத் தீட்டலால் அழகுபடுத்தப்பட்டிருந்தமையால் இவை வினை வளம்கெழு திருநகர்களாகப் போற்றப்பட்டன. இப்பெரு வீடுகளுக்கும் குரம்பைகளுக்கும் இடைப்பட்ட நிலையில் இருந்த கட்டுமானங்கள் இல் என்ற சொல்லால் குறிக்கப்பட்டுள்ளன. இவ்வீடுகளும் நகர்கள் போலவே கைவல்ல தொழிலர்களால் அழகு படுத்தப்பட்டிருந்தன என்பது ஓவத்தன்ன வினை புனை நல் இல் என்னும் பாடல் அடியால் விளங்கும்.

உறையூர், மதுரை போன்ற நகரங்கள் மதில்களைக் கொண்டிருந்தன. இம்மதில்களின் நிறைநிலை ஞாயில்களை மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் குறிப்பிட்டுள்ளார். 'மாடம் மலி மறுகின் கூடல்' என்று மதுரையைப் போற்றும் பாடல் அடி மதுரைத் தெருக்களில் நிறைந்திருந்த மேன்மாட வீடுகளைக் கண் முன் நிறுத்துகிறது. இவ்வீடுகளில் நிலாமுற்றங்கள் இருந்தன. இந்நிலாமுற்றங்களை அகநானூறு அரமியம் என்ற வட சொல்லால் குறிக்கிறது. இச்சொல் இன்னாளில் கோயில் விமானத்தின் தளக் கட்டுமானங்களைச் சுட்டப் பயன்படுகிறது. புகாரில் இருந்த நடுநிலை வீடுகள்கூட சிகரம் தோன்றும் சேண் உயர் நல் இல்களாக விளங்கின. இவற்றைச் சுற்றி நெடுமதில்கள் அமைந்திருந்தன. வீட்டின் நெற்றிப் பகுதிகள் மகர தோரணங்களால் அழகு செய்யப்பட்டிருந்தன. இது போன்ற இல்களிலும் நகர்களிலும் சுவர்கள் பாவைகளைக் கொண்டிருந்தன. ஓவியங்களாகவும் சுதை வடிவங்களாகவும் இருந்த இப்பாவைகளுக்கு

நிறம் தீட்டி, முத்து வடம் போன்ற அணிகலன்களை அணிவித்துப் பலிகளும் இட்டதாக நக்கீரர் சொல்கிறார். இந்தச் சுவர்ப் பாவைகள் மகளிரின் விருப்பத்திற்குரிய பாவைகளாக விளங்கின.

ஊர் மன்றங்கள் தூண்களைக் கொண்டிருந்ததாகக் கூறும் அகநானூறு ஊரில் சேரிகளும் உடன் இயைந்து விளங்கியதாகத் தகவல் தருகிறது. இச்சமூகக் கட்டமைப்புகள் தனி ஆய்வுக்குரியன.

பத்துப்பாட்டிலக்கியங்கள் போலவே தொகை நூல்களும் நடுகல் வழிபாட்டைப் போற்றிப் பல அரிய தகவல்களைத் தந்துதவுகின்றன. நட்ட கல் என்பதால் நடுகல் எனப் பெயர் பெற்ற இக்கற்கள் அனைத்தும் பாலை நிலத்துச் சுரவழிகளிலேயே அமைந்திருந்தன. பெரும் பாலும் போரில் வீரம் காட்டி இறந்தவர்களுக்காகவே இவை எடுக்கப் பெற்றிருந்தன. மழவர், மறவர் மற்றும் ஆறலைப்போர் வீழ்த்திய வழிச்சென்றார்தம் கற்பதுக்கைகளின் மீதும் நடுகற்கள் நடப்பட்டிருந்தன. இவையனைத்தும் சுரவழி வருவோர் வணங்கி வழிபடும் வகையில் நிழலில் இருந்தன. இவற்றுக்கு முன்னால் வேலூன்றிக் கிடுகு என்றழைக்கப்பட்ட கேடயத்தைச் சார்த்தியிருந்தனர்.

வீரம் காட்டி இறந்தவர்க்காய் எடுக்கப்பட்ட நடுகற்களில் அவர் தம் பெயரும் பெருமைகளும் பொறிக்கப்பட்டிருந்தன. இந்த எழுத்துப் பொறிப்புகள் தமிழி எழுத்துக்களில் இருந்திருக்கலாம் என்று எண்ணுமாறு 'கூர் உளிக் குயின்ற கோடு மாய் எழுத்து' என்னும் அகநானூற்று அடி அமைந்துள்ளது. இந்த எழுத்துப் பொறிப்புகளைச் சுரநெறி செல்வோர் படித்து வீரர் பெருமை போற்றி வழிபட்டனர். உப்பு வணிகர்களின் வண்டி உருளைகளில் இருந்த பூண்கள் இடித்து மோதியதாலும் மறவர்களும் மழவர்களும் தங்கள் அம்புகளை இக் கற்களில் தேய்த்துக் கூர்தீட்டிக் கொண்டதாலும் சில நடுகற்களில் செதுக்கப்பட்டிருந்த எழுத்துக்கள் சிதைந்து போயிருந்தன. இதனால் இவற்றைப் படித்த சுரநெறிப்போக்கர் சரியான பொருள் கொள்ள முடியாது மயங்கி வேறு பொருள் கொண்டதாக மதுரை மருதன் இள நாகனார் குறிப்பிடுகிறார். இன்றைக்கும் இது போன்ற சிதைந்த கல்வெட்டெழுத்துக்களைப் படிக்க முனையும் கல்வெட்டறிஞர்கள் எழுத்து மாற்றங்களில் கருத்து வேறுபாடுகள் கொள்வது நாளும் காண்பதே.

இந்நடுகற்கள் ஆள் நிற்பது போல நெடுநிலை நடுகற்களாய் நின்றன. சுரவழிச் சென்ற யானையொன்று வழியிலிருந்த நடுகல்லை ஆளென நினைத்துக் காலால் உதைத்து, நகம் பெயர்ந்து வருந்தியது. பெயர்ந்து உதிர்ந்திருந்த அதன் நகம் நுங்கின் தோல் போல் சுரவழியில் கிடந்ததாம்.

நடுகல் அமைக்கக் கல் தேடி, அலைந்து, கண்டெடுத்து, நட்டு மகிழ்ந்ததே பெரும்பான்மை. சில நேரங்களில் பெண் யானைகள் கிடந்தாற் போன்ற குன்றுகளின் பக்கங்களில் இயற்கை நட்டு வைத்திருந்த நெடும் பாறைகளையே நடுகற்களாக்கிக் கொண்டனர். இவை புலவர்களால் 'நட்ட போலும் நடா நெடுங்கல்' என்று வண்ணிக்கப் படுகின்றன. இக்கற்பாறைகளை நீரால் நனைத்து இவற்றின் அகலிடத்தைச் செதுக்கிச் சமப்படுத்தி இறந்த வீரர்களின் பெயர்களை வரிசையாய்ப் பொறித்து மகிழ்ந்தனர். பின்னர் மஞ்சள் பூசிச், சிவந்த கரந்தை மலர்களை அம்பால் அறுத்த ஆத்திப்பட்டையின் நார் கொண்டு தொடுத்துக் கண்ணிகளாய்க் கட்டிச் சூட்டினர். நடுகற்களின் மீது மயில் தோகை இடுவது பெருமரபாக இருந்துள்ளது. மழவரோ பீலியும் கண்ணியும் சூட்டியதுடன் நெல்லால் ஆன கள்ளும் படைத்துத் துடியடித்துச் செம்மறிக்குட்டியைப் பலியிட்டு வழிபட்டனர்.

(வளரும்)

பரிந்துரை நூல்கள்

1. அகநானூறு, ந. மு. வேங்கடசாமி நாட்டார், ரா. வேங்கடாசலம் பிள்ளை உரை, மூன்று தொகுதிகள், கழக வெளியீடு, சென்னை, 1943, 1944.

2. நற்றிணை நானூறு, அ. நாராயணசாமி அய்யர் உரையும் விளக்கமும், கழக வெளியீடு, சென்னை, 1976.

3. ஐங்குறுநூறு, அவ்வை சு. துரைசாமி உரை, மூன்று தொகுதிகள், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1957, 1958.

4. தமிழ்நாட்டு வரலாறு சங்க காலம் – வாழ்வியல், தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, தமிழ்நாடு அரசு வெளியீடு, 1983.

5. வெ. கேசவராஜ், நடுகல் வழிபாடு, சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1978.

நன்றி

இந்த இதழ் உருவாகப் புதிய கல்வெட்டுகள், கட்டுரைகள் தந்துதவிய ஆய்வர்கட்கும் விளம்பரங்கள் தந்துதவிய அருளாளர்கட்கும் அவற்றை வாங்கித் தந்த அன்புள்ளங்களுக்கும் வரலாற்றின் கனிந்த கைகூப்பு.

6. பொதுப்பகுதி

1. பெருமைச் சுவடுகள்

வரலாற்று மேதை கே. ஏ. என். சாஸ்திரி*

இரா. லலிதாம்பாள்

இந்தியாவின் மிகச் சிறந்த வரலாற்றுப் பேரறிஞர்களுள் ஒருவராக வைத்துப் போற்றப்படும் நீலகண்ட சாஸ்திரியார் கி. பி. 1892ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் பன்னிரண்டாம் நாள் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கல்லிடைக்குறிச்சியில் பிறந்தார். தெலுங்கு அந்தணர் வகுப்பைச் சேர்ந்த இவர் முன்னோர்கள் விசைய நகரப் பேரரசுக் காலத்தில் தெற்கு நோக்கி வந்து குடியேறியவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

அம்பாசமுத்திரம் தீர்த்தபதி உயர்நிலைப் பள்ளியில் பள்ளிப் படிப்பை முடித்தவர், திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் சேர்ந்து இளங்கலை பயின்று பட்டமும் பெற்றார். முதுகலைப் பட்டம் பெறச் சென்னை செல்ல விரும்பிய நீலகண்டனாரைக் குடும்பத்தின் பொருளாதாரச் சூழல் தடை செய்தது. அண்ணன் தந்த ஆதரவில் அந்தத் தடையையும் மீறிச் சென்னை வந்து கிறித்துவக் கல்லூரியில் சேர்ந்தார். அறிஞர் மேக்பெல் என்ற வரலாற்றுப் பேராசிரியரிடம் பயின்றார். ஆங்கிலத்திலும் வடமொழிப் பாடத்திலும் முதன்மையான மதிப்பெண்கள் பெற்று, மாநிலத்திலேயே முதல் மாணவராய்த் திகழ்ந்தார். இவரது படிப்பூக்கம் கல்விக்கான உதவித்தொகையைப் பெற்றுத் தந்தது.

முதுகலைப் பட்டம் பெற்று 1913இல் கல்லூரியை விட்டு வெளி வந்த நீலகண்டனார் 1918 வரை திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். 1918இல் இருந்து 1920 வரை காசி இந்துப் பல்கலையில் பேராசிரியராகவும் பிறகு 1929 வரை சிதம்பரம் மீனாட்சி கல்லூரியின் முதல்வராகவும் இருந்த காலத்து மாணவர்களின் அறிவுத்திறம் வளர நீலகண்டனார் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பலவாகும்.

சிதம்பரத்திற்குப் பிறகு சில காலம் திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரியில் வரலாற்றுப் பேராசிரியராகப் பணியாற்றிய நீலகண்டனார் 1929 முதல் 1947 வரை ஏறத்தாழப் பதினெட்டு ஆண்டுகள் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல்துறையில் பேராசிரியராகப் பொறுப்பிலிருந்தார். 1952இல் இருந்து 1956 வரை மைசூர்ப் பல்கலைக்கழகத்தில் இருந்தவர் 1959 முதல் 1971 வரை சென்னையிலுள்ள தென்கிழக்கு ஆசியப் பண்பாட்டு மையத்தின் இயக்குநராக அமர்ந்திருந்தார்.

---

* தமிழக வரலாற்றறிஞர்கள் நூலைத் தழுவி எழுதப்பட்டது.

1952இல் நேபாளத்திற்கும் 1959இல் சப்பானிற்கும் சென்று பல ஆய்வுப் பொழிவுகள் நிகழ்த்திய பேராசிரியர் நீலகண்டனார் சிகாகோ பல்கலையின் வருகைப் பேராசிரியராகப் பணியமர்த்தப்பட்டார். இந்திய அரசு இப்பெருமகனாரின் இணையற்ற வரலாற்றறிவையும் பேராசிரியராக இருந்த காலத்தில் இளைய சமுதாயத்திற்கு இவராற்றிய தொண்டுகளையும் கருத்தில் கொண்டு 1958இல் இவருக்குப் பத்மபூஷண் விருதளித்துச் சிறப்பித்தது.

தென் மாநிலங்களின் தன்னிகரற்ற வரலாற்று மேதையாக விளங்கிய பேராசிரியர் நீலகண்டனார் பல வரலாற்றாய்வு மாநாடுகளுக்குத் தலைமை தாங்கிச் சிறப்பு செய்திருக்கிறார். 1946இல் பாட்னாவில் நடைபெற்ற இந்திய வரலாற்றுப் பேரவை இவரின் சீரிய தலைமையில் சிறக்க நடத்தப்பெற்றது. 1954இல் லக்னோவில் நடந்த அனைத்து இந்தியக் கீழ்த்திசை மாநாட்டிற்கான தலைமைப் பொறுப்பும் இவருக்கே தரப்பட்டது. இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறையின் ஆலோசனைக் குழு உறுப்பினராக இருந்து பல சிறந்த வழிகாட்டல்களைத் தந்த இப்பெருமகனார் பொறுப்பேற்று நடத்திய கருத்தரங்குகளும் பங்கேற்றுச் சிறப்பித்த கருத்தரங்குகளும் பலவாகும்.

தாம் பணியாற்றிய காலங்களில் இந்தியாவிலிருந்து வெளியான வரலாறு சார்ந்த தலையாய இதழ்கள் அனைத்திலும் பேராசிரியர் நீலகண்டனார் அரிய ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வெளியிட்டுள்ளார். நூற்றறுபதிற்கும் மேற்பட்ட இக்கட்டுரைகள் இன்றளவும் வரலாறு, தொல்லியல் சார்ந்த ஆய்வாளர்களுக்கு வழிகாட்டிகளாக இருந்து உதவுகின்றன. இவரது வரலாற்று நூல்களுள் மிகவும் புகழ் பெற்றவை மூன்றாகும். சோழர்கள், தென்னிந்திய வரலாறு, தென்னிந்தியாவைப் பற்றிய அயலார் குறிப்புகள் என்னும் அம்மூன்று நூல்களும் இந்திய வரலாற்று வரைவுக் கலையின் மைல்கற்களெனலாம்.

'சோழர்கள்' என்ற இவரது அரிய ஆய்வு நூல், விசயாலயப் பரம்பரையின் விரிவான ஆட்சிக் காலத்தைப் பன்முகங்களில் பார்த்து, உரிய மூலச் சான்றுகளை ஒன்று விடாமல் ஆராய்ந்து, கொள்வன கொண்டு தள்ளுவன தள்ளி, எப்பக்கமும் கோடாது எழுதப்பட்ட சிறந்த வரலாற்றுப் பெட்டகமாகும். இப்போது தமிழிலும் வெளியிடப்பட்டிருக்கும் இந்நூல் சோழர் காலத்தின் முழுமையான வரலாறு, அவர் தம் ஆட்சி முறை, அரசியலமைப்பு, வருவாய்த்துறைச் செயற்பாடுகள், நிதி, நீதி, மக்கள் வாழ்க்கை, தொழில்கள், வணிகம், வேளாண்மை, கல்வி, கலை, இலக்கியம் என்று அனைத்துத் துறைகளையும் தழுவியமைந்துள்ளது. சோழர்களைப் பற்றி முதன் முதல் மேற்கொள்ளப்பட்ட முழுமையான ஆராய்ச்சியின் வெளிப்பாடாய் விளங்கும் இந்நூல் சோழர் வரலாறு அறிய விரும்புவோர்க்கு இணையற்ற ஒரு செய்திக் கருவூலமாகும்.

நாட்டின் தலையாய ஆய்வறிஞர்களுள் ஒருவராகத் திகழ்ந்த போதும் ஆய்வு நாகரிகத்தை இவர் பேணிக் காத்த விதம் போற்றிப் பின்பற்றத்தக்கதாகும். மாறுபட்ட கருத்துக்களை மறுக்கும்போதும் பிற அறிஞர்களின் முடிவுகளை ஏற்காத இடங்களிலும் நயத்தக்க நாகரிகத்துடன் இப்பெருமகனார் தம் கருத்துக்களை வெளிப்படுத்தும் முறைகள் இளம் ஆய்வாளர்களை வழிநடத்த வல்லன.

சிறந்த கல்வியாளராகவும் ஆய்வாளராகவும் வரலாற்று அறிஞராகவும் திகழ்ந்த இப்பெருமகனார் 1975ஆம் ஆண்டு ஜூன் மாதம் பதினைந்தாம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார். தமிழகத்தின் பெருமையை இந்திய அளவில் உயர்த்திய இப்பெருந்தகையின் பெருமைச் சுவடுகள் காலமுள்ளளவும் இவர் நூல்களின் வழி நிலைத்திருக்கும்.

வம்பும் வீச்சும்

வம்பு பேசுவது மகளிர்க்குள்ள மகிழ்வூட்டும் பொழுது போக்குகளுள் ஒன்றாம். இலக்கியங்கள் சொல்கின்றன. காலங்காலமாக இவர்கள் வம்பு பேசி வந்தாலும், எப்படிப் பேசினர் என்பதற்கான விளக்கம் இதுவரை கிடைத்ததில்லை. உலோச்சனார் அந்தக் குறையைத் தீர்த்து வைக்கிறார்.

பெண்ணொருத்தி காதல் வயப்பட்டாள். அக்கம் பக்கத்துப் பெண்களுக்குத் தகவல் கிடைத்தது. விடுவார்களா? வீதிக்கு வந்தனர். சிலரும் பலருமாய்க் கூடினர். சொல்வார் சிலரும் கேட்பார் சிலருமாய்ச் சிறுசிறு குழுக்கள். எப்படிப் பேசி எப்படி வியந்தனர்?

'சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி
மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகின் பெண்டிர் அம்பல் தூற்ற'

பார்வை வீச்சும் சொல் வீச்சும் ஒரு சேர, அதன் வழி வந்த தகவல்கள் தந்த வியப்பு, சுட்டு விரலை மூக்கருகே கொண்டு போய்ச் சேர்க்கக் கன்னி ஒருத்தியின் காதல் சுடச்சுடச் செய்தியானது.

இந்தப் பேச்சுகள் தாயின் செவிகளில் விழாதிருக்குமா? கேட்டவள் சினமுற்றாள். என் மகளா, காதலிக்கிறாளா என்று கொதித்தாள். எடுத்தாள் சிறு கோல் ஒன்று. கண்ணில் பட்ட மகளைச் சுற்றிச்சுற்றி அடித்தாள். கிரிக்கெட் பந்திற்கு மட்டுந்தானா சுழல் வீச்சு? அன்னை எடுத்த சிறு கோலும் சுழல் வீச்சில் காதல் சுந்தரியை நையப்புடைத்து வருத்தியதாம். பட்டவளே பாடு சொல்கிறாள். நம்மிடமில்லை. தன் நெஞ்சுக்கு நெருங்கிய தோழியிடம்தான்.

'சிறுகோல் வலந்தனள் அன்னை அலைப்ப
அலந்தனென் வாழி தோழி' — நற்றிணை 149.

---

2. நூல் மதிப்புரை

நூல் : திருநாங்கூர்

ஆசிரியர் : கா. நெடுஞ்செழியன்

வெளியீடு : அருண் பதிப்பகம்,
ஜெயங்கொண்டசோழபுரம்-621 802.

பக்கங்கள் : 141 ; விலை : ரூ. 15.00

ஒன்பது தலைப்புகளின் கீழ் 142 பக்கங்களில் அமைந்துள்ள திருநாங்கூர் பற்றிய இந்நூல், இவ்வூரில் பிறந்து வளர்ந்தவரால் எழுதப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. நாங்கூரிலும் நாங் கூரைச் சுற்றிலுமாய் அமைந்துள்ள கோயில்களைப் பற்றிய பல செய்திகளைத் தொகுத்துத் தந்திருக்கும் நூலாசிரியரின் முயற்சி யும் உழைப்பும் பாராட்டற்குரியன. ஓர் ஊரைப் பற்றிய பெரும் பாலான தகவல்கள் ஒரே நூலில் கிடைப்பது, அவ்வூர் பற்றி அறிய விரும்புவோர்க்குப் பேருதவியாகும் என்ற முறையில் இது போன்ற நூல்களை வரவேற்பது நம் கடமை. ஆனால் இதற்கான செய்தித் திரட்டல்களில் ஈடுபடுவோர் உரிய பயிற்சியும் கவனக் கூர்மையும் உள்ளவராய் இருத்தல் மிக இன்றியமையாதது. உழைப்பு மட்டுமே கொண்டு இது போன்ற முயற்சிகளில் ஈடுபட்டால் நூலில் பிழைகள் பரவலாதல் தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. அதற்குத் திருநாங்கூர் என்னும் இந்நூல் ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

இந்நூல் திருக்கோயில்கள் பற்றிய நூல் என்பதால் நாங்கூர்ப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. நாங்கூர் சேர்ந்த ஏழு வைணவக் கோயில்கள், இரண்டு சிவன் கோயில்கள், நாங்கூருக்கு அருகிலுள்ள திருக்காவளம்பாடி கண்ணன் கோயில், திருவெள்ளக்குளம் அண்ணன் பெருமாள் கோயில் ஆகியவற்றையே ஒருநாள் பயணத்தில் பார்க்க முடிந்தது. இந்தப் பதினொரு கோயில்கள் சார்ந்த நூலாசிரியரின் தகவல்களுக்கும் உண்மை நிலைகளுக்கும் இடையிலுள்ள வேறு பாடுகள் ஒன்றிரண்டல்ல. ஒவ்வொரு கோயிலிலும் ஏதாவது ஒரு வகையில் நூல் தகவல் சரியில்லாமல் இருப்பதைக் காணமுடிந்தது.

இலக்கியம்

நூலின் தொடக்கத்தில் திருநாங்கூரைப் பற்றிப் பேசுமிடத்தில் சங்க இலக்கியங்களான பட்டினப்பாலையிலும் பொருநராற்றுப்படை யிலும் நாங்கூரைப் பற்றிக் குறிப்புகள் இருப்பதாக ஆசிரியர் கூறு கிறார் (பக். 1). ஆனால் நூலின் பல்வேறு பகுதிகளில் இலக்கிய

அடிகளை அள்ளித் தெளித்திருப்பவர் இந்தக் குறிப்புகளைப் பேசும் பாடல் அடிகளை மட்டும் தராது விட்டிருப்பதற்குக் காரணம், பட்டினப் பாலையிலும் பொருநராற்றுப்படையிலும் நாங்கூர் பற்றிய எந்தச் செய்தியும் இல்லை என்பதுதான்.

கட்டடம்

கோயில் கட்டுமானத்திலுள்ள உறுப்புகள் பற்றி நூலாசிரியர் தந்திருக்கும் தகவல்களில் பல சரியில்லாமல் உள்ளன. அனைத்துக் கோயில்களைப் பற்றிப் பேசும்போதும் துணைத்தள உறுப்படுக்கை உபானம் என்ற சொல்லாலேயே குறிப்பிட்டுள்ளார். அர்த்த மண்டபம், முகமண்டபம், உள்நாழி, திருச்சுற்று, மகாமண்டபம் போன்ற கட்டடக் கலைச் சொற்களில் நூலாசிரியருக்குள்ள குழப்பம் நூலின் ஒவ்வொரு கோயிற் கட்டுரையிலும் வெளிப்பட்டுள்ளது.

நாங்கூரிலுள்ள ஏழு கோயில்களில் நாராயணப் பெருமாள் கோயில் மாடக்கோயில் வகையைச் சேர்ந்தது. இக்கோயிலைப் பற்றி எழுதியிருக்கும் கட்டுரையின் எந்த இடத்திலும் இது மாடக்கோயில் என்பதை நூலாசிரியர் குறிப்பிடவில்லை. இக்கோயில் கட்டுரையின் தொடக்கத்தில் மங்கையாழ்வார் பாசுரம் தரப்பட்டுள்ளது. அதன் இறுதி அடி மணிமாடக் கோயிலென்றே தொடங்கியும் ஆசிரியர் கோயிலின் அமைப்பை அடையாளம் காணத் தவறியிருக்கிறார்.

குடமாடுங்கூத்தர் கோயில் கருவறைக் கட்டட அமைப்பு கி. பி. 9-10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முற்காலச் சோழர் கலைப்படைப்பு என்று ஆசிரியர் சொல்கிறார் (39). இது சரியல்ல. கருவறை சுவர்த் தூண்களின் பாதப் பகுதியில் நாகபந்தம் போன்ற அமைப்பு காணப் படுவதுடன் போதிகை பன்னிரண்டாம் நூற்றாண்டு அமைதிக்கு வந்து விட்டதைப் பார்க்கலாம். தாராசுரம் கோயிலில் காணப்படும் மதலை, நாணுதல் போன்றவை இத்தூண்களின் போதிகைகளிலும் காணப்படு கின்றன. இவற்றைப் பார்த்த பிறகும் இக்கோயில் கட்டடம் கி.பி. 9 அல்லது 10ஆம் நூற்றாண்டு அமைப்பினது என்று நூலாசிரியர் எழுதியிருப்பது, காலக் கலைமுறைகளில் அவர்க்குள்ள அநுபவக் குறைவைக் காட்டுகிறது.

இவ்வூரிலுள்ள ஈசுவரன் கோயில்களுள் ஒன்றான மதங்கீசுவரர் கோயில் தாங்குதளத்தை (அதிட்டானம்) விவரிக்கையில் குமுதத்தை அடுத்துக் கண்டமும் பட்டிகையும் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார் (65). ஆனால் இருப்பது பிரதிவரி மட்டுமே. இது பிரதிபந்தத் தாங்குதள வகையைச் சேர்ந்த கட்டுமானம். பிரதி முகம் இல்லையென்றாலும் அதற்கான அமைப்புள்ளது. பட்டிகை என்று நூலாசிரியர் குறிப்பது

வாஜனமாகும். பட்டிகையே இல்லாதபோது பட்டிகையில் பூதகணம் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகிறார் (65). பிரதி முகத் திருப்பங்களில் காட்டப்படும் மகரத் தலையின் வாயில் காணப்படும் பூதத்தையே பட்டிகைப் பூதமாக்கியிருக்கிறார். வடபுறமுள்ள மகரத் தலையில் பிள்ளையார் இருப்பதை நூலாசிரியர் பார்க்கவில்லை போலும்.

இதே கோயிலின் தேவகோட்ட அரைத்தூண் மேற்பகுதிகளில் சாலை இருப்பதாகக் கூறுகிறார் (66). ஆனால் தோரணம் மட்டுமே காணப்படுகிறது. இக்கோயிலின் திராவிட சிகரத்தை வேசரம் என்று எழுதியுள்ளார் (66).

வைகுந்தப் பெருமாள் கோயிலின் சிகரம் சாலை வடிவிலிருப்ப தாகக் குறிப்பிடுகிறார் (20). ஆனால் சிகரம் நாகரமாக உள்ளது.

சிற்பங்கள்

சிற்பங்களைப் பற்றிய தகவல்களும் பல இடங்களில் பிழையாக உள்ளன. அவை அனைத்தையும் சொல்வதானால் இம்மதிப்புரையே ஒரு நூலாகி விடலாம். சில மட்டும் சுட்டுவது கடமையாகிறது.

பெரும்பாலான அமர்வு நிலைகளை முறையான கலைச்சொற் களால் குறிப்பிடாது விட்டிருப்பதையும் சிலவற்றைக் குழப்பமூட்டும் வகையில் விவரித்திருப்பதையும் நூலாசிரியர் தவிர்த்திருக்கலாம் (27).

இறைத்திருமேனிகள் நிற்கும் அல்லது அமர்ந்திருக்கும் தள அமைப்பு, திருமேனிகளின் கைகள் காட்டும் முத்திரைகள், கொண்டிருக் கும் கருவிகள், அவற்றின் தலைக்கோலங்கள் என்று பல நிலைகளில் தவறான தகவல்கள் தரப்பட்டுள்ளன.

வைகுந்தப்பெருமாள் கோயில் கருவறை இறைவன் தாமரைத் தளத்தில் அமர்ந்திருப்பதாக நூலில் காணப்படுகிறது (27). ஆனால் இறைவன் சுருளாய் வளர்ந்திருக்கும் பாம்புடலின் மீது அமர்ந்திருக் கிறார். கருவறையில் ஆண்டாள் நின்ற கோலத்தில் இருப்பதாகக் கட்டுரை சொல்கிறது (27). ஆனால் அவர் மகிழ்வமர்வில் இருக்கிறார்.

வரத முத்திரையிலும் (12) ஊரு முத்திரையிலும் (14) இருப்ப தாகச் சொல்லப்படும் பெருமாளின் கைகள் கதையைப் பிடித்துள்ளன. சூசியில் இருப்பதாகச் சொல்லப்படும் வாயிற் காவலர் கைக்குறிப்புகள் (13) தர்ஜனியில் உள்ளன. செம்பொன் அரங்கரின் கடிய வலம்

பிதக் கை, கதை பிடித்திருப்பதாகக் (31) கூறப்பட்டுள்ளது. தளத்தில் இருத்தப்பட்டுள்ள குடமாடுங்கூத்தர் தேவியின் கையைத் தொங்கும் கரமாகக் காட்டுகிறது நூல் (40).

குடமாடுங்கூத்தர் திருக்கோயில் அரைத்தூண்களில் திருமாலின் பல்வேறு உருவங்கள் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளதாக நூலாசிரியர் எழுதுகிறார் (39). இப்பல்வேறு உருவங்கள் அநுமார், உடையவர், பெண்கள், பக்தர்கள் என்றமைந்துள்ளன. திருமால் இந்தத் தோற்றங்களையெல்லாம் எப்போது எடுத்தார் !

இதே கோயிலின் மேற்குச் சுவரில் உள்ளதாகக் குறிக்கப்படும் ஆண்டாள் சிற்பம் (41) மேற்குச் சுவர் அருகே தனிச் சிற்பமாகக் காணப்படுகிறது. இத்திருமேனியின் இருபுறமும் காட்டப்பட்டுள்ள தூண்களின் மேற்பகுதியில் அன்னப் பறவைகள் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் இருப்பவை மகரங்கள்.

சில திருமேனிகள் நூலாசிரியர் குறிப்பிடும் இடங்களில் காணுமாறு இல்லை. குடமாடுங்கூத்தர் கருவறையில் கூத்தரின் கீழே குடம் காணப்படுவதாகக் கூறுகிறார் (39). கருவறை முழுவதும் தேடியும் குடத்தைக் காணமுடியவில்லை. பட்டர் பெருமான் தாமும் குடத்தைப் பார்த்ததில்லை என்கிறார். புருடோத்தமர் கோயில் கருவறையில் ஆண்டாள் சிற்பமும் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார் (23). ஆனால் ஆண்டாள் சிற்பம் காணுமாறு இல்லை. இக்கோயில் செப்புத்திருமேனிகள் பட்டியலில் ஆண்டாளைக் குறிக்கவில்லை. ஆனால் ஆண்டாள் இருக்கிறார். கருவறையில் செப்புத்திருமேனியாக இருக்கும் ஆண்டாளைச் சிற்பக் கணக்கில் சேர்த்துக்கொண்டதால் நேர்ந்த பிழையிது. இதே கோயிலின் மகாமண்டபத்தில் உடையவர் திருமேனி இருப்பதாகக் கூறியுள்ளார் (23). இருப்பவர் திருமங்கையாழ்வார். தொண்டரடிப் பொடியாழ்வார் இருந்தும் நூலில் இடம்பெறும் பேறு பெற்றாரில்லை.

மதங்கீசுவரர் கோயில் தட்சிணாமூர்த்தி சிற்பத்தருகே சனகாதி முனிவர்கள் இருப்பதாக எழுதியுள்ளார் (67). ஆனால் முனிவர்களைக் காணமுடியவில்லை.

'அலத்துக்கரியா' என்றொரு சிற்பத்தை நூலாசிரியர் வண்ணித்துள்ளார் (14). இச்சிற்பத்தின் பெயர் அளத்தற்கரியார். இது பெருமாளின் சிற்பமே. பாசுர அடிகளுக்கேற்ப இங்குள்ள இரண்டு பெருமாள் சிற்பங்களை நந்தாவிளக்குப் பெருமாள், அளத்தற்கரியாப் பெருமாள் என்று பெயரிட்டுள்ளனர். பாசுர அடிகளைத் தந்திருக்கும்

நூலாசிரியர் இவற்றுக்கும் கோயிற் சிற்பங்களுக்குமுள்ள தொடர்பை அறியாமல் போனது வியப்பளிக்கிறது.

செப்புத்திருமேனிகள்

சிற்பங்களை விவரிப்பதில் நேர்ந்துள்ள பிழைகள் செப்புத்திருமேனிகளை விவரிக்கும் இடங்களிலும் நேர்ந்துள்ளன (36, 37). குடமாடுங்கூத்தர் கோயிலுக்குரிய செப்புத்திருமேனிகளாக நூலாசிரியர் குறிப்பிடும் ருக்மணியும் சத்யபாமாவும் (41) திருக்காவளம்பாடி கண்ணன் கோயிலுக்குரியவையென்று அறங்காவலர் அண்ணங்கராச்சாரியார் குறிப்பிடுகிறார். திருக்காவளம்பாடிக்குரியவையாக நூலாசிரியர் குறிப்பிடும் ஸ்ரீதேவியும் பூதேவியும் (55) குடமாடுங்கூத்தர் கோயிலுக்குரியவை.

திருக்காவளம்பாடி கண்ணன் கோயில் ராஜகோபாலரை வேணுகோபாலராக்கியிருக்கிறார் (55). இருவருக்கும் தோற்றத்தில்தான் எத்தனை வேறுபாடு.

சுதையுருவங்கள்

கோயில் விமானங்களின் சாலைக் கோட்டங்களிலும் கிரீவ நாசிகைகளிலும் இருக்கும் சுதையுருவங்களை அடையாளம் காண்பதிலும் பிழை நேர்ந்திருக்கிறது.

வரதராசப் பெருமாள் கோயில் வட கிரீவ நாசிகையில் பள்ளி கொண்ட பெருமாள் இருப்பதாகக் கூறியுள்ளார் (43). இருப்பவர் வைகுந்தப் பெருமாள். குடமாடுங்கூத்தர் கோயிலிலும் இதே நிலைதான் (39). நம்புவார்க்கு அன்பர் கோயில் கிழக்குக் கிரீவ நாசிகையில் சந்திரசேகரர் இருப்பதாகக் கட்டுரையாசிரியர் குறிப்பிடுகிறார் (76). இருப்பவர் தேவியருடன் முருகன். முருகனின் பின் கைகளில் வஜ்ரமும் சக்தியும் இருந்தும் அவரை நூலாசிரியர் சந்திரசேகரராக அடையாளம் கண்டிருப்பது வியப்பூட்டுகிறது.

கல்வெட்டுகள்

திருநாங்கூர்த் திருக்கோயில்களிலிருந்து ஏற்கனவே படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளாக (152, 153, 154 of 1951-52) மூன்று கல்வெட்டுகளைக் குறிப்பிடும் நூலாசிரியர் புதியனவாக இரண்டு கல்வெட்டுகளைப் பதிப்பித்துள்ளார். ஆக ஐந்து கல்வெட்டுகள் வழங்கும் செய்திகள் நூலாசிரியரால் சொல்லப்படுகின்றன.

நாராயணப் பெருமாள் கோயில் உள்மண்டப வாயில் திருநிலைக் கால்களிலுள்ள பரகேசரிவர்மரின் இரண்டு கல்வெட்டுகளையும் குறிக்கு மிடத்து 'இக்கல்வெட்டுகளில் பரகேசரிவர்மன் என்று வருவதால் பராந்தக சோழனின் கல்வெட்டுகளாகக் கருதலாம்' (18) என்று கல்வெட்டுகளைக் காலநிர்ணயம் செய்கிறார் நூலாசிரியர். சோழ மரபில் பரகேசரிவர்மன் என்று பட்டம் பூண்ட அரசர்கள் மொத்தம் பதினொருவர். கல்வெட்டில் 'பரகேசரி' என்று மட்டும் குறிப் பிட்டிருப்பின் அப்பட்டப் பெயர் இப்பதினொருவரில் யாரை வேண்டு மானாலும் குறிக்கும். ஆசிரியர் எப்படிப் பராந்தகனை மட்டும் தேர்ந்து கொண்டார் என்பதற்கு நூலில் விளக்கமில்லை. இக்கல் வெட்டுகளின் எழுத்தமைதி இப்பரகேசரிவர்மரை உத்தம சோழராகக் கருத வைக்கின்றன.

செம்பொன் அரங்கர் கோயில் கோபுரக் கல்வெட்டில் கண்ண புரத்தம்மாளின் கணவராகத் துறோநாசாரியாவைக் காட்டியுள்ளார் (108). கல்வெட்டில் இருப்பவர் றெங்காசாரியர். 'கைங்கர்யம்' என்ற சொல்லும் விடுபட்டுள்ளது. புதிதாகப் பார்க்கப்பட்ட வீரபாண்டியர் கல்வெட்டில் (107) நூலாசிரியர் புள்ளி வைத்திருக்கும் இடங்களில் படிக்கும்படியான எழுத்துக்கள் உள்ளன. இவர் இரண்டாவது வரியில் சொல்லியிருப்பது போல் இக்கல்வெட்டு நாராயணப் பெருமாள் கோயில் நாயனாரைக் குறிக்கவில்லை. திருநாங்கூர் நாயனார் அளத்தற்கரிய நாயனாரையே குறிக்கிறது. நூலாசிரியர் சொல்லியிருப்பது தவிர மேலும் சில புதிய கல்வெட்டுகளையும் கோயில்களில் பார்க்க முடிந்தது.

சில கோயில்களின் கட்டட அமைப்பிற்கு நூலாசிரியர் சில சிறப்புப் பெயர்களைத் தந்துள்ளார். பிரணவ விமானம் (12), சருதிய விமானம் (34), வேதமோத விமானம் (54) என்று பட்டியலிடப்பட்டிருக்கும் இப் பெயர்களுக்கான விளக்கம் கிடைத்திருந்தால் படிப்பவர்கள் இவை யெல்லாம் என்னவென்று விளங்கிக் கொண்டிருக்கலாம்.

'தாம் பிறந்த தலத்தின் சிறப்பை ஒரு நூலாகத் தாமே எழுதி வெளியிடுதல் வேண்டும் என்ற முனைப்போடு ஆசிரியர் ஈடுபட்டு அதில் வெற்றியும் கண்டுள்ளார்' என்று அணிந்துரையில் தொல்பொருள் ஆய்வுத்துறையின் இயக்குநர் திரு. நடன. காசிநாதன் சொல்லி யிருப்பது உண்மைதான். ஆனால் 'இந்நூல் போன்றே தம்முடைய தலத்திற்கு அருகில் உள்ள ஊர்களுக்கும் இவர் நூல்கள் எழுதுவா ரானால், அது தமிழகத்திற்குப் பெரும் பயனாக அமையும்' என்று திரு. நடன. காசிநாதன் அணிந்துரையின் முடிவில் கூறியிருப்பது போல் சொல்லமுடியாமல் இந்நூலில் பரவிக்கிடக்கும் கருத்துப்பிழைகள் நம்மைத் தடுக்கின்றன.

அதனால் ஆசிரியர்க்கு ஒரு வேண்டுகோள். இந்த நூலையே திருத்தங்கள் செய்து மேலும் செய்திகள் சேர்த்து ஆய்வு நோக்கில் அமைத்து வெளியிட்டால் பயனுடைய நூல்கள் பட்டியலில் திருநாங் கூரும் சேரும் வாய்ப்பிருக்கிறது.

— இரா. கலைக்கோவன்

துன்பம் நேர்கையில்......

துன்பம் நேர்கையில் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுது அரற்றும் பழக்கம் இன்றும் சிற்றூர் மகளிர் மாட்டு இருந்து வரு கிறது. இந்தப் பழக்கம் சங்கப் பழமையது என்பதற்குச் சில சான்றுகள்.

கோரையால் செய்த பாவையை மார்போடு அணைத்தபடி வீட்டுப் படப்பையில் பந்து விளையாடுகிறாள் சங்கப் பெண் ஒருத்தி. பந்து விளையாட்டில் மும்முரமாய் இருக்கும் அவள், தான் வீட்டில் போற்றி வளர்த்துப் பந்தலிட்டுப் படரவைத்த வயலைக் கொடியை, அப்போது தான் கன்றீந்த பசுவொன்று மெல்ல இழுத்து உண்பது கண்டாள். அவ்வளவில் தட்டிக் கொண்டிருந்த பந்து கைநழுவிப் போனது. பாவை கீழே விழுந்தது. தான் அருமையாய் வளர்த்த வயலைக் கொடி பசு வின் வாய்க்குள் மெல்ல மெல்ல மறைந்து கொண்டிருக்கும் கொடுமை தாங்காது, இரண்டு கைகளாலும் தன் அழகிய வயிற்றில் அடித்துக் கொள்ளத் தொடங்குகிறாள். அழுகையும் சேர்கிறது.

கையில் தேன் கலந்த பால் நிறைந்த பாத்திரத்தை ஏந்தியபடி குறிஞ்சி நிலத்தில் மெல்ல நடந்தாள் கொடிச்சி ஒருத்தி. மறைந் திருந்த குரங்குக் குட்டி சற்றும் எதிர்பாராது தாவிக் குதித்துப் பாத்திரம் பறித்து ஓடி மறைந்தது. பாத்திரத்தோடு பாலை இழந்தவளின் அழகிய கண்களில் அளப்பரிய நீர். செய்வதறியாத ஆற்றாமையுடன் நீலப்பூ போன்ற மென்மையான தன் கைகளால் வயிற்றில் அடித்துக் கொள்ளத் தொடங்குகிறாள். அவ்வளவில் விரல்கள் சிவக்கின்றன. ஏற்கனவே சிவந்திருந்த வயிறோ மேலும் கன்றிச் சிவக்கிறது.

கதிரவன் மறையும் நேரம். அச்சம் தரும் தெய்வங்கள் இயங்கத் தொடங்கும் வேளை. நீர்த்துறையில் நீரலைத்து ஓரையாடிக் கொண் டிருந்த மகளிர் கூட்டம் மாலை மங்குவது கண்டு அரைகுறையாய் ஆட்டம் முடித்தது. முடித்து வைத்திருந்த அழகுக் கூந்தல் ஆட்ட முனைப்பில் நனைந்தும் கலைந்தும் போயிருப்பது தெரியவந்தது. முடி யைப் பிழிந்து உலர்த்திக் கொண்டனர். அவசரமாய் முடித்த ஆட்டமும் நனைந்து கலைந்த கூந்தலும் நெஞ்சை வருத்தின. துன்ப மேலீட்டால் வயிற்றில் அடித்தபடியே ஊருக்குத் திரும்பினர் அந்த வஞ்சியர்.

துன்பம் நேர்கையில் வயிறலைக்கும் இந்தச் சங்கப் பழக்கம் இன்று வாயையும் சேர்த்துக் கொண்டு வளர்ந்திருக்கிறது.

— நற்றிணை 179, 379, 398.

---

3. யாவரும் கேளிர்

1. சு. ஆறுமுகம் : 16–7–1926. திரு. சுப்பிரமணியம் திருமதி. பேச்சியம்மாள் மகனார். பி.ஏ., பி. டி., ஓய்வு பெற்ற உதவிக் கல்வி அலுவலர். இல்லம் : 145-ஈ 1, கல்யாணி இல்லம், திருவள்ளுவர் நகர், விக்கிரமசிங்கபுரம் - 627 425, திருநெல்வேலி மாவட்டம். ஆர்வம் : புத்தகங்கள் படிப்பது.

2. நா. அழகப்பன்: 19–11–1952. திரு. ராம. நா. நாகப்பன் திருமதி. நா. நாச்சம்மை மகனார். வரலாற்றில் முதுகலை, முது நிறைஞர், முனைவர். முதுநிறைஞர் ஆய்வேட்டுத் தலைப்பு 'திரு வண்ணாமலைக் கோயில் வரலாறு'. முனைவர் ஆய்வேட்டுத் தலைப்பு 'பிற்காலப் பாண்டியர் காலத்தில் சமுதாயப் பொருளாதார நிலை'. இணைப்பேராசிரியர், வரலாற்றுத்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்-608 002, தென் ஆற்காடு வள்ளலார் மாவட்டம். இல்லம் : திருவருள் இல்லம், 41, விளங்கி அம்மன் கோயில் தெரு, சிதம்பரம்-608 001, தென் ஆற்காடு வள்ளலார் மாவட்டம். பொறுப்புகள் : உறுப்பினர், தமிழ்நாடு வரலாற்றுப் பேரவை, தென்னிந்திய வரலாற்றுப் பேரவை, இந்திய வரலாற்றுப் பேரவை. பங்கேற்பு : மாநில மற்றும் நாட்டளவிலான வரலாற்றுக் கருத்தரங்குகளில் பங்கேற்பு. ஆய்வுக் கட்டுரைகள் அளித்தல். வெளி யீடுகள் : இருபதிற்கும் மேற்பட்ட வரலாற்றாய்வுக் கட்டுரைகள். நகரத்தார் வரலாறு-சிறு நூல். ஆர்வம்: தமிழ் இலக்கியம், வரலாறு, ஆன்மிகம், சமுதாயத் தொண்டு. சிறப்பு : மதுரைத் திருவள்ளுவர் கழகம் சார்பில் திரு. சி. ராம. அறக்கட்டளை வெள்ளி விழாவில் 'அறிஞர் பெருமக்கள்' வரிசையில் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பாராட்டும் பரிசும் வழங்கப்பட்டமை.

3. பொ. பெருமாள் : 24–10–1944. திரு. க. பொன்னுசாமி திருமதி. பொ. அங்கம்மாள் மகனார். துணைவியார் மருத்துவர் திருமதி. நிர்மலா. எம்.பி.பி.எஸ்., எம்.டி. பொது மருத்துவம், நீரிழி வியலில் பட்டயம், துணை சிவில் சர்ஜன். இதய நோயியல்துறை, கோயமுத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயமுத்தூர். இல்லம் : A 4, ஈ. எஸ். ஐ. மருந்தகக் குடியிருப்பு வளாகம், சிங்கா நல்லூர்-641 005, கோயமுத்தூர். வெளியீடுகள் : பொன் விலங்குச் சிந்தனைகள், மருத்துவ மாணவனின் ஏழு பருவங்கள் முத லான கட்டுரைகள். ஆர்வம் : இலக்கியம், வரலாறு, கோயிற் கலை கள், ஓவியம். சிறப்பு : சென்னை மருத்துவக் கல்லூரிப் பொங்கல் விழாவில் ரங்கோலி வரைந்து பேரறிஞர் அண்ணாவின் பாராட்டைப் பெற்றமை.

4. இரா. சங்கரலிங்கம் : 25–6–1938. திரு. எம். எஸ். ராஜு திருமதி. பூங்காவனம் அம்மாள் மகனார். இளங்கலைக் கணிதம்,

பொது நிர்வாகத்தில் முதுகலை, கல்வியியல் முதுகலை. தலைமை யாசிரியர், அரசினர் உயர்நிலைப் பள்ளி, அண்ணா நகர், திருச்சிராப் பள்ளி-620 026. இல்லம் : 4-A, வாலாசா சாலை, உறையூர், திருச் சிராப்பள்ளி-620 003. பொறுப்புகள் : செயலர், தமிழ்நாடு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் தலைமையாசிரியர் சங்கத்தின் திருச் சிராப்பள்ளிக் கல்வி மாவட்டம்; பொருளர், திருச்சிராப்பள்ளிக் கல்வி மாவட்ட சாரண, சாரணீய சங்கம். ஆர்வம் : புத்தகம் படித்தல், வேளாண்மை.

5. த. ராகினி: 17-7-1958. திரு. தங்க நாடார் திருமதி. ரத்தி னம்மாள் மகளார். தமிழில் முதுகலை, முதுநிறைஞர், முனைவர், இதழியலில் பட்டயம், இளங்கலைக் கல்வியியல். முதுநிறைஞர் ஆய் வேட்டுத் தலைப்பு 'ஊர்ப் பெயராய்வு' (இராசாக்கமங்கலம்). முனை வர் ஆய்வேட்டுத் தலைப்பு, 'பாரதி, பாரதிதாசன் பெண்மைக் கோட் பாடுகள்.' தலைவர், தமிழ்த்துறை, காவேரி மகளிர் கல்லூரி, அண்ணாமலை நகர், திருச்சிராப்பள்ளி-620 018. இல்லம் : எறும்புக் காடு, அனந்த நாடார்குடி அஞ்சல்-629 201, கன்னியாகுமரி மாவட்டம். பொறுப்புகள்: உறுப்பினர், குமரி மாவட்டத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கம், குமரி மாவட்டத் தமிழாலயம் இலக்கிய அமைப்பு. வெளியீடு கள் : வளன் ஆயம் இதழில் ஆய்வுக் கட்டுரை, அமுதசுரபி, தேவி, ராணி, சக்தி, அமுதம், கலைச்சங்கு போன்ற இதழ்களில் சிறுகதை, கவிதை, கட்டுரை, துணுக்குகள். ஆர்வம் : கவிதை, நாடகம், தோட்டக்கலை.

6. தெய். சேஷகிரி : 6-7-1942. திரு. சொக். தெய்வண்ணன் திருமதி. மீனாட்சி சுந்தரம் மகனார். பொருளாதாரத்தில் முதுகலை, இயந்திரம் மற்றும் மின்னணுத் தராசு விற்பன்னர். 8, வடக்குத் தெரு, ஸ்ரீராம் நகர், தேனாம்பேட்டை, சென்னை-600 018. இல்லம் : 9, சூர்யா குடியிருப்பு, 18, பாலையா சாலை, லஸ், மயிலை, சென்னை-600 004. பொறுப்புகள்: உறுப்பினர், சர்வதேச எடை அளவுகள் நிறுவ னம், அமெரிக்கா; எடை மற்றும் அளவைகளின் தேசியக் கழகம், அமெரிக்கா. நிறுவனர், தமிழ்ப் பண்பாட்டு மையம். வெளியீடுகள் : ஓரிரு கட்டுரைகள். ஆர்வம் : தமிழ்ப் பழமொழிகளைப் பொருள்வாரி யாகப் பிரித்தல், தமிழிசை, தமிழர் தொழில் அறிவு, தமிழக வரலாறு. சாதனை : சர்க்கரை ஆலைகளில் விரைவாக எடை போடவும் விவசாயிகளுக்கு விரைவாகப் பணம் கொடுக்கவும் வழி செய்யும் வகை யில் கணிப்பொறியுடன் மின்னணுத் தராசுகள் இணைப்பிற்கும் அதன் பரவலான பயன்பாட்டிற்கும் செயலூக்கராகத் திகழ்ந்தது. இந்தியா விலேயே முதன் முதலாக இந்திய அஞ்சல் துறைக்கு வடிவமைக்கப் பட்ட மின்னணு அஞ்சல் தராசு வழங்கியமை. இவற்றால் தராசுத் தொழிலின் தரம் உயரவும் விலைகள் மலிவாகவும் வகை செய்தமை,

7. அ. அறிவுநம்பி : 10–11–1952. திரு. பூ. அமிர்தலிங்கம் திருமதி. இராசலக்குமி மகனார். தமிழில் முதுகலை, முனைவர். முனைவர் ஆய்வேட்டுத் தலைப்பு 'தமிழகத்தில் தெருக்கூத்து'. இணைப்பேராசிரியர், பாரதியார் தமிழியல் நிறுவனம், புதுச்சேரிப் பல்கலைக்கழகம், புதுச்சேரி-605 014. இல்லம் : 19, இரண்டாம் வீதி, இராசராசேசுவரி நகர், புதுச்சேரி-605 011. பொறுப்புகள் : உறுப்பினர், கல்விக்குழு, புதுச்சேரிப் பல்கலைக்கழகம், புதுச்சேரி; பாடத்திட்டக்குழு, நாடகத்துறை, புதுச்சேரிப் பல்கலைக்கழகம். பதிப்பாசிரியர், தேடல்-தமிழியல்துறை நூல். கருத்துரைஞர், சமுதாய முன்னேற்ற நிறுவனம், தமிழகத் தெருக்கூத்துக் கலைஞர்கள் சங்கம், உளுந்தூர்ப்பேட்டை. வெளியீடுகள் : கூத்தும் சிலம்பும், தமிழகத்தில் தெருக்கூத்து, தமிழர் மறந்த தமிழர் மரபுகள், தமிழரின் வழிபாட்டுச் சிந்தனைகள், தமிழரின் தெய்வநெறிச் சிந்தனைகள் முதலிய எட்டு நூல்கள்; பதிப்பாசிரியராக ஏழு நூல்கள்; நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள். ஆர்வம் : நாட்டுப்புறவியல், அரங்கக் கலைகள், சமூகவியல். சாதனை : முதுகலை வகுப்பில் பல்கலைக்கழக முதன்மை. அதற்காக அறிஞர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் பெயரிலான தங்கப்பதக்கம் பெற்றமை.

8. சு. வெ. சீதாராமராவ் : 17–5–1932. திரு. சு. வெங்கப்பய்யா திருமதி. காவேரி அம்மாள் மகனார். எம். பி. பி. எஸ்., மருத்துவ மனை, சன்னதி தெரு, திருவானைக்கோயில்-620 005. தொ. 432202. இல்லம் : 5, கிழக்கு ரெங்கநாதபுரம், திருவரங்கம்-620 006. தொ. 432605. பொறுப்புகள்: உறுப்பினர், இந்திய மருத்துவ மன்றம். ஆர்வம் : பூந்தோட்டம், கருநாடக இசை.

வாசனைப் படகுகள்

உழவுக்கு உதவாத மாடுகளை ஒதுக்கி நிறுத்துவது போலப் பழுதுபட்டுக் கடற்பயணத்திற்குத் தகுதியிழந்த படகுகளைக் கரையோரம் நிறுத்துவராம் நெய்தல் மக்கள். பயன்படா இப்படகுகளுக்கு நறுவிரை நல்புகை கொடார் என்று கூறும் அம்மூவனார் இதன் வழி, மீன் பிடித்தலுக்குப் பயன்படும் படகுகளுக்கு நல்ல மணமுள்ள புகை காட்டி அவற்றை வாசம் மிகச் செய்து கடலில் செலுத்துதல் சங்கப் பழக்கமாயிருந்ததை மறைமுகமாகச் சுட்டுகிறார். மீன்பிடி கடல் பயணத்தின் போது பேய்கள், அணங்குகள் போன்றவற்றால் படகுகளுக்கு நேரக் கூடிய துன்பம் நீக்குவதற்கே இப்பழக்கம் என்கிறார் உரையாசிரியர்.

— நற்றிணை 315.

4. அன்புள்ள உங்களுக்கு

வரலாற்றின் அனைத்து இதழ்களும் வரப்பெற்றேன். படித்து விட்டுப் பெருமகிழ்ச்சி அடைந்தேன். தமிழில் இத்தகைய தரமான ஆய்வுகள் அடங்கிய தொகுதிகள் வரவேண்டும் என்று நான் கண்ட கனவு நனவாகியுள்ளது. கட்டுரைகள் கனமானவை. ஆழமாகவும் அழுத்தமாகவும் உள்ளன. பிழையின்றி அச்சாகியுள்ளன. கிரந்த எழுத்துக்களைத் தமிழில் எழுதும் முறை எளிமையாகவும் சீராகவும் உள்ளது.

அய்ராவதம் மகாதேவன்
18A, நான்காம் கடல் நோக்குச் சாலை,
வால்மீகி நகர், திருவான்மியூர்,
சென்னை – 600 041.

வரலாறு இதழ் வரலாற்றிற்குச் செய்யும் தொண்டுகளை வரலாற்று ஆசிரியர் என்ற முறையில் பெரிதும் பாராட்டுகிறேன். வரலாறு இதழ் மேன் மேலும் வளர இறைவன் திருவருளை வேண்டுகிறேன்.

நா. அழகப்பன்
இணைப் பேராசிரியர்-வரலாற்றுத்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலை நகர் – 608 002.

வரலாறு இதழ்கள் பயனுள்ள பல செய்திகளைத் தருகின்றன. ஆகஸ்டு '94 இதழில் மாமண்டூர் நரசமங்கலம் குடைவரைகள் என்ற கட்டுரையில் முதற் குடைவரைக் கல்வெட்டுகள் பற்றிக் குறிப்பிடு மிடத்து மகேந்திரவர்மரின் கல்வெட்டொன்றில் கந்திருவம் என்ற சொல் காணப்படுவதாகவும் அதே காலத்தில் வாழ்ந்த அப்பரடிகளின் பாடலொன்றிலும் அந்தச் சொல் இடம் பெற்றிருப்பதாகவும் குறிப் பிட்டு, 'இலக்கியத்திற்குக் கல்வெட்டும் கல்வெட்டிற்கு இலக்கியமும் தாங்கலாக நிற்கும் இந்தச் சிறப்பு தமிழிலக்கியங்களின் உண்மைத் தன்மையை உணர்த்தவல்லதொரு சான்றாகும்' என்று எழுதியிருப் பதைப் படித்தபோது என் நெஞ்சம் நெகிழ்ந்து போயிற்று.

கோயில் ஆய்வுகள் பற்றி விளக்கமாகக் குறிப்பிடும்போது அதை நன்றாகப் புரிந்துகொள்வதற்கு வாய்ப்பாகக் கோயிலின் அமைப்பை ஒரு சிறு வரைபடம் தந்து விளக்கினால் நன்றாக இருக்கும். அறிவிலும் ஆற்றலிலும் சிறந்த ஆசிரியர் குழுவைப் பெற்றிருக்கும் வரலாற்றிற்கு இது ஓர் அரிய செயலன்று.

ராஜி என்ற புனை பெயரில் பல சிறந்த செய்தித் துணுக்குகள் வெளிவருகின்றன, அந்தப் பெயரை நல்ல தமிழ்ப் பெயராக மாற்றிக் கொண்டால் சிறப்பாக இருக்கும்.

தொல்லியல் மட்டுமின்றி நல்ல புதிய தமிழ்ச் சொற்களையும் வெளியிட்டுத் தமிழ் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி வரும் வரலாற்றாய்வு மையத்தின் பெயர் 'முனைவர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்' என்றிருந்தால் பொருத்தமாக இருக்கும். வளர்க வரலாற்றுப் பணி.

சு. பழனியாண்டி
2, பட்டாபிராமன் பிள்ளை தெரு,
தென்னூர், திருச்சிராப்பள்ளி – 620 017.

வரலாறு ஆகஸ்டு '94 இதழ் படித்து முடித்தேன். நிறைய கருத்தான விபரங்களும் தமிழ் வரலாற்றில் ஈடுபாடு கொண்டுள்ள பலரின் சிறப்பான கட்டுரைகளும் கூ. ரா. சீனிவாசன் வாழ்க்கைக் குறிப்பும் இருந்தன. மாமண்டூர் நரசமங்கலம் குடைவரைகள் பற்றிய அருமையான கட்டுரை எனக்கு 1989இல் குடும்பத்துடன் ஒருநாள் அங்குச் சென்று பார்த்தவைகளை அப்படியே ஞாபகப்படுத்தியது. மெத்த மகிழ்ச்சி. கஷ்டமான பணியை விடாமுயற்சியுடன் செய்து வரும் உங்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

— மா. கோபாலகிச்சினேன்
22, வில்லா போய்சியெர்,
ஒர்சே, பிரான்ஸ்.

ஒரு காக்கையின் கனவு

கனவுகள் பலவிதம். காண்பவரும் பலவிதம். மனிதக் கனவுகள் பற்றி மட்டுமே கேள்விப்பட்டிருக்கும் நமக்குக் காக்கையின் கனவைச் சொல்கிறார் வெண்ணாகனார்.

தாழை மரத்தின் தாழ்ந்த கிளையில் விருப்புடைய துணையுடன் உணவருந்தா நிலையில் தளர்ச்சியும் வருத்தமுமாய் அமர்ந்திருந்தது சிறிய கடற்காக்கை ஒன்று.

பசிமயக்கத்தில் அமர்ந்திருந்தபடியே கனவு கண்டது. மீன் வேட்டை நின்றுபோன காலம். சுறாமீன்கள் கவலையற்று உலவும் கடற்பரப்பு. வெள்ளிய இறாமீன்களோ துள்ளிக் குதித்து அலைச் சவாரி செய்கின்றன. பார்த்திருக்கும் காக்கைக்கோ பெருமகிழ்வு. விருப்பம் போலப் பறந்து கிடைப்பனவெல்லாம் பிடித்து மகிழ்வோடு உண்டது. கனவில்தான். காக்கை கண்ட இந்தக் கனவிற்குப் பலனுண்டோ!

— அகம் 170.

5. அங்கும் இங்கும்

1. ஆனந்தரங்கர் நாட்குறிப்பு முதல் தொகுதிக் கருத்தரங்கம்

1994 அக்டோபர்த் திங்கள் ஒன்பதாம் நாள் ஞாயிறன்று சீதாலட்சுமி ராமசாமி தன்னாட்சிக் கல்லூரியின் வரலாற்றுத்துறையும் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையமும் இணைந்து நடத்திய ஆனந்தரங்கர் நாட்குறிப்பின் முதல் தொகுதிக் கருத்தரங்கம் திருச்சிராப்பள்ளி சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி வளாகத்தில் நிகழ்ந் தேறியது. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் தொல்லியல் துணைக் கண்காணிப்பாளர் திரு. அ. அப்துல் மஜீது அறிமுக உரை நிகழ்த்தினார்.

காலையில் நிகழ்ந்த முதல் அமர்விற்குப் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் எதிர்காலவியல்துறைப் பேராசிரியர் முனைவர் நா. இராசேந்திரன் தலைமையேற்றார். ஆனந்தரங்கர் நாட்குறிப்பின் முதல் தொகுதி காட்டும் அரசியல் வரலாறு குறித்து சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி வரலாற்றுத்துறைத் தலைவர் பேரா. கோ. வேணிதேவி, தேர்வுநிலை விரிவுரையாளர் பேரா. சீ. கீதா ஆகியோர் கட்டுரைகள் வாசித்தனர். முதல் தொகுதி காட்டும் ஆனந்தரங்கர் என்ற தலைப்பில் வரலாற்றாய்வு மைய இயக்குநர் டாக்டர் இரா. கலைக்கோவன் கட்டுரை படித்தார்.

பிற்பகல் அமர்விற்குத் தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரியின் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் முனைவர் ந. அருணாசலம் தலைமை யேற்றார். சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி வரலாற்றுத்துறை தேர்வு நிலை விரிவுரையாளர் பேரா. சே. விஜயா முதல் தொகுதி தரும் வணிகச் செய்திகளைப் பற்றிய ஆய்வுக் கட்டுரையையும் அதே துறை யைச் சேர்ந்த தேர்வுநிலை விரிவுரையாளர் பேரா. லோ. மணிமேகலை சமயச் செய்திகள் பற்றிய கட்டுரையையும் டாக்டர் மா. இராசமாணிக்க னார் வரலாற்றாய்வு மையக் கல்வெட்டாய்வர் அர. அகிலா ஆனந்த ரங்கர் காட்டும் கலைப் பண்பாட்டுச் சூழல்களைப் பற்றிய கட்டுரையை யும் வழங்கினர்.

மாலையில் நடந்த நிறைவு விழாவிற்குக் கல்லூரி முதல்வரும் தமிழ்த்துறைத் தலைவருமான பேரா. மா. கற்பகம் தலைமையேற்றார். பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா. முனைவர் வீர. முத்துக்கருப்பன் நிறைவுரையாற்றினார். ஆனந்தரங்கர் குல விளக்கு திரு. ஆனந்தரங்க ரவிச்சந்தர் தம் துணைவியாருடன் விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

2. திருச்சிராப்பள்ளி நாணயவியல் கழகத்தின் முதலாண்டு நிறைவு விழா

1994 டிசம்பர் பதினெட்டாம் நாள் ஞாயிறன்று திருச்சிராப்பள்ளிச் சுழற் சங்கத்தின் ஆதரவுடன் திருச்சிராப்பள்ளி நாணயவியல் கழகத்தின் முதலாண்டு நிறைவு விழாவும் நாணயக் காட்சியும் ஓட்டல் ஃபெமினாவில் நடைபெற்றன. நாணயவியல் கழகத் தலைவர் திரு. எம். கந்தசாமி தலைமையேற்கப் பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா. முனைவர் வீர. முத்துக்கருப்பன் குத்துவிளக் கேற்றிக் கண்காட்சியைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார். இக்காட்சியில் இந்தியத் துணைக்கண்டத்தில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் புழக்கத்திலிருந்த நாணயங்கள் முதல் இன்று புழக்கத்திலிருக்கும் நாணயங்கள் வரை ஏறத்தாழ இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பல வகையான நாணயங்கள் வைக்கப்பட்டிருந்தன. கிரேக்கர்கள், ரோமானியர்கள், குப்தர்கள், மொகலாயர்கள், விசையநகரப் பேரரசர்கள், கிழக்கிந்தியக் கம்பெனியார், இந்திய அர்சினர் ஆகியோர் வெளியிட்ட காசுகள் இவற்றுள் அடங்கும்.

தொடக்க விழாவைத் தொடர்ந்து நடந்த கருத்தரங்கின் காலை அமர்விற்குத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் பதிவு அலுவலர் திரு. கி. ஸ்ரீதரன் தலைமையேற்றார். டாக்டர் இரா. கலைக்கோவன் வாழ்த்துரை வழங்கினார். நாணயவியல் கழகத் துணைத் தலைவர் திரு. மு. ம. கோபாலன் காசுகள் ஒரு காலப் பார்வை என்ற தலைப்பிலும் திரு. ஆ. மனோகரன் இந்தோ–டேனிஷ் நாணயங்கள் என்ற தலைப்பிலும் கட்டுரைகள் வாசித்தனர்.

பிற்பகல் அமர்விற்குத் திருச்சிராப்பள்ளி அருங்காட்சியகக் காப்பாட்சியர் திரு. ப. ராஜமோகன் தலைமையேற்றார். திரு. எம். கந்தசாமி பணவீக்கமும் நாணய நலிவும் என்ற தலைப்பிலும் திரு. ப. சீனிவாசன் கோனேரிராயன் காசு என்ற தலைப்பிலும் கட்டுரைகள் வாசித்தனர். திரு. டி. என். ஆறுமுகம் நன்றி கூறினார்.

3. எட்டாம் உலகத் தமிழ் மாநாடு

1995 சனவரி 2–5 தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் பங்கேற்றது. மைய இயக்குநர் டாக்டர் இரா. கலைக்கோவன் மூன்றாம் நாள் பிற்பகல் அமர்வில் புதிய பார்வையில் சார்ங்கபாணி கோயில் கரணச் சிற்பங்கள் என்ற தலைப்பி

லான ஆய்வுக் கட்டுரையை வழங்கினார். இந்த அமர்வுக்குத் திரு. வை. கணபதி ஸ்தபதி தலைமை தாங்கினார்.

ஐந்தாம் நாள் காலையில் நடைபெற்ற கலை தொடர்பான அமர்விற்கு டாக்டர் இரா. கலைக்கோவன் தலைமையேற்றார். இந்த அமர்வில் மையத்தின் முனைவர் ஆய்வர் பேரா. சீ. கீதா, இராசசிம்மர் தாங்குதளங்கள் ஓர் ஒப்பீட்டாய்வு என்ற தலைப்பிலமைந்த ஆய்வுக் கட்டுரையை வழங்கினார்.

மையத்தின் கல்வெட்டாய்வாளர்கள் மு. நளினி, அர. அகிலா, மையத்தின் முனைவர் ஆய்வர் பேரா. கோ. வேணிதேவி ஆகியோர் நோக்கர்களாகக் கலந்து கொண்டனர்.

4. வரலாற்றுக் கள ஆய்வு மையக் கருத்தரங்கம்

காமராசர் மாவட்டம் இராசபாளையத்தைச் சேர்ந்த வரலாற்றுக் கள ஆய்வு மையத்தின் கருத்தரங்கம் 1995 மார்ச் மூன்றாம் நாள் முதல் ஐந்தாம் நாள் வரை மூன்று நாட்கள் நடைபெற்றது. முதல் நாள் நடந்த தொடக்க விழாவில் டாக்டர் இரா. கலைக்கோவன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். காலையில் நடைபெற்ற கருத்தரங்க முதல் அமர்விற்குப் பேரா. கோ. வேணிதேவி தலைமையேற்று ஆன்மா நாட்டுச் சோழபுரத்துக் கல்வெட்டுகள் என்ற தலைப்பில் கட்டுரை படித்தார். அர. அகிலா மூவரை வென்றான் குடைவரையும் கல்வெட்டுகளும் என்ற ஆய்வுக் கட்டுரையை வழங்கினார்.

பிற்பகல் அமர்வுக்குப் பேரா. சீ. கீதா தலைமையேற்று செவல்பட்டிக் குடைவரை பற்றிய ஆய்வுக் கட்டுரையொன்றைப் படித்தார். மு. நளினி திருக்கோளக்குடிக் கல்வெட்டுகள் – ஓர் ஆய்வு என்ற தலைப்பில் கட்டுரை வழங்கினார்.

6. கட்டுரையாளர்கள்

1. அர. அகிலா
முனைவர் ஆய்வர்
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி-620 017.

2. எஸ். இராமச்சந்திரன்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
10A, ரகு பில்டிங், ஏரல்-628 801.

3. வே. இராமன்
ஸ்தபதி, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
38/5, புதிய சுற்றுலா மாளிகைக் குடியிருப்பு
மன்னார்புரம், திருச்சிராப்பள்ளி-620 020.

4. இரா. கலைக்கோவன்
இயக்குநர்
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி-620 017.

5. ச. கிருஷ்ணமூர்த்தி
தொல்பொருள் அலுவலர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
176, ஒ. எஸ். தீன் பில்டிங்
மேல ரத வீதி, சிதம்பரம்-608 001.

6. சீ. கீதா
தேர்வுநிலை விரிவுரையாளர் - வரலாற்றுத்துறை
சீதாலட்சுமி ராமசாமி தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி-620 002.

7. ஆறுமுக சீதாராமன்
11, உமா நகர், தஞ்சாவூர்-613 007.

8. இரா. பூங்குன்றன்
காப்பாட்சியர், அரசு அகழ்வைப்பகம்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
671, ஜவஹர் பஜார், கருவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

9. கூரம் திருவாழி நரசிம்மன்
தொல்லியல் ஆய்வுக் கண்காணிப்பாளர்
இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறை
கோட்டை அருங்காட்சியகம்
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

10. மு. நளினி
மதிப்புறு கல்வெட்டாய்வர்
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி-620 017.

11. இரா. லலிதாம்பாள்
இசை ஆசிரியை
கோயிலூர் பெரியநாயகி மகளிர் மேனிலைப்பள்ளி
முத்துப்பேட்டை-614 704.
நாகபட்டினம் காயிதேமில்லத் மாவட்டம்.

12. கோ. வேணிதேவி
தலைவர் – வரலாற்றுத்துறை
சீதாலட்சுமி ராமசாமி தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி-620 002.

13. ம. ஜான்சி
முதுகலை வரலாற்று மாணவி
சீதாலட்சுமி ராமசாமி தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி-620 002.

நல்வாழ்த்துக்கள்

ஸ்ரீ மாணிக்க விநாயகர் பழக்கடை
8/9, நந்திகோயில் தெரு,
தெப்பக்குளம்,
திருச்சிராப்பள்ளி-620 002.

193253
V211 m N93

நல்வாழ்த்துக்கள்

இன்றைய நாகரிகத்திற்கு ஏற்ற பல
புதுப்புது மாடல்களில் கூலிங் கிளாஸ்,
போட்டோ கிரே, போட்டோ பிரவுன்,
பவர் கிளாஸ்
அனைத்தையும் சரியான விலையில் வாங்கிடச்
சிறந்த கண் மருத்துவர்களால்
பரிந்துரைக்கப்படும் இடம்

தொலைபேசி : 29090

டைமண்ட் ஆப்டிகல்ஸ்

2-A, ஈ. வே. ரா. சாலை,

புத்தூர், திருச்சிராப்பள்ளி - 620 017.

With the best compliments from:

PASUPATHI
TOBACCO CO.,

THURAIYUR ROAD,

NOCHIAM - 621 216.

TIRUCHIRAPALLI DISTRICT.

நல்வாழ்த்துக்கள்

இன்றைய நாகரிகத்திற்கு ஏற்ற பல
புதுப்புது மாடல்களில் கூலிங் கிளாஸ்,
போட்டோ கிரே, போட்டோ பிரவுன்,
பவர் கிளாஸ் அனைத்தையும்
சரியான விலையில் வாங்கிடச்
சிறந்த கண் மருத்துவர்களால்
பரிந்துரைக்கப்படும் இடம்



டைமண்ட் ஆப்டிகல்ஸ்

120, ஏ. கே. எஸ். காம்ப்ளெக்ஸ் (மாடி),
அருணா திரையரங்கம் அருகில்,
பாளையம் பஜார், உறையூர்,
திருச்சிராப்பள்ளி - 620 003.

நல்வாழ்த்துக்கள்

மு. ம. கோபாலன்

துணைத் தலைவர்,
திருச்சிராப்பள்ளி
நாணயவியல் கழகம்,
26, பஞ்சவர்ணசாமி
கோயில் தெரு,
உறையூர்,
திருச்சிராப்பள்ளி
620 003.

நல்வாழ்த்துக்கள்

M/s. SASTHA PHARMA,

1, ELEVENTH CROSS,
WESTERN EXTENSION,
THILLAI NAGAR,
TIRUCHIRAPALLI
620 018.

தொலைபேசி : 31776

இதய நல்வாழ்த்துக்கள்

காவலுக்குக் கண்ணில்லை
கண்களுக்குக் காவலுண்டு

கண்களின் பாதுகாவலர்கள்

சன் ஆப்டிகல்

தென்னூர், திருச்சிராப்பள்ளி - 620 018.

தொலைபேசி : 467156

நல்வாழ்த்துக்கள்

ஆனந்த்

காபி & டீ கம்பெனி

93, வாணப்பட்டரை,

தெப்பக்குளம்,

திருச்சிராப்பள்ளி

620 002.

Phone : 467208

நல்வாழ்த்துக்கள்

CHINTAMANI

AUTOMOBILES

23-A/1, Chinthamani,

(Near Anna Statue)

TIRUCHIRAPALLI

620 002.

நல்வாழ்த்துக்கள்

தொலைபேசி : 23933

குழந்தைகளின்

ரெடிமேட் ஆடைகளுக்கு

கிட்ஸ் கார்னர்

35, சிங்காரத்தோப்பு,

திருச்சிராப்பள்ளி - 620 008.

With best compliments from

Shop: 468156
Phone: 468419
Resi: 462772

ROCKFORT ALUMINIUM CO.,

184, QUAIDEMILLATH ROAD,
PALAKKARAI, TIRUCHIRAPALLI - 620 001.

Dealers : Aluminium Extruded Sections, Sheets, Coils, Ladders.

With Best Compliments From

Phone: 469955

M/s. KALKI JEWELLERY

43, CHINNAKKADAI STREET,
TIRUCHIRAPALLI - 620 002.

Phone : 469632

Rao Sahib

K. A. M. A. KALIAPPA NADAR & CO

Leaders in Building Materials & Sanitaryware

* A Guarantee of quality in every item
* Pioneers in introducing the latest models
* Dealers of products of reputed Companies
* Trichy Dist's only Computerised sales counter for fair & uniform prices
* Trichy's largest retail showroom with the widest range of over 4500 products
* One-stop shop for House owners, Builders, Flat promoters, Engineers & Industries

KAMAK

KAMAK ASSOCIATES

PB-416, 123-A, West Bouleward Road,

TIRUCHIRAPALLI - 8.

Authorised Dealers for PARRYWARE Sanitaryware SPARTEK & DECORA Tiles - JAL, ARK, EMERALD, ARVEE, L. & K. COBRA Bathroom Fixtures - EVEREST AC Sheets - LEADER ZOLOTO GM Valves - 'R' Brand GI Fittings - DALMIA Cement - CARYSIL, JAYNA Sinks CASCADE, VENUS Water Heaters - Mirror Cabinets GI Barbed Wire - Bathroom Accessories - AC/Stoneware/ GI Pipes & Fittings - VRW FireBricks Manhole Covers Bathtubs - Designer Picture/Printed Tiles.

With best compliments from

Dr. A. ZAMEER PASHA
M.S., F.I.C.S.,

Dr. Mrs. SHAKILA ZAMEER PASHA
M.B.B.S., D.G.O.,

A-20, MAIN ROAD, THILLAI NAGAR,
TIRUCHIRAPALLI - 620 018.

RUBINA PHARMACY

A-20, MAIN ROAD,
THILLAI NAGAR, TIRUCHIRAPALLI - 620 018.

Phone : 25986

With best compliments from:

KIDNEY MEDICAL CENTRE

(Behind Lakshmi Complex)

Salai Road, Tiruchirapalli – 620 018.

Tamil Nadu, South India.

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை

- ★ டயலிஸிஸ்
- ★ ஹீமோ டயலிஸிஸ்
- ★ பெரிடோனியல் டயலிஸிஸ்
- ★ மற்றும் எல்லாவிதமான சிறுநீரகக் கோளாறுகளுக்கான சிகிச்சைகள் கூடியவரை குறைந்தபட்ச செலவில் மேற்கொள்ளப்படுகிறது

- ★ Kidney Transplant Operation
- ★ Both Adult and Paediatric Kidney Transplantations
- ★ Related Donor Transplantation
- ★ Un-Related Donor Transplantation
- ★ Maintenance Haemo Dialysis
- ★ Chronic Ambulatory Peritonial Dialysis
- ★ All Available at an Affordable Package

CONTACT AT THE ABOVE ADDRESS

Phone: 32054 PP.

With best compliments from

NATIONAL CLINICAL LAB

(Jeyam Medical Upstairs)

18, Bishop Road, Puthur,

Tiruchirapalli - 620 017.

வாழ்க வளமுடன்

நம்பிக்கை ! நாணயம் !! கைராசி !!!

வசந்தா ஜுவல்லரி

Prop : D. சேஷயா நாயுடு

147, பெரிய கடைவீதி, திருச்சிராப்பள்ளி - 620 008.

தொலைபேசி : வீடு-26571 கடை-26016

எங்களிடம் 22 Ct. தங்க நகைகள் ரெடிமேடாகப் பல புதிய டிசைன்களில் கிடைக்கும். ஆர்டர் நகைகள் குறித்த நேரத்தில் கியாரண்டியுடன் தரமாகச் செய்து தரப்படும்.

மற்றும் அனைத்து ரக ஜாதி கற்கள்
வெள்ளிப் பாத்திரங்கள், கொலுசுகள்,
டிஸ்கோ கொலுசுகள் கிடைக்கும்.

ரூ. 25, 50, 100 தங்க நகை சேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுவீர்! எந்தத் தேதியிலும் சேரலாம்.

With best compliments from

CAUVERY SUGARS & CHEMICALS LIMITED

Manufacturing Fine quality
White Crystal Sugar

Regd. Office :
47, Greenways Road,
Madras - 600 028.

Factory :
Pettaivaytalai P.o. 639 112
Tiruchirapalli District,
Tamil Nadu.

தொலைபேசி : 469971

நவீன டிசைன் தங்க நகை
வெள்ளிப் பாத்திரங்கள் வாங்கக்
கைராசியான ஸ்தாபனம்

ஸ்ரீ லெக்ஷ்மி
ஜுவல்லரி A/c.

73-B/1, சாலை ரோடு, தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி-620 018.

Phone : 23197, 34249

With Best Compliments From

JESSIE

MATRICULATION SCHOOL

(Recognised by the Govt. of Tamilnadu
R. C. No. 38982/E2/92)

25, S. P. KOVIL STREET, PUTHUR,
TIRUCHIRAPALLI - 620 017.

Computer classes from L. K. G. to IX
Hostel Attached

நல்வாழ்த்துக்கள்

தொலைபேசி: 31540

T. S. P. MEDICALS

47, புத்தூர் நெடுஞ்சாலை,

திருச்சிராப்பள்ளி - 620 017.

வாழ்த்துக்கள் !

தொலைபேசி : 462335

இயக்குநர் இல்லத்
தொலைபேசி: 462335

G. N. CHAKRAPANI CHETTY & SONS

(PRIVATE) LTD.,

Automobile Dealers and Engineers,

G. N. C. Buildings, Old Post Office Road,

Post Box No. 29,

Cantonment, Tiruchirapalli - 620 001.

Sri Maheswari Finance Corporation

Sri Nathan Finance

&

NATHAN CHITS

PHONE : 31642

HIGH RATE OF INTEREST FOR FIXED DEPOSITS

நிரந்தர வைப்பு நிதிகளுக்கு FOR FIXED DEPOSITS

காலம்	வட்டி விகிதம்	Period	Rate of Interest
கால் டெபாசிட்	12%	Call Deposits	12%
6 மாதங்கள்	15%	6 Months	15%
13 மாதங்கள்	18%	13 Months	18%
நான்கு வருடங்கள்	இரட்டிப்புத் தொகை	Four Years	Double the Amount

ஏலச்சீட்டு

குரூப்	தவணை	மாதம்	சீட்டுத்தொகை
A	5000	20	100000
B	2500	20	50000
C	1250	20	25000
D	500	20	10000
E	250	20	5000

AUCTION CHITS

Group	Instalment	Months	Chit Amount
A	5000	20	100000
B	2500	20	50000
C	1250	20	25000
D	500	20	10000
E	250	20	5000

எங்கள் நிறுவனங்களின் சிறப்பு அம்சங்கள்

1. வைப்பு நிதிகளுக்கு வட்டித்தொகை மாதா மாதம் உங்கள் வீடு தேடி வரும்.
2. ஏலம் எடுத்த மறு நிமிடமே சீட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. கடைசி மாதம் முழுத்தொகையும் எவ்விதப் பிடித்தமுமின்றிக் கொடுக்கப்படும்.
4. முதல் மாதமும் ஏலம் உண்டு. 2வது சீட்டைத்தான் கம்பெனி எடுத்துக்கொள்ளும்.
5. கம்பெனி கமிஷன் முதல் 15 மாதங்களுக்கு மட்டுமே 5% கமிஷன்

16வது மாதம்	4% கமிஷன்
17வது மாதம்	3% கமிஷன்
18வது மாதம்	2% கமிஷன்
19வது மாதம்	1% கமிஷன்

20வது மாதம் (கடைசி) கமிஷன் இல்லை.

6. ஏலத் தேதிக்குள் சீட்டுப்பணம் செலுத்துபவர்களுக்குத் தவணைத் தொகையில் 1% ஊக்க போனஸாக வழங்கப்படும்.

தொலைபேசி : 464291

'சூரியவேல் பிராண்டு' மெட்டல் சைடு பாக்ஸ்
மற்றும் பாக்ஸ் கேரியர், பம்பர், சாரி கார்டு
அனைத்து வகை ஆட்டோ, டூ வீலர் வாகனங்களுக்கும்
ஏற்றவை.
உங்களது தேவைக்கு வாகன விற்பனையாளர்கள் &
ஸ்பேர் பார்ட்ஸ் டீலர்களை அணுகுங்கள்.

நிக்கல், குரோமியம், ஜிங்க் கோட்டிங்,
எலக்ட்ரோ பிளேட்டிங் சிறந்த முறையில் செய்து தரப்படும்.

ஷோரூம்

குரோம்வெல் இண்டஸ்ட்ரீஸ்

40/2, புரோமினேடு ரோடு
(இங்கிலீஷ் வேர் அவுஸ் எதிரில்)
பேருந்து நிறுத்தம் : தலைமை அஞ்சல் அலுவலகம்
திருச்சிராப்பள்ளி - 620 001.

தொலைபேசி: 33416

எங்கள் உளம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

கியூர் மெடிக்கல்ஸ்

18/1, E. V. R. ரோடு, புத்தூர்,
திருச்சிராப்பள்ளி - 620 017.

வரலாறு ஆராய்ச்சி இதழ்
நன்கு வளர எங்கள் நல்வாழ்த்துக்கள்

அருள்மிகு
மீனாட்சி-சொக்கலிங்கப் பெருமாள்
திருக்கோயில்
மேலைச்சிவபுரி - 622 403
புதுக்கோட்டை மாவட்டம்.

With best compliments from

Please Step In For Your Requirement of Books

PALANIAPPA BROTHERS
Publishers and Book Sellers

Tiruchirapalli	620 002
Coimbatore	641 001
Madurai	625 002
Salem	636 001
Erode	638 001
Madras	600 014

வரலாறு இதழுக்கு வாழ்த்துக்கள்

திருமுருகன் மருந்துக்கடை

&

மகாலட்சுமி நிதி நிறுவனம்

18/1, கீழச்சத்திரம் சாலை, தென்னூர்,

திருச்சிராப்பள்ளி - 620 017.

நல்வாழ்த்துக்கள்

G. பால்ராஜ்

கோயம்புத்தூர்.

நல்வாழ்த்துக்கள்

★

சிவகாமி

பாம்பே டையிங் ஷோரூம்

24, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலை,

திருச்சிராப்பள்ளி - 620 002.

தொலைபேசி : 29324

திருச்சியில் எவர்சில்வர் பாத்திரங்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
வாங்கச் சிறந்த இடம்

மங்கள் & மங்கள்

உற்பத்தியாளர்கள் & விற்பனையாளர்கள்
25, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலை,
திருச்சிராப்பள்ளி-620 002.

வெள்ளி ஜரிகை வாங்கப்படும்

வாழ்த்துக்கள்

நேஷனல் பார்மசூட்டிக்கல் டிஸ்டிரிபியூட்டர்ஸ்,

சாஸ்திரி ரோடு,

திருச்சிராப்பள்ளி - 620 018.

வாழ்த்துக்கள்

JAY JAY PAPER BOARDS

VALAYAPATTI

KULITHALAI Tk.

TIRUCHIRAPALLI Dt.

தொலைபேசி : 24049

எங்கள் மாதாந்திர சேமிப்புத் திட்டத்தில்
சேர்ந்து பயன் பெறுங்கள்

எல். கே. எஸ்.

ஜுவல்லர்ஸ் A/c.

153, 154, பெரியகடைவீதி,
திருச்சிராப்பள்ளி - 620 008.

தொலைபேசி : 28668

திருமணம், பிறந்த நாள் மற்றும் பல விசேஷ
வைபவங்களுக்குப் பரிசுப் பொருள்கள்
வெள்ளியில் அழகிய டிசைன்களில்
வாங்கச் சிறந்த இடம்

ஸ்ரீ வேதா ஜுவல்லரி

ஆதித்யா காம்ப்ளக்ஸ்,
126, பெரிய கடை வீதி,
திருச்சிராப்பள்ளி - 620 008.

Phone : 461875

With best compliments from

WIN PHARMA

4-E, DINDIGUL ROAD,

TIRUCHIRAPALLI - 620 001.

தொலைபேசி : 24211

நல்வாழ்த்துக்கள்

திருச்சி எக்ஸ்ரேஸ்

தெப்பக்குளம் அஞ்சல் நிலையம் அருகில்

மெயின்கார்டு கேட்

திருச்சிராப்பள்ளி - 620 002.

39-B
16-4-45

தொலைபேசி : அலுவலகம்: 31525
தொழிலகம்: 897-2301

நல்வாழ்த்துக்கள்

தரம்
எண்ணிக்கை
அளவு

இவைகளைக் கருத்தில் கொண்டு
செங்கல் உற்பத்தி செய்து
வினியோகிப்பது

193253

ஸ்ரீ லெக்ஷ்மி
செங்கல் தொழிற்சாலை

சி-12, மூன்றாவது குறுக்குச் சாலை
வடகிழக்கு விரிவாக்கம்
தில்லை நகர்
திருச்சிராப்பள்ளி - 620 018.

JL
V211 mN93
N95

With the best compliments from :

GEM LABORATORY
&
GENERAL LABS

STOCKIST

M/s. SASTHA PHARMA

1, ELEVENTH CROSS,
WESTERN EXTENSION,
THILLAI NAGAR,
TIRUCHIRAPALLI - 620 018.

39-B
16

With best compliments from :

Phone : 460592
Grams : 'PAL'

THE POPULAR AUTOMOBILES (P) LTD.,

4, Bharathiar Salai,
TIRUCHIRAPALLI - 620 001.

Dealers For :

Ambassador Cars
Ambassador 1800 ISZ Cars
Contessa Classic Cars
Hindustan Trekkers
Isuzu 2000 c.c. Diesel Engines.

Jothi Printers, Tiruchirapalli - 620 002. Phone : 25416.